# இனிதாக ஓர் விடியல்



## 1

அதிகாலை ஆறுமணி என்றது சுவர் கடிகாரம். அவசரமாகப் படுக்கையை விட்டு எழுந்தாள் ஸ்வேதா. வாசலைத் தெளிக்க வேண்டும்.. தெளித்துச் சிறு கோலம் போட வேண்டும்... இல்லாவிட்டால் வீட்டுக்காரம்மாள் பேசு.. பேசு... என்று பேசிவிடுவாள். அவளது சண்டைக்குப் பயந்து அதிகாலையிலேயே எழுந்து வாசல் தெளித்துக் கோலம் போட்டு விடுவாள் ஸ்வேதா. இன்றைக்கு இவ்வளவு நேரமாகி விட்டதேயென்ற பதட்டத்தோடு குளியலறைக் கதவைத் திறந்து பக்கெட்

நிறைய தண்ணீரை எடுத்துக் கொண்டு வாசலுக்கு வந்தாள். முன்னறையைத் தாண்டிய வராண்டாவில் ஓரமாய் இருந்த பெருக்கு மாற்றை எடுத்து அவசரமாய் வாசலைக் கூட்ட ஆரம்பித்தாள்.

வீட்டின் முன்னாலிருந்த நல்ல தண்ணீர் குழாயில் தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்த பக்கத்து வீட்டு சாந்தி சிரித்தாள்.

''பதட்டமில்லாமல் பெருக்கு... இன்னும் சொர்க்க வாசல் திறக்கவில்லை... சீக்கிரம் எழுந்துக்கணும்கிற சட்டமெல்லாம் நமக்குத்தான்... வீட்டுக்காரங்களுக்கு இல்லை...''

'சொர்க்க வாசல்' என்று குறிப்பிடப்பட்ட அந்தக் காம்பவுண்டு வீடுகளின் சொந்தக்கார அம்மாள் பார்வதி யுடைய வீட்டுக் கதவைப் பார்த்தாள் ஸ்வேதா. அது இறுக மூடியிருந்தது... நிம்மதிப் பெருமூச்சுடன் வாசலைப் பெருக்கி முடித்துவிட்டுத் தண்ணீர் தெளித்தாள்... பின் கோலப் பொடி டப்பாவை எடுத்து சிறு இழைகளால் அழகாகக் கோலமிட்டாள்.

'பார்வதி விலாஸ்...' என்று பார்வதியின் விலாசத்தைக் கூறிய அந்தக் காம்பவுண்டின் முன் பக்கம் பெரிதாக.. அழகாக கட்டப்பட்டிருந்த வீட்டில்தான் அந்தக் காம்ப வுண்டின் நடுவில் திறந்த வெளி விட்டு இந்தப் பக்கம் மூன்று வீடுகளும் அந்தப் பக்கம் மூன்று வீடுகளுமாக... கட்டப்பட்டிருந்த ஆறு வீடுகளின் சொந்தக்காரியான பார்வதியம்மாள் குடியிருந்தாள்.

சிறு பங்களா போல் தோற்றமளிக்கும் அவள் வீட்டின் அருகேயிருந்த ஆறு வீடுகளும் சாதாரண சிமிண்டு



தரையுடன்.. முன்பக்கம் வராண்டாவும்.. உள்ளே ஒரு அறையும்.. அதன் பக்கவாட்டில் ஒரு அறையும்... அதையொட்டிய சிறிய சமையலறையும்.. பின் பக்கம் குளியலறையும் கொண்டதாக அமைந்திருந்தன.

அந்த ஆறு வீடுகளில் குடியிருந்த குடும்பங்கள் எல்லாமே.. நடுத்தர வாழ்க்கை வாழும் மக்களை விட சற்று வசதி குறைவாக வாழும் உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த குடும்பங்கள்தான்.

''சொர்க்கவாசல் திறந்து விட்டது ஸ்வேதா...'' சாந்தி எச்சரித்தபடி தண்ணீர் குடத்துடன் அவளைக் கடந்து சென்றாள்.

கண் இமைக்கும் நேரத்தில் கோலத்தை முடித்த ஸ்வேதா அவசரமாய் வீட்டிற்குள் புகுந்து கொண்டாள். தன் வீட்டு வாசலில் நின்று கொண்டு காம்பவுண்டில் இருந்த வீடுகளின் வாசல்களில் இருந்த கோலங்களை பார்வையிட்டுக் கொண்டிருந்த பார்வதியம்மாளின் வாயில் இன்று மாட்டிக் கொள்ளாமல் தப்பித்துவிட் டோம் என்ற நிம்மதியுடன். வாசல் கதவில் மாட்டி யிருந்த பையில் இருந்த பால் பாக்கெட்டை எடுத்துக் கொண்டு வீட்டுக்குள் சென்றாள் ஸ்வேதா.

''ஏன் ஸ்வேதா.. பால் பூத்தில் வாங்குவதை விட கொண்டு வந்து போடும் பாக்கெட்டிற்கு காசு அதிகம் கொடுக்க வேண்டுமே... எதற்காக வீணாய் காசை விரயம் பண்ணுகிறாய்...?'' எதிர்வீட்டுக் கண்மணி கேட்ட போது ஸ்வேதா சோர்வாக பதில் கூறினாள்.

''என்னக்கா செய்வது.. பால்பூத்திற்கு காலையில் விடியும் முன்னாலேயே எழுந்து போய் வாங்க வேண்



டும். எங்கள் வீட்டில் யார் போய் வாங்கி வருவது? அதனால்தான் காசைப் பார்க்காமல் வீட்டில் கொண்டு வந்து போடச் சொல்லிவிட்டேன்.''

''ஏன்... நாங்கள் இத்தனை பேரும் போகிறோமே.. எங்களின் யார் வீட்டிலாவது உதவி கேட்டால் செய்ய மாட்டோமா?''

''இல்லைக்கா.. ஒரு நாள் இரண்டு நாள் என்றால் பரவாயில்லை.. தினமும் வாடிக்கையாக வாங்கி வந்து கொடுங்கள் என்று கேட்டால் அது நன்றாக இருக்காது. வீணாய் நமக்குள் விரிசல்தான் வரும். கடன் அன்பை முறிக்கும் என்பது போல... அதிகமாய் உதவி கேட்பது நட்பை முறித்து விடும்...''

''நீ யாரு... யுனிவர்சிட்டியில் கோல்டு மெடல் வாங்கியவளாச்சே.. உன்னோடு பேசி ஜெயிக்க முடி யுமா?''

அதற்கு மேல் நின்று பேச நேரமில்லாமல் சிரித்து விட்டு உள்ளே போன ஸ்வேதா கேஸ் ஸ்டவ்வை பற்ற வைத்துப் பால் காய்ச்ச ஆரம்பித்தாள். பால் பொங்குவ தற்குள் குக்கர்களை ரெடி பண்ணியவள்... ஒரு அடுப் பில் சாதத்தையும் பருப்பையும் வைத்து விட்டு... இன் னொன்றில் இட்லி குக்கரை ஏற்றி வைத்தாள். அவள் காபி கலந்து முடிக்கும் போதே ஆவி வந்துவிட விசிலைப் போட்டுவிட்டவள்.. முன்னறையில் இருந்த கட்டில் களில் படுத்திருந்த தீபாவையும்... ரகுவையும் தட்டி எழுப்பினாள்.

''தீபா எழுந்திரு.. ஸ்கூலுக்கு நேரமாச்சு.. ரகு வேக் அப்...''



''என்னக்கா.. இப்பத்தான் கார்த்திக்கோடு 'அடடா மழைடா அடைமழைடா..'ன்னு பாடிக்கிட்டு இருந்தேன். கனவை கலைச்சிட்டயே...''

சிணுங்கியவாறு எழுந்து அமர்ந்த தீபாவிற்கு பதி னாறு வயதாகிறது. ப்ளஸ் ஒன் படிக்கிறாள். டீன் ஏஜீன் ஆரம்பப் பருவ கோளாறுகள் ஏராளமாய் உள்ளவள்.

''ஏண்டி நேற்றுக் காலையில் பரத்தோடு, ''ஒட.. ஒட... ஒடோடப் போறேன்..'ன்னு பாட்டு பாடினேன்னு உளறிக்கிட்டு எழுந்தாய்.. இப்ப கார்த்திக்கா..?''

''அது நேற்றைக்கி.. இது இன்றைக்கு...'' என்றவாறு காபியை கையில் வாங்கிக் கொண்டே தீபா கண் சிமிட் டினாள்.

''உன் கனவில் விஜய்... சூர்யாவெல்லாம் வர மாட் டாங்களா...?''

''போக்கா... அவங்க பெண்டாட்டிகள் சண்டைக்கு வந்து விட்டால் என்ன செய்வது..? நான் ரொம்ப முன் ஜாக்கிரதையாக்கும்...''

''இது வேறா..? போடி அரட்டை.. போய் குளி.. நேர மாகிறது. ரகு.. டேய் ரகு.. இப்ப எழுந்திருக்கப் போறீயா... இல்லையா...''

போர்வையை விலக்கி முகம் காட்டிய ரகுவின் வயது பதின்மூன்று... ஒன்பதாம் வகுப்பு படிக்கிறான்.

''ஏன்க்கா... தீபாக்கா மட்டும் முன்ஜாக்கிரதையாய் இருக்கலாம்.. நான் முன் யோசனையுடன் இருக்கக் கூடாதா?''

''நீயுமாடா ரகு? உனக்கென்னடா முன் யோசனை?''

''அடுத்த வருசம் பப்ளிக் எக்ஸாம் வருது.. அப்போ இப்படித் தூங்க முடியுமா.. ராத்திரி பகலாய் படிக்க வேண்டாமா? அதனால் இப்போதே நன்றாக தூங்கி என் எனர்ஜியை டெவலெப் பண்ணிக் கொள்கிறேன்க்கா...''

''ஏண்டா... நீயும் உன் தீபாக்காவும் புதிசு புதிசாய் கண்டு பிடிப்பீர்களா? எங்கேயிருந்துடா இவ்வளவு யோசனை களும் உங்கள் இரண்டு பேருடைய மண்டையிலும் வருது?''

''எல்லாம் சொந்த மூளையை உபயோகப்படுத்துவ தால்தான்.''

''ஆமாம்... எல்லோரும் இரவல் மூளையை பயன் படுத்துகிறார்கள். இவன் ஒருவன் மட்டும்.. சொந்த மூளையை பயன்படுத்துகிறான். எழுந்திருடா.. இந்த அறிவையெல்லாம் இரண்டு பேரும் படிப்பில் பயன் படுத்துங்கள்.. பிராக்ரஸ் ரிப்போர்ட்டைப் பார்த்தால் எனக்கு ஹிஸ்டிரியாவே வருது...''

''கூல் அக்கா கூல்... இதெல்லாம் சின்ன விசயங்கள்.. வாழ்க்கையில் உங்களுக்கு ஹிஸ்டிரியாவை ஏற்படுத் தும் விசயங்கள்.. நிறைய இருக்கு...''

ரகு இலகுவாய் கூறியபடி காபியை கையில் வாங்கிக் கொள்ள... ஸ்வேதாவின் மனக் கண்ணில் ரிஷி தோன்றி னான்.

'சின்னப் பையனாக இருந்தாலும் இவன்தான் எவ் வளவு தெளிவாகச் சொல்லுகிறான். அந்த ரிஷி படுத்தும் பாட்டில் தினமும் ஆபிஸில் தலை முடியை பிய்த்துக் கொள்ளாத குறையாய் வேலை பார்த்துவிட்டு வீட்டுக்கு வந்து சேர்கிறேனே.. அவன் ஏற்படுத்தும் டென்சனை



விட உலகத்தில் வேறு யாரும் எனக்கு டென்சனை ஏற்படுத்தவே முடியாது...'

அடுப்பில் விசில் சத்தம் வந்து விட அவசரமாய் ஓடி அடுப்பை அணைத்து விட்டு இரண்டு குக்கர்களையும் இறக்கி வைத்தாள். கலந்து வைத்திருந்த காபியை ஊற்றிக் குடித்துவிட்டு... மீதமிருந்த பாலை மிதமான சூட்டில் ஆற்றி எடுத்துக் கொண்டு உள்ளறைக்குப் போனாள்.

அந்த சிறிய அறையில் கிடந்த கட்டிலில் சோர்வாக கண் மூடிப் படுத்துக் கிடந்தாள் லீலாவதி...

''அம்மா...'' என்ற ஓர் அழைப்பில் கண் திறந்தாள்.

''என்னம்மா... தூங்கவில்லையா..''

''எவ்வளவு நேரம்தான் தூங்கிக் கொண்டே இருக்க முடியும்.. விடியும் முன்னாலேயே விழிப்பு வந்து விட்டது...''

''அப்படி இருக்கக் கூடாதும்மா.. நன்றாகத் தூங்க வேண்டும்.. அப்போதுதான் உங்கள் உடம்பு சீக்கிரம் குணமாகும்...''

''குணமாகி எழுந்து... என்ன செய்யப் போகிறேன்?''

எதுவும் செய்ய வேண்டியதில்லையா..? தகப்பனை இழந்த பிள்ளைகளுக்கு தாய்க்குத் தாயாய்.. தகப்பனுக்குத் தகப்பனாய் இருக்க வேண்டாமா?

பெருமூச்சுடன் தாயைப் பார்த்தாள் ஸ்வேதா. சோபை இழந்த முகத்துடன் விட்டேற்றியான பார்வையுடன் மெதுவாக எழுந்து அமர்ந்தாள் லீலாவதி. இந்த மூன்று வருடங்களாக இப்படித்தான்... என்று அலுவலகத்திற்குப்



போன ரத்தினம்... வேலை செய்து கொண்டிருக்கும் போதே மாரடைப்பு வந்து இறந்து விட்டாரென்று அவரது உயிரற்ற உடலைக் கொண்டு வந்து வீட்டில் கிடத்தினார்களோ.. அன்றிலிருந்து இன்று வரை லீலாவதியின் உடலும்.. மனமும் வீழ்ந்தது வீழ்ந்தது தான்... தேறவே இல்லை.

'இழப்பு உங்களுக்கு மட்டும்தானா அம்மா... எங் களுக்கு இல்லையா..?' வேதனையுடன் நினைத்துக் கொண்டாள் ஸ்வேதா.

பதினெட்டு வயதில் கல்லூரியில் படித்துக் கொண் டிருந்த சிறு பெண்ணிற்கு வாழ்க்கையைப் பற்றி எத்தனை கனவுகளும் கற்பனைகளும் இருந்திருக்கும்? அவை எல்லாம் ஓர் நாளில் சரிந்து தரைமட்டமாகிய போது அழக்கூடத் திராணியின்றி அந்தக் குடும்பத்தின் சுமையைத் தோள்களில் தாங்கிக் கொண்டாள் ஸ்வேதா.

கணவனின் மேல் உயிராக இருந்த லீலாவதிக்கு.. பிள்ளைகளின் நினைவே மறந்து விட்டது... போன கணவனை நினைத்து துக்கத்தில் ஆழ்ந்தவள்... நோயால் விழுந்து விட்டாள்.

பத்து வயது ரகுவையும்... பதின்மூன்று வயது தீபா வையும் தன் மடியில் தாங்கிக் கொள்ள வேண்டிய பொறுப்பு பதினெட்டு வயது ஸ்வேதாவிற்கு ஏற்பட்டது. துக்கம் விசாரிக்க வந்த உறவினர்கள் சொல்லாமல் கொள்ளாமல் கழன்று கொள்ள.. வீட்டில் உள்ள நான்கு ஜீவன்களின்.. வயிற்றுப்பாட்டிற்கும்.. வாழ்க்கைப்பாட் டிற்கும் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து நின்றாள் ஸ்வேதா.



தன் சோகத்திலேயே மூழ்கிக் கிடக்கும் தாயை அணுக முடியாத நிலை.. ஸ்வேதா தன் தைரியத்தை ஒன்று திரட்டி சூழ்நிலையைச் சமாளிக்க ஆரம்பித்தாள். வீட்டிலிருந்த நகைகளை ஒன்று சேர்த்தாள். வங்கியில் இருந்த தகப்பனாரின் பணத்தை.. வாரிசு சான்றிதழ் கொடுத்து நடையாய் நடந்து திரும்பப் பெற்றாள். பெரிய வீட்டிலிருந்து வசதி குறைவான காம்பவுண்டு வீட்டிற்கு இடம் மாறினாள். பழைய வீட்டிலிருந்து பெற்ற அட் வான்ஸ் தொகையில் புது வீட்டிற்கு கொடுத்த அட் வான்ஸ் தொகை போக மீதத்தையும்.. கையிலிருந்த பணத்தையும் சேர்த்துக் கொண்டாள். தகப்பனார் வேலை பார்த்த அலுவலகத்திலிருந்து அவருக்குச் சேர வேண்டிய தொகை கிடைக்க, எல்லாப் பணத்தையும் ஒன்று சேர்த்து வீட்டிற்கு அருகிலிருந்த போஸ்ட் ஆபிஸில் மாதாந்திர வட்டி கிடைக்கும் கணக்கில் போட்டு வைத்தாள். மாதாமாதம் ஒரு தொகை கிடைக்க வழி செய்த பின் தான் ஸ்வேதா கொஞ்சம் மூச்சுவிட் டாள். ஆனால் கிடைக்கும் வட்டிப் பணத்தில் நான்கு ஜீவன்களும் பசியாறச் சாப்பிடலாம்.. வீட்டு வாடகை... மேற்செலவு.. படிப்புச் செலவு.. இவைகளுக்கு என்ன செய்வது? எங்கே போவது?

இந்த நிலையில்தான் கை கொடுத்தார்... ஸ்வேதா வின் தந்தை ரத்தினம் வேலை செய்த கம்பெனியின் முதலாளி பாண்டுரங்கன்.

மேலே என்ன செய்வது என்று புரியாத நிலையில் தனக்கு ஏதாவது வேலை கிடைக்குமா என்று கேட்டு ஸ்வேதா அவரை அணுகிய போது அவர் யோசனை யுடன் அவளைப் பார்த்தார்.

''நீ என்னம்மா படித்திருக்கிறாய்?''

''டிகிரி செகண்ட் இயர் படிக்கிறேன் சார்...''

''ஸோ... நீ இன்னும் டிகிரி முடிக்கவில்லை...''

ஸ்வேதா... இங்கே தனக்கு வேலை கிடைக்காது என்ற முடிவிற்கு வந்துவிட்டாள்... சோர்ந்த முகத்தோடு எழுந்தாள்.

''இப்ப ஏம்மா எழுந்திருக்கிறாய்?''

''எனக்குத்தான் இங்கே வேலை கிடைக்காதே...''

''அப்படி நான் சொன்னேனா?''

''சார்.. நான் இன்னும் படிப்பை முடிக்கவில்லையென்று சொன்னீர்களே.. படிப்பை முடிக்காத எனக்கு எப்படி இங்கே வேலை கிடைக்கும்?''

''உனக்கு காலேஜ் எப்போது முடியும்..?''

''ஈவினிங் நான்கு மணிக்கு முடிந்துவிடும்.. ஆனால் நான் படிப்பை நிறுத்திவிடுவேன் சார்.. வேலையை மட்டும் ஒழுங்காய் பார்ப்பேன் சார்...''

பாண்டுரங்கனின் முகத்தில் இரக்கம் தெரிந்தது.

''ஏம்மா... இத்தனை வருடம் கஷ்டப்பட்டு படித்துவிட்டு.. டிகிரி வாங்க இன்னும் ஒரு வருடமே இருக்கும்போது படிப்பை நிறுத்தலாமா... நீ படி.. உனக்கு கம்ப்யூட்டர் தெரியுமா?''

''தெரியும் சார்.. நான் பேஸிக் கோர்ஸ்... அடிசனல் கோர்ஸ் எல்லாம் முடித்திருக்கிறேன்..'' ஸ்வேதா அவசரமாய் கூறினாள்.

''அது போதும்.. தினமும் சாயந்திரம் நான்கு மணியிலிருந்து ஆறு மணி வரை இங்கே வேலை பார்.



செமஸ்டர் லீவு கிடைக்கும்போது முழு நேரமும் பார்.. உனக்குப் பாதிச் சம்பளம் போட்டுக் கொடுக்கச் சொல்கிறேன். நீ படிப்பை முடித்ததும்.. இங்கே உனக்கு நிரந்தரமாக வேலை போட்டுக் கொடுக்கிறேன். இப்போதைக்கு இது போதுமில்லையா?''

அவளுக்கு அதுவே போதுமானதாக இருந்தது. கண் முன் இருந்தவரை கையெடுத்து வணங்க வேண்டும் போலிருந்தது... கண்ணீர் மல்க,

''நன்றி சார்...'' என்று சொன்னாள்.

பாண்டுரங்கன் புன்னகையோடு தலை அசைத்து விடை கொடுத்தார். அதன் பின் ஸ்வேதா மிகக் கடுமையாக உழைத்தாள். தனக்குக் கிடைத்த வாய்ப்பை சரியாக பயன்படுத்திக் கொண்டாள்.

காலையில் வீட்டு வேலை... தம்பி தங்கைகளை பள்ளிக்கு அனுப்பி விட்டு... தாய்க்கு தேவையான மாத்திரை மருந்துகளைக் கொடுத்து அவளுக்கான சாப்பாட்டை அவளது அறையில் வைத்து.. கதவைப் பூட்டிக் கொள்ளச் சொல்லி... அவள் பூட்டி விட்டுப் போகும் வரை காத்திருந்து பார்த்துவிட்டு.. ஓட்டமும் நடையுமாய் காலேஜுக்கு விரைவாள். மாலையில் நேரத்தைப் பார்க்காமல் கம்ப்யூட்டர் முன் அமர்ந்து கணக்குகளைப் பதிவு செய்ய ஆரம்பித்து விடுவாள். மாலை மயங்கும் நேரம் வீடு வந்து சேர்ந்தால்.. இரவுக்கான வீட்டு வேலைகள் தயாராய் காத்திருக்கும்... வேலைகளை முடித்து எல்லோரையும் சாப்பிட வைத்துவிட்டு... அவளும் கொஞ்சம் சாப்பிட்டு விட்டு உட்கார்ந்தால்... உடல் சோரும்... கண் அயரும்... ஆனால் பாடங்களை படிக்க





வேண்டுமே.. ஈரத்துணியால் கண்களை துடைத்துக் கொண்டே படிக்க ஆரம்பித்துவிடுவாள்.

ஸ்வேதாவின் உண்மையான உழைப்பும் சுறுசுறுப்பும் பாண்டுரங்கனை கவர்ந்தது... அவள் படித்து முடித்ததும்.. தனது செயலாளராக அவளை நியமித்து விட்டார். நல்ல சம்பளம்... பிடித்தமான வேலை... இழுத்துப் பிடிக்காமல் செலவு செய்ய முடிவதே மிகப் பெரிய வரமாகத் தோன்ற... ஸ்வேதா தம்பி தங்கைகளுக்கு நல்ல துணிமணிகள் வாங்கிக் கொடுத்தாள். வார இறுதியில் அசைவம் சமைத்தாள். மாலையில் வீடு திரும்பும்போது தீபாவிற்கு பூவும்... ரகுவிற்கு தின்பண்டமும் வாங்கி வந்தாள். நிம்மதியாக வாழ்க்கை வண்டி ஓடிக் கொண்டிருந்த போதுதான்.. புயலென ரிஷி அவளது நிம்மதியை குலைக்கவென அலுவலகத்திற்குள் நுழைந்தான்.

ஸ்வேதா பெருமூச்சுடன்... லீலாவதியைப் பார்த்தாள். தன்னில் மூழ்கியிருந்த தாயின் பாராமுகம் அவளை வருத்தியது. மனம் வலிக்கும் சமயம் சாய்ந்து கொள்ள தாயின் மடி கிடைக்காமல் போவது ஒரு பெண்ணுக்கு எவ்வளவு பெரிய துயரமான விசயம்.. தீபாவும்... ரகுநந்தனும் சாய்ந்து கொள்ளத் தாயின் மடியாய் தன் மடியைக் கொடுத்துத் தாங்குபவள் தான் சாய்ந்து கொள்ள மடி தேடி அலை பாய்ந்தாள்.

அவளும் சிறு பெண் தானே. அவளது துயரத்தைக் கொட்ட ஓர் இடம் தேடித் தவிப்பது இயற்கைதானே. தாய் சரியாகி எழுந்து நடமாட மாட்டாளா... தகப்பன் துணையில்லாத தனக்குத் தாயின் துணையாவது கிடைத்து



விடாதா என்று தினமும் எதிர்பார்த்து ஏமாந்து போனாள் ஸ்வேதா.

ரிஷி மட்டும் வராமல் இருந்திருந்தால்.. இவ்வளவு அலைபாய்தலும் ஸ்வேதாவிற்கு வந்திருக்காது.



## 2

''டேய்... என் டவலை எடுக்காதே.. வை...'' தீபா கத்தினாள்.

''இதில் உன் டவல்ன்னு பெயர் எழுதியிருக்கா..?'' ரகு டவலை விடாமல் எடுத்தான்.

''அக்கா... இவனைப் பாருக்கா..'' தீபா உள்ளே திரும்பிக் கத்த,

''அக்கா.. சின்னக்கா என் கூடவே வம்புக்கு வருது...'' என்று ரகுவும் திரும்பி பதிலுக்குக் கத்தினான்.

குழம்பை ஒரு அடுப்பிலும்.. பொரியலை ஓர் அடுப்பிலும் வைத்துக் கொண்டிருந்த ஸ்வேதாவிற்கு... தெய்வங்களுக்குப் போல நான்கு கைகள் தனக்கிருந்தால் தேவலை என்று தோன்றிக் கொண்டிருந்த சமயம் பார்த்து அவர்கள் கத்தவும் அவளுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அடுப்பைப் பார்ப்பதா.. இல்லை அவர்களின் சண்டையைத் தீர்ப்பதா..?

'இந்த அம்மா இவர்களையாவது கவனிக்கக் கூடாதா...'

அலுப்புடன் நினைத்துக் கொண்டவள்... வேலையைப் பார்த்துக் கொண்டே கத்தினாள்.

''ரகு... அக்காவின் டவலை அவளிடம் கொடு...''

''அப்போ எனக்கு டவல்?''

''உன் டவல் எங்கே..?''

''அது யாருக்குத் தெரியும்?''

''தீபா.. தம்பிக்கு டவலை எடுத்துக் கொடு...''

''போக்கா... எனக்கு வேறு வேலை இல்லையா..?''

''அப்படியானால் அவன் உன் டவலை கொடுக்க மாட்டான்.''

''கொடுக்காமல் என் டவலை இவன் யூஸ் பண்ணு வானா.. உவ்வே...''

''போதும்டி... அவ்வளவு பார்க்கிறவள் அவன் டவலைத் தேடி எடுத்துக் கொடு...''

பேசிக் கொண்டே வேலையை முடித்து அடுப்பை அணைத்தாள் ஸ்வேதா. வெளியே சத்தம் ஓய்ந்திருந் தது. பிரச்சனை சரியாகிவிட்டது என்று நினைத்துக் கொண்டாள் ஸ்வேதா.

இதுதான்... இப்படிப் பிரச்சனைகளை சமாளிக்கும் திறமைதான் பாண்டுரங்கனை மனம் விட்டுப் பாராட்ட வைத்தது. அதே திறமை தான் ரிஷியை வெறுக்கவும் வைத்தது.

அவர்களுடைய எண்ணை தயாரிக்கும் கம்பெனி... பி.ஆர் பிராண்டு எண்ணைகளுக்கு மார்க்கெட்டில் மதிப்பு அதிகம். ஒரு முறை சரக்கு தாமதமாகி விட்ட தென்று வாடிக்கையாளர் ஒருவர் வந்து சத்தம் போட்டுக்



கொண்டிருந்தார். பாண்டுரங்கம் அப்போது அலுவலகத் தில் இல்லை. ஸ்வேதா அந்த வாடிக்கையாளரை சமாதானப்படுத்திக் கொண்டிருந்த போது... அலுவலகத் திற்குள் நுழைந்த கோட்... சூட்... டையுடன் மிடுக்காக இருந்த இளைஞன் ஒருவன் நேரே அந்த வாடிக்கை யாளரிடம் வந்து, ''ஹூ ஆர் யு மேன்..'' என்று வினவி னான்.

ஸ்வேதா பதறிவிட்டாள். ஏற்கெனவே அந்த வாடிக்கை யாளர் கோபமாக இருக்கிறார். இப்போது யாரோ ஒருவன் வந்து 'யார் நீ..?' என்று கேட்டால் அவரது கோபம் இன்னும் அதிகமாகிவிட்டால் என்ன செய்வது?

பல்லைக் கடித்துக் கொண்டு கேள்வி கேட்டவனை முறைத்துப் பார்த்தாள்.

''முதலில் நீங்கள் யார் சார் எங்கள் வாடிக்கையாளரை கேள்வி கேட்க... இவர் எங்கள் நிறுவனத்தின் மிக முக்கியமான வாடிக்கையாளர்... இவர் கோபமாகப் பேசினால் அதில் கட்டாயம் நியாயம் இருக்கும் என்பது எங்களுக்குத் தெரியும். அதுபோல நாங்களும் காரண மில்லாமல் தாமதம் செய்திருக்க மாட்டோம் என்பதை இவரும் புரிந்து கொள்வார்... நீண்ட கால கொடுக்கல் வாங்கல் எங்களுக்குள் உண்டென்பதால் இவர் உரிமை யோடு எங்களை கோபித்துக் கொள்கிறார்.. நாங்கள் காரணத்தைக் கூறினால் புரிந்து கொள்ளப் போகிறார்... இது மிகச் சின்ன விசயம்.. எங்களுக்குள் ஆயிரம் இருக்கும். நடுவில் வர நீங்கள் யார்? போங்கள் சார்.. போய் உங்கள் வேலை எதுவோ... அதைப் பாருங்கள்.. எங்கள் டீலரிடம் கேள்வி கேட்கும் வேலையெல்லாம் வேண்டாம்..''



ஸ்வேதா பேசப்பேச எதிரில் நின்று கொண்டிருந்தவ னின் முகம் கடுமையாக மாறியது. அதே சமயம் கோப மாய் வந்த அந்த வாடிக்கையாளர் குளிர்ந்தே போய் விட்டார். நடப்பதை கவனித்துக் கொண்டே உள்ளே வந்த பாண்டுரங்கன் அந்த வாடிக்கையாளரின் கரம் பிடித்துக் குலுக்கினார். சற்று நேரத்தில் அந்த வாடிக் கையாளர் வெளியே போய்விட... அலுவலகத்தின் மத்தி யில் பாண்டுரங்கன் மனம்விட்டு ஸ்வேதாவை பாராட்டி னார்.

''வெல்டன் ஸ்வேதா... உன்னைப் போன்ற ஸ்டாப் கிடைக்க நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும். எவ்வளவு அழகாக விசயத்தை டீல் செய்தாய்.. கீப் இட் அப்... பை தி வே.. மீட் மை சன் ரிஷி...''

பாண்டுரங்கனின் பாராட்டுதலில் முகம் மலர்ந் திருந்த ஸ்வேதா... அவரது மகன்தான் அவன். 'யார் நீ...?' என்று கேட்ட அந்தப் புதியவன் என்பதை அறிந்ததும் ஆடிப் போய் விட்டாள். அவசரமாக ரிஷியின் முகம் பார்த்து மன்னிப்புக் கோரும் பாவனையில்...

''நீங்கள் யாரென்று தெரியாமல் பேசிவிட்டேன்..'' என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கையில்...

''அதனால் என்ன...?'' என்று பட்டுக் கத்தரித்தார் பாண்டுரங்கன்.

''ரிஷி.. நீ பாரின் போய் படித்து விட்டு வந்தது இதைத் தானா? கஸ்டமரை டீல் பண்ணும் விதம் தெரிய வேண் டாமா? நமக்காக இந்த சிறு பெண் விளக்கம் சொல்லிக் கொண்டிருக்கையில் நீ ஊடே பேசியது தவறு... நீ வாழ்க்கையில் கற்றுக் கொள்ள வேண்டியது நிறைய



இருக்கிறது...'' என்று வேறு மகனிடம் சொல்லிவிட் டார்.

அவ்வளவுதான்... ரிஷி ஸ்வேதாவை பயங்கரமான பார்வை ஒன்றைப் பார்த்துவிட்டு பதில் பேசாமல் பாண்டுரங்கனின் கேபினுக்குள் சென்றுவிட்டான். ஸ்வேதாவிற்கு அன்று முழுவதும் வேலையே ஓட வில்லை.

அதன்பின்னால் ரிஷி அலுவலகத்திற்கு வரும் போதெல்லாம் மற்ற அலுவலர்கள் வணக்கம் சொல் லும்போது பதிலுக்கு லேசாக தலை அசைப்பான். ஸ்வேதா வணக்கம் சொன்னால் திரும்பிக் கூட பார்க்க மாட்டான்.

அவனது அந்த உதாசீனத்தை நினைத்து நாள் முழுவதும் மனதிற்குள் மறுகுவாள் ஸ்வேதா.

ஒரு நாள் காலையில் அலுவலகம் வந்த போது.. மற்ற ஊழியர்கள் பரபரப்பாக பேசிக் கொண்டிருந்ததைக் கவனித்து காரணம் வினவினாள்.

''உனக்குத் தெரியாதா... நம் எம்டிக்கு உடம்பு சரி யில்லையாம்... ஹாஸ்பிடலில் அட்மிட் பண்ணியிருக் கிறார்களாம்...''

ஸ்வேதா அதிர்ந்து விட்டாள். பெற்ற தகப்பன் போல அவளை ஆதரித்த நல்ல மனிதருக்கு உடல் நிலை சரியில்லையா..? மருத்துவமனைக்கு ஓடினாள். தனி அறையில் மூச்சு விட சிரமப்பட்டுக் கொண்டு படுத் திருந்தவர் இவளைக் கண்டதும் அருகேயிருந்த மனைவி யிடம் அறிமுகப்படுத்தி வைத்தார்.

''இது தான் ஸ்வேதா... நம் கம்பெனியில் வேலை பார்த்த ரத்தினத்தின் மகள். அப்பாவைப் போலவே பெண்ணும் திறமையாய் வேலை பார்க்கிறது. இவள் செகரட்டரியாக வந்த பின் என் வேலைகளில் பாதியை குறைத்துவிட்டாள் மோகனா..''

கண்களில் கவலையோடு... மங்களகரமான தோற்றத் தோடு.. அழகான முக அமைப்போடு இருந்த அவரது மனைவி மோகனா புன்னகைத்தாள். அப்போது அறை வாசலில் இருந்து ஒரு குரல் வந்தது.

''அப்புறம் ஏன் வேலைப்பளு தாங்காமல் உங்களது ஹெல்த் ஸ்பாயில் ஆகிவிட்டது அப்பா...?''

திரும்பிப் பார்க்காமலே அது ரிஷியின் குரல் என் பதைப் புரிந்து கொண்ட ஸ்வேதா பார்வையை தாழ்த்திக் கொண்டு உதடுகளை கடித்துக் கொண்டாள்.

அமர்த்தலான நடையுடன் உள்ளே வந்து ஸ்வே தாவை முறைத்த ரிஷி... ''ஆபிஸ் நேரத்தில் இப்படி வந்து ஹாஸ்பிடலில் உட்கார்ந்து அரட்டை அடித்தால் ஆபிஸ் வேலை எப்படி நடக்கும்?'' என்று தந்தையைப் பார்த்துக் கேட்டான்.

கேள்வி தனக்குத்தான் என்பதை புரிந்து கொண்ட ஸ்வேதா அவசரமாய் எழுந்து கொண்டாள்... மோகனா விடம் கரம் கூப்பியபடி,

''நான் போய் வருகிறேன் சார்...'' என்று பாண்டுரங் கனிடம் விடை பெற்றவள் அறையை விட்டு வெளியே விரைந்தாள்.

''ரிஷி... ஏன் அந்தப் பெண்ணை ஹார்ட் பண்ணு கிறாய்... பாவம்.. அவள் உன் அப்பாவைப் பார்க்க



வந்தாள்..'' மோகனா மகனிடம் கூறிக் கொண்டிருந்தது அவளது காதுகளில் விழுந்தது.

அதன்பின் பாண்டுரங்கனின் உடல்நிலை பற்றி அறிய மனம் துடித்தாலும்.. அவள் மறந்தும் மருத்துவ மனைக்குப் போகவில்லை.. அவருக்கு ஓய்வு தேவை என்று மருத்துவர்கள் சொல்லிவிட்டார்கள் என்றும்.. ஏதேனும் மலைப்பகுதியில் அவர் கொஞ்ச காலம் இருப்பது நல்லது என்று சொன்னதால் பாண்டுரங்கனும் அவரது மனைவியும் அவர்களுக்குச் சொந்தமான ஊட்டி எஸ்டேட்டில் ஓய்வு எடுக்கப் போய் விட்டார்கள் என்றும்.. தொழில்கள் எல்லாம் இனி ரிஷியின் பொறுப் பில் தான் நடைபெறும் என்றும் அலுவலகத்தில் மற்றவர்கள் பேசிக் கொண்டிருந்ததை வைத்து அறிந்து கொண்டாள்.

அப்போது இருந்தே... அவள் ரிஷியின் சொல்லம்பு களை எதிர்கொள்ளத் தயாராகி விட்டாள். அவள் நினைத்தது போலவே ரிஷி பொறுப்பை எடுத்த மறு கணம் அவளை இன்டர்காமில் அழைத்தான். அவள் அவனது அறைக்குள் சென்ற அடுத்த கணம் ஒரு பைலைத் தூக்கி அவள் முகத்தில் விட்டெறிந்தான். தன் முகத்தின் மீது மோதி கீழே விழுந்த பைலை அதிர்ச்சி யுடன் பார்த்தபடி அவள் நின்று கொண்டிருந்த போது...

''வாட் இஸ் திஸ்...'' என்று கர்ஜித்தான்.

''ஃபைல் சார்...''

''அது எனக்குத் தெரியாதா? அது என்ன பைல்?''

அவமானத்துடன் குனிந்து அதை எடுத்த ஸ்வேதாவின் மனம் துடித்தது. பெண்கள் வேலைக்கு வருவது தவறோ...



''இது எக்ஸ்பென்டிச்சர் பைல் சார்...''

''அதில் போட்டிருக்கும் செலவுத் தொகைகளுக்கான வவுச்சர்களை சரி பார்த்தீர்களா?''

''அக்கவுண்ட்ஸில் பார்த்திருப்பார்கள் சார்...''

''ஏன் நீங்கள் இதைப் பார்க்க மாட்டீர்களா..?''

''இதுவரை பார்த்ததில்லை... இனிமேல் பார்க்கிறேன் சார்...''

''பர்ஸ்ட் டூ இட்... கெட் அவுட்..''

அவனது கேபினை விட்டு மனம் கனக்க வெளியில் வந்தாள் ஸ்வேதா. மறுநாள் காலையில் அவன் அழைக் கவும்.. இவள் அவனது கேபினுக்குள் போனாள். அக் கவுண்டன்ட் நின்று கொண்டிருந்தார்.

''அக்கவுண்டன்டிடம் எக்ஸ்பென்டிச்சர் பைலைக் கொடுக்கச் சொல்லிக் கேட்டிங்களா?''

''ஆமாம் சார்...''

''எதற்காக கேட்டீர்கள்?''

''செலவுத் தொகைக்கான வவுச்சர்களை சரி பார்க்க...''

''அதைக் கேட்க நீங்கள் யார்? உங்கள் வேலை என்ன? நீங்கள் என் செகரட்டரியா? இல்லை அக் கவுண்டன்டா? அவருடைய வேலையில் நீங்கள் தலையிடுவதாக அவர் உங்கள் மேல் கம்ப்ளெயிண்ட் பண்ணுகிறார்.. இதற்கு உங்கள் பதில் என்ன...?''

அவள் என்ன பதிலைச் சொல்ல முடியும்? அம்பை எய்தவனே... எய்ததற்கு விளக்கம் கேட்கிறான்.. 'நீதான் சொன்னாய்' என்று சொல்ல முடியுமா? அவன் படி



யளக்கும் முதலாளி... அவள் கை கட்டி நிற்க வேண்டிய சேவகி...

ஸ்வேதா மௌனமாக நின்றாள். அவனது நோக்கம் அவளுக்குத் தெளிவாகப் புரிந்தது... அன்று 'வாடிக்கை யாளரை கேள்வி கேட்க நீ யார்?' என்று அவள் கேட்ட கேள்விக்கு.. இன்று பதிலுக்குப் பதில் கேட்டு அவளை பழிவாங்குகிறான்.

''இதுவரை இவங்க இப்படிக் கேட்டது இல்லை சார்... இன்றைக்குத்தான் கேட்கிறாங்க.. உங்களைக் கேட்காமல் பைலைக் கொடுக்கக் கூடாது என்பதால் உங்களிடம் பர்மிசன் கேட்க வந்தேன்.''

''நோ.. நோ.. என்னிடம் ஏன் பர்மிசன் கேட்க வேண டும்... அக்கவுண்ட்ஸ் டிபார்ட்மென்ட் இஸ் யுவர்ஸ்.. நீங்கள் தான் அங்கிருக்கும் பைல்களுக்குப் பொறுப்பு.. அவற்றை யார் கேட்டாலும் கொடுக்கக் கூடாது... யு ஆர் கரெக்ட்...''

''ஸ்வேதா மேடம் ஏன் அப்படிக் கேட்டாங்கன்னு தெரியவில்லையே சார்...''

''எல்லாம் ஆர்வக் கோளாறுதான்.. ஆபிஸே தன் தலைமீது ஓடுகிறதாய் ஓர் எண்ணம் இவங்களுக்கு... நாம் யார்.. நம் லெவல் என்ன... நம் லிமிட் என்ன.. என்று இன்னும் இவங்களுக்குப் புரியவில்லை. நான் எம்டியாகி விட்டேனில்லை... இனிப் போகப் போக அவற்றையெல்லாம் புரிய வைத்து விடுவேன்...''

அக்கவுண்டன்ட் ஸ்வேதாவை பரிதாபமாய் பார்த்த வாறு அறையை விட்டு வெளியேறினார்.. அவர் மனம் வருந்தியது.

'பாவம்.. நல்ல பெண்... எம்டியின் மகனுடைய விரோதத்தை சம்பாதித்துக் கொண்டு விட்டாள்.. எப்படிச் சமாளிக்கப் போகிறாளோ...'

தன் முன் அசையாமல் நின்று கொண்டிருந்த ஸ்வேதாவை ஒரு புழுவைப் பார்ப்பது போல் பார்த்துக் கொண்டே டேபிளின் மேலிருந்த டேபிள் வெயிட்டை உருட்டிக் கொண்டிருந்தான் ரிஷி.

''மலையோடு மலை மோதலாம். சாதாரண மண் கட்டி மோதக் கூடாது. உடைந்து தூள் தூளாகி விடும்... இதையும் நீ போகப் போக புரிந்து கொள்வாய்...''

அப்போதுதான் ஸ்வேதா வாய் திறந்து அந்த வார்த்தைகளைச் சொன்னாள்.

''மலையும் மண்கட்டியை தனக்கு சரிசமமாக நினைத்து மோதக்கூடாது... மலையோடு மோதினால் தான் மலைக்குப் பெருமை... மண்கட்டியோடு மோதுவதில் மலைக்கு என்ன பெருமை.. சிறுமைதானே...''

அவன் போகச் சொல்லாமலே அறையை விட்டு வெளியேறிவிட்டாள் ஸ்வேதா...

ரிஷியின் முகம் கருத்தது....

'எவ்வளவு திமிர்.. இவளது திமிரை அடக்க வேண்டுமே... வேலையை விட்டுத் தூக்கலாம் என்றால் அப்பா அதற்கு தடை விதித்திருக்கிறாரே...'

அதன் பின்னால் அவளை எண்ணையில் போட்டு வறுத்தெடுக்காத குறைதான்.. மற்றபடி அவளை மனரீதியாக பலவீனப்படச் செய்தான்.. மற்றவர்கள் முன்னால்தான் அவளைத் திட்டுவான். அவள் நின்றால்



குற்றம்.. உட்கார்ந்தால் குற்றம்.. என்று அவளது செயல்கள் அனைத்திலும் குற்றம் கண்டுபிடித்தான். அலுவலகத்திற்குள் நுழைந்தாலே அவள் முள் மேல் நடப்பதைப் போல பயந்து கொண்டே நடக்க வைத்தான். தினமும் ஓர் அடி.. தினமும் ஓர் அவமானம்.. என்று மனம் சோர்ந்து போய் விட்டாள் ஸ்வேதா.

வேலையை விட்டுவிடலாம்.. அதன் பின்னால் இன்னொரு வேலையை சேலத்திற்குள் அவள் தேடிப் பிடிக்க வேண்டும்.. அப்படிக் கிடைத்துவிட்டாலும் இந்த அளவு சம்பளம் கிடைப்பது கேள்விக் குறிதான்.. இப்போது தீபாவின் முகத்திலும்.. ரகுவின் முகத்திலும் தெரியும் கவலையில்லாத சிரிப்பு குறைந்து விடும்...

பாரம் சுமக்க நேர்வது போல் வேலை பார்க்க நேர்வது மிகக் கொடுமையானது... அதை அனுபவித்த ஸ்வேதா பாரம் இழுக்க முடியாமல் மூச்சுத் திணறினாள்... தாங்கி நின்ற தகப்பனில்லை... சீராட்டத் தாய்க்கும் மனமில்லை... கூட அமர்ந்து பேசிக் குறைகளைப் பகிர்ந்து கொள்ளும் வயதில் தங்கையும் தம்பியும் இல்லை.. தானாய் மனதில் புழுங்கிப் புழுங்கி... தனக்குள் கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தாள் ஸ்வேதா.

இந்தத் துன்ப இருள் ஓர் நாள் மறையும்... இனிதாக ஓர் விடியல் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் நாள்களை நகர்த்தினாள். நாளை ஓர் மாற்றம் வரும் என்ற நம்பிக்கையில்தானே உலகமே சுழல்கிறது.

''அக்கா... என் டிபன்பாக்ஸ்...'' தங்கையின் குரலில் நினைவு கலைய அவசரமாய் தங்கைக்கும் தம்பிக்கும் சாப்பாட்டு டப்பாவை எடுத்துக் கொடுத்துவிட்டு தானும் கிளம்பினாள் ஸ்வேதா.



தாயின் அறையை எட்டிப் பார்த்தாள்... லீலாவதி எழுந்து அமர்ந்து ஜன்னல் வழி வெளியே வெறித்துக் கொண்டிருந்தாள்... அந்த மட்டில் தன் வேலைகளை யாவது தானே பார்த்துக் கொள்கிறாளே என்ற நிம்மதியுடன்...

''அம்மா கதவைப் பூட்டிக் கொள்ளுங்கள்... நான் ஆபிஸ் கிளம்பி விட்டேன்...'' என்று குரல் கொடுத்தாள்.

திரும்பிப் பார்த்த லீலாவதி எழுந்து வந்து கதவைப் பூட்டிக் கொள்ள தாய்க்கு கை அசைத்து விட்டு அவசரமாய் பஸ்ஸை பிடிக்க ஓடினாள் ஸ்வேதா...



## 3

ரிஷி மாடியிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்த போது அவனது செல்போன் ஒலித்தது... எடுத்துப் பேசினான்.

''ம்ம்... அம்மா.. இப்போதுதான் சாப்பிடப் போகிறேன்.. அப்பா எப்படி இருக்கிறார்... நானா.. நான் தினமும் அவரிடம் பேசுகிறேனே... அவர் சொல்லவில்லையா... குட் ஜோக்.. அது எப்படி அப்பா உங்களிடம் சொல்லாமல் இருப்பார்...? ம்ம்.. ம்ம்.... ஆபிஸ் நல்லபடி போய் கொண்டிருக்கிறது.. ம்ம்... ம்ம்... நைட் கால் பண்ணுகிறேன்...'' என்றபடி போனை அணைத்து விட்டு டைனிங் ஹாலுக்கு வந்தான்.



அவனுக்குப் பரிமாறக் காத்திருந்த சதாசிவம்.

''அம்மாவா பேசினாங்க தம்பி..'' என்று வினவினார்.

''ஆமாம் மாமா...'' என்றபடி சாப்பிட உட்கார்ந்தான் ரிஷி.

''ம்ம்... பெண் பிள்ளை இல்லாத வீடு ஒரு வீடா... அம்மா இருக்கும் போது வீட்டில் லட்சுமி களை தாண்டவமாடுச்சு...''

''ஏன் மாமா... அம்மா பெயர் மோகனாதானே.. மோகன களையில்லை தாண்டவமாடியிருக்கணும்?''

''போங்க தம்பி.. உங்களுக்கு எல்லாமே கிண்டல் தான்.. காலா காலத்தில் ஓர் கல்யாணத்தை பண்ணிக் கொண்டிர்கள்ன்னா அம்மாவும் ஐயாவும் எவ்வளவு சந்தோசப்படுவார்கள் தெரியுமா?''

''அவர்கள் சந்தோசப்படுவார்கள்... ஆனால் நான்..? என் சுதந்திரம் போய்விட்டதுன்னு துக்கமில்லை படுவேன்?''

ரிஷி சிரித்தபடி எழுந்து கை கழுவிவிட்டு... வாசலுக்குச் சென்றான். கார் டிரைவர் அவசரமாய் ஓடி வர... வேண்டாமென்று கை அசைத்துவிட்டுத் தானே காரை எடுத்தான். வாசலில் இருந்த வாட்ச்மேன் வாயில் கேட்டைத் திறந்து விட.... கார் வழுக்கிக் கிளம்பி.. சாலையில் இறங்கி ஓட ஆரம்பித்தது.

'காலா காலத்தில் கல்யாணத்தை பண்ணிக்கொள்ள வேண்டாமா?' சதாசிவத்தின் கேள்வி காதில் ஒலித்தது.

'கல்யாணமா..?' புருவங்களைச் சுளித்தான்.

'ஓ.. நோ.. ரிஷி... மேரேஜ் என்பதெல்லாம் எனக்குச் சரிப்படாது... ஐ நீட் யு.. யு நீட் மி.. நாம் சேர்ந்து

வாழ்கிறோம்.. பிடித்தால் இதைக் கண்டினியூ பண்ணுவோம்... பிடிக்காவிட்டால் குட் பை சொல்லிவிட்டு... நல்ல நண்பர்களாய் பிரிந்து சென்று விடுவோம்... அதை விட்டுவிட்டு.. இந்த மேரேஜ்.. அது... இது.. என்று சொல்லி என்னை இர்ரிடேட் பண்ணாதீர்கள்... ஐ டோன்ட் லைக் தி வெர்டு... 'மேரேஜ்'...'

உதட்டைச் சுழித்தபடி அவனை விட்டு விலகி அமர்ந்த ஷாலினி நினைவில் வந்தாள்.

'ஷாலினி... யு டிட் இட்...' ரிஷியின் முகம் இறுகியது.

கனடாவில் அவன் படித்துக் கொண்டிருந்த போது தான் அவன் ஷாலினியை சந்தித்தான். கரிய மூடியுடன்... வெள்ளை வெளேரென்ற சருமத்துடன்... மேற்கத்திய நாகரிகத்தின் வார்ப்பாகத் தன் முன் நின்ற இந்திய அழகியை அவன் பிரமிப்பாய் பார்க்க... அவள்.. இது போன்ற பார்வைகள் தனக்கு சகஜம் என்பது போல் தோள்களை குலுக்கிக் கொண்டு அவனிடம் தன் கரத்தை நீட்டினாள்.

''ஐ ஆம் ஷாலினி...''

''ஐ ஆம் ரிஷி...''

பட்டுப் போன்ற மென்மையான சருமம் என்று விளம்பரப் படங்களில் கூறுவதை அவன் கேட்டிருக்கிறான். முதன் முதலில் இப்போதுதான் அந்த வார்த்தைகளின் அர்த்தத்தை உணர்கிறான்.

ஷாலினி அங்கே வேலை பார்த்துக் கொண்டிருந்தாள்.. ஷாலினியின் அழகில் ரிஷி மயங்க... அவளுக்கும் ரிஷியின் மேல் ஓர் ஈர்ப்பு உண்டாகி விட்டது.. அவர்கள் பழகினார்கள்... பழக்கம் நெருக்கமான



பழக்கமாகி.. ஷாலினி.. ரிஷியின் அபார்ட்மெண்டிற்கு வந்து அவனுடன் சேர்ந்து வசிக்கும் அளவிற்கு வந்துவிட்டது. ஷாலினி இல்லாமல் தன்னால் வாழ முடியாது என்ற நிலைமைக்கு தள்ளப்பட்ட ரிஷி.. அவளிடம் திருமணம் பற்றிப் பேசினான்.

''நாம் மேரேஜ் பண்ணிக் கொள்ளலாம் ஷாலு...''

''எதற்காக ரிஷி...?''

''என்ன ஷாலு இப்படிக் கேட்கிறாய்..?''

''வேறு எப்படிக் கேட்க வேண்டும் ரிஷி.. நாம் இப்போது மேரிட் லைப்பைத் தானே வாழ்ந்து கொண்டிருக்கிறோம்...''

''இது அங்கீகாரமில்லாத உறவு ஷாலினி...''

''அங்கீகாரம் எதற்கு ரிஷி..? எனக்கு உங்களைப் பிடித்திருக்கிறது... உங்களுக்கு என்னைப் பிடித்திருக்கிறது.. நாம் சேர்ந்து வாழ்கிறோம்... இதற்கு ஏன் தேவையில்லாமல் மேரேஜ் அது இதுன்னு ரிஸ்க் எடுக்க வேண்டும்?''

''மேரேஜ் என்றால் ரிஸ்க்கா?''

''பின்னே இல்லையா..? இப்போது என் வாழ்க்கையை நான் சந்தோசமாக வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.. உங்களுடன் மேரேஜ் என்ற கமிட்மெண்ட் ஏற்பட்டுவிட்டால்.. நீங்கள் ஒரு டிபிகல் இண்டியன் வொய்பாக என்னை வாழும்படி கட்டாயப்படுத்துவீர்கள்.. உங்களுடன் இந்தியாவுக்கு வந்து விடும்படி சொல்லுவீர்கள்.. எனக்கு அது பிடிக்காது.... எனக்கு என் சுதந்திரம் மிக முக்கியம்.. யாருக்காகவும் நான் என் உரிமைகளை விட்டுக் கொடுக்க மாட்டேன்.. அதே





போல இந்த தேசத்தை விட்டு வரவும் மாட்டேன்... நான் இங்கே பிறந்தவள்... எனக்கு இந்த நாட்டில் குடியுரிமை இருக்கிறது... நான் இந்த தேசத்தின் பழக்க வழக்கங்களில் வளர்ந்து விட்டேன்... புதிதாக மாற என்னால் முடியாது...''

''நான் உன்னோடு இங்கேயே இருந்து விடுகிறேன் ஷாலு...''

'''எனக்காக ஏன் நீங்கள் இங்கே இருக்க வேண்டும்..? லுக் ரிஷி... நான் இதற்கு முன்னால் என் மனதுக்குப் பிடித்த வேறு சிலரோடு வாழ்ந்திருக்கிறேன்... நாளைக்கே உங்களைப் பிடிக்காவிட்டால்... எனக்குப் பிடித்த ஒருவருடன் போய் விடுவேன்.. இன்றைக்கு நாம சேர்ந்து இருக்கிறோம்.. இதை மட்டும் நினைவில் வையுங்கள்.. 'நேற்று' என்பதை மறந்து விடுங்கள்... 'நாளை' என்பதை யோசிக்காதீர்கள்... இந்த நிமிடமும்... இந்த வினாடியும் மட்டுமே நிஜம்...''

ரிஷி அதிர்ந்து போனான்.. அது வரையில் அவள் தனக்கு மட்டுமே சொந்தமானவள் என்று அவன் கொண்டிருந்த பிரமை அன்று அழிந்துவிட்டது. முன்னோர்களைப் பற்றிய நினைவுகளுடன்... நாளைய தினங்களைப் பற்றிய கோட்பாடுகளுடன் வாழும் இந்திய வாழ்வின் அருமை அவனுக்கு அப்போதுதான் புரிந்தது. அதன்பின் அவன் ஷாலினியிடம் திருமணத்தைப் பற்றிய பேச்சையே எடுக்கவில்லை... அதே சமயம்... அவளைப் பிரிந்திருக்கவும் அவனால் முடியவில்லை... அவள் மேல் அத்தனை மோகம் கொண்டிருந்தான் ரிஷி... ஆனால் அவள் அவனை ஒரு நாள் பிரிந்தாள்.



''ரிஷி.. திஸ் இஸ் ராபர்ட்...'' என்று ஒருவனை ஒரு நாள் அறிமுகம் செய்து வைத்தாள்.

''ஹலோ...'' என்று அவன் கை நீட்ட... பதிலுக்கு கை குலுக்கி விட்டு நாகரிகம் கருதி சில வார்த்தைகள் அவனிடம் ரிஷி பேசிக் கொண்டிருந்த போது ஷாலினி அவளுடைய பெட்டிகளுடன் அவர்களுடைய படுக்கை அறையை விட்டு வெளியே வந்தாள்.

''குட் பை ரிஷி..''

''வாட்..?''

''நான் ராபர்ட்டுடன் போகிறேன் ரிஷி... டைம் கிடைத்தால் எங்கள் அபார்ட்மென்டிற்கு வாங்க... என்ன... ராபர்ட்.. ரிஷி இஸ் எ நைஸ்மேன்...''

ரிஷி ஸ்தம்பித்து நிற்கையில் அவள் போயே போய் விட்டாள்.

'எப்படி அவளால் அது முடிந்தது...' ஸ்டியரிங்கை பிடித்திருந்த ரிஷியின் கரங்கள் அதை இன்னும் இறுக்கிப் பிடித்தன.

'என்னுடன் வாழ்ந்த வாழ்க்கையை அவள் எப்படி மறந்தாள்? ஒரு நொடியில் என் காதலை தூக்கி எறிந்து விட்டுப் போய் விட்டாளே..'

ரிஷி காரை நிறுத்திவிட்டு ஷாலினியின் நினைவுகளோடு படி ஏறினான். அலுவலகத்தில் நுழைந்ததும்.. அவன் எதிரே வந்த ஸ்வேதா...

''குட்மார்னிங் சார்...'' என்றபடி அவனது முகம் பார்க்காமல் அவனைக் கடந்து சென்றாள். அவளது தலையில் சூடியிருந்த மல்லிகையின் நறுமணம் காற்றில் கலந்து வந்து அவனது நாசியை வருடியது.

இதமான அந்த நறுமணம் எதனாலோ புண்பட்டுப் போயிருந்த ரிஷியின் மனதை அமைதிப்படுத்த... அவன் அது ஏன் என்று யோசித்தபடி காலை வணக்கம் சொன்ன மற்ற அலுவலர்களுக்கு தலை அசைத்தபடி கேபினுக்குள் சென்றான். உள்ளே சென்ற அடுத்த நொடியில் ஸ்வேதாவை இண்டர்காமில் அழைத்தான்.

''யெஸ் சார்...'' என்றபடி அவன் எதிரே வந்து நின்றாள் ஸ்வேதா.

''மரியாதை என்றால் என்னவென்று தெரியாதா..?'' அவளை உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை பார்வையிட்டபடி அவன் வினவினான்.

'இன்றைக்கு என்ன புதிதாய் பார்ப்பதுபோல் பார்க்கிறான்...?' அவனது பார்வையில் சங்கடப்பட்ட ஸ்வேதா.. தன் சங்கடத்தை மறைத்துக் கொண்டு பதில் சொன்னாள்.

''என் வீட்டில் என்னைப் பெற்றவர்களும்... ஆபீஸில் எனக்குப் பெற்ற தந்தை போல் இருந்து வழிகாட்டிய உங்கள் அப்பாவும் எனக்கு மரியாதையைப் பற்றி.. அதை எப்படி மற்றவர்களுக்கு கொடுப்பது என்பது பற்றி சொல்லிக் குடுத்துத்தான் வளர்த்திருக்கிறார்கள் சார்...''

ஏனோ.. பாண்டுரங்கனை அவள் தன் தந்தை போல் என்று குறிப்பிட்டது ரிஷியின் மனதிற்கு இதமாக இருந்தது.

''ஊஹூம்...? ஒருவர் முகத்தைப் பார்க்காமல் குட்மார்னிங் சொல்லுவதுதான் அவர்கள் சொல்லிக் கொடுத்த மரியாதையா?''



அவள் உடுத்தியிருந்த அடர்ந்த நீல நிற காட்டன் சேலையையும்.. அதை மடிப்புக் கலையாமல் அழகாக அவள் பின் பண்ணியிருந்த நேர்த்தியையும் பார்த்தபடி அவன் கேட்டான்.

'ஓ.. நீ அப்படி வருகிறாயா..?' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்ட ஸ்வேதா 'ஆனால் அதை ஏன் இந்தப் பார்வை பார்த்தபடி கேட்கிறாய்..?' என்று எரிச்சல் பட்டபடி பதில் சொன்னாள்.

''மரியாதை என்பது இரண்டு வகைப்படும் சார்.. ஒன்று மற்றவர்களுக்கு நாம் கொடுக்கும் மரியாதை.. இரண்டாவது சுய மரியாதை... நான் இரண்டையும் பார்க்க வேண்டும்.. உங்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டியது என் கடமை.. நான் அதைச் செய்கிறேன்.. அதே நேரத்தில் என் சுயமரியாதையையும் நான் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் இல்லையா...''

எத்தனை நாள்தான் பொறுமையாய் சகித்துக் கொண்டு போவது... 'இந்த மடம் இல்லாவிட்டால் சந்த மடம்..' என்ற முடிவிற்கு ஸ்வேதா வந்து விட்டிருந்தாள்... இத்தனை நாள் வேலை பார்த்ததில் சேர்த்து வைத்த பணம் கொஞ்சம் இருக்கிறது... மாலை நேரங்களில் இன்னும் சில கம்ப்யூட்டர் கோர்ஸ்களை படித்து வைத்திருந்தாள். சேர்த்த பணத்தை மீண்டும் போஸ்ட் ஆபிஸில் மாத வட்டி கிடைக்கும்படி போட்டு விட்டு வேறு வேலைக்குப் போய் விட்டால்.. குறையும் சம்பள பணத்தை.. மாத வட்டிப் பணம் ஈடு கட்டி விடும் என்று ஏற்கனவே கணக்குப் போட்டு வைத்திருந்தாள் ஸ்வேதா. எனவே இன்று பொறுத்தது போதும் என்ற முடிவிற்கு வந்து பதில் சொல்லிவிட்டாள்.



பேசும்போது அவள் முகபாவம் மாறிய விதத்தையும்... தன்னை நேரடியாய் நோக்காமல் மேஜையைப் பார்த்தபடி அவள் பேசியதையும்.. விறைப்பாக அவள் நின்று கொண்டிருந்ததையும் ரசித்தபடி ரிஷி மெல்ல நகைத்தான்.

'இவன் சிரிக்கிறானா...?' ஸ்வேதா ஆச்சரியமாய் அவனது முகம் பார்த்தாள். சிவந்த அழகான முகத்தில் அடர்ந்த மீசையுடன்.. ஆண்மை நிரம்பிய விழிகளுடன்.. சிரித்துக் கொண்டிருந்த அவன் முகம் மிகவும் கவர்ச்சியாய் இருப்பது போல் அவளுக்குத் தோன்றவும் சட்டென்று பார்வையை விலக்கிக் கொண்டாள்.

'சட்... என்ன நினைப்பு இது... விவஸ்தை கெட்ட நினைப்பு..' தன்னைத் தானே கடிந்து கொண்டாள் ஸ்வேதா.

'என்னதான் இவன் முதலாளியாக இருந்தாலும்... இப்படியா இவனை பார்த்து ரசிப்பது... என்றும் இல்லாத திருநாளாய் இவன் ஏன் சிரித்து வைக்கிறான்? அதனால் தானே... இவன் முகத்தைப் பார்த்துவிட்டு இப்படி நினைத்துவிட்டேன்... இவன் பேசாமல் சிடுமூஞ்சியாகவே இருந்திருக்கலாம்...' ஸ்வேதா ரிஷியை மனதிற்குள் திட்டிக் கொண்டிருந்தாள்.

''அதாவது... என் முகத்தைப் பார்த்து குட்மார்னிங் சொன்னால் உங்களது சுய மரியாதை குறைந்து விடும்... அப்படித்தானே...'' சுழல் நாற்காலியில் சுழன்றபடி ஸ்வேதாவின் வட்ட முகத்தையும்.. அதில் தெரிந்த களங்கமில்லாத அமைதி கலந்த அழகையும்... அவளது நெற்றிப் பொட்டையும்... அவளது மை தீட்டிய கரு விழிகளையும் ஆராய்ந்தபடி அவன் கேட்டான்.



'பின்னே இல்லையா...' என்று நினைத்த ஸ்வேதா... நினைத்ததை எல்லாம் வெளியில் சொல்ல முடியாமல் மௌனமாக நின்றாள்.

''ஏன்...? பதில் பேச மாட்டீர்களா...? இத்தனை நேரமும் பச்சை மிளகாயை அரைத்தது போல் காரசாரமாய் பதில் சொல்லிக் கொண்டிருந்திருந்தீர்களே இப்போது பேச்சை மறந்து நின்று கொண்டிருக்கிறீர்களே... என்ன விசயம்?''

அவள் பேச முடியாமல் தவிப்பதை ரசித்தபடி அவன் கேட்டான்.

அவள் அதற்கும் பதில் சொல்லாமல் நின்று கொண்டிருந்தாள்.

சின்னச் செயின்... காதுகளில் பூவிதழ்கள் விரித்தது போன்ற தோடு... ஒரு கையில் மெலிதான சிறு வளையல்... இன்னொரு கையில் வாட்ச்... எந்தவித ஒப்பனையுமில்லாத முகம்.. இயற்கை வனப்புடன் எதிரே நின்று கொண்டிருந்தவளின் மேல் வைத்த பார்வையை விலக்காமல் பார்த்தபடி இருந்தான் ரிஷி.

அவளைப் பார்க்கப் பார்க்க அவன் மனதில் காலையில் ஏற்பட்டிருந்த புழுக்கம் மறைந்து மனம் மயிலிறகை விட லேசாக மாறுவதை உணர்ந்தவனின் உள்ளம் வியப்படைந்தது.

'இவளது அழகுதான் எத்தனை சக்தி வாய்ந்தது... புண்பட்ட உள்ளம் ஒரு நொடியில் ஆறிவிட்டதே... இதுதான் இந்தியப் பெண்ணுக்குள்ள சக்தியா?'

''நான் போகலாமா சார்...?'' அவனது பார்வை மாறுதலை உணர்ந்து எச்சரிக்கையுடன் வினவினாள் ஸ்வேதா.

''நான் போகச் சொன்னேனா?'' அவன் புருவம் உயர்த்தினான்.

'இது என்ன கேள்வி..?' சங்கடத்துடன்.

''இல்லை சார்...'' என்றாள் ஸ்வேதா.

''அப்புறம் போகலாமா என்று ஏன் கேட்கிறீர்கள்?''

''இல்லை... வேலை அதிகம் இருக்கிறது...''

ஊடுருவும் அவனது பார்வையை தாங்க முடியாமல் முகம் சிவந்த ஸ்வேதா தடுமாற்றத்துடன் பதில் சொன்னாள்.

'ஒரு பார்வையைக் கூட இவள் தாங்க மாட்டாளா...' அவளது முகச்சிவப்பை மிக வியப்பாக பார்த்தான் ரிஷி... அவளது அந்தத் தன்மை அவனை மிகவும் கவர்ந்தது... அவளையே பார்த்தபடி பேச்சை வளர்த்தான்.

''உங்களது வேலை என்ன...?''

''சார்...? நான் உங்கள் செகரட்டரி சார்...''

''என் செகரட்டரி நான் சொல்லும் வேலைகளைத்தானே செய்ய வேண்டும்... இப்போது நான் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்ல வேண்டியது மட்டும்தான் உங்கள் வேலை.. அன்டர்ஸ்டாண்ட்...?''

அவனது வார்த்தைகள்தான் கறாராய் வெளிவந்தன.. அவனது முகத்தில் அந்தக் கறார் தன்மை இல்லை... என்றும் இல்லாத ஓர் உணர்வை அவன் முகம் வெளிப்படுத்தியது... அதுதான் ஸ்வேதாவை சங்கடப்படுத்தியது.

'இவன் ஏன்.. இன்றைக்கு இப்படிப் பார்த்துத் தொலைக்கிறான்...'



அவளது உள்ளத்தை அவளது முகம் உணர்த்த... அதை உணர்ந்தும் உணாரதவன் போல் அவன் அவளிடம் கேட்டான்.

''உங்களுடைய அப்பா இங்கு தான் வேலை செய்து கொண்டிருந்தார்.... இப்போது இறந்து விட்டார் இல்லையா...''

'ஏன் இது உனக்கு இப்போதுதான் தெரியுமா..? அவர் மட்டும் உயிரோடு இருந்திருந்தால் நான் ஏன் உன் முன் வந்து இப்படி நிற்கப் போகிறேன்...?'

ஸ்வேதா தன் உணர்வுகளைக் கட்டுப்படுத்த முயன்றபடி தலையை மட்டும் அசைத்தாள்.

''அம்மா என்ன செய்கிறார்கள்?''

'என்ன செய்கிறார்கள்.. அப்பா இறந்து போன துக்கத்தை.. மூன்று வருடங்களாய் அசை போட்டுக் கொண்டிருக்கிறார்கள்...' மனதிற்குள் நொந்தபடி.. பதில் சொன்னாள் ஸ்வேதா.

''அவங்க ஹவுஸ் வொய்ப் தான் சார்... பட்.. அப்பா போன துக்கத்தில் இருந்து இன்னும் அவங்க மீளவில்லை... உடம்பு சரியில்லாமல் படுத்த படுக்கையாய் ஆகிவிட்டார்கள்...''

ரிஷியின் முகம் மாறியது.



## 4

''என்ன சொல்கிறீர்கள் ஸ்வேதா... அப்போ.. உங்களுக்கு யார் உதவி செய்வது? வீட்டை யார் பார்த்துக் கொள்வார்கள்...?''



ஸ்வேதா மௌனமாய் நின்றாள். இதுவரை அவளுடன் பணியாற்றிக் கொண்டிருந்த தோழிகள் கூட இப்படிக் கேட்டதில்லை. இவன் எப்படி இவ்வளவு விரைவில் அவளது தனிமையான சுமையை புரிந்து கொண்டான்..? முதன் முதலாக அவளது மனதில் அவன் மேலிருந்த வெறுப்பும் கோபமும் கொஞ்சம் குறைந்தன.

''நான்தான் வீட்டைப் பார்த்துக் கொள்ள வேண்டும் சார்...''

''உடன் பிறந்தவர்கள் யாருமில்லையா...?''

''இருக்கிறார்கள்.. அவர்கள் மிகவும் சிறியவர்கள்.. என் தங்கை தீபாவிற்கு பதினாறு வயதுதான் ஆகிறது... ப்ளஸ் ஒன் படித்துக் கொண்டிருக்கிறாள்.. தம்பிக்கு பதின்மூன்று வயதாகிறது... நைன்த் படிக்கிறான்...''

''இவர்கள் சிறியவர்களா...? உங்களுடைய அப்பா இறக்கும்போது உங்கள் வயது பதினெட்டு தானாமே... நீங்கள் உங்கள் குடும்பத்தைப் பார்த்துக் கொள்ளவில்லையா...?''

''பாவம்... அவர்கள் படிக்கிறார்கள் சார்...''

''நீங்கள் கூட காலேஜில் படித்துக் கொண்டே இங்கே பார்ட் டைமாக வேலை பார்த்தீர்களாமே... அப்போது காலேஜ்... வீடு.. வேலை மூன்றையும் சேர்த்து நீங்கள் சமாளிக்கவில்லையா?''

ஸ்வேதா புன்னகைத்தாள்.

''நான் வீட்டிற்கு மூத்தவள் சார்... பொறுப்புகளை சுமக்கக் கடமைப்பட்டவள்... என் சுதந்திரமும்.. உரிமைகளும் எனக்கு முக்கியமில்லை... என் குடும்பம் சிதைந்து விடக்கூடாது... என்னைப் பெற்றவளும்... என் கூடப்



பிறந்தவர்களும் நிம்மதியாக வாழ வேண்டும்... எனக்கு அதுதான் முக்கியம்...''

''உங்களுக்கென்றும் ஓர் வாழ்க்கை இருக்கிறது ஸ்வேதா...''

''மற்றவர்களுக்காக வாழ்வதுதான் வாழ்க்கை... சார்...''

''இது எப்படி சாத்தியம்?''

''இந்தியப் பெண்கள்... முக்கியமாக தமிழ்நாட்டுப் பெண்கள்.. இப்படித்தான் வாழ்கிறோம் சார்... இப்போது நீங்கள் உங்கள் அம்மாவிற்கு ஒரே மகன்தான்... வெளிநாட்டிலிருந்து இப்போதுதான் திரும்பி வந்திருக்கிறீர்கள்.. உங்களுடன் இருக்க வேண்டும்.. உங்களுக்குப் பிடித்ததை சமைத்துப் போட வேண்டும் என்று உங்களுடைய அம்மாவிற்கு கொள்ளை ஆசை இருந்திருக்கும்... ஆனால் உங்களுடைய அப்பாவிற்காக உங்களைப் பிரிந்து அவருடன் அவர்கள் போய் விடவில்லையா...? அது போல்தான்... இங்கே எல்லாப் பெண்களும் இருப்போம்... நீங்கள் அதிக நாள் வெளிநாட்டிலேயே இருந்து விட்டீர்கள் இல்லையா... அதனால் உங்களுக்கு இதைப் பார்த்து ஆச்சரியமாக இருக்கிறது.. எங்களுக்கு இது இயல்பான ஒரு விசயம் சார்...''

அவள் பேசப்பேச ரிஷியின் மனதில் ஆச்சர்யம் கரை புரண்டு ஓடிக் கொண்டிருந்தது... அவன் காதுகளில் ஷாலினியின் வார்த்தைகள் ஒலித்தன.

'எனக்கு என் சுதந்திரமும்... என் உரிமைகளும் மிகவும் முக்கியம் ரிஷி... நான் எதற்காகவும்.. யாருக்காகவும் அதை விட்டுக் கொடுக்கமாட்டேன்...'

இங்கே ஒருத்தி மற்றவர்களுக்காக வாழ்வதுதான் வாழ்க்கை என்று சொல்லிக் கொண்டு நிற்கிறாளே... இவளைப் பார்த்தால் ஷாலினி என்ன சொல்வாள்? ஆனால் அவள்தான் ஏற்கனவே சொல்லி விட்டாளே...

'ஒரு டிபிகல் இன்டியன் வொய்பாக வாழ என்னால் முடியாது...'

ஆனால் நகமும் சதையுமாக அவனுடன் பின்னிப் பிணைந்து வாழ்ந்து விட்டு... எதுவுமே நடக்காதது போல் அவன் கண் எதிரிலேயே இன்னொருவனுடன்... 'குட்பை...' சொல்லிவிட்டுப் போக அவளால் முடியும்.

'ஷாலினி... ஷாலினி.. ஷாலினி...' அவள் எழுப்பிய மோகத்தீயில் வெந்து கொண்டிருந்த ரிஷியை,

''ஏன் சார் தலையைப் பிடித்துக் கொள்கிறீர்கள்... காபி கொண்டு வரட்டுமா?'' என்று கேட்ட ஸ்வேதாவின் வார்த்தைகள் நடப்புலகிற்கு இழுத்து வந்தன.

'இன்று எனக்கு என்ன ஆகிவிட்டது.. ஏன் இப்படி அவள் நினைவுகளில் மூழ்குகிறேன்...' தலையை உலுக்கி தன்நிலைக்குத் திரும்பியவன்...

''ப்ளீஸ்.. கிவ் இட்...'' என்றான்.

அவசரமாய் அறையை விட்டு வெளியேறிய ஸ்வேதா ஒரே நிமிடத்தில் கையில் சூடான காபியுடன் திரும்பி வந்தாள்.

''சார்.. காபி...''

அதை வாங்கிப் பருகிய ரிஷியின் தலைவலி கொஞ் சம் குறைந்தது.. தெம்பு மீண்டவனாக ஸ்வேதாவைப் பார்த்து,



''தேங்க் யு...'' என்றபடி புன்னகைத்தான்.

''இட் இஸ் மை டியுட்டி சார்...'' என்றபடி ஸ்வேதா தன் இடத்திற்குச் சென்றுவிட்டாள்.

முகத்தைப் பார்த்தே தனக்கு தலை வலிப்பதை கண்டு கொண்ட அவளின் குணமும்... ஒரு நிமிடத்தில் சூடான காபியை கொண்டு வந்து பருக வைத்த அவளது பரிவும் ரிஷியின் மனதைத் தொட்டன.

'அம்மா இப்போது பக்கத்தில் இருந்திருந்தால் இப் படித்தான் கவனித்திருப்பார்கள்... அம்மாவைப் போலவே இவளும் கவனித்துக் கொள்கிறாளே...' என்று எண்ணமிட்டவனின் மனம்,

'தாய்க்குப் பின் தாரம்... என்று இதைத்தான் சொல் வார்களோ...' என்று நினைத்துப் பின் திகைத்தது.

ஏன் தன் மனதில் இப்படி ஒரு சிந்தனை ஓடுகிறது... என்று வியந்தபடி ரிஷி அன்றைய வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்தான்.. மதிய உணவின் போது ஸ்வே தாவைப் பார்க்க வேண்டும் போல் தோன்றவும் அவளை அழைத்தான்.

''சார்...'' என்றபடி வந்து நின்றவளிடம்...

''லன்ச்... என்ன கொண்டு வந்திருக்கிறீர்கள்?'' என்று வினவினான் ரிஷி.

''சாதம்... குழம்பு... பொரியல்...''

''வாவ்.. நீங்களே சமைத்தீர்களா?''

''ஆமாம் சார்...''

''எனக்கு வீட்டிலிருந்து சாப்பாடு வந்திருக்கிறது... இஃப் யு டோன்ட் மைன்ட் என்னுடன் உட்கார்ந்து சாப்பிடு கிறீர்களா...?''



ஸ்வேதா திகைத்தாள்... இவன் என்ன இப்படிக் கேட்கிறான்? இவனுடன் அவள் எப்படி உட்கார்ந்து சாப் பிட முடியும்? விசயம் கண் காது மூக்கு வைத்து எல்லாப் பக்கமும் பரவி விடாதா? அலுவலகத்தின் சுவர்களுக்குக் கூட கண்ணும்... காதும் உண்டே...

''நோ... தேங்க்ஸ் சார்... நான் என் பிரண்ட்ஸுகளுடன் உட்கார்ந்து சாப்பிடுவதுதான் பழக்கம்...''

ஷாலினியை முதன் முதலில் சந்தித்த போது.. சாப்பிட ஹோட்டலுக்கு கூப்பிட்டான் ரிஷி.. உடனே... 'வித் பிளெஷர்' என்றபடி வந்துவிட்டாள் அவள்.. ஷாலினியின் வித் பிளஷரையும்.. ஸ்வேதாவின் நோ தேங்க்ஸையும் ஏனோ அவன் மனம் ஒப்பிட்டுப் பார்த்தது.

ஸ்வேதா போய் விட்டாள்... அவன் சற்று நேரம் ஏதோ யோசனையுடன் அமர்ந்திருந்தான்... பின் எழுந்து சென்று முகம் கழுவி விட்டு வந்து சாப்பிட அமர்ந்தான். சாப்பிடும்போது செல்போன் ஒலித்தது... எடுத்து நம்பர் பார்த்தான்.

''அம்மா...'' என்றபடி போனை காதில் வைத்து பேச ஆரம்பித்தான்.

''என்ன செய்து கொண்டிருக்கிறாய் ரிஷி...?''

''சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன்ம்மா...''

''இப்போதுதான் சாப்பிடுகிறாயா?''

''இப்போது தானே லன்ச் டைம்...''

''போடா... நான் பக்கத்தில் இல்லையென்பதால் லேட்டாய் சாப்பிட்டு உடம்பைக் கெடுத்துக் கொள் கிறாய்...''



''அப்படியெல்லாம் இல்லைம்மா...''

''நீ சொன்னால் இல்லையென்று ஆகிவிடுமா.. நீ உடனே கிளம்பி ஊட்டிக்கு வா...''

''உடனேவா.. ஊட்டிக்கா... எதற்கும்மா?''

''நீ வா சொல்கிறேன்...''

எதிர்முனையில் போன் வைக்கப்பட்டு விட்டது. ரிஷி யோசனையுடன் சாப்பிடுவதை தொடர்ந்தான்.

'எதற்கு அம்மா வரச் சொல்கிறாங்க...'

மாலையில் ஜி.எம்மை அழைத்து சில உத்தரவுகளை பிறப்பித்துவிட்டு கம்ப்யூட்டரில் கணக்குகளை சரி பார்க்க ஆரம்பித்தான்.

''எக்ஸ்யூஸ் மி சார்..'' ஸ்வேதா வந்து எதிரே நின்றாள்.

''யெஸ்...'' என்றான் ரிஷி கம்ப்யூட்டரிலிருந்து பார் வையை திருப்பாமல்...

ஸ்வேதா மதிய உணவு சாப்பிடப் போனவள்தான்... அதற்குப் பின் அவனது கேபின் பக்கம் எட்டிக் கூடப் பார்க்கவில்லை...

'என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாள் இவள்... ஏதோ மனம் சரியில்லையென்று இரண்டு வார்த்தை அதிகம் பேசிவிட்டால் இப்படி ஒதுங்குகிறாளே... இவள் என்ன பெரிய அப்ஸரஸா..? நான் என்ன இவள் அழகில் மயங்கி இவளிடம் பல்லைக் காண்பிக்கிறேனா...'

''நீங்கள் இரண்டு மூன்று நாள்கள் ஆபிஸ் வரமாட் டிங்கன்னு ஜி.எம். சொன்னார்...'' அவள் நயந்த குரலில் பேசினாள்.

''ஸோ வாட்...'' அவன் கடுமையான குரலில் வினவினான்.

''முக்கியமான பதில்கள் சில கம்பெனிகளுக்கு நீங்கள் உடனடியாய் அனுப்ப வேண்டியிருக்கிறது...''

''அது இப்போதுதான் உங்களுக்குத் தெரியுமா?''

''இல்லை சார்... முதலிலேயே தெரியும்...''

''அப்புறம் ஏன் இவ்வளவு நேரமும் டிலே பண்ணினீங்க? மதியமே என்னிடம் வந்து சொல்வதற்கென்ன?''

''சார்... அது வந்து..''

''இந்த வந்து... போயெல்லாம் உங்கள் வீட்டில் வைத்துக் கொள்ளுங்கள் இது ஆபீஸ்.. இங்கே ஆபீஸ் வேலைகளை தள்ளிப் போடாமல் செய்யக் கற்றுக் கொள்ளுங்கள்...''

''சார்... நான் தள்ளிப் போடவில்லை... நீங்கள் நாளைக்கு ஆபீஸ் வருவீர்கள் என்று நினைத்தேன்...''

''நீங்களாக நினைத்துக் கொண்டு வேலை செய்வதற்கு இது இடமல்ல...''

''நீங்கள் நாளை ஆபீஸ் வரமாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியாது சார்...''

''நான் என் சொந்த வேலையாக ஊட்டி போகப் போகிறேன்.. திரும்பி வர இரண்டு மூன்று நாள்களாகும்.. இதை நான் எழுந்து வந்து உங்கள் சீட்டில் நின்று.. உங்களிடம் சொல்ல வேண்டுமா? டெல் மீ...''

''ஸாரி சார்...''

அவளுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது... அவனது கடுமை கண்டு கண்ணீர் வந்தாலும் ஒரு



வகையில் அது அவளுக்கு நிம்மதியாக இருந்தது. அவன் முதலாளி.. அவள் தொழிலாளி... அவன் திட்டட்டும்.. கேட்டுக் கொள்ளலாம்.. காலையில் பார்த்தது போல் ஓர் பார்வை பார்க்காமல் மிரட்டட்டும்... தாங்கிக் கொள்ளலாம்.. அதை விட்டுவிட்டு.. மென்மையாய் பேசுவதும்.. மிருதுவாய் சிரிப்பதும் அவளுக்கு வேண்டாம்.. அது அவளுக்கு நல்லதல்ல.

''உலகத்திலேயே எனக்குப் பிடிக்காத வார்த்தை எது தெரியுமா? இந்த ஸாரி தான்.. மன்னிப்பு கேட்பதை விட... மன்னிப்புக் கேட்காமல் ஒழுங்காக வேலையைப் பார்க்கக் கற்றுக் கொள்ளுங்கள்...''

''யெஸ் சார்...''

ரிஷி இப்போது அவளைத் திரும்பிப் பார்த்தான். அவளது முகம் கலங்கியிருந்தாலும்... ஓர் நிமிர்வோடு அவள் நிற்பதைக் கவனித்தபடி,

''கையில் என்ன...?'' என்று வினவினான்.

''பதில் அனுப்ப வேண்டிய லெட்டர்ஸ்...''

''ரெடியாய் பிரிண்ட் பண்ணி கொண்டு வந்து விட்டீர்களா?''

''ஆமாம் சார்...''

''இங்கே நான் எம்.டி.யா? இல்லை நீங்கள் எம்.டி.யா?''

''சார்...?''

''என் ஒபினியன் என்ன என்று கேட்காமல் எப்படி நீங்களாக பதிலை ரெடி பண்ணலாம்... நீங்கள் உங்கள் லிமிட் எது என்று உணரவே மாட்டீர்களா?''

''சார்.. நீங்கள் கிளம்பும் நேரம் வந்துவிட்டது என்று..''





''அதற்காக.. ம்..? லுக் ஸ்வேதா.. திஸ் இஸ் டூ மச்... நீங்கள் என் செகரட்டரி.. என் கேபினுக்குள் வராமல் நீங்களாக வேலை பார்க்க நினைப்பது சரி வராது.. உங்கள் மனதில் நீங்கள் பெரிய ஆள் என்ற எண்ணம் இருக்கிறதா?''

''சார் ப்ளீஸ்... அப்படியெல்லாம் இல்லை...''

அவள் மதியத்திலிருந்து இவன் அறைப்பக்கம் எட்டிப்பார்க்காததை சுட்டிக் காட்டுகிறான். ஆனால் அவள்தான் என்ன செய்வாள்.. என்றுமில்லாமல் இன்று ஒரு மாதிரியாகப் பார்க்கிறான்... குழைந்து பேசுகிறான்... வீட்டு விவகாரத்தை விசாரிக்கிறான்.. 'மதியம் என்னுடன் சேர்ந்து சாப்பிடவா' என்று கூப்பிடுகிறான்.. இன்று இவன் கூப்பிடுகிறானென்று சேர்ந்து சாப்பிட்டால்.. நாளை 'வா வெளியில் எங்காவது போய் லன்ச் சாப்பிட்டு விட்டு வரலாம்' என்று கூப்பிட மாட்டான் என்பது என்ன நிச்சயம்.. அதற்கு முதலிலேயே இது போன்ற எதிர்பார்ப்புகளுக்கு இடம் கொடுக்காமல் தவிர்த்து விடுவது புத்திசாலித்தனமில்லையா...

ஸ்வேதா உதட்டைக் கடித்துக் கொண்டு அசையாமல்... 'நீ என்ன வேண்டுமானாலும் திட்டிக் கொள்... கேட்டுக் கொள்கிறேன்...' என்ற ரீதியில் நிற்க... ரிஷி நிதானித்தான்.

'இவளுக்கு நான் எதற்காக இவளைத் திட்டுகிறேன் என்பது தெரிந்திருக்கிறது. நீ என்னை என்ன வேண்டுமானாலும் பேசு... நான் உன் பக்கம் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டேன் என்று பிடிவாதம் காட்டுகிறாள். ம்ம்... இது எவ்வளவு தூரம் போகிறது என்று பார்க்கிறேன்.. இவள் என்னை ஒதுக்குகிறாளா..?'



ரிஷியின் மனதில் ஷாலினி ஒதுங்கிப் போனது நினைவு வந்தது... 'அவளும் இவளும் குணத்தில் நேர் எதிர் துருவங்களாக இருந்தாலும் ரிஷியிடமிருந்து ஒதுங்குவதில் ஒன்று போல் இருக்கிறார்களே...'

ரிஷியின் முகம் கடுமையானது.

''கிவ் தட் பேப்பர்ஸ்...''

ஸ்வேதா அவசரமாக நீட்டினாள்... வாங்கிப் பார்த்த ரிஷி... அந்த பேப்பர்களின் மேல் சிகப்பு மையினால் குறுக்கே அடித்தான்... அந்த பேப்பர்களை அவள் முகத்தில் விசிறினான்.

''சார்...''

''உட்காருங்க... நான் சொல்வதை எழுதிக்கங்க... அதன் பின்னால் அதை கம்யூட்டரில் டைப் பண்ணி பிரிண்ட் அவுட் எடுத்துக் கொண்டு வாங்க.''

''சார் நேரமாகி விட்டதே...''

''ஆகட்டும்.. திஸ் இஸ் யுவர் மிஸ்டேக்... முதலிலேயே என் ஒபினியனைக் கேட்டு விட்டு பதிலை நீங்கள் டைப் பண்ணியிருக்க வேண்டும்.. நீங்களாக முடிவு பண்ணினீர்கள் இல்லையா... அதற்கான பனிஷ்மென்ட் தான் இது.. ம்ம்.. எழுதுங்கள்...''

ரிஷி நிதானமாய் நாற்காலியில் சுழன்று கொண்டே ஒவ்வொரு வார்த்தையாக யோசித்துச் சொல்ல ஆரம்பித்தான்.. ஸ்வேதா பல்லைக் கடித்துக் கொண்டு எழுத ஆரம்பித்தாள்... அவன் சொல்லி முடிக்கவும் சுவர் கடிகாரம் ஏழு முறை அடிக்கவும் சரியாக இருந்தது.

''ம்ம்... போங்க... பதிலை பிரிண்ட் அவுட் எடுங்க...''

ஸ்வேதா மனதிற்குள் பதைப்புடன் எழுந்து சென்றாள்.

'இவன் வேண்டுமென்றே தாமதம் செய்கிறான்.. ஆபிஸில் யாருமே இல்லை... என்னைத் தனிமைப்படுத்தியிருக்கிறான்.. தவறாக நடக்க முயற்சித்தால் என்ன செய்வது...'

பயந்து கொண்டே... கம்ப்யூட்டரில் அவசரமாய் டைப் பண்ண ஆரம்பித்தாள்.. பிரிண்ட் அவுட் எடுத்த பேப்பர்களுடன் அவன் அறைக்குள் சென்றபோது சுவர் கடிகாரம் எட்டு முறை அடித்தது.

'கடவுளே.. தீபாவும் ரகுவும் காபி கூட குடித்திருக்க மாட்டார்களே.. அம்மா என்ன செய்கிறாங்களோ தெரியவில்லையே.. எல்லோருக்கும் பசிக்க ஆரம்பித்திருக்குமே...'

மனம் வீட்டில் இருக்க... ஸ்வேதா இயந்திர கதியில் அவனிடம் பேப்பர்களை நீட்டினாள்.. நிமிர்ந்த ரிஷியின் கண்களில் அவளது தோளில் இருந்த கருவண்டு பட்டது.

'இது எப்படி.. இவள் தோளில் வந்தது.. கடித்துவிட்டால் என்ன செய்வது...'

ரிஷி அவள் தோள் மேலிருந்த வண்டைத் தட்டிவிட ஸ்வேதா பதட்டத்துடன் பின்னால் நகர்ந்து அவன் கன்னத்தில் ஓங்கி ஓர் அறை அறைந்தாள்.



5

ரிஷியின் கண்களில் தீப்பொறி பறந்தது... அவன் செய்தது என்ன..? இங்கு நடப்பது என்ன...? அவள்



தோளில் இருந்த வண்டைத்தானே அவன் தட்டிவிட்டான்... அவள் தோள் மேலா கை போட்டான்... அப்படியே கை போட்டிருந்தாலும் அதை தோழமையாக எடுத்துக் கொள்ளும் வெளிநாட்டிலேயே இருந்து பழகியவனுக்கு அவள் அதிகமாக அலட்டிக் கொள்வது போல் தோன்றியது.. எவ்வளவு தைரியம் இருந்தால் இவள் அவனை கை நீட்டி அடிப்பாள்.

ஓங்கியிருந்த ஸ்வேதாவின் கையை இறுக்கிப் பிடித்து அருகில் இழுத்தான் ரிஷி... அவள் திமிறினாள்... உடல் வெலவெலக்க வார்த்தைகளைக் கொட்டினாள்.

''யு ராஸ்கல்... ஏழையென்றால் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று நினைத்தாயா? நீ கூப்பிட்டவுடன் வந்து விட நான் ஒன்றும் நீ நினைக்கும் மாதிரிப் பெண்ணில்லை...''

''ஏய்ய்... நிறுத்து... விட்டால் பேசிக் கொண்டே போகிறாயே.. நீ என்ன உலக மகா அழகியா... உன்னை நான் கூப்பிட்டேனா... எப்போது கூப்பிட்டேன்..?''

''லன்ச் டயத்தில் உன்னோடு சேர்ந்து சாப்பிடக் கூப்பிடவில்லை...?''

''சேர்ந்து சாப்பிடத்தானேடி கூப்பிட்டேன்.. வேறு எதற்குமா கூப்பிட்டேன்...?''

''அப்படிக் கூப்பிட்டிருந்தால் தெரிந்திருக்கும்...''

''என்ன தெரிந்திருக்கும்..? சொல்லு.. என்ன தெரிந்திருக்கும்?''

ஸ்வேதா தந்நிலை மறந்தாள்... அது இரவு நேரம்.. அலுவலகத்தில் யாரும் இல்லை.. அவர்கள் இரண்டு பேரும் போராடிக் கொண்டிருந்ததோ அவனது தனி



அறைக்குள்... அந்த அறை ஏஸி செய்யப்பட்டிருந்தது.. அவள் கத்தினாலும் வெளியில் கேட்காது.. இத்தனை பாதகமான விசயங்கள் இருக்க...அவள் அவற்றையெல்லாம் யோசிக்காமல்... மனதில் தோன்றியதை பேசி விட்டாள்.

''உன் மரியாதை கெட்டிருக்கும்...''

அவ்வளவுதான்... ரிஷி வெறி கொண்ட வேங்கையாய் மாறி அவளை வேட்டையாடிவிட்டான்.. காலையிலிருந்து அவனைத் துரத்திய ஷாலினியின் நினைவுகளால் தோன்றியிருந்த மனவலி... பாந்தமான தோற்றத்தில் அமைதியாய்.. இதமாய் பேசின ஸ்வேதா காட்டிய அவமரியாதை... இரண்டும் சேர்ந்து கொள்ள.... ரிஷி. தான் என்ன செய்கிறோம்... அதனால் ஒரு பெண்ணின் வாழ்க்கை எப்படி சின்னாபின்னமாகி விடப் போகிறது என்பதையெல்லாம் யோசிக்காதவனாய் ஸ்வேதாவை இழுத்து தன் கைக்குள் கொண்டு வந்தான்.. அவள் கதறக் கதற.. அவள் மேல் படர்ந்தான். ஸ்வேதா அவனிடமிருந்து விடுபட போராடினாள். பலனில்லை... அவனிடம் கெஞ்சினாள். அவனது காதுகள் செவிடாகிப் போயின... கண்ணீர் விட்டாள்.. அவன் அதைக் கண்டு கொள்ளவே இல்லை... ரிஷி தன் வெறி தணியும் வரை அவளை விட்டு விலகவே இல்லை.

முடியவே முடியாதா... என்று ஸ்வேதா கசந்த நிமிடங்கள் முடிந்து ரிஷியின் வேகம் தணிந்து ஒரு வழியாய் அவன் அவளை விட்டு விலகி எழுந்த போது.. ஸ்வேதா உணர்ச்சியற்ற மாக்கட்டையாய் மூர்ச்சையாகி விட்டிருந்தாள். அறைக்குள்ளேயே இருந்த பாத்ரூமிற்கு போய்



குளிர்ந்த நீரைப் பிடித்து முகத்தில் அடித்துக் கொண்ட பின்தான் ரிஷி ஒரு நிதானத்திற்கு வந்தான்.

'என்ன காரியம் செய்து விட்டேன்... சே...'

அவனுக்குத் தன் மேல் கோபம் வந்தது.

'அவள்தான் மிடில் கிளாஸ் பேமிலியைச் சேர்ந்தவள்.. கட்டுப்பாடான வாழ்க்கை வாழ்பவள்... அவள் ஒதுங்கி நின்றால் எனக்கு என்ன வந்தது..? அவளை எல்லோரும் போன பின்னாலும் இருக்க வைத்ததால்தானே இந்த விபரீதம் நிகழ்ந்து விட்டது...'

அறைக்குள் வந்து தரையில் சரிந்து கிடந்தவளைப் பார்த்தான். மேஜை மேலிருந்த தண்ணீர் பாட்டிலை எடுத்துக் கொண்டு தரையில் குத்துக்காலிட்டு அமர்ந்தான். அவளைத் தூக்கி மடியில் சாய்த்துக் கொண்டு அவள் முகத்தில் தண்ணீரைத் தெளித்தான்.. மெல்ல அவள் கண் விழித்தபோது.. தண்ணீர் பாட்டிலில் இருந்த தண்ணீரை அவளுக்குப் புகட்டி விட்டான்.. மடக்.. மடக்கென்று தண்ணீரைக் குடித்தவள் தன்னுணர்வு பெற்றதும் அவன் மடியில் தானிருப்பதை உணர்ந்து அவசரமாய் விலகி அமர்ந்தாள்.. அதே சமயம்...

'இனி விலகி அமர்ந்து எதைக் காப்பாற்றிக் கொள்ளப் போகிறாய்...' என்று அவள் மனம் கேள்வி கேட்க.. துக்கத்தில் உடைந்து அழுதாள்.

அநாதரவாய் சுவரில் சாய்ந்து முழங்கால்களைக் கட்டிக் கொண்டு அதில் முகம் புதைத்து அழுது கொண்டிருந்தவளைப் பார்த்த ரிஷிக்கு அவள் மேல் இரக்கம் சுரந்தது.. ஆதரவாய் அவள் தோள் பற்றினான். அவள் உடல் அதிர்வதைக் கண்டதும் கையை

அவசரமாக விலக்கிக் கொண்டவன் எழுந்து தன் சுழல்நாற்காலியில் அமர்ந்து அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்... சுவர் கடிகாரம் பத்தடித்து ஓயவும்... ஸ்வேதாவிற்கு தூக்கிவாரிப் போட்டது.

'இவ்வளவு நேரமாகி விட்டதா... வீட்டில் என்ன ஆனதோ.. வீட்டிற்குப் போக வேண்டுமே...' என்று நினைவு வந்த அதே சமயம்...

'இனி வீட்டிற்குப் போய் என்ன செய்வது...?' என்ற கேள்வியும் அவளுள் எழுந்தது.

என்ன செய்வதாக இருந்தாலும்... யோசித்துச் செய் வோம்... என்ற முடிவிற்கு வந்தவள்.. எது நடந்தாலும்.. இனி இங்கே வேலைக்கு வரக் கூடாது என்ற தீர் மானத்தோடு எழுந்தாள். அறையை விட்டு வெளியேறப் போனாள்.

''எங்கே போகிறாய்...?'' என்று வினவினான் ரிஷி.

அவள் பதில் சொல்லாமல் வெளியே போக முயல... ஒரே எட்டில் அவளருகில் வந்து அவளது வழியை மறித்தவன்...

''இது... இந்த அலட்சியத்தால்தான் நடக்கக் கூடாதது நடந்து விட்டது.. இன்னுமா உன் திமிரைக் காட்டு கிறாய்..?'' என்று கேட்டான்.

அவள் கலங்கிச் சிவந்த விழிகளுடன் அவனை உறுத்துப் பார்த்தாள்.

''திமிர்..! அந்தத் திமிர் உங்களைப் போன்ற பணக்கார ஆணிடம் இருக்கலாம். என்னைப் போன்ற ஏழைப் பெண்ணிடம் இருக்கக் கூடாது... இருந்தால் உங்களுக்கு



பொறுக்காது... அந்தத் திமிரை அடக்க எந்த வழியையும் கையாள்வீர்கள்.. அது ஒரு பெண்ணின் கற்பை சூறை யாடுவதாக இருந்தாலும் தயங்காமல் செய்வீர்கள்.. நீங்கள் எல்லாம் எப்படி ஒரு நல்ல தாயின் வயிற்றில் மகனாகப் பிறந்தீர்கள்...?''

''இதோ பார்... பிரச்சனை உனக்கும் எனக்கும்தான்.. தேவையில்லாமல் என் அம்மாவை ஏன் இழுக்கிறாய்...''

''இழுப்பேன்.. அந்த மாதரசி பெற்றதால் தானே.. உங்களைப் போன்ற அயோக்கியனெல்லாம் இந்த உலகத்தில் நடமாடுகிறீர்கள்.. அதனால் நான் அவர்கள் பெயரை இழுக்கத்தான் செய்வேன்...''

''ஏய்ய்..'' என்று உறுமியபடி அவளருகில் அவன் நெருங்கினான்.

''என்ன செய்யப் போகிறீர்கள்..? நீங்கள் செய்ய இன்னும் என்ன பாக்கி இருக்கிறது... என் வாழ்க்கை யையே அழித்து விட்டீர்கள்.. ஒரு வார்த்தை.. ஒரே ஒரு வார்த்தை... நீங்கள் யாரென்று தெரியாமல் 'யார் நீ...' என்று கேட்டுவிட்டேன். அதற்காக வன்மம் வைத்து என்னைப் பாழடித்து விட்டீர்களே... இது உங்களுக்கே நியாயமாய் படுகிறதா..? உங்கள் அப்பா மாசற்ற மனிதர்.. அப்படிப்பட்ட தகப்பனுக்கு இப்படிப்பட்ட பிள்ளையா...''

''ஸ்டாப் இட் ஸ்வேதா... புரியாமல் பேசாதே... இந்த நிலைமையை நீயாய் உருவாக்கிக் கொண்டாய்.. வெறும் வாய் வார்த்தைக்காக இப்படி ஒரு செயலை செய்யும் நீசன் நானில்லை...''

''நீங்கள் நீசனில்லாமல் வேறு யார்..? எப்படி... எப்படி... ஒரு பெண்ணை பாழடித்து விட்டு



அவளுடைய முகம் பார்த்து நான் நீசனில்லை என்று வேறு சொல்கிறீர்களே... வெரிகுட்.. சினிமாவில் வரும் வில்லன்களையெல்லாம் தூக்கிச் சாப்பிட்டு விட் டீர்கள்...''

''இதோ பார்... நான் உன்னிடம் தவறாக நடந்து கொள்ள நினைக்கவில்லை.. நீதான் என்னைத் தவறாக புரிந்து கொண்டிருக்கிறாய்...''

ஸ்வேதா அவனை வெறித்தாள்.. அவளது பார்வை யில் இருந்த அக்கினி அவனைச் சுட்டது... அவன் பேச்சிழந்தான்.. அவள் குமுறினாள்.

''இத்தனைக்கும் பிறகுமா விளக்கம் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்...? நான் கெஞ்சினேனே.. கதறி னேனே.. எதுவுமே உங்கள் காதுகளில் விழுகவில் லையே.. இப்போது எல்லாம் முடிந்த பின் நியாயவாதி போல் பேசுகிறீர்களே.. திரும்பவும் சொல்கிறேன்.. நீங்கள் பார்த்துப் பேசி... பழகிய பெண்களும் நானும் ஒன்றில்லை...''

அவள் வெளியேற முயன்றாள்... அவன் வழியை விட்டு விலகாமல் நின்றான்... அவள் அவனை வெறுப் புடன் பார்த்தாள்.

''அதுதான் நினைத்ததை நடத்தி முடித்து விட்டீர் களே.. இன்னும் ஏன் வழியை மறிக்கிறீர்கள்...''

''எங்கே போகிறாய்...''

''நிச்சயமாக... சாகப் போகவில்லை... என் வீட்டாருக் காக நான் உயிருடன் இருந்துதான் ஆக வேண்டும்.. ஆனால் ஒன்று... திரும்பவும் நான் இந்த ஆபிஸ் படியை



மிதிக்க மாட்டேன்... உங்கள் முகத்தில் விழிக்கவும் மாட்டேன்...''

ரிஷி மனம் துடிக்க அவளையே பார்த்தான்.. பின்னர் ஒரு முடிவுக்கு வந்தவனாய் கூறினான்.

''வா... நானே உன் வீட்டில் கொண்டு போய் விடு கிறேன்...''

''வேண்டாம்... என் வீட்டிற்குப் போக எனக்கு வழி தெரியும்...''

''இந்த நேரத்தில் எப்படித் தனியாகப் போவாய்...?''

''அது என் கவலை.. வழியை விடுங்கள்...''

''ஸ்வேதா.. நான் உன் வீட்டில் உன்னை விட்டு விட்டுத்தான் போவேன்...''

ரிஷி உறுதியுடன் கூறினான்... ஸ்வேதா வெறுப் புடன் பேசாமல் நின்றாள். அவளது மௌனத்தை சம்மதமாக எடுத்துக் கொண்டவன் அறையைத் திறந்து கொண்டு வெளியே நடந்தான்.. ஸ்வேதா தன் கைப் பையை எடுத்துக் கொண்டு பின் தொடர்ந்தாள். அலு வலக வாசல் படிகளில் இறங்கிய இருவரையும் பார்த்த வாயில் காவலாளி விழிகள் தெறித்து விடும்படி 'ஆ'வென்று வாய் பிளந்து பார்த்தான்.

'இவ்வளவு நேரமும்.. எம்.டி.யும் இந்தப் பெண்ணும் கட்டிடத்திற்குள் தான் இருந்தார்களா...'

அவன் மனதின் நினைவு முகத்தில் தெரிய ஸ்வேதா உடல் கூசிப் போனாள். இதுவரை இப்படியொரு நிலை அவளுக்கு ஏற்பட்டதே இல்லை. இன்றுதான் எல்லாமே முடிந்து விட்டதே...

வாட்ச்மேனின் பார்வையையும்.. ஸ்வேதாவின் உடல் குன்றலையும் கண்டு கொள்ளாமல் கார் கதவைத் திறந்து விட்டான் ரிஷி... வாக்குவாதம் பண்ண முடியாமல் உடலும்.. மனமும் சோர்ந்து கிடக்க... பதில் பேசாமல் ஏறி அவனருகில் அமர்ந்தாள் ஸ்வேதா... அவளிடம் வழியைக் கேட்டபடி காரை ஓட்டினான் ரிஷி.

தூரத்திலேயே... தன் வீட்டு வாசலில் விளக்கு எரிவதையும்... காம்பவுண்டின் மற்ற வீடுகளில் இருப்பவர்கள் வீட்டுவாசலில் குழுமியிருப்பதையும் கவனித்த ஸ்வேதா... காரை நிறுத்தும்படி கூறினாள்.

''ஏன்...?''

''இந்த நேரத்தில் நான் உங்களுடன் போய் நிற்பது சரிவராது...''

''இந்த நேரத்தில் நீ தனியாய் போய் நிற்பது மட்டும் சரி வருமா..?''

''முன்னதற்கு.. பின்னது பெட்டர்...''

''எது பெட்டரென்று எனக்குத் தெரியும்... நீ மட்டும் வாயைத் திறக்காமல் என்னுடன் வா போதும்.. நான் பார்த்துக் கொள்கிறேன்...''

'நீ பார்த்துக் கொள்ளும் லட்சணம்தான் எனக்குத் தெரியுமே...' வெறுப்புடன்... மௌனித்தாள் ஸ்வேதா.

'பார்வதி விலாஸ்...' காம்பவுண்டிற்குள் கார் நுழைந்தது... ஸ்வேதாவின் வீட்டு வாசலில் கூடி நின்றவர்கள் ஆர்வமாய் காரைப் பார்க்க.. கார் கதவைத் திறந்து கொண்டு இறங்கினாள் ஸ்வேதா.



அப்போதுதான் அந்த அதிசயம் நிகழ்ந்தது... வீட்டுக்குள்ளே இருந்து அழுத கண்களுடன் வெளியே ஓடி வந்த லீலாவதி... மகளைக் கட்டிக் கொண்டு,

''வந்து விட்டாயா.. என் செல்லமே... ராஜாத்தி... ஸ்வேதா.. உனக்கு ஒன்றும் ஆகிவிடவில்லையே.. கண்ணுக்குள்ளேயே வைத்துப் பார்த்துக் கொள்ள வேண்டிய வயதில் உன்னை வேலைக்கு அனுப்பிவிட்டு நிம்மதியாய் நான் இருந்த கொடுமைக்குத்தான் கடவுள் என்னை இப்படி சோதித்து விட்டாரோன்னு கதிகலங்கிப் போய் விட்டேன்... ஏம்மா இவ்வளவு லேட்...'' என்று கண்ணீர் விட்டாள்.

நடப்பதை நம்ப முடியாத திகைப்புடன் தாயைப் பார்த்தாள் ஸ்வேதா... அவளுடைய அம்மாவா இது.. மூன்று வருடங்களுக்கு முன் காட்டிய பரிவையும் தாய்மையின் தவிப்பையும் காட்டுகிறாளே.. அவளது புத்தி தெளிந்துவிட்டதா...?

அதற்குள் அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்கள் அவளை சூழ்ந்து கொண்டனர்.

''ஏன் ஸ்வேதா... எப்பவும் இவ்வளவு நேரம் கழித்து நீ வரமாட்டாயே.. இன்றைக்கு என்ன வந்தது..?'' சாந்தி விசாரித்தாள்.

'என்னவென்று பதில் சொல்வது...' ஸ்வேதா யோசிக்கும் முன்...

''அதுதானே... டாண்ணு மணி ஆறடிக்கும்போது நம்ம ஸ்வேதா வீட்டுக்குள் நுழைந்து விடுமே.. இப்ப.. மணி நடுராத்திரி பதினொன்னு ஆகப்போகுது... இவ்வளவு நேரமா உனக்கு வேலை இருந்தது..'' என்று வினவினாள் எதிர் வீட்டுக் கண்மணி.



'இப்படி வளைத்து... வளைத்துக் கேள்வி கேட்கிறார்களே...' ஸ்வேதாவிற்கு கண்ணைக் கட்டிக் கொண்டு வந்தது.

அப்போது வெங்கலத் தொண்டையைத் திறந்து பார்வதியம்மாள் பேச ஆரம்பித்தாள்.

''இது குடும்பங்கள் இருக்கிற இடம்... இங்கே கண்ட கழிசடைக்களுக்கு இடமில்லை... இந்தாம்மா ஸ்வேதா... இது வரை உன் மேல் எந்தப் புகாரும் வந்ததில்லை... நானும் தப்புத் தண்டாவிற்கு போகாத நல்ல பெண் என்று நினைத்துத்தான் உன் குடும்பத்திற்கு வீட்டை வாடகைக்கு விட்டேன்.. இப்போது பார்த்தால் நடுராத்திரியில் எவன் கூடவோ ஊர் சுற்றிவிட்டு காரில் வந்து இறங்குகிறாய்... நீ நாளைக்கே வீட்டைக் காலி பண்ணிவிடு.''

ரிஷிக்கு இது புதிது... நள்ளிரவில் ஒரு மத்திய வர்க்கப் பெண் வீடு திரும்பினால் என்னவெல்லாம் நிகழும் என்பதை அவன் கண்கூடாய் கண்டான்.. ஆறு மணியானவுடனேயே.. வீட்டிற்குப் போக வேண்டும் என்று ஸ்வேதா பறந்தது அவன் கண் முன் நின்றது. குற்றம் செய்த அவன் நெஞ்சம் குறுகுறுத்தது... அவன் பார்வதியம்மாளைப் பார்த்து பேச ஆரம்பித்தான்.

''அம்மா.. பி.ஆர். எண்ணையைப் பற்றித் தெரியுமில்லையா..?''

''இது என்னப்பா கேள்வி கேட்கிறாய்.. அந்த எண்ணைகளைத்தானே நாங்கள் எங்கள் வீட்டில் வாங்கி புழங்குகிறோம்... இந்தப் பெண்ணும் அந்தக் கம்பெனியில் தானே வேலை பார்க்குது..''



''அந்த எண்ணைகளைத் தயாரிக்கும் கம்பெனியின் ஓனர்தான் நான்... ஸ்வேதா என் ஆபிஸில்தான் வேலை செய்கிறாங்க...''

பார்வதியம்மாளின் முகத்தில் மரியாதை வந்தது.. அவனையும் அவனது வெளிநாட்டுக் காரையும் மாறி மாறிப் பார்த்தாள்.

''எங்கள் ஆபிஸில் ஸ்வேதா என் அப்பாவின் செகரட்டரியாக வேலை செய்து கொண்டிருந்தாங்க. உங்களுக்கு ஒன்று தெரியுமா..? ஸ்வேதாவின் அப்பாவும் எங்களுடைய ஸ்டாப்தான்.. அவருடைய மகள் என்பதால்தான் ஸ்வேதாவிற்கு எங்கள் கம்பெனியிலேயே வேலை போட்டுத் தந்தார் என் அப்பா...''

''அப்படியா தம்பி...''

பார்வதியம்மாளுக்குத்தான் இந்த விவரம் புதிது... அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்களுக்கு இது தெரிந்த விவகாரம் என்பதால் அவர்கள் அமைதியாய் அவனது பேச்சைக் கவனித்தனர்.

''நான் பாரினில் இருந்தேன். இங்கே வந்து கொஞ்ச நாள்கள்தான் ஆகிறது. என் அப்பாவிற்கு திடீரென்று உடல்நிலை சரியில்லாமல் போய்விட்டது. ஹாஸ்பிடலில் அட்மிட் பண்ணியிருக்கிறோம்.. ஸ்வேதாவிற்கு அவர் பெற்ற தகப்பன் போல.. அதனால் அவங்க என் அம்மாவிற்கு ஆறுதல் சொல்லிக் கொண்டு இந்நேரம் வரை ஹாஸ்பிடலில் இருந்தாங்க.. நேரம் ஆகிவிட்டதால்.. அவங்களை தனியாக அனுப்ப வேண்டாமென்று நான் என் காரில் கொண்டு வந்துவிட்டேன்.. அதைப் போய் தவறாய் புரிந்து கொண்டு பேசுகிறீர்களே...''

அவனது கண்ணியமான தோற்றமும்.. பேச்சும்.. பார்வதி அம்மாளை வசீகரிக்க.. அவள் வருத்தம் தெரிவித்தாள்.

''தப்பாய் எடுத்துக்காதீங்க தம்பி... காலம் கெட்டுக் கிடக்குது.. அதனால்தான்... நான் அப்படிப் பேசிவிட் டேன்.. இப்ப உங்க அப்பாவுக்கு எப்படி இருக்கிறது?''

''அவருக்கு இந்த ஊர் கிளைமேட் ஒத்துவராதாம் அம்மா. அதனால் ஊட்டியில் இருக்கும் எங்கள் எஸ் டேட்டில் போய் கொஞ்ச நாள் இருக்கச் சொல்லி இருக்கிறார்கள்... நான் போய் அவர்களை அழைத்துக் கொண்டு... இன்றைக்கு நைட்டே ஊட்டிக்கு கிளம்ப வேண்டும்ம்மா...'' பாதி பொய்யும்.. பாதி மெய்யுமாய் அவன் அளந்துவிட பார்வதி அம்மாள் பாகாய் உருகி விட்டாள்.



## 6

அந்தக் காம்பவுண்டில் குடியிருந்தவர்கள் அனை வருக்குமே ஸ்வேதாவின் குணம் தெரியும். அவளது அப்பழுக்கில்லாத நடத்தை தெரியும். அதிகாலை என்பதால் பால் பூத்திற்கு தனியாகப் போகப் பயந்து கொண்டு அதிக விலை கொடுத்து வீட்டிற்கு கொண்டு வரச் சொல்லி பால் வாங்குபவள். ஒரு வார்த்தை அதிகம் பேசமாட்டாள். நேர் கொண்ட நடை.. எவரையும்



ஏறெடுத்துப் பார்க்காத பார்வை... என்று வேலைக்குச் சென்று திரும்புபவள்.. ரிஷி பார்வதியம்மாளுக்குத்தான் விளக்கம் சொல்ல வேண்டி இருந்தது... மற்றவர்களுக்கு அல்ல... அவன் அவர்கள் பக்கம் திரும்பிய போது...

''எங்க ஸ்வேதாவைப் பற்றி எங்களுக்கு தெரியும். அவ இந்த ராத்திரி முழுவதும் வராமல் காலையில் வந்திருந்தால் கூட அதற்கு ஒரு காரணம் இருக்கும்ன்னு தான் நாங்க நினைப்போம்... அவளைப் பற்றி தப்பாக நினைக்கவே மாட்டோம்...'' என்று பக்கத்து வீட்டு சாந்தி சொன்னாள்.

''நாங்கள் என்ன காரணம்ன்னுதான் கேட்டோம்... ஏதாவது வேலையில்லாமல் வெளியில் தாங்காத பெண் எங்கள் ஸ்வேதா..'' என்று எதிர்வீட்டுக் கண்மணி கூறினாள்.

ரிஷி ஆச்சர்யப்பட்டுப் போனான். அடுத்த வீட்டுப் பெண் மேல் இவ்வளவு நம்பிக்கையா...?

''சரி... சரி... எல்லோரும் கூட்டம் கூடாமல் அவரவர் வீட்டுக்குப் போகிற வழியைப் பாருங்கள்.. பார்வதியம்மா காம்பவுண்டுக்குள்ளே விடியற வரைக்கும் கூட்டம் போட்டாங்களே என்ன விசயமாக இருக்கும்னு இந்தத் தெருவையே கேட்க வச்சிடாதீங்க... இந்த சேலத்துக் குள்ள இது வரைக்கும் என் காம்பவுண்டைப் பற்றி ஒரு பேச்சு வந்ததில்லை...'' என்று பார்வதியம்மாள் விரட்ட... எல்லோரும் கலைந்து அவரவர் வீட்டிற்கு சென்றனர்.

''அப்போ நானும் வரேன் தம்பி... வயசான காலத்தில் ராத்திரி தூங்காமல் கண் விழிச்சா என் உடம்புக்கு





ஆகாது.. நீங்க போகும் போது மறக்காமல் காம்பவுண்டு கேட்டை மூடிவிட்டுப் போங்க...'' என்று கூறிவிட்டு பார்வதியம்மாளும் போய் விட்டாள்.

லீலாவதி மகளின் கையை பிடித்துக் கொண்டு உள்ளே செல்லும்போது,

''உள்ளே வாங்க தம்பி... ஏன் வாசலிலேயே நிற்க நீங்க..'' என்று சொன்னாள்.

தயக்கமே இல்லாமல் ரிஷி வீட்டிற்குள் நுழைந்து விட்டான்... ஸ்வேதா சோர்ந்து போய் தரையில் உட் கார்ந்து விட.. லீலாவதி சமையலறைக்குப் போய் சூடாக பால் இரண்டு தம்ளர்களில் கொண்டு வந்து.. ரிஷியிடம் ஒரு தம்ளரை கொடுத்துவிட்டு ஸ்வேதாவின் அருகே அமர்ந்து அவளிடம் ஒரு தம்ளரை கொடுத்தாள்.

அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்த ரிஷி அந்தச் சிறு வீட்டைச் சுற்றிப் பார்த்தான்... அவனது படுக்கை யறையில் பத்தில் ஒரு பங்கு கூட இல்லாத சின்னஞ் சிறிய வீடு.

'இவ்வளவு சிறிய வீட்டில் கூட மனிதர்கள் வசிக்கிறார் களா...?'

இது போன்ற வீடுகளுக்கு முன்னே.. பின்னே போய் பழக்கமில்லாத ரிஷி வியப்புடன் நினைத்துக் கொண்டே கையிலிருந்த பாலைப் பருகினான்.

''அக்கா... நீ வர லேட்டானவுடனே நான் அழுக ஆரம்பித்து விட்டேன். அப்புறம்தான் அம்மா பயந்து போய் எழுந்து வந்து என்ன... என்னன்னு கேட்டாங்க..'' தீபா ரிஷியை ஜாடையாய் பார்த்துக் கொண்டே சொன் னாள்.



''நாங்க இரண்டு பேரும் அம்மாவை திட்டிவிட்டோம் அக்கா... உங்களுக்கு எங்க அக்காவைப் பற்றி என்ன கவலை..? எங்களுக்குத்தான் கவலை... அக்கா தானே எங்களுக்கு அப்பாவுக்கு அப்பாவாய்.. அம்மாவுக்கு அம்மாவாய் இருந்து பார்த்துக் கொண்டாங்க.. அவங்க இல்லாவிட்டால் நாங்க இரண்டு பேரும் என்னவாக ஆகியிருப்போமோன்னு கேட்டோம்.. அம்மாவுக்கு... அழுகை வந்துவிட்டது...'' ரகு பெரிய மனிதன் போல் ரிஷியை நேராகப் பார்த்தபடி ஸ்வேதாவிடம் கூறினான்.

''அம்மாவை அப்படியெல்லாம் பேசலாமா ரகு...'' ஸ்வேதா கடிந்து கொண்டாள்.

''பேசட்டும் ஸ்வேதா... சின்னப் பையன்.. அவனுக் கிருக்கும் அறிவு கூட எனக்கு இல்லாமல் போய்விட் டதே.. இத்தனை நாளாய்.. இவங்க இரண்டு பேரையும் போல.. நானும் உன் உழைப்பில் சீராடிக் கொண்டுதானே இருந்தேன்...'' லீலாவதி குற்ற உணர்வுடன் தலை கவிழ்ந்து கொண்டாள்.

''விடுங்கம்மா... இப்போது இந்தப் பேச்சு அவசியம் தானா..'' ஸ்வேதா தன் நிலையை எண்ணி நொந்தபடி பதில் கூறினாள்.

ரிஷி... காலி தம்ளரை அங்கிருந்த ஸ்டூலில் வைத்து விட்டுக் கிளம்பினான்.

''அப்போ... நான் போய்விட்டு வருகிறேன் ஆன்ட்டி... ஸ்வேதாவிற்கு அப்பா ஒரு மாதம் லீவ் கொடுக்கச் சொல்லியிருக்கிறார்... இதுவரை அவங்க லீவே எடுத்துக் கொண்டது இல்லையாமே... கொஞ்ச நாள் ரெஸ்ட் எடுக்கட்டும் என்று சொன்னார்...''

''அப்படியா தம்பி.. இதுவரை அவள் லீவே எடுத்துக் கொண்டது இல்லையா...'' லீலாவதி வியப்பாக கேட்க...

''ஆமாம் அம்மா... அக்கா இதுவரை லீவ் போட்ட தில்லை.. மூன்று வருடங்களாக லீவு போடாமல் வேலைக்குப் போய் வந்த ஜீவன் உலகத்திலேயே நம் அக்காவாகத்தான் இருக்க முடியும்.. ஆனால் உங்களுக்கு எங்கே இது தெரிந்திருக்கப் போகிறது.. நீங்கள்தான் பெற்ற பிள்ளைகள் என்ன கதி ஆனால் எனக்கென்னன்னு அந்த ரூமில் படுத்துக் கொண்டு விட்டத்திலிருந்து பல்லி களை பார்த்துக்கொண்டு அந்த ரூமை விட்டு வெளியே வரவே மாட்டிங்களே.. நானும் ரகுவும் கூட நீங்கள் பிள்ளைகளை விட்டுவிட்டு பல்லிகளை வளர்க்கிறீர் கள்ன்னு உங்களைப் பற்றிப் பெருமையாய் பேசிக் கொள்வோம். இல்லையாடா ரகு...'' என்று தம்பியைப் பார்த்துக் கேட்டாள் தீபா.

''அதுதானே... இன்றைக்கு ஏன் பல்லிகளை அநாதை யாய் விட்டுவிட்டு பிள்ளைகளைப் பற்றி விசாரிக்க வந்துவிட்டாங்க.. ஏம்மா.. அந்தப் பல்லிகளை மறந்து விட்டிங்களா...'' என்று ரகு தாயைக் கிண்டல் செய் தான்.

''ரகு...'' ஸ்வேதா அதட்ட.. ரகு தாயை விட்டுவிட்டு ரிஷியின் பக்கம் திரும்பி,

''ஏன் சார்.. எங்கள் அக்கா மூன்று வருடங்களாக லீவு போடாமல் வேலை பார்த்ததற்கு மெடலோ... சர்டிபி கேட்டோ தரமாட்டிங்களா..'' என்று கேட்டான்.

''ரகு ப்ளீஸ்.. அவரைப் போகவிடு...'' ஸ்வேதா தன் உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு தம்பியிடம் கூறினாள்.



'போய் தொலைடா... பாவி.. இன்னும் ஏன் இங்கே நிற்கிறாய்.. நீ என் வீட்டுக்காரம்மாளிடமும்... அக்கம் பக்கம் வீடுகளில் இருந்தவர்களிடம் பொய் சொல்லி என்னைக் காப்பாற்றியதற்கு நான் நன்றி சொல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கிறாயா.. உன்னை யார் பொய் சொல்லச் சொன்னது? உண்மையைச் சொல்ல வேண்டியதுதானே... நான் வேண்டுமென்றே இவளை தாமதப்படுத்திச் சீரழித்தேன்.. இவள் வாழ்வதா... சாவதா.. என்ற குழப்பத்துடன் வீடு வந்து சேர்ந்திருக் கிறாள் என்று சொல்ல வேண்டியதுதானே...'

ரிஷி ஓர் நொடி ஸ்வேதவைப் பார்த்தான்.. அவள் விழி பேசிய மொழி புரிய... லீலாவதியிடம் தலை அசைத்தான்.

''பை.. ஆண்ட்டி..''

திரும்பி ஸ்வேதவை ஒரு முறை பார்த்தவன்.. வெளியேறிவிட்டான்.. சற்று நேரத்தில் அவனது கார் கிளம்பிச் செல்லும் ஓசை கேட்டது.

'போய்விட்டான்... வீட்டில் கொண்டு வந்து சேர்த்த தோடு அவனது கடமை முடிந்துவிட்டது என்று போய் விட்டான்...'

ஸ்வேதா... கண்ணீர் வற்றியவளாய் அப்படியே சுருண்டு படுத்தாள்... லீலாவதி அருகே வர...

''அம்மா... ப்ளீஸ் காலையில் பேசிக் கொள்ள லாமே...'' என்று கூறி விட்டு கண்களை மூடிக் கொண் டாள்.

''சாப்பிட்டு விட்டுப் படும்மா...'' லீலாவதி பரிவாய் கூறினாள்.



''வேண்டாம்மா.. ஹாஸ்பிடலிலேயே சாப்பிட்டு விட்டேன்...'' கண்களை மூடியவாறு பொய் உரைத்தாள் ஸ்வேதா.

'இனிமேல் தினமும் இதுபோல் எத்தனை பொய்களை சொல்ல வேண்டி இருக்குமோ.. அந்தப் பாவியினால் என் வாழ்க்கையே தலைகீழாய் புரண்டு விட்டதே...'

இருட்டினில் எவரும் அறியாமல் கண்ணீர் பெருக்கிக் கொண்டே இருந்தாள் ஸ்வேதா... எங்கு பார்த்தாலும் இருள் தெரிய... விடியலே இல்லாத ஓர் உலகுக்கு தான் தள்ளப்பட்டுவிட்டதாக உணர்ந்தாள் அவள். எங்கும் இருட்டு.. சிறு துகள் கூடத் தெரியாத மையிருட்டு.. அந்த இருட்டுக்குள் தான் இருப்பது உடன் பிறந்தவர் களுக்கும் பெற்ற தாய்க்கும் தெரியாது... தெரியவும் கூடாது.

ரத்தினம் இறந்து வாழ்க்கையை எப்படி எதிர்நோக் குவது என்று புரியாமல் திகைத்து நின்ற போது கூட ஸ்வேதா இப்படிக் கலங்கியதில்லை.

விடியலின் அறிகுறி தெரிய ஆரம்பித்த போது எழுந்து குளியலறைக்குள் புகுந்து விட்டாள்.. குளித்து.. துவைத்து.. வேறு உடை மாற்றிக் கொண்டு வாசலைப் பெருக்கப் போனபோது லீலாவதி வாசல் கதவை மூடி விட்டு கையில் பால் பாக்கெட்டோடு உள்ளே வருவதைக் கண்டாள்.

''ஏம்மா... நீங்க போய் வாசல் தெளித்து பெருக்கி கோலம் போடணுமா? நான் பார்த்துக் கொள்ள மாட் டேனா...?''

''இதுநாள் வரை நீ பார்த்துக் கொண்டது போதாதா?''



''உடம்பு சரியில்லாதவங்க நீங்க.. திரும்பவும் படுத் துக்கிட்டால் என்ன செய்வது?''

''திரும்பவும் படுக்கையில் விழ மாட்டேன்.. என் பிள்ளைகளை கரை சேர்க்காமல் என் கட்டை விழுகாது.. நீ தைரியமாக இரு...''

'அம்மா... எப்போதும் போல் நான் இருந்திருந்தால்.. நீங்கள் திரும்பவும் பழைய அம்மாவாகி எழுந்து நடமாடுவதில் மகிழ்ந்து போயிருப்பேன்... வாழ்க்கையை வாழ யானை பலம் பெற்றிருப்பேன்.. ஆனால் இப்போது நானே தொலைந்து போய்விட்டேனே அம்மா... என் தைரியமும் தொலைந்து விட்டதே... இனி நான் என்ன செய்வது என்று மலைப்பாக இருக்கிறதே... அம்மா...'

ஸ்வேதா மனதிற்குள் புலம்பியபடி சமையலறைக்குச் சென்று அடுப்பை பற்ற வைக்க முயன்றாள்... லீலாவதி மகளை அதட்டினாள்.

''இது இனிமேல் என் வேலை... கிச்சனை விட்டு நீ வெளியே போ..'' லீலாவதி கண்டிப்புடன் கூற.. ஸ்வேதா வேறு வழியின்றி வியப்புடன் சமையலறையை விட்டு வெளியே வந்தாள்.

''என்னக்கா... அசந்து போய் உட்கார்ந்து விட்டாயே... என்ன விசயம்..? அம்மாவின் மாற்றத்தைக் கண்டு ஆச்சரியமா இருக்கா...''

கட்டிலில் படுத்திருந்த தீபா... போர்வைக்குள்ளிருந்து தலையை நீட்டி விசாரித்தாள்.

''ஆமாண்டி... எப்படி ஒரே நாள் நைட்டிற்குள் அம்மா இப்படி மாறினாங்க?''

பிள்ளை பதின்மூன்று வயதுப் பையன்... அவளைக் காக்க ஆள் இல்லாத தைரியத்தில்தானே அந்த ரிஷி அவளைச் சூறையாடி விட்டான்.

ஸ்வேதாவிற்கு கண்களைக் கரித்துக் கொண்டு வந்தது.. ஊஹூம் அழுகக் கூடாது.. தீபா புத்திசாலி கண்டுபிடித்து விடுவாள்.

ஸ்வேதா எழுந்து லீலாவதி கொண்டு வந்த காபித் தம்ளர்களை வாங்கிக் கொண்டாள்.

''தீபா காபியை குடித்துவிட்டு ஸ்கூலுக்கு கிளம்பு... ரகு டேய்...''

அடுத்த சில நிமிடங்களில் வீடு பரபரப்பானது.. தங்கைக்கு தலை பின்னி விட்டு.. சமையலறைக்குள் நுழைந்த ஸ்வேதா.. காய்கறிகள் நறுக்க ஆரம்பித்தாள்... தடுக்க வந்த லீலாவதியிடம்...

''இருபத்தி நான்கு மணி நேரமும் ஓடிக் கொண்டிருந்தவள்ம்மா.. இப்ப அதிசயமாய் லீவ் கிடைத்திருக்கிறது.. ஒய்ந்து உட்கார முடியவில்லை... சின்னச் சின்ன வேலைகளையாவது செய்கிறேனே...'' என்று பிடிவாதமாய் கூறிவிட்டாள்.

தீபாவும்.. ரகுவும் பள்ளிக்குக் கிளம்பிப் போன பின்.. வீட்டில் அமைதி சூழ்ந்தது.. தன் அறைக்குள் போக முயன்ற லீலாவதியிடம்,

''வேண்டாம்மா.. நீங்க என் பக்கத்திலேயே இருங்க... டிவியை போட்டு விடுகிறேன்.. எதையாவது பொழுது போக்காய் பார்த்துக் கொண்டு இருங்கள்...'' என்றாள் ஸ்வேதா.



''ஏன் ஸ்வேதா...''

''இப்போது தனிமையில் நீங்கள் இருப்பது உங்களுக்கு நல்லதில்லை அம்மா. திரும்பவும் பழைய நினைவுகளை அசை போடுவீர்கள்.. அப்புறம் பழையபடி ஆகிவிடுவீர்கள்.. நேற்று இரவிலிருந்து இந்த வீட்டில் இருக்கும் மகிழ்ச்சி தொலைந்துவிடும்... நான் எப்போதுமே உங்களுடன் இருக்க முடியுமா அம்மா? நான் இல்லாவிட்டால் இந்தப் பிள்ளைகள் இரண்டையும் பார்த்து வளர்க்க யார் இருக்கிறார்கள்? நீங்கள் அதை நினைத்துப் பார்க்க வேண்டாமா?''

லீலாவதியின் முகம் சிந்தனையில் ஆழ்ந்தது... ஏன் மகள் இப்படிச் சொல்கிறாள்? என்றைக்குமே இப்படிப் பேசமாட்டாளே.. இன்றைக்கு ஏன் இப்படிப் பேசுகிறாள்...?

''ஏன் ஸ்வேதா இப்படிச் சொல்கிறாய்? நீ இல்லாமல் எங்கு போகப் போகிறாய்..? நீ சொன்னதற்கு அர்த்தம் என்ன?''

'அம்மாவிற்கு இந்த அளவிற்கு புத்தி தெளிந்து விட்டதா?' அந்த நிலையில் அது ஒன்றே பெரிய நிம்மதியாகத் தோன்றியது ஸ்வேதாவிற்கு...

''அம்மா... ஒரு வேளை எனக்குக் கல்யாணமாகி நான் போய்விட்டால் என்ன செய்வீர்கள்...? அதைத்தான் சொன்னேன்...'' சமாளித்தாள் ஸ்வேதா.

லீலாவதிக்கு 'சுரீர்' என்றது... மகளுக்கு திருமண வயது வந்துவிட்டது... இதை அவளே சொல்லி.. தான் இல்லாவிட்டால் சமாளிக்கப் பழகிக் கொள்ளும்படி எச்சரிக்கிறாள். லீலாவதி இதைப் பற்றிய கவலையும்



''அதிர்ச்சி வைத்தியம்தான்.. வேறு என்ன..?''

''அதிர்ச்சி வைத்தியமா?''

''ஆமாம்... ரகுவும் நானும் அம்மாவுக்கு பேதி மருந்தை கொடுக்காத குறையாய் கலக்கி விட்டு விட்டோம்... அவங்க அரண்டு போயிட்டாங்கல்ல...''

''என்னடி செய்தீங்க...''

''அக்கா... நீ வர லேட்டானதும் நானும் ரகுவும் பயந்து விட்டோம்... ரகு அழ ஆரம்பித்து விட்டான்.. நான் அவனுக்காக பாலைக் காய்ச்சி.. காபிப் போடப் போனேன்.. பால் பாத்திரம் கை நழுவி சுடு பால் கீழே கொட்டி விட்டது...''

''ச்சுச்சு... பார்த்து இறக்கக் கூடாதா தீபா...''

''சத்தம் கேட்டு அம்மா ஆடி அசைந்து வந்து எட்டிப் பார்த்தாங்க... எனக்கோ ஆத்திரம்.. அவங்களை முறைத்துப் பார்த்தேன்... ஸ்வேதா வரவில்லையான்னு கூலா கேட்டாங்க.. எப்படி வருவாங்க.. இந்த வீட்டுக்கு உழைத்துக் கொட்டி சலித்துப் போய் எங்க அக்கா எந்தக் குளம் குட்டையில் போய் விழுந்திருக்குதோ தெரியவில்லையே.. டேய் ரகு வாடா... நாமும் போய் அக்காவை போல குளம் குட்டையைத் தேடுவோம்ன்னு சொன்னேனா... அப்போ அம்மாவின் முகத்தைப் பார்க்கணுமே.. அரண்டு போய்விட்டாங்க.. ரகு பயங்கரமாய் கத்தி விட்டு.. நிஜமாகவே நான் சாகப்போகிறேன்னு கிளம்பி விட்டான்... ஐயோ.. அப்பான்னு அவன் கையைப் பிடித்துக் கொண்டு பதறிட்டாங்க... அம்மா.... அதற்குப் பின்னால் அவங்களே சமைத்தாங்க...'



''ஏண்டி இப்படிச் செஞ்சீங்க... அம்மா பாவம் இல்லையா..''

''நிச்சயமாய் பாவம் இல்லை... அம்மா செய்தது எஸ்கேப்பிசம்... தப்பிக்கும் முயற்சி... துக்கம் அவர்களுக்கு மட்டும்தானா? நமக்கு இல்லையா..? துக்கத்தை காரணம் காட்டி கடமைகளில் இருந்து தப்பிக்க முயற்சி செய்யலாமா...?''

''ஏய்ய்... தீபா... என்னடி பெரிய... பெரிய வார்த்தைகளையெல்லாம் பேசுகிறாய். எப்போது இப்படியெல்லாம் யோசிக்க நீ கற்றுக் கொண்டாய்..?'' வியப்புடன் கேட்டாள் ஸ்வேதா.

அவளறிந்த தீபா குழந்தை... தானாய் சாப்பிட்டுக் கொள்ளக் கூடத் தெரியாது. அவளா இத்தனை பேச்சுக் களைப் பேசுகிறாள்?

''இதையெல்லாம் கற்றுக் கொடுக்க வாழ்க்கை இருக்கும்போது தனியாக காலேஜுக்குப் போய் படிக்க வேண்டுமா? உன்னைக் காணோம் என்றதும் நானும் ரகுவும் எப்படிக் கலங்கிப் போனோம் தெரியுமா? ரகு சின்னப் பையன். நான் மட்டும் ஆண் பிள்ளையாக இருந்திருந்தால் உன்னைத் தேடி ஆபிஸிற்கு வந்திருப்பேன்.. பெண் பிள்ளையாக போய் விட்டேனே...''

''தீபா...'' தங்கையை இழுத்து அணைத்துக் கொண்டு கண் கலங்கினாள் ஸ்வேதா.

அவளைத் தேடி மட்டும் யாராவது அந்தக் கணத்தில் வந்திருந்தால் அவள் அந்தப் பயங்கர நிகழ்வில் இருந்து தப்பித்திருப்பாளே... தேடி வரத் துடித்த தங்கை பதினாறு வயது பருவப் பெண்... வீட்டில் உள்ள ஒரே ஆண்

நினைவும் இல்லாமல் நிம்மதியாக தூங்கித் தூங்கி எழுந்து கொண்டிருக்கிறாள்.

'ஸ்வேதாவிற்கு திருமணம் செய்து வைக்க வேண் டுமே..' மனதில் கவலை மூள லீலாவதி ஸ்வேதாவின் அருகிலேயே அமர்ந்து கொண்டாள்.

லீலாவதியின் கவனத்தை திசை திருப்பி விட்டுவிட்ட நிம்மதியோடு ஸ்வேதா கட்டிலில் சாய்ந்து கொண்டாள்.. நேற்றைய நினைவுகளின் சுமை மனதில் அழுத்த தூங்காத கண்கள் சோர்ந்து கொள்ள... இமைகள் பாரமாய் அதை மூடிக் கொண்டன.. ஸ்வேதா தன்னை மறந்து தூங்க ஆரம்பித்தாள்.

மகளின் முகத்தை பார்த்தவாறே அருகில் அமர்ந்திருந் தாள் லீலாவதி.

'தூங்கட்டும்.. பாவம்.. இந்த மூன்று வருடங்களில் முதன் முதலாக அயர்ந்து தூங்குகிறாள்.. இந்தக் குடும் பத்தின் சுமையை தோள்களில் சுமந்து சுமந்து பாரம் சுமக்க முடியாமல் களைத்துப் போய் தூங்குகிறாள்.. பாரம் சுமந்தவளுக்கு ஆறுதல் தராமல் நானும் ஒரு பார மாய் அவள் தலைமேல் அமர்ந்து இருந்தேன்.. இனி யாவது என் மகளுக்கு நான் நிம்மதியைக் கொடுக்க வேண்டும்...'

லீலாவதி மகளின் கூந்தலைக் கோதினாள். பாவம்.. அவள் அறியமாட்டாள்... மகள் சுமையைத் தூக்கியதால் சோர்ந்து போய் தூங்கவில்லை. தோற்கக் கூடாததைத் தோற்றுப் போனதால்.. உடலும் மனமும் களைத்துப் போய் உறங்குகிறாள் என்பதை.





## 7

உடலைத் துளைத்த ஊட்டி குளிருக்கு உடம்பை இறுக்கிப் பிடித்த ஸ்வெட்டர் இதமாக இருந்தது... போதாத குறைக்கு கழுத்தைச் சுற்றி மப்ளரையும் கட்டிக் கொண்டு உள்ளங்கைகள் இரண்டையும் ஒன்றோ டொன்று தேய்த்து அதை கன்னத்தில் வைத்து அந்த சூடை அனுபவித்து "ஹா.." என்றான் ரிஷி.

அவன் அருகில் மெதுவாக நடந்து கொண்டிருந்த பாண்டுரங்கன் மகனைத் திரும்பிப் பார்த்தார். அவனது செய்கையைக் கண்டு சிரித்தார்.

"நீ என்ன குழந்தையா ரிஷி..."

"அப்பா.. அம்மா பக்கத்தில் இருந்தால் எல்லாப் பிள்ளைகளுமே குழந்தைகள்தான் அப்பா... ஸோ... நானும் உங்கள் குழந்தைதான்..."

"குழந்தையென்று நீதான் சொல்லிக் கொள்கிறாய்.. ஆனால் உனக்கு இன்னும் கல்யாணம் பண்ணி வைக்க வில்லையென்று நம் சொந்த பந்தமெல்லாம் என்னைத் திட்டுகிறார்கள்..."

"அவர்கள் என்னவோ கார் போட்டுக் கொண்டு வந்து உங்களைத் திட்டி விட்டுப் போவதைப் போல் சொல்லு கிறீர்களே..."



"நீ சொன்னாலும் சொல்லாவிட்டாலும் அதுதான் உண்மை.. எனக்கு உடம்பு சரியில்லாமல் போனாலும் போனது.. எல்லோரும் என்னை நலம் விசாரிக்க வருகிறேனென்று பேர் பண்ணிக் கொண்டு குடும்பத் தோடு காரில் வந்து இறங்கி விடுகிறார்கள். வருகிறவர் களை கவனித்துக் கவனித்து உன் அம்மா ஓய்ந்து விட்டாள். எல்லோரும் மறக்காமல் கேட்கும் ஒரே கேள்வி... ரிஷிக்கு முப்பது வயதாகிறதே... ஏன் இன்னும் கல்யாணம் பண்ணவில்லை என்பதுதான்..."

"ஏன் அப்பா... அவர்கள் உங்களை விசாரிக்க வரு கிறார்களா.. இல்லை ஊட்டியை சுற்றிப் பார்த்து என்ஜாய் பண்ண வந்தார்களா...?"

"எனக்கு என்னவோ நீ இரண்டாவதாக கேட்டதற் காகத்தான் வருகிறார்கள் என்று தோன்றுகிறது..."

"ச்ச... என்ன சொந்தங்களோ போங்கள்... ஐ டோன்ட் லைக் திஸ் டைப் ஆப் பிஹேவியர்..."

"விட்டுத் தள்ளு... இந்தியா இப்படித்தான்... ஆனால் ரிஷி.. அவர்கள் சொல்வதிலும் உண்மை இருக்கத்தானே செய்கிறது..."

"என்ன உண்மையை கண்டு விட்டீர்கள்...?"

"உனக்கு முப்பது வயதாகிறது ரிஷி.. ஆல்ரெடி உனக்கு இப்போது திருமணம் முடிந்து கையில் ஒரு குழந்தை இருக்க வேண்டும்... ரிஷி.. உன் கல்யாணத் தைப் பற்றி நாம் ஒரு முடிவிற்கு வர வேண்டும்..."

ரிஷி மௌனமாக நடந்தான்... அவன் மனதில் சேலத்தில்... அவனது கேபினுக்குள் தரையில் மயங்கிச் சரிந்திருந்த ஸ்வேதாவின் தோற்றம் வந்து நின்றது.



'இனி ஒரு பெண்ணைத் தொட என்னால் முடியுமா..?'

இந்நினைவு அவன் மனதில் எழுந்த அதே வினாடி யில் அவனது உள்மனம் அவனைப் பார்த்துக் கேள்வி கேட்டது.

'ஷாலினியை தொட்ட கையால் தானே ஸ்வேதா வையும் தொட்டாய்.. அப்படியிருக்கையில் இன்னொரு பெண்ணைத் தொட உன்னாலா முடியாது..'

'சே..' என்று தலையைக் குலுக்கி தன் உள்மனதை கடிந்து கொண்டான் ரிஷி.

'ஷாலினியும்.. ஸ்வேதாவும் ஒன்றா.. ஸ்வேதாவின் கால்தூசிக்கு பெறுமானம் ஆவாளா ஷாலினி...'

'ஹ... அவளுடன்தானே குடும்பம் நடத்தினாய்.. அப்போது அவளது தரம் தெரியவில்லையா உனக்கு..'

அவனது உள்மனம் நகைத்தது.

'குடும்பம் நடத்தியதை ஓர் நொடியில் மறந்து விட்டு என்னை உதறிவிட்டுப் போனாளே அவள்.. ஸ்வேதா அப்படிச் செய்வாளா..? நான் தொட்டு விட்டு வந்து விட்டேன்.. நடந்த நிகழ்வை அவள் ஒவ்வொரு நொடி யும் நினைத்துக் கொண்டிருப்பாள்.. ஒரு போதும் மறக்கமாட்டாள்...'

அவனது உள்மனம் பதிலின்றி மௌனமானது... ரிஷியின் யோசனை தோய்ந்த முகத்தைக் கவனித்தபடி உடன் நடந்த பாண்டுரங்கன் வினவினார்.

"என்ன விஷயம் ரிஷி...?"

"நத்திங்ப்பா..."

''ஒன்றுமில்லாத விசயத்திற்கா இவ்வளவு யோசிக் கிறாய்?''

''நீங்கள் சொன்னதை யோசித்துக் கொண்டிருந்தேன்.''

அதற்குள்... அவர்களது பங்களா வந்துவிட்டது... கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே சென்றார்கள்.. வீட்டு வாசலில் ஓர் புதிய கார் நின்று கொண்டிருந்தது.

''சரியாப் போச்சு..'' என்றார் பாண்டுரங்கன்.

''என்னப்பா...''

''ஏற்காட்டிலிருந்து உன் மாமன் குடும்பம் வந்து இறங்கியிருக்கிறது ரிஷி...''

''அங்கேயே அவர்கள் என்ஜாய் பண்ண வேண்டியது தானே...''

''அதை அவர்களிடம் யார் கேட்பது?''

பாண்டுரங்கன் நொந்து போய் கூறிக் கொண்டிருந்த போது... உள்ளேயிருந்து அழகிய இளம்பெண்ணொருத்தி ஓடி வந்தாள்.

''ஹாய் அத்தான்...''

அவள் மேலே விழும்முன் அவளைத் தள்ளி நிறுத்திய ரிஷி...

''ஹாய் ஆஷா..'' என்றான்.

''இவ்வளவு நேரமா நீங்கள் வாக்கிங் போய்விட்டு வர...?''

''ஏன்... நான் அதிக நேரம் வாக்கிங் போவதில் உனக்கு என்ன பிரச்சனை வந்தது..? இட் இஸ் மை பிளெஷர்...''

''பட்.. நான் உங்களை வந்தவுடனே பார்க்க முடியவில் லையே..''



''என்னைப் பார்க்கவா ஊட்டிக்கு வந்தாய்..?''

''ஆமாம்...''

அவள் இலகுவாக பதில் கூற.. ரிஷியும் பாண்டுரங் கனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். ரிஷி யின் முகம் மாறியது.

''அப்பாவுக்கு உடம்பு சரியில்லையென்று அவரைப் பார்க்க வரவில்லையா..?''

''அதுவும்தான்.. அத்தோடு இதுவும் தான்... அத்தான்... உங்களுக்கு ஒன்று தெரியுமா..? என்னைப் பார்ப்பதற் காகத்தான் சேலத்திலிருந்து உங்களை அத்தை ஊட் டிக்கு வரவழைத்திருக்கிறார்கள்.. அதுபோல.. உங் களைப் பார்ப்பதற்காகத்தான் ஏற்காட்டிலிருந்து என்னை இங்கே என் அப்பா கூப்பிட்டுக் கொண்டு வந்திருக் கிறார்...''

''சும்மா தத்து பித்தென்று உளராதே ஆஷா... சேலமும்.. ஏற்காடும் கிட்டத்தில் இருக்கிறது.. என்னைப் பார்க்க வேண்டுமானால் சேலத்திற்கு வர வேண்டியதுதானே... அதை விட்டு விட்டு ஊட்டிக்கு வந்தாயா..''

''சேலத்திற்கு வருவேன் அத்தான்... வருகின்ற முறையோடு.. வருவேன்...''

அவள் சொல்வது மிகத் தெளிவாக ரிஷிக்குப் புரிந்தது. ஆனால்.. இது எப்படி சாத்தியம் ஆகும்? இந்த அம்மா ஏன் அவனைக் கேட்காமல் இப்படியெல்லாம் செய் கிறார்கள்.

எதிரே நின்று கொண்டிருந்த ஆஷாவைக் கவனித் தான் ரிஷி... ஜீன்ஸ் பேன்டும்... குர்தாவும் அணிந்திருந் தாள்... கூந்தலை விரிய விட்டிருந்தாள்... அடிக்கடி அழகு





நிலையத்திற்கு போகிறவள் என்பது சீர்படுத்தப்பட் டிருந்த அவளது புருவத்திலிருந்து தெரிந்தது.

ஏனோ ஆஷாவைப் பார்க்கும்போது ஷாலினியைப் பார்ப்பது போலவே ரிஷிக்குத் தோன்றியது.. அவளைப் போலவே இவளும் அதி நாகரீகத் தோற்றத்தில் இருப்பதி னாலா...?

ரிஷி சட்டென்று ஆஷாவிடமிருந்து விலகி வீட்டி னுள் சென்றான். மோகனாவின் அருகே அமர்ந்து பேசிக் கொண்டிருந்த சித்ரலேகா திரும்பிப் பார்த்து,

''இதோ மாப்பிள்ளையே வந்துவிட்டாரே..'' என்று கூறினாள்.

''வாங்க மாப்பிள்ளை...'' என்று வரவேற்றார். மோக னாவின் எதிரேயிருந்த சோபாவில் அமர்ந்திருந்த மாணிக்கவேல்.

''வாங்க மாமா... வாங்க அத்தை...'' என்று வரவேற்ற ரிஷி.. மரியாதை நிமித்தம் இரண்டு வார்த்தைகள் பேசிவிட்டு அவனது அறைக்குப் போய்விட்டான்.

சற்று நேரத்தில் அவனது அறைக்கதவு தட்டப்பட திறந்தான். மோகனா நின்று கொண்டிருந்தாள்.

''என்னங்கம்மா...''

''உன்னோடு பேச வேண்டும் ரிஷி...''

''உள்ளே வாங்க..''

மோகனா உள்ளே வந்து அமர்ந்தாள். ரிஷி கட்டிலில் கிடந்த தலையணையை எடுத்து மடியில் வைத்துக் கொண்டு கட்டிலில் சம்மணமிட்டு அமர்ந்தான்.

''ரிஷி.. என் அண்ணன் குடும்பத்தை ஏன் வரவழைத் திருக்கிறேன் தெரியுமா?''



''அப்பாவைப் பார்க்க வரச் சொல்லி இருப்பீர்கள்..''

''இல்லை.. உன் கல்யாண விசயத்தை முடிவு பண்ண வரச் சொன்னேன்...''

''என் மேரேஜை முடிவு பண்ண அவர்கள் யார்?''

''உன் தாய் மாமன் வீடு.. உனக்குப் பெண் கொடுக்கப் போகிறவர்கள்..''

''ச்சு... ஐ டோன்ட் லைக் திஸ் மம்மி...''

''ஏன்.. ஆஷாவிற்கு என்ன குறை? அழகில்லையா.. படிப்பில்லையா..? என் அண்ணனின் சொத்தின் மதிப்பு தெரியுமா உனக்கு... இவள் ஒருத்திதான் அத்தனைக்கும் ஒரே வாரிசு...''

''அம்மா... எனக்கு ஆஷாவின் மேல் அப்படி ஒரு எண்ணம் இல்லை...''

''இதுவரை இல்லாததைப் பற்றிப் பேசுவானேன்.. இனிமேல் அப்படி ஒரு நிலையை உன் மனதில் வை...''

ரிஷி பல்லைக் கடித்துக் கொண்டு தாயைப் பார்த் தான். அவள் முகத்தில் தெரிந்த பிடிவாதத்தை அவன் விரும்பவில்லை. இதை எப்படித் தவிர்ப்பது...?

''அம்மா... நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன்..'' என்று பட்டென்று சொல்லிவிட்டான்.

''ரிஷி...'' மோகனாவின் முகத்தில் அதிர்ச்சி அப்பட்டமாய் தெரிந்தது.

''யார் அந்தப் பெண்...?''

''நீங்கள் கூட ஹாஸ்பிடலில் பார்த்தீர்களே.. அந்தப் பெண் தான்... அவள் பெயர் ஸ்வேதா... நினைவிருக் கிறதா..?''

மோகனா கண் மூடி யோசித்தாள். ஒல்லியாய்.. உயர மாய் அழகிய பெரிய கருவிழிகளில் கவலையோடு அன்று வந்து நின்ற பெண் அவளது நினைவில் வந்தாள்.

''அவளையா.. அவள் நம் கம்பெனியில் வேலை பார்ப்பவள்...''

''அதனால் என்ன..?''

''ரிஷி.. உன் உயரம் உனக்குத் தெரியாதா? நமக்குச் சமமில்லாத ஏழை குடும்பத்து பெண் ஒருத்தியை நினைத்துக் கூட பார்க்கலாமா?''

''நான் நினைத்து விட்டேன்...''

''ரிஷி.. நான் சொல்வதைக் கேள்..''

''ஸ்வேதாதான் என் மனைவி.. உங்கள் மருமகள்.. இதை நீங்களும் கேட்டுக் கொள்ளுங்கள்.. நான் அவளைத்தான் திருமணம் பண்ணிக் கொள்வேன்.. இதில் எந்த வித மாற்றமும் இல்லை...''

மோகனா விருட்டென்று எழுந்து உள்ளே போய் விட்டாள். சற்று நேரத்தில் பாண்டுரங்கன் வந்தார். மகனை யோசனையோடு பார்த்தார்.

''என்ன நடந்தது ரிஷி...?''

''என்ன கேட்கிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லை அப்பா...''

''ஸ்வேதா காதலில் விழும் பெண்ணில்லை... அதுவும் நீ வந்து இரண்டு மாதங்கள் தான் ஆகிறது... அவ்வளவு சீக்கிரம் நீ அவளுடன் பழகியிருக்க சான்ஸ்



இல்லை... என்னிடம் உண்மையைச் சொல்.. ஆஷாவை கல்யாணம் பண்ணிக் கொள்வதை அவாய்ட் பண்ண இப்படிச் சொல்கிறாயா..?''

''நோ டாட்.. நான் திருமணம் என்ற ஒன்றைப் பண்ணிக் கொள்வதாக இருந்தால் ஸ்வேதாவை மட்டும்தான் திருமணம் செய்து கொள்வேன். இதில் எந்தவித மாற்றமும் இல்லை. ஆக்சுவலாய் நான் இதைப் பற்றி பேசுவதற்காகத்தான் ஊட்டிக்கே வந்தேன்...''

''ஐ.ஸீ...'' என்று தாடையை தடவிக் கொண்ட பாண்டுரங்கன்...

''நீ அவளைக் காதலிக்கிறாய்.. சரி.. அவளும் உன்னைக் காதலிக்கிறாளா..?''

ரிஷி நிதானித்தான்.. ஸ்வேதாவின் இக்கட்டான நிலைமையில் அவளை ஆதரித்தவர் பாண்டுரங்கன். 'பெற்ற தகப்பன் போல்..' என்று ஸ்வேதா நன்றி பாராட்டும் அளவிற்கு அவள் மனதில் இடம் பிடித்திருப்பவள்.. ஓர் நொடி அவரையும் அறியாமல் ஸ்வேதாவை தவறாக நினைத்து விடக்கூடாது. அதற்கு அவன் இடம் கொடுத்து விடக் கூடாது.

''இல்லைப்பா.. அவள் என்னைக் காதலிக்கவில்லை...''

இந்த வார்த்தைகளை மனம் வலிக்கச் சொன்னான் ரிஷி. அவள் அவனைக் காதலித்திருக்காவிட்டாலும் பரவாயில்லை. ஆறுதல் தேடி அலைந்தவனின் மனம் அவளது அருகாமையில்தானே அமைதியடைந்தது. அதனால்தானே அவளிடம் சில வார்த்தைகள் அதிகம் பேசினான். அதைத் தவிர வேறு என்ன தவறு



செய்தான்? அதை அவள் தவறாகப் புரிந்து கொண்டு விலகிப் போனதால்தானே அந்த விபரீதமே நடந்தது? இனி அவன் வாழ்க்கையில் என்றாவது ஒருநாள் அவள் அவனை உண்மையிலேயே காதலிப்பாளா? அவளது காதலை வேண்டும் தகுதி அவனுக்கு இருக்கிறதா..? ஆனால் அவளைத் தவிர வேறு ஒரு பெண்ணுடன் திருமணம் என்ற பந்தத்தில் இணைய அவனால் முடியுமா? அது ஷாலினியாக இருந்தாலும் கூட...?

''அப்புறம் எப்படிப்பா அவளைக் கல்யாணம் செய்து கொள்ள நினைக்கிறாய்..?''

''நான் அவளைக் காதலிக்கிறேனேப்பா...''

''தப்பு ரிஷி... ஸ்வேதா ஏழைதான்.. ஆனால் அவளிடம் சில குணங்கள் இருக்கின்றன... தன்மானம் பார்ப்பாள்.. அவளது தகுதிக்கு மீறி உன்னைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்ப மாட்டாள்.. அவளது குடும்பத்திற்கு அவளை விட்டால் வேறு ஆதரவு இல்லை ரிஷி.. அவளது குடும்பத்தை சுமந்து கொண்டிருப்பவள்.. அதை விட்டுவிட்டு உன் பின்னே வரமாட்டாள்.. உனக்கு ஆஷாவைப் பிடிக்கவில்லை யென்றால் இந்தக் கல்யாண ஏற்பாட்டை நான் நிறுத்தி விடுகிறேன்.. உனக்குப் பிடித்த பெண்ணாக நம் வகையிலேயே பார்க்கலாம். வீணாய் வேறு ஆசைகளை வளர்த்துக் கொள்ளாதே...''

''அப்பா ப்ளீஸ்.. நான் அவளைத்தான் கல்யாணம் செய்து கொள்வேன்...''

''விருப்பமில்லாத பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு நீ எப்படி நிம்மதியாக வாழ முடியும் ரிஷி...''



''நிம்மதி...'' குமுறினான் ரிஷி. தகப்பனாரை விட்டு விலகி... ஜன்னல் அருகே சென்று.. மூடியிருந்த கண்ணாடிக் கதவுகளின் வழி வெளியே பார்த்தான். பசுமையான செடிகொடிகளின் மேல் வெண் பஞ்சுப் பொதியாய் பனி மேகம் கவிழ்ந்திருந்தது. அதைப் பார்த்துக் கொண்டே பாண்டுரங்கனிடம் கூறினான் அவன்.

''நிம்மதிக்கும் எனக்கும் வெகு தூரம் அப்பா... ஆனால் ஒன்று... ஸ்வேதாவை கல்யாணம் செய்து கொள்ளாவிட்டால்... என் நிம்மதி மட்டுமல்ல... அவளது நிம்மதியும் முழுதாகக் காணாமல் போய்விடும்...''

பாண்டுரங்கன் மகனின் தவிப்பைப் பார்த்து விட்டு அறைக் கதவை இறுக மூடி தாழ் போட்டார். மகனின் அருகே வந்து அவனது தோளைத் தொட்டார்.

''ரிஷி.. உன் வேதனை எனக்குப் புரிகிறது... ஆனாலும் நீ ஸ்வேதாவைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளாமல் இருப்பதே நல்லது.. உனக்கேற்ற பெண்ணாக நான் தேடுகிறேன்.. ஸ்வேதா மட்டும் வேண்டாம்...''

''ஸ்வேதா மட்டும்தான் எனக்கு வேண்டும்...''

''ரிஷி சொல்வதைப் புரிந்து கொள்... ஸ்வேதாவை கல்யாணம் பண்ணிக் கொள்வதை விட்டுவிட்டு வேறு எந்தப் பெண்ணை வேண்டுமானாலும் கை காட்டு... அவள் மட்டும் வேண்டாம். உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளாவிட்டால் அவள் நிம்மதி ஒன்றும் காணாமல் போய்விடாது.. உன்னைக் கல்யாணம்

பண்ணிக் கொண்டால்தான் காணாமல் போய்விடும்.. இந்தப் பேச்சை விட்டுவிடு...''

''டாட்... சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லாதீர்கள்... எனக்கு அவள்தான் வேண்டும்.. அவளை எனக்குத் திருமணம் செய்து வைக்க முடியுமா.. முடியாதா?''

''ரிஷி.. ஸ்வேதா எனக்கு மகள் போல... அவளது ஏழ்மை ஒரு குறைபாடு இல்லை.. அவளது குடும்பச் சுமையையும் அவள் தோள்களில் இருந்து இறக்கி வைக்க என்னால் முடியும்... ஆனால் அவள் உனக்கு வேண்டாம்...''

''அதுதான் ஏன்..?''

பாண்டுரங்கன் மகனின் விழிகளை நேருக்கு நேராக சந்தித்து அவனது விழிகளுக்குள் ஊடுருவிப் பார்த்தார்... ஒரே வார்த்தையில் பதில் சொன்னார்.

''ஷாலினி...''

''அப்பா...''

''ஷாலினியைப் பற்றியும்.. அவளுடன் நீ வாழ்ந்ததைப் பற்றியும் எனக்குத் தெரியும்.. வெளிதேசம் என்பதால் நீ செய்தது எதுவும் எனக்குத் தெரியாது என்று நினைக்கிறாயா? உன் ஒவ்வொரு அசைவையும் கண்காணித்துச் சொல்ல அங்கே எனக்கு நிறைய ஆள்கள் இருக்கிறார்கள்.. உன் அப்பாவை அவ்வளவு எளிதாக நினைத்து விட்டாயா? பட்டுத்திருந்தட்டும் என்று விட்டு விட்டேன். நீயும் பட்டாய்... திருந்தினாய்.. நம் தேசம் வந்துவிட்டாய்.. பழையதை மறந்து புதிய வாழ்வைத் தொடங்கு... அதற்கு உனக்கு ஆயிரம் நல்ல



பெண்களைக் காட்டுகிறேன்.. ஸ்வேதா வேண்டாம்... அவள் சின்னப் பெண்.. தங்கமானவள்... பணக்காரன் என்ற ஒரே காரணத்திற்காக இன்னொரு பெண்ணுடன் வாழ்ந்த உன்னைக் கல்யாணம் செய்துகொள்ளச் சொல்லி அவளைக் கட்டாயப்படுத்தாதே... உன்னைப் பற்றியும்... நீ ஷாலினியுடன் நடத்திய வாழ்க்கையைப் பற்றியும் அவளுக்கு தெரிந்தால் அவள் ஓர் கணம் கூட உன்னுடன் வாழ மாட்டாள்.. அந்த நினைப்பை விட்டு விடு...''

பாண்டுரங்கனை ஏன் தனது பெற்ற தந்தைக்கு நிகராக ஸ்வேதா நேசிக்கிறாள் என்பது ரிஷிக்கு இப்போது புரிந்தது.

தான் பெற்ற மகனாக இருந்தாலும்... அவனது குறைகளைச் சுட்டிக் காட்டி.. ஸ்வேதாவிற்கு நீ வேண்டாம் என்று சொல்லும் இந்த நேர்மையான மனிதருக்கு தன் உள்ளத்தில் கோவில் கட்டிக் கும்பிடாமல் அவள் எப்படி இருப்பாள்?



## 8

ரிஷி தன் தந்தையை வெறித்துப் பார்த்தான்... அடிபட்ட பறவையின் வேதனையை அவனது கண்களில் கண்ட பாண்டுரங்கன் தாள முடியாதவராய் மகனைத் தன் தோளோடு அணைத்துக் கொண்டார். தகப்பனின் தோள்களில் முகம் புதைத்த ரிஷி தவித்தான்.. மகனின் வேதனையைக் கண்டு சகிக்காமல் அவன் முதுகில் தட்டி சமாதானப்படுத்தினார் பாண்டுரங்கன்.



''உன்னை வேதனைப்படுத்தவென்று நான் இதையெல்லாம் சொல்லவில்லை ரிஷி... உன்னைவிட ஸ்வேதாவை உயர்வாய் நினைக்கவில்லை.. உன்னை விடப் பெரிது இந்த உலகத்தில் எனக்கு வேறு எதுவும் இல்லை... அந்தப் பெண்ணின் குணம் அப்படி... இதுவே ஆஷாவாக இருந்தால் உன் பழைய வாழ்வை பொருட்படுத்த மாட்டாள்.. ஸ்வேதா அப்படியில்லை... உன் வாழ்வு சந்தோசமா இருக்க வேண்டும்.. இனியாவது நீ நிம்மதியாய் இருக்க வேண்டும் என்று நான் ஆசைப் படுகிறேன்... அதனால்தான் அப்படிச் சொன்னேன்... நீ வருத்தப்படாதே ரிஷி...''

''அப்பா... நீங்கள் உண்மையைத்தானே சொன்னீர்கள்? எனக்கு இதில் வருத்தமில்லை... ஆனால் ஸ்வேதாவை நான் கல்யாணம் பண்ணிக் கொண்டுதான் ஆகவேண்டும்.. அதில் எந்த மாற்றமுமில்லை அப்பா...''

பாண்டுரங்கன் மகனை விலக்கி நிறுத்தினார்... அவரது புருவங்கள் சுளித்திருந்தன.. அவரது மனதிற்குள் மணியடித்தது.

''என்ன நடந்தது ரிஷி...?''

''அப்பா..''

''ஏன் இவ்வளவு பிடிவாதமாக இருக்கிறாய்? இந்த பிடிவாதத்தின் பின்னணி என்ன..? அவள்தான் வேண்டும் என்று நீ அடம்பிடிக்கக் காரணம் என்ன..?''

ரிஷி தடுமாறினான்... நேர்மையே உருவானத் தந்தையிடம் இதை எப்படிச் சொல்வது? ஆனால் சொல்லாமல் இருந்தால் இவர் ஸ்வேதாவிற்கு நன்மை



செய்கிறேன் என்று அவளைத் திருமணம் செய்து கொள்ள விடமாட்டார்.

''அப்பா... நான் தவறான பாதையில் போனவன் தான்... ஆனால் ஸ்வேதா அப்படியில்லை... நீங்களே சொன்னது போல் அவள் சிறு பெண்.. வாழ்க்கையில் சில கோட்பாடுகளுடன் வாழ்பவள்.. அவள் எப்படிப்பா.. என்னை விட்டு விட்டு இன்னொருவனுடன் இனி வாழ்வாள்...?''

''ரிஷி...'' மகன் சொல்வதன் அர்த்தம் புரிய பாண்டுரங்கன் உறைந்தார்.

''இது எப்படி நடந்தது... எப்போது நடந்தது...?''

''என்னை எதுவும் கேட்காதீர்கள்.. நடந்துவிட்டது... அவ்வளவுதான்.. ஆனால் ஒன்று.. இதில் ஸ்வேதாவின் தவறு எதுவும் இல்லை... நான் அவளைத் தொட்டு விட்டேன்...''

பாண்டுரங்கன் அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாய் நடந்தார். மகன் கூறியதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் அவர் மனம் தவித்தது.

''பாவம்... அவள் தகப்பன் இல்லாத பெண் ரிஷி.. அவளைப் போய் இப்படிப் பண்ணிவிட்டாயே... குடும்பத்தைக் காப்பாற்ற படித்துக் கொண்டே வேலையும் பார்த்தவள்... அந்தப் பெண்.. வாழ்க்கையில் போராடிக் கொண்டிருப்பவள்.. நீ இப்படிச் செய்திருக்கக் கூடாது ரிஷி...''

''என்னை மன்னித்து விடுங்கள் அப்பா...''

''மன்னிக்கும்படியான தவறையா நீ செய்திருக்கிறாய்? ஷாலினியின் விசயம் வேறு... அவளின்

வாழ்க்கை முறையே தவறானது.. ஆனால் ஸ்வேதா..? இதை ஒரு நொடி நீ நினைத்துப் பார்த்தாயா..?''

ரிஷி தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டான்.. மகனின் துயரம் கண்டு பாண்டுரங்கனின் மனம் இளகியது.

'இவனும்தான் தவறானவனா..? அயோக்கியனா..? ஷாலினியின் மேல் காதல் கொண்டு அவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளத்தானே விரும்பியிருக்கிறான்.. திருமணத்தை மறுத்து... திருமணத்தின் பின் வாழும் வாழ்வை திருமண பந்தமில்லாமல் இயல்பாக இவனுடன் வாழ்ந்தவள் அவள்தானே... இவனை விட்டு விலகிப் போனவளும் அவள்தானே... ஸ்வேதாவை இவன் தொட்டதை இவன்தானே சொன்னான்.. ஸ்வேதா சொல்லி ஒன்றும் தெரியவில்லையே.. கோடிக் கணக்கில் சொத்துக்களோடு சொந்த மாமன் மகள் இவனைத் திருமணம் செய்து கொள்ளத் தவம் கிடக்கும்போது அவளை மறுத்துவிட்டு.. செய்த தவற்றிற்கு பிராயசித்தம் செய்யத் துடிக்கிறானே... இவன்தான் மனிதன்.. இவனது உணர்வுகளை நானே மதிக்காவிட்டால் வேறு யார் மதிப்பார்கள்?'

பாண்டுரங்கன் மகனின் அருகே அமர்ந்து அவனது தோளைத் தொட்டார்.

''ரிஷி... ஆயிரம்தான் நீ தவறு செய்திருந்தாலும் நீ என் மகன்... நான் உன்னை விட்டுக் கொடுக்கமாட்டேன். மோகனாவிற்கு எதுவும் தெரிய வேண்டாம்.. நான் அவளிடமும் மாணிக்கவேலிடமும் சொல்லும் விதத்தில் சொல்லிக் கொள்கிறேன். நீ கவலைப்படாமல் இரு...''



பாண்டுரங்கன் என்ன சொன்னாரோ.. மோகனா அதற்குப் பின் திருமண விசயத்தைப் பற்றி ரிஷியிடம் வாயைத் திறக்கவில்லை. இரவு சாப்பாட்டின் போது மாணிக்கவேல் பொதுவான விசயங்களைப் பற்றியே பேசினார்.. ரிஷியின் தொழில் விசயங்களை விசாரித்தார். சித்ரலேகாவும் கணவருடன் இசைந்தே பேசினாள்... ஆஷாவின் முகம்தான் வாடியிருந்தது... இரவுச் சாப்பாடு முடிந்த பின் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு எல்லோரும் படுக்கச் சென்றார்கள்.

மறுநாள் காலையில் ரிஷி... காலையின் இதமான வெயிலில் நின்று கொண்டிருந்த போது ஆஷா அவனிடம் வந்தாள்.

''ஸாரி அத்தான்...'' என்றாள்.

''எதற்கு ஸாரி சொல்லுகிறாய்?''

''உங்கள் மனம் தெரியாமல் நான் என் மனம் போன போக்கில் பேசிவிட்டேன்...''

''நீயென்ன செய்வாய்? அம்மாதானே உன்னை அப்படி நினைக்க வைத்தார்கள்...''

''அத்தையின் மேல் என்ன தவறு..? அவங்க அண்ணன் மகள் மருமகளாக வரணும்னு நினைத்தாங்க...''

''ஐ ஆம் ஸாரி ஆஷா..''

''இப்போது நீங்கள் எதற்காக ஸாரி சொல்லுகிறீர்கள்..?''

''என்னை அறியாமல் உன் மனம் நோக நானும் ஓர் காரணமாகி விட்டேன்..''

''விடுங்க அத்தான் இதைப் போய் பெரிதாக இனிப் பேச வேண்டாம்.. ஆமாம்.. உங்கள் ஸ்வேதா எப்படி.. என்னை விட அழகாக இருப்பாளா..?''



ரிஷியின் மனதில் நீலநிற காட்டன் புடவையணிந்த ஸ்வேதா தோன்றினாள். அதிக ஒப்பனையில்லாமல் அழகாகத் தெரிந்தாள்.. நிச்சயம் அவள் ஆஷாவை விட... ஏன் ஷாலினியை விடவும் கூட அழகுதான்.

ஆனால் அதை எப்படி இவளிடம் சொல்வது...?

ரிஷி பதில் சொல்லாமல் சிரித்தான்.

''நீங்கள் கெட்டிக்காரர்தான் அத்தான்... ஒரு பெண்ணிடம் அவளை விட இன்னொரு பெண் அழகு என்று சொல்வது எவ்வளவு அபாயகரமான விசயம் என்று உங்களுக்குத் தெரிந்திருக்கிறது. நீங்கள் பிழைத்துக் கொள்வீர்கள்...''

ஆஷாவும் அவனுடன் சேர்ந்து சிரித்தாள்... அதைக் கவனித்தவாறு வந்த மாணிக்கவேல் ரிஷியின் தோளைத் தட்டி...

''நீங்கள் என் மருமகனாக வரவில்லையென்பதில் எனக்குக் குறைதான் மாப்பிள்ளை.. ஆனால் என் பெண்ணைக் கொடுத்தால்தான் நீங்கள் என் மாப்பிள்ளை... நான் உங்கள் மாமன் என்று அர்த்தமில்லை... நீங்கள் என் தங்கையின் மகன்.. நான் உங்கள் தாய் மாமன்... நம் சொந்தம் என்றும் நிலைத்து நிற்கும்.. உங்கள் கல்யாணத்தில் நான் முன்னால் நின்று வேலை பார்ப்பேன்.. அது போல் ஆஷாவின் கல்யாணத்தையும் நீங்கள் முன்னால் நின்று நடத்திக் கொடுக்க வேண்டும். நம் சொந்தம் விட்டுப் போகக்கூடாது மாப்பிள்ளை...'' என்று கூறினார்.

''இதை நீங்கள் என்னிடம் சொல்ல வேண்டுமா மாமா..'' ரிஷி அவரின் கைகளை பாசத்துடன் பிடித்துக் கொண்டான்.



அன்றே மாணிக்கவேலின் குடும்பத்தினர் கிளம்பிப் போய் விட்டனர். மோகனா ரிஷியுடன் பேசுவதை தவிர்த்தவாறு 'உம்'மென்று இருந்தாள். பாண்டுரங்கன் மோகனாவை சமாதானப்படுத்தினார்.

''இதோ பார் மோகனா.. நம் மனதில் ஆயிரம் ஆசைகள் இருக்கலாம்... அதை நம் பிள்ளையின் மேல் திணிப்பது தவறு. கல்யாணம் என்பது வாழ்க்கையில் ஓர் முறை வரும் நிகழ்வு.. அதை அவனுடைய மனதுக்குப் பிடித்தவளுடன் அவன் வாழட்டுமே... நீ இத்தனை நாளும் அவன் கேட்டதையெல்லாம் நிறைவேற்றினாயே.. அது பெரிதில்லை. இப்போது அவன் கேட்பதை நிறைவேற்றப் போகிறாயே.. இதுதான் பெரிது.. பார்.. நீ அவனுடன் பேசுவதை அவாய்ட் பண்ணவும் அவன் முகம் வாடி விட்டது... உன் பிள்ளை மேல் நீ வைத்திருக்கும் பாசம் இவ்வளவுதானா...''

மோகனாவின் தாய்மை விழித்தெழுந்தது. அவள் மகனைத் தேடிச் சென்றாள். ரிஷி எங்கோ வெட்ட வெளியை வெறித்துக் கொண்டு நிற்க.. மோகனாவின் மனம் உருகிவிட்டது. ரிஷி ஸ்வேதாவின் நினைவில் மனம் வருந்திக் கொண்டிருப்பதை அறியாதவளாய் மகனின் அருகே சென்றாள்.

''ரிஷி...''

ஸ்வேதாவின் நினைவைக் கலைத்தது அவளின் குரல்.

''அம்மா...''என்று திரும்பினான் ரிஷி.

''அம்மா மேல் கோபமாடா?''

''இல்லைம்மா...''

''அப்புறம் ஏன் என்னுடன் பேசாமலிருக்கிறாய்... வா... சாப்பிடலாம்..''

மோகனா சமாதானமாகிவிட்டாள்... ரிஷியின் மனக் கிலேசம் கொஞ்சம் குறைந்தது... இனி பாண்டுரங்கனின் உடல்நிலையை யோசிக்க வேண்டும்.

அவர் வந்து பெண் கேட்காமல் ஸ்வேதாவை திருமணத்திற்கு சம்மதிக்க வைக்க முடியாது.. என்ன செய்வது என்ற யோசனையில் அவன் ஆழ்ந்திருந்த போது பாண்டுரங்கன்.. அதற்கும் வழி செய்தார்.

வழக்கமாய் வீட்டுக்கு வந்து பரிசோதிக்கும் டாக் டரிடம் இது பற்றி கலந்து ஆலோசித்தார்.

''நீங்கள் வேலை எதுவும் செய்யக்கூடாது மிஸ்டர் பாண்டுரங்கன்...''

''இல்லை டாக்டர்.. நான் வேலை செய்யப் போக வில்லை... ஜஸ்ட்.. என் மகனுக்காக பெண் கேட்டுப் போகிறேன்..''

''அப்படியென்றால் ஓ.கே... பட் நீங்கள் பெட் ரெஸ்டில் இருப்பவர்... காரில் ஜர்னி பண்ணுவது சௌகரியமாக இருக்குமா என்பதை பார்த்துக் கொள் ளுங்கள்..''

''காரில் ஏஸி இருக்கிறது... நான் பின் சீட்டில் தலை யணையை போட்டு படுத்துக் கொண்டுதான் போகப் போகிறேன்.. காரை அலுங்காமல் குலுங்காமல் என் மகன் ஓட்டுவான்...''

''அப்படியென்றால் சரி...''

ஊட்டியில் ஸ்வேதாவை பெண் கேட்கக் கிளம்ப ரிஷியின் குடும்பம் ஆயத்தமாகிக் கொண்டிருந்ததை



அறியாமல் ஸ்வேதா தனக்குள் போராடிக் கொண்டிருந் தாள்.

அவளால் வழக்கம் போல்... இயல்பாய் இருக்க முடிய வில்லை... நெஞ்சில் நெருஞ்சி முள்ளாய் துயரம் அழுத்திக் கொண்டிருக்கும் போது எப்படி அவளால் இயல்பாய் இருக்க முடியும்?

நடந்து விட்ட நிகழ்வை நினைத்து நினைத்து மனம் துடித்துக் கொண்டு இருந்தாள் ஸ்வேதா.. தன்னைத் தானே பார்த்துக் கொள்ளக் கூட அவள் மனம் கூசியது...

'இது அவன் தொட்ட உடல்...' அருவெறுப்பில் அவள் முகம் சுளித்தாள். ஆனால் என்ன செய்வது என்றுதான் தெரியாமல் தவித்தாள்.

பாண்டுரங்கனின் செல்போன் நம்பர் அவளிடம் இருந்தது. 'அவரிடம் போனில் பேசலாமா...' என்று ஒரு கணம் நினைத்தாள்.

'என்னவென்று சொல்வது... உன் மகன் இப்படி நடந்து கொண்டான்.. எனக்கு நியாயம் சொல்...' என்று கேட் பதா... இல்லை,

'எனக்கு வேறு கதியில்லை... உன் மகனிடம் சொல்லி எனக்கு வாழ்க்கை கொடுக்கச் சொல்லு..' என்று கேட் பதா...

இரண்டையுமே கேட்க ஸ்வேதாவிற்கு விருப்பம் இல்லை. இதில் நியாயம் சொல்ல என்ன இருக்கிறது? ரிஷியை தண்டிக்க வேண்டும்.. பாண்டுரங்கனால் அது முடியுமா? இல்லை... அவர் மகனைக் கண்டித்து வாழ்க்கை கொடுக்கச் சொல்லி.. அந்த வாழ்க்கையை ஸ்வேதா வாழ்வதா? அதை விட அசிங்கம் வேறு என்ன





இருக்கிறது.. தவறு செய்தவனுக்கு தண்டனை வேண்டு மென்று போலீஸ் ஸ்டேசன் போவதா? போய்.. என்ன வென்று சொல்வது? அதைச் சொல்ல வாய் வருமா?

ஸ்வேதா புழுவாய் துடித்தாலும்.. எந்த திசையை நோக்கினாலும் அடைப்பட்ட கதவுகள் அவளைப் பார்த்து நகைத்தன... ரிஷியை எதிர்த்து எதையும் செய்ய முடியவில்லையே என்ற வெறி அவள் மனதில் எழுந்தது.

''அக்கா...'' தீபா அவள் முகத்தைப் பார்த்தவாறே அழைத்தாள்.

''என்ன தீபா...''

''ஏன் பல்லை நறநறன்னு கடிச்சுக்கிற..? யார் மேலா வது கோபமா?''

''சேச்சே.. அதெல்லாம் இல்லை...''

தங்கை கவனித்துக் கொண்டிருக்கிறாள் என்ற உணர் வில் இயல்பாக இருக்க முயன்றாள் ஸ்வேதா.

''என்ன பண்ணுகிறாய் தீபா...''

''இந்த மேத்ஸ் சுத்தமாக வரமாட்டேன் என்கிறது அக்கா...''

''நீ கூப்பிட்டால் வராமலா போய்விடும்...'' என்று தீபா விடம் சொல்லிக் கொண்டிருக்கும் போதே.. அன்றைய நினைவு வந்துவிட ஸ்வேதாவின் மனம் வலித்தது.

'நீ கூப்பிட்டால் வருவதற்கு.. நான் ஒன்றும் நீ நினைக்கும் மாதிரிப் பெண்ணில்லை.'

அவள் நேர்மையானவள்தான்... அநாவசியமாய் ரிஷியை நிமிர்ந்து கூடப் பார்க்காதவள்தான்... அவன்



வலிய வந்து பேசிய போது மகிழ்ந்து போகாமல் விலகிப் போனவள்தான்.. இருந்தும் என்ன வாழ்ந்தது? கேட் டாளே... அன்று அவனைப் பார்த்துக் கேட்டாளே...

'நீ கூப்பிட்டுப் பார்த்திருந்தால் தெரிந்திருக்கும்..' என்று... அவன் அவளைக் கூப்பிடாமலே தொட்டு ஆண்டு விட்டான்.. இப்போது செய்வது அறியாமல்.. திக்குத் திசை தெரியாமல் இப்படி நிற்கிறாளே...

'உன் மரியாதை கெட்டு விடும்..' என்று சொன்னாளே.. கெட்டது அவன் மரியாதையில்லையே... ஸ்வேதா புழுவாகத் துடித்தாள்.

இது மரண வேதனை... பழிவாங்கவும் முடியாமல்... தான் சீரழிக்கப்பட்டதை ஜீரணித்துக் கொள்ளவும் முடியாமல் தவிக்கும் இந்தத் தவிப்பிற்கு பேசாமல் செத்துவிட்டால் என்ன என்று அவளுக்குத் தோன்றியது.

''அக்கா...'' திகைப்புடன் அழைத்தாள் தீபா.

''ம்... என்ன.. என்ன தீபா...''

''நீ சரியில்லை அக்கா...''

''என்ன சொன்னாய்..?''

''நீ சரியில்லையென்று சொன்னேன்...''

ஸ்வேதா பொட்டில் அடி விழுந்தது போல் கலங்கிப் போனாள்.. தீபா யதார்த்தமாய் கூறிய வார்த்தைகள் அவள் மனதை மிகவும் பாதித்தன.

'நான் சரியில்லாதவள் ஆகிப் போனேனா..?'

''அக்கா...'' ஸ்வேதாவைப் பிடித்து உலுக்கினாள் தீபா.

''எழுந்திரு அக்கா... உனக்கு உடம்பு சரியில்லை... நீ போய் தூங்கு...''

'தூங்கத்தான் வேண்டும்... துரத்தும் நினைவுகளிடமிருந்து தப்பிக்க தூக்கம் ஒன்றுதான் சிறந்த வழி.. ஆனால் தூக்கம் வர வேண்டுமே...' எழுந்து லீலாவதியிடம் சென்றாள்.

''அம்மா...''

''என்ன ஸ்வேதா..''

''தூக்க மாத்திரை ஒன்னு தாங்க...''

''நீயே போய் எடுத்துக் கொள்.. நான் கை வேலையாக இருக்கிறேன்...''

லீலாவதிக்கு தூக்கம் வரவில்லையென்று மாத்திரை கொடுத்து தூங்க வைத்துக் கொண்டிருந்தார்கள்.. இப்போது அவள் படுத்தவுடன் தூங்கி விடுகிறாள்.. ஸ்வேதா தூக்கம் வராமல் தவித்துக் கொண்டிருக்கிறாள்

சிறிய அறைக்குள் சென்று அலமாரியைத் திறந்து தூக்க மாத்திரைப் பாட்டிலை எடுத்த ஸ்வேதாவிற்கு அந்த ஆசை தோன்றியது.. ஆவலுடன் தூக்க மாத்திரைகளை பார்த்தாள்.. இவை எல்லாவற்றையும் விழுங்கி விட்டால்.. இந்தத் துன்பத்திலிருந்து விடுதலை கிடைத்து விடுமே...

ரத்தினம் இறந்து போய்.. லீலாவதி பிரமை பிடித்து உட்கார்ந்து விட்ட நிலையில் கூட ஸ்வேதாவிற்கு சாக வேண்டும் என்ற எண்ணம் வந்ததில்லை... படிப்பு வேலை... வீட்டுப் பொறுப்பு என்று இறக்கை கட்டி கொண்டு பறந்த அந்நாள்களில் குடும்பச் சுமையை சுமக்க முடியாமல் அவள் திணறிய போது கூட அவளுக்குச் சாகத் தோன்றியதில்லை... ரிஷி பொறுப் பேற்றுக் கொண்ட பின்.. தினந்தோறும் அலுவல



வாழ்வை நரகமாக்கிய போது கூட அவளுக்குச் சாக வேண்டும் என்ற நினைப்பு தோன்றியதில்லை.. இன்று எல்லாமே அவளுக்கு வெறுத்து விட்டது.. செத்துவிட வேண்டும் என்று ஸ்வேதா மிக ஆசைப்பட்டாள்.

கையில் தூக்க மாத்திரைகளைப் போட்டு வாயருகே கொண்டு போன போது...

''அக்கா...'' என்று அலறிக் கொண்டே ரகு அறைக்குள் ஓடி வந்தான். அவன் கண்களில் நீர் வழிந்து கொண்டிருந்தது.. தன் துக்கம் மறந்தவளாய் பதறிப் போய் ஸ்வேதா ரகுவின் அருகே மண்டியிட்டு அமர்ந்தாள்.

''என்னடா.. என்ன ஆச்சு...''

''விழுந்து விட்டேன்க்கா.. அடிபட்டு ரத்தம் கொட்டுது...''

ரகு முழங்கையை காண்பித்தான்.. அதில் காயம் பட்டு ரத்தம் வழிந்து கொண்டிருந்தது... அவசரமாய் தீபாவிடம் பிளாஸ்திரியை எடுத்து வரச் சொல்லி ரத்தத்தை கழுவி துடைத்து... மருந்து வைத்து இறுகக் கட்டினாள்.

''பார்த்து வரக்கூடாதா ரகு...''

''எல்லாம் நீ பார்த்துக்குவாய் என்கிற தைரியம் அக்கா... இவனுக்கு..''

தீபா செல்லமாய் தம்பியை முறைத்துக் கொண்டே கூற... ஸ்வேதாவின் மனதில் இருந்த தற்கொலை எண்ணம் மறைந்துவிட்டது.

'நான் இல்லாவிட்டால் யார் இவர்களை பார்த்துக் கொள்வது...?' தூக்க மாத்திரைகளை பொறுக்கி



பாட்டிலுக்குள் போட்டாள்.. ஒரே ஒரு மாத்திரையை வாயில் போட்டு விழுங்கினாள். ரகுவை பக்கத்தில் அமர வைத்து அவனுடன் பேசிக் கொண்டே உறங்கி விட்டாள்.

சமையல் முடிந்து வந்த லீலாவதி பெரிய மகளை எழுப்பிய போது அவள் எழுந்திருக்கவில்லை... தீபா மென்மையாய் தமக்கையின் நெற்றியை வருடியவாறு தாயிடம் சொன்னாள்.

''அக்காவுக்கு இப்போது தேவையானது சாப்பாடு இல்லைம்மா... தூக்கம்... அது மனதிற்குள் எதையோ போட்டு குழப்பிக்கிட்டு இருக்கு.. பாவம்.. ஆபிஸில் ஏதும் டென்சனோ.. என்னவோ... தூங்கட்டும்.. விட்டு விடுங்கள்...''



## 9

வாசல் தெளித்துக் கோலம் போட்டுக் கொண்டிருந்த லீலாவதி... கார் சத்தத்தை கேட்டு நிமிர்ந்து பார்த்தாள்.

'இது ஸ்வேதாவின் முதலாளியின் கார் போல் இருக்கிறதே...'

ரிஷி கார் கதவைத் திறந்து கொண்டு இறங்கினான்... இழுத்துச் செறுகியிருந்த புடவையை அவசரமாய் சரி செய்தவாறு,

''வாங்க தம்பி..'' என்று வரவேற்றாள் லீலாவதி.



''ஸ்வேதா எழுந்து விட்டாங்களா.. அவங்களிடம் ஒரு விவரம் சொல்ல வேண்டுமே.. அதற்காகத்தான் வந்தேன் ஆன்ட்டி...''

''உள்ளே வாங்க தம்பி... அவளை எழுப்பி விடுகிறேன். பாவம்.. ஆபிஸில் ஏதோ டென்சன் போல... மனதில் எதையோ போட்டு மறுகிக்கிட்டு இருக்கிறாள்.. தீபாதான் தூக்க மாத்திரையை சாப்பிடச் சொல்லி தூங்க வைத்தாள்... ராத்திரி சாப்பிடக் கூட எழுந்து கொள்ள வில்லை... அப்படி அயர்ந்து தூங்குகிறாள்.. நீங்க உட்காருங்க தம்பி.. அவளை எழுப்பி விடுகிறேன்...''

இருந்தது ஒரு பெரிய அறையும்.. அதை ஒட்டிய சின்ன அறையும்தான். சின்ன அறைக்குள் ஒரு கட்டில் மட்டும் போடலாம். அதில் லீலாவதி படுத்துத் தூங்க.. பெரிய அறையில் இரண்டு நாற்காலிகளும்.. இரண்டு பெரிய கட்டில்களும் போடப்பட்டிருந்தன.. அறையின் மூலையில் டிவி இருந்தது. விருந்தினர் வரும்போது அதுதான் வரவேற்பு அறை.. டிவி பார்க்கும் போது ஹால்.. படிக்கும் போது படிக்கும் அறை.. சாப்பிடும் போது அதுதான் டைனிங் ஹால்... இரவு தூங்கும் போது அதுவே அவர்களது பெட்ரூம்...

இவ்வாறு பல நேரங்களில் பல வகைத் தோற்றங்களைக் காட்டும் அந்த அறையில் கிடந்த நாற்காலிகளில் ஒன்றில் அமர்ந்தான் ரிஷி.

''ஸ்வேதா... ஸ்வேதா... எழுந்திரு...'' லீலாவதி எழுப்பியதில்.. கண்களில் தூக்கத்தோடு.. போர்வையை விலக்கி எழுந்து அமர்ந்தாள் ஸ்வேதா.

எத்தனையோ வருடங்கள் கழித்துப் பார்ப்பது போல் ஆவலாய் அவளது முகம் பார்த்தான் ரிஷி.... கலைந்து

பின்னப்படாமல் விரிந்து கிடந்த கூந்தல்... சாதாரண காட்டன் நைட்டி.. தூங்கி எழுந்த அந்தக் கசங்கிய தோற்றத்திலும் அன்றைக்குத்தான் பூத்த புதுமலர் போல் இவள் எவ்வளவு அழகாக இருக்கிறாள்...?

''உன் முதலாளி வந்திருக்கிறார்.. பார்...''

தூக்க மாத்திரையின் வேகத்தில் மீண்டும் படுக்கப் போனவளின் தூக்கம் முற்றிலும் பறந்து போனது. அவசரமாய் திரும்பி ரிஷியைப் பார்த்தாள்.

'இவன் எதற்கு இங்கே வந்திருக்கிறான்...'

அவளுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது.. லீலாவதியின் நினைவில் தன்னை அடக்கிக் கொண்டவள்.. அவசரமாய் எழுந்து பின்பக்கம் சென்றாள். குளிர்ந்த நீரில் முகம் கழுவி பின்பக்க கொடியில் கிடந்த டவலை உருவி முகம் துடைத்தவாறு உள்ளே வந்தாள்.

தோகை போல் நீண்டு அவளது முழங்கால்களைத் தொட்ட அவளின் கூந்தலை அவன் வியப்போடு பார்த்தான்.

'இவளுக்குத்தான் எவ்வளவு நீண்ட கூந்தல்...'

அவனது பார்வையில் முகம் கடுத்தவள்.. அவனருகில் இருந்த இன்னொரு நாற்காலியில் அமர்ந்து கொண்டு லீலாவதியைப் பார்த்து,

''அம்மா... எங்க எம்டிக்கு காபி கொடுத்தீங்களா..?'' என்று கேட்டாள்.

''இதோ..'' என்றபடி லீலாவதி சமையலறைக்குள் சென்று விட... ஸ்வேதா ரிஷியின் பக்கம் திரும்பி கடுமையாக முறைத்தாள்.



''இங்கே எதற்கு வந்தாய்...?'' தாழ்ந்த குரலில் சீறினாள்.

''உன்னுடன் பேச வந்தேன்...''

ரிஷி சாவதானமாய் பதில் சொல்ல... ஸ்வேதாவின் தேகம் பற்றியெரிந்தது போல் கொதித்துப் போனாள்.

'எவ்வளவு தைரியமிருந்தால்.. எதுவுமே நடக்காதது போல் என்னுடன் பேச வந்தேன் என்று சொல்வான்.. திமிர்... தான் ஆண்மகன் என்ற திமிர்...'

''என்னுடன் பேச நீ யார்....?'' ஸ்வேதா பல்லைக் கடித்தாள்.

''உன் கணவன்..'' ரிஷி அழுத்தமாகக் கூறினான்.

''என்ன..?'' ஸ்வேதா நாற்காலியை விட்டு எழுந்து விட்டாள்... அவன் பேசியது அந்த அறையில் படுத்திருந்த தம்பி... தங்கையின் காதில் விழுந்திருக்குமோ என்ற பயத்துடன் அவர்களைப் பார்த்தாள்.. அவர்கள் சலனமில்லாமல் தூங்கிக் கொண்டிருந்தனர்.. 'அப்பாடா...' என்ற நிம்மதியுடன் அவன் பக்கம் திரும்பினாள்.. அவள் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது.

''எதற்கு இந்தப் பதட்டம்..?'' அவன் அமைதியாக வினவினான்.

''எந்த உரிமையில் அந்த உறவு முறையை என்னிடம் சொல்கிறாய்..?''

''எதனால் என்று உனக்குத் தெரியாதா?'' அவன் அவள் விழிகளை ஊடுருவிப் பார்த்தான்.

ஸ்வேதாவின் உடல் குலுங்கியது... இவன் ராட்சஸன் என்று அவளுக்குத் தோன்றியது.. வேட்டையாடிவிட்டு



அந்த பெருமையை பறைசாற்ற மீண்டும் அவளைப் பார்க்க வந்திருக்கிறான்.

''நீ மனிதனில்லை... மிருகம்..'' அவள் வெறுப்புடன் வார்த்தைகளை உமிழ்ந்தாள்.

''ஸ்வேதா...'' லீலாவதிக்கு கேட்டுவிடக் கூடாது என்று தாழ்ந்த குரலில் அவன் அவளை அதட்டினான்.

''என்ன அதிகாரமெல்லாம் தூள் பறக்குது.. இது என் வீடு என்பது நினைவிருக்கட்டும்.. ஜாக்கிரதை.. இங்கே வாலை ஆட்டினால் ஒட்ட நறுக்கித்தான் அனுப்பி வைப்போம்.. பத்திரம்..''

அவனுக்கு எரிச்சல் வந்துவிட்டது.

''நீ திருந்தவே மாட்டாயா...?''

''யார்... யாரைப் பார்த்து இந்தக் கேள்வி கேட்பது?''

''உன்னை...'' அவன் பல் கடிக்க...

''இன்னும் என்ன செய்யப் போகிறாய்.. அதுதான் செய்ய வேண்டியதை செய்துமுடித்து விட்டாயே... சண்டாளா.. இங்கே எதற்கு என்னைப் பார்க்க வந்தாய்? நான் உயிருடன் இருக்கிறேனா.. இல்லை செத்து விட்டேனா என்று பார்ப்பதற்கா வந்தாய்.. நாசகாரா.. என்னை உயிரோடு சாகடித்து விட்டு வெற்றி விழா கொண்டாட வந்தாயா?''

''ஸ்டாப் இட் ஸ்வேதா...'' அவன் கண்களில் அனல் பொறி பறந்தது.

''நீ வாயைத் திறந்தால் மூடவே மாட்டாயா? ஊரிலிருந்து அம்மாவும் அப்பாவும் என்னுடன் வந்திருக்கிறார்கள்.. இன்றைக்கு ஈவினிங் அவர்களும்... நானும்



உன்னைப் பெண் பார்க்க வருவோம்.. அதைச் சொல்லி விட்டுப் போகத்தான் வந்தேன்...''

''என்ன...'' ஸ்வேதாவிற்கு அவன் சொன்னது சுத்தமாய் விளங்கவில்லை...

'இவன் என்ன.. எதையோ உளருகிறான்..'

''என்ன தம்பி.. சாயந்திரம் யார் வருகிறாங்க..'' அவன் கடைசியாய் பேசியதை அரையும் குறையுமாய் கேட்டுக் கொண்டே வந்த லீலாவதி... காபித் தம்ளரை அவனிடம் நீட்டியபடி வினவினாள்.

ரிஷி அதை வாங்கியவாறே பதில் சொன்னான்.

''அம்மா... அப்பா.. அப்புறம் நான்.. இவ்வளவு பேர்தான் அத்தை...''

''அத்தையா..?''

''அத்தை தான்.. ஆண்ட்டி என்பதன் தமிழ் அர்த்தம் அத்தை தானே.. அதோடு நான் உங்கள் மருமகன் ஆகப் போகிறவன்... அத்தையென்றுதானே நான் கூப்பிட வேண்டும்..?''

''என்ன தம்பி என்ன என்னவோ சொல்றீங்க...''

''அத்தை.. நானும் ஸ்வேதாவும் ஒருவரை ஒருவர் காதலிக்கிறோம்... கல்யாணம் பண்ணிக் கொள்ளலாம் என்று முடிவெடுத்திருக்கிறோம்.. அதற்கு அப்பா அம்மாவின் சம்மதமும் கிடைத்து விட்டது.. அவர்களோடு ஈவ்னிங் நான் முறைப்படி பெண் கேட்டு வருகிறேன்.. அதைச் சொல்லிவிட்டுப் போகத்தான் வந்தேன்...''

தலைமாட்டில் பேச்சுக் குரல்கள் கேட்டதில் தூக்கம் கலைந்து எழுந்த தீபா இதைக் கேட்டதும், ''வாவ்...''

என்றாள். ஸ்வேதாவிடம் வந்து அவளைக் கட்டிக் கொண்டாள்.

''அதனால்தான் இரண்டு நாள்களாய் ஒரு மார்க்கமாய் இருந்தாயா..?''

''ஆமாம் தீபா... என்னிடம் கூட நான் கல்யாணம் பண்ணிப் போய்விட்டால் நீங்கள் தனியே வாழ வேண்டாமா... அதனால் நானில்லாமல் வாழப் பழகிக் கொள்ளுங்கள் என்றாள் உன் அக்கா.. இதற்காகத்தான் அப்படிச் சொன்னாளா...''

லீலாவதி சொல்லியதைக் கேட்டு சட்டென்று ஸ்வேதாவைப் பார்த்தான் ரிஷி. அந்த வார்த்தைகளில் பொதிந்திருந்த அர்த்தம் அவனுக்குப் புரிந்தது. அவனது விழிகள் அவளைக் கேள்வி கேட்டன.. அவளோ சுட்டெரிக்கும் விழிகளால் பதில் கொடுத்தாள்.

''ஆமாம் அத்தை... உங்கள் பெண் என்னிடம் வந்து விடப் போவதைத்தான் சொல்லியிருப்பாள்.. என்னை விட்டு அவளால் எங்கும் போக முடியாது... நான் போகவும் விடமாட்டேன்'' ரிஷி நகைத்தான்.

பதிலுக்கு தீபாவும்.. லீலாவதியும் சிரித்தார்கள்.. ரகு ஒன்றும் புரியாமல் விழித்துக் கொண்டு நிற்க... ரிஷி அவனிடம் கை நீட்டினான்.

''ஹலோ... தூங்கு மூஞ்சி மைத்துனரே... உங்கள் அக்காவை பெண் கேட்டு வந்திருக்கிறேன்.. பெண் கொடுப்பாயா...?''

ரகு வெட்கத்துடன் தாய்க்கு பின்னால் ஒளிந்து கொண்டான். ஆனால் ரிஷியை மட்டும் எட்டிப் பார்த்துக் கொண்டான். அவன் விழிகளில் புதிய சொந்தம் தெரிந்தது.



''ஏன் அத்தை... உங்கள் மகன் மறைந்திருந்து பார்ப்பதற்கு.. அர்த்தம் என்ன..? இது பற்றி ஒரு ஓல்டு சாங் ஒன்று உண்டில்லையா..?''

ரிஷி வினவவும் லீலாவதி தன் பின்னாலிருந்து எட்டிப் பார்த்த ரகுவைப் பிடித்து இழுத்து முன்னால் கொண்டு வந்து...

''மறைந்திருந்து பார்க்கும் மர்மம் என்ன...?'' என்று பாடினாள்.

ஸ்வேதா ஆச்சர்யத்துடன் தாயைப் பார்த்தாள்... பழைய லீலாவதியின் கலகலப்பு முகத்தில் தெரிந்தது.. அம்மா எப்படி தன் சோகத்திலிருந்து இந்த அளவுக்கு மீண்டாள்..? தீபாவிடம் கிசுகிசுப்பாய் வினவினாள்.

''எப்படி அம்மாவிடம் இப்படியொரு சேன்ஜ் வந்திருக்கிறது?''

''நீயில்லாமல் போய்விட்டாயோ என்ற பயமும்... நானும் ரகுவும் அம்மாவை விட்டு போய் விடுவோமோ என்ற பதட்டமும் சேர்ந்து அன்றைக்கு அதிர்ச்சி வைத்தியமாகி அம்மாவை புத்தி தெளிய வைத்தது... இன்றைக்கு ஒரு அம்மாவாய் தன் பெண்ணுக்கு கல்யாணம் முடியப் போகும் சந்தோசத்தில் அவங்க மனம் விட்டுப் பேசிச் சிரிக்கிறாங்க.. எது எப்படியோ அக்கா.. அன்றைக்கு அம்மாவுக்கு அதிர்ச்சி வைத்தியம் கிடைக்கக் காரணமாக இருந்ததும் நீதான்.. உன் கல்யாணம் என்பது அவங்களுக்கு பெரிய ரிலீபாக இருக்கிறது போல.. தேங்க்ஸ் பார் ஆல்.''

ஸ்வேதாவிற்கு அழ வேண்டும் போல் இருந்தது... அன்றைக்கு என்ன நடந்தது.. இன்று என்ன நடக்கிறது



என்பதை அறியாதவளாய் இவள் பேசுகிறாளே..? பலவந்தப் படுத்தியவனையே மணந்து கொள்வதா? இதை விடக் கொடுமை ஒன்று உண்டா? அதை அறியாமல் வீடே சிரித்து மகிழ்கிறதே.. அதுவும் அம்மா.. இத்தனை சிரிப்பை அம்மாவின் முகத்தில் அவள் இன்றுதானே பார்க்கிறாள்.

''அப்போ நான் கிளம்புகிறேன் அத்தை...'' ரிஷி ஸ்வேதாவிடம் எல்லோரும் பார்க்கும்படி கண் சிமிட்டி விடைபெறவும் ஸ்வேதாவின் கோபம் உச்ச நிலையை அடைந்தது.

அவள் அவன் பின்னாலேயே கார் வரை போக... தொடர்ந்து போக முயன்ற தீபாவின் கையை பிடித்து நிறுத்தினாள் லீலாவதி.

''அவங்க ஏதாவது ரகசியம் பேசிக்குவாங்க... நீ போக வேண்டாம்..''

மகள் பேசப் போகும் ரகசியம் என்ன என்பதை அறிந்திருந்தால் லீலாவதி இப்படிச் சொல்லியிருக்க மாட்டாள்.

''உன்னை நான் ஒரு நாளும் கல்யாணம் பண்ணிக் கொள்ள மாட்டேன்...'' என்று ரிஷியிடம் கூறினாள் ஸ்வேதா.

''பின் வேறு யாரை கல்யாணம் பண்ணிக் கொள்வாய்...?'' ரிஷி அவள் முகத்தையே பார்த்தவாறு நிதானமாகக் கேட்டான்.

அவள் முகம் கலங்கியது.. உடல் தூக்கிப் போட்டது...

'வேறு ஒருவனைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதா...'



''கல்யாணம் என்ற ஒன்றே என் வாழ்க்கையில் தேவையில்லை... அதனால் போகாத ஊருக்கு வழி தேடாமல்.. உங்கள் அப்பா.. அம்மாவை அழைத்துக் கொண்டு ஊட்டிக்கே திரும்பிப் போகும் வழியை பார்க்கிறீர்களா..?''

''திரும்பிப் போகும் போது உனக்கும் எனக்குமான கல்யாணத்தை முடிவு பண்ணிவிட்டுத்தான் அவர்கள் போவார்கள்... அப்பாவின் உடல்நிலை பற்றி உனக்கே தெரியும்.. இவ்வளவு லாங் ஜர்னியை உனக்காக அவர் ஏற்று இங்கு வந்திருக்கிறார்.. அவரிடம் போய் உன் மறுப்பை நான் சொல்ல முடியாது.. அதுசரி.. இது என்ன புதிதாய் 'வாங்க.. போங்க..' என்று மரியாதை கொடுக்கிறாய்.. இவ்வளவு நேரம் 'வா.. போ..' என்று பேசியவள் தானே நீ..? ஹஸ்பெண்டுக்கு மரியாதை கொடுக்க வேண்டும் என்ற தமிழ் கல்ச்சர் நினைவுக்கு வந்து விட்டதா...?''

''கல்யாணமே நடக்காது என்கிறேன்.. அப்புறம் என்ன கணவனாகப் போகிறவன் என்று உரிமை கொண்டாடுகிறீர்கள்...''

''ஏய்.. கல்யாணம் என்பது ஊர்.. உலகத்திற்கு உனக்கும்.. எனக்குமான பந்தத்தை அறிவிக்கத்தான்... நமக்குள் கணவன்.. மனைவி என்ற பந்தம் அன்றே ஏற்பட்டு விட்டது... நாம் கணவன்... மனைவியாக வாழ்ந்து விட்டோம்.. மறந்து விட்டதா..? மறந்து விட்டால் நினைவு படுத்திக் கொள்...''

''தூ.. அன்று நடந்த வெறிச் செயலை புனிதமான கணவன்.. மனைவி என்ற பந்தத்துடன் ஒப்பிடாதீர்கள்.. நான் ஏன் 'வாங்க.. போங்க' என்று பேசுகிறேன்

தெரியுமா... வாய் தவறி என் அம்மா.. தம்பி.. தங்கையின் முன்னால் அப்படிப் பேசிவிடக் கூடாது என்பதற்காகத்தான்... அவர்கள் அதைக் கேட்டு சந்தேகப்பட்டு விடக்கூடாது என்ற பயத்தில்தான்.. மற்றபடி உங்களைப் போன்ற ஒரு கேடு கெட்டவனுக்கெல்லாம் மரியாதை கொடுக்க வேண்டிய தேவை இல்லை....''

''ஓ... இப்படி ஒரு விசயம் இருக்கிறதா..? அப்போ.. என் அப்பாவிடம் நடந்த சம்பவத்தை சொல்லி பாவ மன்னிப்பு வாங்கிக் கொண்டது போல் உன் அம்மாவிடமும் சொல்லி பாவ மன்னிப்பு வாங்கிக் கொள்ளவா...?''

''ரிஷி...''

பயத்தில் தன்னை மறந்து முதன் முதலாக அவன் பெயரை உச்சரித்தாள் ஸ்வேதா. அவன் விழிகள் மின்னின.

''சொல் ஸ்வேதா... நான் உன் ரிஷிதான்.. உனக்கு மட்டும் தான் நான் இனிமேல் சொந்தமானவன்... இதைப் புரிந்து கொள்ளாமல் வாய்க்கு வந்ததை நீ பேசினால் எப்படி..? நான் உன் அம்மாவிடம் எதையும் சொல்ல மாட்டேன். பயப்படாதே.. அப்பாவிடம் சொல்ல வேண்டியதாகிப் போனதற்கு காரணம் என் சூழ்நிலை... என் மாமன் மகளை எனக்குத் திருமணம் பேசி வைத்து விட்டு.. அதற்காக என்னை ஊட்டிக்கு வரச் சொல்லி இருந்தாங்க அம்மா... கல்யாணப் பேச்சை நிறுத்த எனக்கு வேறு வழி தெரியவில்லை.. அப்பாவிடம் மட்டும்தான் சொன்னேன்.. அம்மாவுக்கு இது தெரியாது.. இப்போது மட்டுமல்ல எப்போதுமே இதை நான் அவங்களுக்கு தெரியப்படுத்த மாட்டேன்.. அப்பாவும் சொல்லமாட்டார்...''



''பேசாமல் உங்கள் மாமன் மகளைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு என் வாழ்க்கையிலிருந்து விலகிப் போய் தொலைய வேண்டியதுதானே.. என் உயிரை எடுக்க.. ஏன் இந்தக் கல்யாணப் பேச்சை எடுத்தீர்கள்...?''

அவள் விழிகளை ஆழமாக ஊடுருவிப் பார்த்தான் ரிஷி.

''என்னால் இனி இன்னொரு பெண்ணைத் தொட முடியாது ஸ்வேதா... உன்னைத் தவிர வேறு ஒரு பெண்ணிற்கு கணவனாக ஆகவும் முடியாது.. உனக்குப் பிடிக்கிறதோ.. இல்லையோ.. நீ தான் என் மனைவி.. இதை மாற்ற நீ நினைத்தாயென்றால்.. எனக்கு வேறு வழி இருக்காது ஸ்வேதா.. உள்ளே வந்து உன் அம்மா.. தம்பி தங்கைகளிடம் எல்லாவற்றையும் சொல்லிவிடுவேன்... இதை நினைவில் வைத்து புத்திசாலித்தனமாக நடந்து கொள். அன்று நடந்தது உனக்கு வெறிச்செயல்... எனக்கு என்றுமே மறக்க முடியாத இனிய நினைவு... உன்னை நான் விட்டுக் கொடுக்க மாட்டேன்.. என்னை விட்டு விலகிப் போக அனுமதிக்கவும் மாட்டேன்.. ஈவினிங் வருகிறேன்.. உன்னைப் பெண்.. பார்க்க வரும் மாப்பிள்ளையாக.. பை தி வே.. ஸ்வேதா.. இன்னும் ஒன்றையும் தெரிந்துகொள். உன் அம்மாவிடம் சொன்னது போல்தான் என் அம்மாவிடமும் சொல்லியிருக்கிறேன்.. நாம் இருவரும் காதலர்கள்.. அதனால் என் காதலியாக.. கல்யாணக் கனவு காணும் பெண்ணாக ஈவினிங் காத்திரு.. போய் வரவா..?''

அவள் எதிர்பாராத விதமாக அவள் கன்னத்தில் தட்டிவிட்டு காரில் ஏறினான் ரிஷி... அவன் விரல் பட்ட இடம் எரிய ஸ்வேதா அவசரமாய் சுற்று முற்றும்





பார்த்தாள். எதிர்வீட்டுக் கண்மணி அவளது குழந்தைக்கு விளையாட்டு காட்டுவது போல் வெளியே வந்து இவர்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

'போச்சு.. இன்னும் கொஞ்ச நேரத்தில் இந்த காம்பவுண்டு பூராவும் இந்தப் பேச்சுதான்...'

காருக்குள்ளே இருந்து எட்டிப் பார்த்த ரிஷி,

''என்ன எதிர்வீட்டை பார்க்கிறாய்...? அந்தப் பெண் பார்க்கட்டும் என்றுதான் உன் கன்னத்தை தொட்டேன்.. இதற்கே இப்படிப் பயப்படுகிறாயே.. இன்னும்.. அன்று நடந்ததை இந்தக் காம்பவுண்டில் இருப்பவர்களிடம் விலாவாரியாக சொன்னேன் என்று வை.. என்ன ஆகும்...?''

''உங்களைத் தூக்கி உள்ளே போடுவார்கள்...''

''தண்டனையை ஏற்றுக் கொள்ள நான் தயாராகத்தான் இருக்கிறேன்.. செய்த பாவத்திற்கு ஒன்று யாருக்கும் தெரியாமல் பிராயச்சித்தம் செய்து விட வேண்டும்.. இல்லையென்றால் எல்லோரும் அறிய குற்றத்தை ஒப்புக் கொண்டு தண்டனை பெற வேண்டும்.. இரண்டில் ஒன்றை நீயே தேர்வு செய்து கொள்... முதலாவதிற்கு நான் ரெடியாகிவிட்டேன். அதை நீ ஏற்றுக் கொள்ளாவிட்டால் இரண்டாவதை உடனடியாக செய்து விடுவேன்... வரட்டுமாடி.. என் பெண்டாட்டி..''

அவன் 'டாட்டா' காட்டியபடி காரைக் கிளப்பிக் கொண்டு போய் விட்டான். ஸ்வேதா அசையாமல் நின்றாள்.

'இது அநியாயம்.. தவறையும் செய்து விட்டு அவளை பிளாக் மெயிலும் பண்ணுகிறானே.. இது அவன் காட்டில் மழை பொழியும் நேரமா...'



''என்ன ஸ்வேதா.. உன் முதலாளியோடு ரொம்ப குளோசாய் பேசிக் கொண்டிருந்தாய் போல இருக்கே...'' கண்மணி கிண்டலாய் வினவினாள்.

'என் நிம்மதியை குளோஸ் பண்ணியவன் அவன்.. அதனால்தான் அவனோடு குளோஸாக பேசிக் கொண்டிருந்தேன்...' என்று சொல்லிவிடத்தான் நினைத்தாள் ஸ்வேதா.. வாய் வரை வந்த வார்த்தைகள் தொண்டையிலேயே மடிந்தன.. அதற்குள் லீலாவதியும் தீபாவும் வாசலுக்கு வந்து விட்டார்கள்.. லீலாவதி கண்மணியைப் பார்த்துச் சிரித்தாள்... அவள் முகத்தில் என்றுமில்லாத மலர்ச்சி இருந்தது.



## 10

''என்ன கண்மணி.. அதிசயமாய் பார்க்கிற.. உனக்கு விசயம் தெரியாதா? ஸ்வேதாவின் முதலாளி அவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள ஆசைப்படுகிறார்.. அவருடைய அப்பா... அம்மாவுடன் சாயந்திரம் பெண் பார்க்க வரப் போகிறார்.. அதைச் சொல்லி விட்டுப் போகத்தான் வந்திருந்தார்...''

''என்ன நிஜமாகவா..?'' கண்மணிக்கு வியப்பில் விழி பிதுங்கி விட்டது... ஸ்வேதாவை பொறாமையுடன் பார்த்தாள்.

'அந்த ஆள் பார்க்க எவ்வளவு அழகாக இருக்கிறான்.. கங்கு கரையில்லாத பணம்.. ம்ஹூம்.. இவளுக்கு அடித்த யோகத்தைப் பார்...'

''பின்னே.. பொய்யா சொல்கிறேன்... நீயும்... சாந் தியும் தான் எங்களுக்கு கூடமாட ஒத்தாசை செய் யணும்.. சாயந்திரம் பஜ்ஜி... சொஜ்ஜி ரெடி பண்ண னும்.. ஸ்வேதாவிற்கு அலங்காரம் பண்ணி விட வேண்டும்..''

எந்த அலங்காரமும் இல்லாமல் அழகாக நின்ற ஸ்வேதாவைப் பார்த்து வயிறு எரிந்தபடி...

''இனி ஸ்வேதா அலங்காரம் பண்ணனும்கிற அவ சியம் என்ன ஸ்வேதாம்மா... அதுதான் சிம்பிளாக ஆபி ஸிற்கு போய் வந்து... புளியங்கொம்பாய் பிடித்து விட்டாளே...'' என்று கூறினாள் கண்மணி.

அதற்குள் அவளது கணவன் அழைக்கும் குரல் கேட்க...

''தோ.. வந்துவிட்டேன்...'' என்றபடி அவசரமாய் போய்விட்டாள் அவள்.

அவள் நகர்ந்ததும்... அவளது காலடியில் கிடந்த சிறு மண் துகளை எடுத்துக் கொண்டாள் லீலாவதி.

''எதற்கும்மா..'' என்று தீபா கேட்டாள்.

''அவள் விட்ட பெருமூச்சில் இந்தக் காம்பவுண்டே பற்றி விடப் போகிறதுடி. அவ்வளவு பொறாமை.. ஸ்வேதாவிற்கு சுத்திப் போடணும்..'' என்றபடி லீலாவதி வீட்டிற்குள் போய்விட்டாள்.

''கன்கிராஜீலேசன்ஸ் அக்கா.. உன்னை டார்ச்சர் பண்ணின எம்டியை.. உன்னை லவ் பண்ண வைத்து



விட்டாயே.. சாதுப் பூனை போல் இருந்து கொண்டு ஜெகஜாலக் கில்லாடி வேலைகளை பார்த்துவிட்டாயே.. உன்னை என்னவோ என்று நினைத்தேன்.. நீ பலே ஆள்தான்... உன்னை விட கில்லாடி நம்ம அம்மா.. நேற்று வரை மூலையில் முடங்கிக் கிடந்த நம் அம்மாவின் மூளை என்னமாய் வேலை செய்கிறது பார்த்தாயா? நீயும் அவரும் காதல் பண்ணியதை மறைத்து விட்டு.. அவர் என்னவோ உன் மேல் ஆசைப்பட்டு வந்து பெண் கேட்கிறாராம்.. சூப்பர் அம்மா இல்லை...''

ஸ்வேதா தனக்குள் மறுகிக் கொண்டிருந்தாள்...

'இங்கு எல்லாமே மாற்றித் தான் சொல்லப்பட்டுக் கொண்டிருக்கிறது தீபா. என்னை சூறையாடியவனே... என் காதலனாய் அம்மா முன்னாலும் உன் முன்னாலும் மாறி நிற்கிறான்.. அம்மாவோ.. அவன் சொன்ன பொய்யையும் மாற்றிச் சொல்லுகிறார்கள்.. உண்மை வேறு தீபா... அது தெரிந்தால் நீயும்.. அம்மாவும் தாங்கிக் கொள்ள மாட்டீர்கள்...'

தீபாவும்.. ரகுவும் அன்று பள்ளிக்கு மட்டம் போட்டு விட்டார்கள்.. ரகு வீட்டையெல்லாம் ஒட்டடை அடித் தான்.. தீபா வீட்டை சுத்தம் செய்து கழுவி விட்டு... ஜன்னல்... வாசல்களுக்கு துவைத்த திரைச் சீலைகளை மாற்றிவிட்டாள்... பக்கத்து வீடுகளில் இருந்து நாற் காலிகளை இரவல் வாங்கிக் கொண்டு வந்தான் ரகு... தீபா அவைகளை அழகாய் போட்டு அறை மூலையில் இருந்த ஸ்டூலில் புது பூக்களைக் கொண்ட பூக்குவ ளையை வைத்தாள்.. ரகு தாய் சொன்ன மளிகை சாமான்களை கடையில் போய் வாங்கி வந்தான். தீபா



அம்மாவுக்கு உதவியாக வாழைக்காயை வெட்டி சீய்த்து வைத்துவிட்டு வாசலில் தண்ணீர் தெளித்து செம்மண் கோலம் போட்டாள். லீலாவதி பாலைக் காய்ச்சி மூடி வைத்துவிட்டு கேசரியை கிண்ட ஆரம்பித்தாள். தீபா.. இன்னொரு அடுப்பில் பஜ்ஜிக்கான எண்ணைச் சட் டியை ஏற்றி வைத்தாள். லீலாவதி பஜ்ஜிகளை போட்டு எடுக்க ஆரம்பிக்க அந்த காம்பவுண்டு முழுவதும்... எண்ணை காயும் வாசனையும்... நெய் வாசனையும் பரவியது. ஈரக் கைகளை முந்தானையில் துடைத்துக் கொண்டே சமையலறையை விட்டு வெளியே வந்த லீலாவதி.

''தீபா.. ரகு.. இரண்டு பேரும் முகம் கழுவி டிரஸ் மாத்திக்கங்க... அவங்க வருகிற நேரமாகிவிட்டது...'' என்று கூறியவாறு ஸ்வேதாவைப் பார்த்தாள்... பார்த்தவள் திகைத்தாள்.

ஸ்வேதா.. குளிக்காமல்.. தலைவாராமல்.. தலைவிரி கோலமாய் கட்டிலில் சுருண்டு படுத்துக் கொண்டு... விரல்களால் காற்றில் கோலம் போட்டுக் கொண்டிருந் தாள்.

''யாருடி.. இவ.. இப்படிப் படுத்திருக்கிறாள்.. கல் யாணம் பேச வருவது இவளுக்கா.. இல்லை ரோட்டில் போகும் வேறு எவளுக்குமா? ஏய்.. ஸ்வேதா... எழுந்திரு.. போய் குளித்து விட்டு வா.. என்னடி தீபா.. நீ கூட இவள் இப்படிப் படுத்துக் கொண்டிருப்பதை பார்க்கவில்லையா..''

''அம்மா... அக்கா காலையில் இருந்து இப்படித்தான் காற்றில் கோலம் போட்டுக்கிட்டு கிடக்குது. எல்லாம்



கல்யாண மயக்கம்தான்.. அதான் நான் கண்டு கொள்ள வில்லை..''

''நல்ல பிள்ளைகள் வந்து சேர்ந்தீர்கள் போங்க.. தீபா. இவள் உன் பொறுப்பு.. என்ன செய்வாயோ.. ஏது செய்வாயோ.. இன்னும் அரைமணி நேரத்தில் இவள் ரெடியாகி இருக்க வேண்டும்..''

''சொல்லிட்டிங்கள்ல... நீங்கள் கவலைப்படாமல் போய் முகம் கழுவி சேலையை மாற்றிக்கோங்க.. நான் அக்காவை ஒரு வழி பண்ணுகிறேன்...''

சொன்னபடி அடுத்த அரை மணி நேரத்திற்குள் ஸ்வேதாவையும் தயார் நிலையில் வைத்து... தானும் தயாராகிவிட்டாள் தீபா.

பக்கத்து வீட்டு சாந்தி வீட்டுக்குள் வந்த போது... ஸ்வேதா மெஜந்தா கலர் பட்டுப் புடவை உடுத்தி.. அழகாய் தலையில் பின்னல் போட்டு.. காதுகளில் கல் ஜிமிக்கியும்.. கழுத்தில் நீண்ட ஆரமும்.. கைகளில் வளையல்களுமாக நின்று கொண்டிருந்தாள்.

''சாந்தியக்கா.. என் டிரஸ் எப்படியிருக்கு..? சூப்பராக இருக்கிறேனா?'' என்று கேட்ட தீபாவை ஏற இறங்கப் பார்த்தாள் சாந்தி. கிரே கலரில் அரக்கு சிகப்பில் பட்டு நூல்களால் எம்பிராய்டரி வேலை செய்யப்பட்ட சுடிதார் போட்டு.. காதுகளில் அரக்குச் சிகப்பில் கல்கள் பதித்த அழகிய காதணி அணிந்திருந்தாள்.. உள்ளங்கழுத்தை சுற்றி அழகான செயின் கோர்த்த அட்டிகை... ஒரு கையில் வளையல்கள்.. இன்னொரு கையில் கைக்கடிகாரம்.

''ஏண்டி.. உன் அக்காவைப் பெண் பார்க்க வரு கிறார்களா.. இல்லை உன்னைப் பெண் பார்க்க

வருகிறார்களா..?'' என்று கிண்டலாக கேட்டாள் சாந்தி.

''அக்காவைப் பெண் பார்க்க வந்தால் அவள் மட்டும் தான் அழகாய் தெரியணுமா? பெண்ணின் தோழியாய் நான்தானே நிற்க வேண்டும்...''

''ஊம் இந்தக் காலப் பெண்களிடம் பேசி ஜெயிக்க முடியுமா... ஏன் லீலாக்கா.. ஸ்வேதாவின் தலையில் பூவைக் காணோமே...''

''இனித்தான் ரகுவை அனுப்பி வாங்கி வரச் சொல்ல வேண்டும்...''

''வேண்டாம்.. நானே பூக்கட்டி கொண்டு வந்திருக்கிறேன்.. திரும்பு ஸ்வேதா...''

சாந்தி கையிலிருந்த மல்லிகைச் சரத்தை ஸ்வேதாவின் தலையில் அழகாய் வைத்து விட்டாள்.

''அக்கா.. எனக்கு..'' என்று சிணுங்கினாள் தீபா.

''உனக்கு கொண்டு வராமல் நான் தப்பித்து விட முடியுமா?'' கையிலிருந்த மீதி மல்லிகை சரத்தை தீபாவின் கையில் கொடுத்தாள் சாந்தி.

''ஏன் லீலாக்கா வீட்டுக்கார பார்வதியம்மாளிடம் ஸ்வேதாவை பெண் பார்க்க வருவதை ஒரு வார்த்தை சொல்லிட்டிங்களா...?''

''இல்லையே சாந்தி...''

''வாக்கா.. போய் சொல்லிவிட்டு வந்து விடலாம்.. அந்தம்மாளை முன்னாடி வைக்காமல் இந்தக் காம்பவுண்டில் எந்தக் காரியமும் செய்து விடக்கூடாது. அதைக் கூப்பிடலைன்னு வைங்க.. விருந்தாளிகள் முன்னால்



வந்து வீட்டை சரியா வைத்துக் கொள்ளவில்லைன்னு கத்தி வைக்கும்..''

''அட.. அது வேறா? வா சாந்தி.. முதலில் அந்தம்மாளிடம் சொல்லிவிட்டு வந்துவிடலாம்.. நல்லவேளை.. நீ காப்பாற்றினாய்...''

''அதுகிட்ட சொன்னால் மட்டும் போதாது.. எதிர் வீட்டிலும்.. எங்க வீட்டிலும் மட்டும் சொன்னீங்கன்னு மத்த மூன்று வீடுகளிலும் சடைச்சுக்கிட்டு இருக்காங்க... அவங்க வீடுகளிலும் சொல்லி விடலாம்...''

''நீ சொன்னால் சரிதான்...''

அவர்கள் இருவரும் பார்வதி அம்மாளின் வீட்டுக் காலிங்பெல்லை அடித்து விட்டு வெளியில் நின்றார்கள்.. கதவைத் திறந்த பார்வதியம்மாள் புருவம் உயர்த்தினாள்.

''என்ன விசயம்.. இரண்டு பேரும் கூட்டணி போட்டுக்கிட்டு வந்திருக்கீங்க?''

'உன் கொட்டத்தை அடக்கத்தான்..' என்று மனதில் நினைத்துக் கொண்ட சாந்தி.. வெளியில் வாய் நிறைய சிரிப்போடு...

''எல்லாம் நல்ல விசயம்தான்ம்மா... நம்ம லீலாக்காவோட மகள் ஸ்வேதாவை இன்றைக்கு பெண் பார்க்க மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வருகிறாங்க... பெரியவங்க நீங்க வந்து முன்னால் நிற்கணும்னு அக்கா ஆசைப் படுது.. அதுதான் உங்க காதில் விசயத்தைப் போட்டு விட்டுப் போகலாமுன்னு வந்தோம்..'' என்று கூறினாள்.

''ஸ்வேதாவையா பெண் பார்க்க வருகிறார்கள்?'' ஆச்சரியமாய் வினவினாள் பார்வதியம்மாள்.



'இந்த அம்மாளுக்கு இருக்கும் கொழுப்பைப் பார்... என் மகளைப் பெண் கேட்டு வருவது.. இந்தம்மாவிற்கு இவ்வளவு ஆச்சரியமாய் இருக்கிறதா..? தாய் இல்லா விட்டால் சீர் இல்லையென்று சொல்வது சரியாகத்தான் இருக்கிறது... நான் முடியாமல் மூலையில் கிடந்து.. என் மகள் ஓடி ஓடி உழைக்கவும்.. இவர்களுக்கு எல்லாம் இளக்காரமாகிவிட்டது... இவளுக்குப் போய் கல்யாணம் முடியுமா என்று நினைக்கிறார்கள் போல..' லீலாவதியின் மனதில் எண்ணங்கள் ஓடின.

''ஆமாம்மா.. எங்கள் ஸ்வேதாவைத்தான் பெண் கேட்டு வருகிறார்கள்...'' என்று அழுத்தமாகக் கூறினாள் லீலாவதி.

''மாப்பிள்ளைகாரன் என்ன படிச்சிருக்கான்.. என்ன வேலை பார்க்கிறான்? சொத்து சுகம் ஏதாச்சும் இருக்கா..? இல்லை.. அவனும் உங்களைப் போல் அன்னாடம் காய்ச்சிதானா...''

பார்வதியம்மாளின் கேள்வியில் வெகுண்ட லீலாவதியின் கையை ரகசியமாய் பிடித்து அழுத்தினாள் சாந்தி.

''இல்லைம்மா.. நம்ம ஸ்வேதாவை அன்றைக்கு காரில் கொண்டு வந்து விட்டாரே... ஸ்வேதாவின் எம்டி... அவர்தான் மாப்பிள்ளை...'' லீலாவதி தன்னை கட்டுப்படுத்திக் கொண்டு பதில் சொன்னாள்.

''என்னது...''

பார்வதியம்மாள் எங்கே நெஞ்சைப் பிடித்துக் கொண்டு மயங்கிச் சரிந்து விடுவாளோ என்று பயந்தே போனார்கள்.. லீலாவதியும்.. சாந்தியும்..

''அந்தத் தம்பி கோடிஸ்வர குடும்பமாச்சே...''



''ஆமாம்மா... கோடிஸ்வர குடும்பம்தான்...''

''அவரா பெண் கேட்டு வருகிறார்...?''

''ஆமாம்மா அவர் வீட்டிலிருந்து தான் பெண் கேட்டு வருகிறார்கள்...''

''இது என்ன கூத்தா இருக்கு.. கோடீஸ்வரன் குடும்பத்திற்கு.. வேறு இடத்தில் பெண் கிடைக்கவில்லையா...?''

''அது என்னவோ தெரியவில்லைம்மா.. எங்க ஸ்வேதாவைத்தான் கல்யாணம் பண்ணிக் கொள்வேன்னு அவர் சொன்னாராம்.. அவரோட அப்பா.. அம்மாவுக்கும் ஸ்வேதாவை பிடித்துப் போய் விட்டதாம்...''

''அதுதான் ராத்திரிப் பொழுதுன்னு கூடப் பார்க்காமல் உன் மகள் ஆஸ்பத்திரியில் அவரோட அப்பாவிற்கு சேவகம் பண்ணியிருக்கிறாளே.. அப்புறம் ஏன் பிடித்துப் போகாது.. பார்க்க அப்பாவியாய் இருந்தாலும் கெட்டிக்காரிதான் இந்த ஸ்வேதா... ஆமாம் ஏன் ரெண்டு பேரும் வெளியவே நிற்கறீங்க உள்ளே வாங்க...'' பார்வதியம்மாள் கதவை விரிய திறந்து வைக்கவும் சாந்தி அசந்து போனாள்.

''என்னக்கா இது.. இந்தம்மாள் வாசல் படி வந்து மற்றவங்க நின்னால் கூட சகிச்சுக்காது.. இப்ப என்னான்னா வீட்டுக்குள் கூப்பிடுது... பேசாமல் உள்ளே போய் உட்கார்ந்து விட்டுப் போகலாம்.. இல்லேன்னா அதுவும் குத்தம்ன்னு சொல்லி விடப் போகுது..'' சாந்தி லீலாவதியின் காதில் ஓதினாள்.

இரண்டு பேரும் உள்ளே போனவுடன் அவர்களை சோபாவில் உட்கார வைத்துவிட்டு பார்வதியம்மாள்

உள்ளே போய் விட... சாந்தி வீட்டைச் சுற்றிக் கண்களை ஓட்டினாள்.

''என்ன சாந்தி பார்க்கிற...?''

''ம்ம்.. நானும் இந்த காம்பவுண்டிற்கு குடி வந்து வருசம் பத்தாகிறது.. இதுவரை இந்த வசந்த மாளிகையின் உள்ளே வந்து பார்த்ததேயில்லை... இன்றைக்கு உங்கள் புண்ணியத்தால் இந்த சொர்க்க வாசல் கதவு எனக்கும் திறந்திருக்குது...''

''வசந்த மாளிகையா... இதுவா..?''

''இந்தக் கேள்வியை அந்தம்மா காதுகளில் விழுகிறது போலக் கேட்டுவிடாதீங்க.. அப்புறம் அந்தம்மா பத்திரகாளி வேசம் போட்டு விடும்...''

''புதிதாகத்தான் வேசம் போட வேண்டுமா?''

''ஆளே பத்ரகாளிதான் என்கிறீங்களா... அதுவும் சரிதான்...''

அதற்குள் பார்வதியம்மாள் கையில் ஜூஸ் தம்ளர்களோடு வந்து விட்டாள்... இப்போது சாந்தி மயக்கம் போடப் போனாள்.

''அக்கா.. ஜூஸ்க்கா.. இந்தம்மா பச்சைத் தண்ணி கூட நமக்கெல்லாம் கொடுக்காது.. இப்போ ஜூஸை கொண்டு வருது... ம்ம்.. நெல்லுக்கு இறைக்கிற தண்ணி.. கொஞ்சம் புல்லுக்கும் பாயட்டுமேன்னு... எனக்கும் ஒரு கிளாஸ் சேர்த்து கொண்டு வருது...''

''என்ன சாந்தி... என்ன விசயம்? லீலாவின் காதை ஏன் கடிக்கிற..?''

''ஒன்னுமில்லைங்கம்மா.. ஸ்வேதா போட்டிருந்த ஆரம் எத்தனை பவுன்னென்று கேட்டுக் கொண்டிருந்தேன்...''



பார்வதியம்மாளின் விழிகள் விரிந்தன.

''ஆரமா...? உங்களிடம் அவ்வளவு பெரிய நகை கூட இருக்கா..?''

''அது என் அம்மா வீட்டில் எனக்குப் போட்டதும்மா... என் பிறந்த வீட்டில் எனக்கு முப்பது பவுன் நகை போட்டார்கள்... ஸ்வேதாவின் அப்பா ஒரு இருபது பவுன் நகை வாங்கிக் கொடுத்தார்.. ஸ்வேதாவிற்கு இருபது... தீபாவுக்கு இருபது... என்று போட்டு விடலாம் என்று இருக்கிறேன்.. வேறு ஒன்றும் பெரிதாக எங்களிடம் நகை கிடையாதும்மா...''

''என்னது... உங்களிடம் இவ்வளவு வசதி இருக்கிறதா..?''

''ஸ்வேதாவின் அப்பா என்ஜினியர்ம்மா.. நன்றாக சம்பாதித்தார்.. பிள்ளைகளை நன்றாக வளர்த்தார்.. என்ன.. எங்களிடம் சேமிக்கும் பழக்கம் கிடையாது.. அது எல்லாவற்றுக்கும் சேர்த்து இப்போது ஸ்வேதா சேமிப்பதில் குறியாக இருக்கிறாள்... அவர் இருக்கும் போதே சிக்கனமாய் செலவளித்து சேமித்து ஒரு சொந்த வீடை வாங்கியிருக்கலாம்.. ஆடம்பரமாய் வாழ்ந்தோம்.. அதிக அளவில் வாடகை கொடுத்து பெரிய வீட்டில் குடியிருந்தோம்.. அவர் போன உடன்.. தேவைக்கு அதிகமான சாமான்களை ஸ்வேதா விற்று.. சேமிப்பில் போட்டு விட்டாள்.. ரகு சின்னவன்.. பெண்களாய் இருக்கும் வீட்டிற்கு பாதுகாப்பு வேண்டும் என்றுதான்.. காம்பவுண்டு வீட்டிற்கு குடி வந்தாள்... உங்கள் வீட்டில் அவள் நினைத்தது போலவே நாங்கள் பாதுகாப்பாய் இருந்தோம்... இப்போது உங்கள் வீட்டின் ராசியால் ஸ்வேதா.. பெரிய இடத்தில் வாழ்க்கைப் படப் போகிறாள்.''



லீலாவதி மனமார இதைச் சொன்னாள்.. பார்வதியம்மாளின் முகம் மலர்ந்து விட்டது.

''என்னவோ.. வீட்டிற்கு குடிவந்தோம்.. வாடகையை கொடுத்தோம் என்று இல்லாமல் மனமார என் வீட்டை உயர்த்தியாய் பேசுகிறாயே.. உன் நல்ல மனதிற்கும்.. உன் பெண்ணின் தங்கமான குணத்திற்கும் தான் இப்படி ஒரு வாழ்க்கை அவளுக்கு கிடைத்திருக்கிறது.. நீ கவலையே படாதே... உன் பெண்ணின் கல்யாணம் என் வீட்டுக் கல்யாணம் போல.. நான் முன்னே நின்று நடத்திக் கொடுக்கிறேன்...''

லீலாவதியும்.. சாந்தியும்.. மற்ற மூன்று வீடுகளுக்கும் போய் அழைத்து விட்டு வந்தார்கள்... வாக்குக் கொடுத்தது போல்.. பார்வதியம்மாள் எல்லோருக்கும் முதலில் கையில் ஒரு புது ஜமுக்காளத்தை பிடித்துக் கொண்டு வந்து விட்டாள்.

''ஹாலில் விரித்து விடு லீலா.. நம் காம்பவுண்டில் இருப்பவர்கள் உட்கார வேண்டும்.. பெண்ணைக் கொண்டு வந்து சபையில் உட்கார வைக்க வேண்டும்.. மாப்பிள்ளை வீட்டுக்காரங்க.. கொண்டு வரும் தட்டுக்களை வைக்க வேண்டும்.. வெறுந்தரையிலா.. இதையெல்லாம் செய்வது?''

அடுத்த சில நிமிடங்களில் அந்த அறை நிறைந்து விட்டது.. எல்லோரும் ஒருவருக்கொருவர் சிரித்துப் பேசிக் கொண்டிருக்க.. வீட்டில் கலகலப்பு நிறைந்து இருந்தது... சரியாக மணி ஆறடிக்கும் போது.. வீட்டு வாசலில் கார் வந்து நின்றது. டிரைவர் இறங்கி கார் கதவைத் திறந்து விட... ரிஷியும்.. பாண்டுரங்கனும்



முதலில் இறங்கினார்கள். அவர்கள் பின்னாலேயே.. அகல ஜரிகை பார்டர் கொண்ட பட்டுப்புடவை உடுத்தி கழுத்து, காது.. கைகளில் வைரங்கள் ஒளிவிட மோகனா இறங்கினாள்.

உள்ளே வந்தவர்கள் அங்கிருந்த நாற்காலிகளில் அமர.. அங்கே குழுமியிருந்த அக்கம் பக்கத்து வீட்டுப் பெண்கள்.. மோகனா அணிந்திருந்த வைர நகைகளைப் பற்றித் தங்களுக்குள் கிசுகிசுத்துக் கொண்டிருந்தார்கள்.

பார்வதி அம்மாள் பெரிய மனித தோரணையுடன்.

''என்ன லீலாவதி பார்த்துக் கொண்டு நிற்கிறாய்.. டிபன் காபி கொண்டு வா...'' என்றாள்.

''இருக்கட்டும்... முதலில் ஸ்வேதாவை வரச் சொல்லுங்கள்.. நான் ஹாஸ்பிடலில் அவளைப் பார்த்த போது அவள் என் வீட்டிற்கு மருமகளாக வரப்போகிறாள் என்று தெரியாது. அதனால் சரியாகப் பார்க்கவில்லை. இப்போது நன்றாக பார்க்க வேண்டாமா?'' என்று சிரித்துக் கொண்டே கூறினாள் மோகனா.

அவளது சிரித்த முகம் கண்டு தீபாவின் மனம் குளிர்ந்தது. எங்கே அக்காவின் மாமியார்.. மகனுக்காக இந்தக் கல்யாணத்திற்கு சம்மதம் கொடுக்கிறாளோ என்று மனதிற்குள் பயந்து கொண்டிருந்தவள்... அந்த பயம் மாறி சந்தோசமாய் தமக்கையை அழைத்து வர உள்ளே சென்றாள்.. ஸ்வேதாவின் கையை தொட்டவள் திடுக்கிட்டாள்.. ஸ்வேதாவின் கை நடுங்கிக் கொண்டிருந்தது.



## 11

ஏன் அக்கா இப்படி நடுங்குகிறாள் என்று ஒரு கணம் யோசித்த தீபா... மறுகணம் மனதிற்குள் சிரித்துக் கொண்டாள். காதல் கல்யாணம்... காதலனின் பெற்றோரை காணப் போகும் படபடப்பில் அக்கா நடுங்குகிறாள் என்ற எண்ணத்துடன் தமக்கையின் கையை செல்லமாய் தட்டினாள்.

''சும்மா பயந்து நடுங்காதே.. உன்னவரைப் போலவே.. உன்னவரின் அம்மாவும் குணசாலி.. அதனால் தைரியமாய் வா...''

உள் அறையை விட்டு வெளியே வந்த ஸ்வேதாவைப் பார்த்த ரிஷியின் விழிகள் விரிந்தன.. அலுவலகத்திற்கு மிக எளிமையான ஒப்பனையோடு வருபவள்.. இன்று ஒரு பட்டு உடுத்தி... சில நகைகள் அதிகம் போட்டதும் ஜொலித்தாள். அவன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.. பாண்டுரங்கன் அங்கே வந்திருக்கிறார்.. அவருக்கு உண்மை தெரியும் என்ற நினைவில் ஸ்வேதா உடல் கூசினாள்.. அவரை நிமிர்ந்து பார்க்கவே அவளுக்கு தயக்கமாக இருந்தது. தலையை கவிழ்ந்த வண்ணம் புது ஜமுக்காளத்தில் பார்வதியம்மாளின் அருகே அமர்ந்தாள்.. பார்வதியம்மாளுக்கு அதில் மகா பெருமை...



மோகனா குனிந்து அமர்ந்திருந்த ஸ்வேதாவை ஊன்றிப் பார்த்தாள்.. அவள் மனதில் ஆஷாவை விட இவள் எந்த வகையில் உயர்ந்தவள் என்று ரிஷி இவளிடம் விழுந்தான் என்ற எண்ணம் இருந்தது.. இப்போது ஸ்வேதாவை நேரில் நன்றாக பார்த்த போது.. ஸ்வேதாவின் உயர்வு பளிச்சென்று தெரிந்தது.

ஆஷாவின் சருமம் வெள்ளையானது.. ஆனால் அது அழகு நிலையங்களில் பராமரிக்கப்படும் வெண்மை... ஸ்வேதாவின் சருமம் மஞ்சள் கலந்த சந்தன நிறம்.. ஆனால் இது இயற்கையின் பொழிவோடு இருந்தது. ஆஷா மேக் அப் அதிகம் போட்டுக் கொள்வாள்.. ஸ்வேதா.. பெண் பார்க்கும் படலத்தில் கூட லேசாக பவுடர் அடித்து.. மிக லேசாக மைதீட்டி.. நெற்றியில் பொட்டுடன் இயல்பாக இருந்தாள்.. ஆஷாவிற்கு மாடர்ன் டிரெஸ்தான் பிடிக்கும்... ஸ்வேதா பாரம்பரியத்தை உணர்த்தும் பட்டுச் சேலையுடன் இருந்தாள். ஆஷாவிடம் ஒரு அலட்டல் தெரியும்... ஸ்வேதாவிடம் ஒரு பாந்தம் தெரிந்தது. ஆஷாவிற்கு பெரியவர்கள் கூட பேசுவதற்கு பிடிக்காது.. ஸ்வேதாவோ வந்தவுடன்.. தீபாவின் அருகில் உட்காராமல் பார்வதி அம்மாளின் பக்கத்தில் பதவிசாக உட்கார்ந்தாள்.. இத்தனைக்கும் மேலாக.. ஆஷாவிடம் தெரியாத குளுமை ஸ்வேதாவிடம் தெரிந்தது.

மகனின் தேர்வு மிகச் சரியானது என்ற திருப்தியுடன் மோகனா பாண்டுரங்கனைப் பார்த்து தலை அசைத்துப் புன்னகைத்தாள். மனைவியின் சம்மதம் கிடைத்து விட்டது என்று புரிந்து கொண்டார் பாண்டுரங்கன்.

''மருமகள்கிட்ட ஏதும் கேட்க வேண்டுமென்று நினைத்தாயானால் கேள் மோகனா... ஸ்வேதாவைப்





பற்றி எனக்கு நன்றாகத் தெரியும்... அவள் நான் வளர்த்த பெண்... அதனால் எனக்கு அவளிடம் கேட்க வேண்டியது எதுவும் இல்லை... அவளிடம் எனக்கு தெரிந்தது எல்லாம் பிளஸ் பாயிண்ட் தான்.. மைனஸ் பாயிண்ட் எதுவுமே இல்லை...'' ஸ்வேதாவைப் பார்த்தபடி மனைவியிடம் கூறினார் பாண்டுரங்கன்.

அவரது வார்த்தைகளைக் கேட்டதும் ஸ்வேதாவிற்கு துக்கம் பொங்கிக் கொண்டு வந்தது... எப்பேர்ப்பட்ட மனிதர்.. இவருக்கு மருமகளாக போக அவள் தவம் செய்திருக்கிறாள்தான்... ஆனால் அவருடைய மகன்..? அவன் அயோக்கியனாயிற்றே...

''என்ன படித்திருக்கிறாயம்மா?'' மோகனா ஸ்வேதாவைப் பார்த்துக் கேட்டாள்.

அவளுக்கு பதில் சொல்ல தலை நிமிர்ந்த ஸ்வேதாவின் விழிகளில் அவளையே பார்த்துக் கொண்டிருந்த ரிஷியின் பார்வை பட்டது. அவனது ஆவலான பார்வையை தாங்க முடியாமல் தலை குனிந்து கொண்டாள் ஸ்வேதா.

'ஏன் இப்படி எல்லோர் முன்னாலும் வெட்கமின்றி பார்க்கிறான்... நினைத்ததை ஜெயித்து விட்ட ஆணவமா..?' உடம்பெல்லாம் எரிந்தது ஸ்வேதாவிற்கு.

''பி.எஸ்ஸி. கம்ப்யூட்டர் சயின்ஸ்...'' என்று மோகனாவிற்கு தலை குனிந்தபடியே பதில் சொன்னாள் ஸ்வேதா.

''அத்துடன் நிறைய கம்ப்யூட்டர் கோர்ஸுகளும் படித்திருக்கிறாளாக்கும்.. செகன்ட் இயர் படிக்கும் போதுதான் ரத்தினம் தவறிவிட்டார்.. நம் ஆபிஸில் பார்ட் டைம் வேலை பார்த்துக் கொண்டே... செகன்ட் இயர்.. தேர்ட்



இயர்.. கம்ப்யூட்டர் கோர்ஸ்.. இதையெல்லாம் படித்து முடித்தாள்... இவளது வேலைத் திறமையையும்... சின்ஸியாரிட்டியையும் பார்த்து விட்டுத்தான் எனக்கு செகரட்டரியாக வேலை போட்டுக் கொடுத்தேன் மோகனா..'' ஸ்வேதாவின் பெருமைகளை விவரித்துக் கொண்டிருந்தார் பாண்டுரங்கன்.

''ஏன் உங்கள் மருமகள் இதையெல்லாம் சொன்னால் அவளுக்கு வாய் வலிக்குமாக்கும்.. நீங்கள்தான் சொல்ல வேண்டுமாக்கும்.. மாமனார் மெச்சிய மருமகளை.. மாமியாரும் மெச்ச வேண்டாமா.. அவளையே சொல்லச் சொல்லுங்கள்..'' மோகனா சிரித்தாள்.

''போச்சுடா.. ஸ்வேதா.. உன் அத்தை கோபித்துக் கொண்டு விடப் போகிறாள்... நீயே அவள் கேட்பதற்கு எல்லாம் பதில் சொல்லிவிடம்மா...'' பாண்டுரங்கன் பதிலுக்கு நகைக்க ஸ்வேதா வேதனையுடன் அவரை நிமிர்ந்து பார்த்தாள்.

அவளது பார்வையைக் கண்ட பாண்டுரங்கனின் புருவங்கள் முடிச்சிட்டன. அவளது விழிகளில் தெரிந்த வெறுமையும் வேதனையும் அவரை சங்கடத்தில் ஆழ்த்தின. அது தெரியாத மோகனா தொடர்ந்து ஸ்வேதாவிடம் கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.. அவளும் தலை நிமிராமல் பதில் சொல்லிக் கொண்டிருந்தாள்.

''கல்யாண தேதி எப்போது குறிக்கப் போறீங்க..?'' பார்வதியம்மாள் பெரிய மனிதத் தோரணையுடன் வினவவும் லீலாவதி நன்றியுடன் அவளைப் பார்த்தாள்.

''இனி புதிதாய் அதற்கென்று நாள் பார்க்க வேண்டுமா.. என்ன.. இன்றே நல்ல நாள்தான்.. அடுத்த

பதினைந்தாவது நாள் நல்ல முகூர்த்தம் வருகிறது அப்போதே கல்யாணத்தை முடித்து விடலாம்...'' என்று மோகனா.. டிரைவரை அழைக்க.. அவன் காருக்குள்ளிருந்து சில பைகளைக் கொண்டு வந்தான்.

ஒரு பையிலிருந்து வெள்ளித் தட்டை எடுத்து வைத்த மோகனா. அந்தத் தட்டில் பட்டுச்சேலை.. வைர அட்டிகை... இரண்டையும் வைத்து பூ.. பழம்.. வெற்றிலை பாக்கு.. தேங்காயை பரத்தி.. அதை எடுத்து பாண்டுரங்கனின் கைகளில் கொடுத்தாள்.

பாண்டுரங்கன் பார்வதியம்மாளைப் பார்த்தபடி பொதுவாய் கூறினார்.

''ரிஷியுடைய தாய் மாமன் மகளை.. ரிஷிக்கு கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கு இருந்தது.. ரிஷி ஸ்வேதாவைத்தான் கல்யாணம் பண்ணிக் கொள்வேனென்று சொல்லிவிட்டான்.. அதில் அவர்களுக்கு கொஞ்சம் மனவருத்தம் இருக்கிறது.. அதனால் அவர்களை நேரடியாய் கல்யாணத்திற்கே கூப்பிட்டு விடலாமென்று நினைக்கிறேன்.. இப்போது நாமே தாம்பூலத்தட்டை மாற்றிக் கொண்டு கல்யாண தேதியை நிச்சயம் பண்ணி விடலாமே...''

லீலாவதி பார்வதியம்மாளைப் பார்க்க.. அவள் உடனே..

''அதுக்கென்ன... அப்படியே செய்துவிட்டால் போச்சு.. நல்ல காரியம் நடக்கும்போது சொந்த பந்தங்களில் நாலு மனஸ்தாபம் வந்து போகத்தான் செய்யும்.. அதையெல்லாம் பார்த்தால் முடியுமா..? அவங்க மனசும் கஷ்டப்படத்தான் செய்யும்.. மாப்பிள்ளையை விட்டுக் கொடுக்கிறாங்க இல்லையா..? இப்ப நீங்க நிச்சயம்



பண்ணிவிட்டு.. அவங்களை சமாதானப்படுத்துங்க... என்ன லீலா நான் சொல்வது சரிதானே...,'' என்று பாண்டுரங்கனிடம் கூறியவாறே லீலாவிடம் கேட்டாள்.

''எனக்கென்னம்மா... அவர் ஸ்வேதாவை பெற்ற மகள் போல் நினைப்பவர்.. அவர்களுக்கு எது சரியென்று படுகிறதோ.. அதையே செய்யட்டும்.. நான் என்ன மறுத்தா சொல்லப் போகிறேன்...,'' என்று பவ்யமாய் பதில் சொன்னாள் லீலாவதி.

''அப்புறம் என்னங்கய்யா.. கல்யாணத்தின் போது பெண்ணுக்கு தாரை வார்த்துக் கொடுக்க ஸ்வேதாவின் சித்தப்பாவும்.. சித்தியும் வருவார்கள். இப்போது தட்டை ஸ்வேதாவின் தம்பி ரகுவிடம் கொடுத்து கல்யாணத்தை உறுதி செய்து விடுங்கள்..,'' என்று பார்வதியம்மாள் கூறினாள்.

'எல்லாவற்றையும் எப்படி இவ்வளவு சரியாக யோசித்துச் சொல்கிறாள்... பெரிய மனுஷி.. பெரிய மனுஷிதான்...'

லீலாவதியின் மனதிற்குள் பார்வதியம்மாளின் மேல் நன்றி சுரந்தது... பாண்டுரங்கன் ரகுவைப் பார்த்து புன்னகைத்தார்.. மோகனா பரிவுடன் அவனை கண்ணசைவில் பக்கத்தில் அழைத்தாள். ரகு அருகில் வந்தான்.

பாண்டுரங்கன் எழுந்து நின்று.. ரகுவின் கையில் சேலை, நகை, தாம்பூலம் இருந்த வெள்ளித்தட்டைக் கொடுத்தார்.. ரிஷி உடனே ரகுவைப் பார்த்து...

''என்ன மைத்துனனே.. இப்போதாவது உன் அக்காவை எனக்குப் பெண் தருவாயா?''என்று கேட்டான்.



ரகு வெட்கத்துடன் உள்ளே ஓடிவிட்டான்.

ஸ்வேதாவை தீபா தோளில் தட்டி உள்ளே அழைத்துக் கொண்டு போனாள்.. சற்று நேரத்தில் ரிஷியின் வீட்டில் வாங்கிக் கொடுத்த புதுப் பட்டுப் புடவையை உடுத்தி.. வைர அட்டிகையை கழுத்தில் அணிந்து கொண்டு முன்னறைக்கு வந்து.. வணங்கி எழுந்தாள் ஸ்வேதா.

எல்லோருக்கும் பந்தி போட்டு பலகாரம் பரிமாறினார்கள் சாந்தியும், கண்மணியும்... பார்வதியம்மாள் வழக்கம் போல் மேற்பார்வை பார்த்தாள்.... அனைவரும் சாப்பிட்டு கிளம்பும் போது.. பாண்டுரங்கன் ஸ்வேதாவிடம் ''ஒரு நிமிசம் இங்கே வாம்மா..'' என்று கூறி வெளியே அழைத்துக் கொண்டு போனார்.

உள்ளேயிருப்பவர்களின் காதுகளுக்கு இவர்கள் பேசுவது கேட்காது என்பதை உறுதிபடுத்திக் கொண்டு தாழ்ந்த குரலில் ஸ்வேதாவிடம் வினவினார்.

''ஏன் முகம் சோர்ந்து இருக்கிறாய் ஸ்வேதா...?''

அவரது பரிவான விசாரிப்பில் அவள் கண்கலங்கி விட்டாள்.

''எனக்கு இந்தக் கல்யாணத்தில் விருப்பமில்லை சார்...''

''ச்சு... இப்படியெல்லாம் இனிமேல் பேசக்கூடாது.. ஏன் இந்தக் கல்யாணத்தில் விருப்பமில்லை? உனக்குப் பிடிக்கவில்லையென்றால் உடனே இந்தக் கல்யாணத்தை நிறுத்துகிறேன்.. பட்.. ஒன் கண்டிசன்.. நீ வேறு யாரை யாவது உடனடியாக கல்யாணம் பண்ணிக் கொள்ள



வேண்டும்.. செய்வாயா? அதற்கு சம்மதமென்றால் சொல்லு... நானே உனக்கு மாப்பிள்ளை பார்க்கிறேன்.. என்ன.. வேறு மாப்பிள்ளை பார்க்கவா?''

''சார்...'' பதறித் தலை நிமிர்ந்தாள் ஸ்வேதா.

''இன்னொருவனை நான் கல்யாணம் பண்ணிக் கொள்வதா..?''

''முடியாது இல்லையா..? உன்னால் அது முடியாது இல்லையா..? அப்புறம் ஏன் இந்த வீண் பிடிவாதம்..? ரிஷியின் மேல் தவறு இருக்கிறது.. நான் இல்லையென்று சொல்லவில்லை.. ஆனால் ஒன்றை நீ யோசிக்க வேண்டும்.. செய்த குற்றத்தை அவன் மறுக்கவில்லை... அதிலிருந்து தப்பித்துக் கொள்ள முயலவில்லை. அவனே முன்வந்து குற்றத்தை ஒப்புக் கொள்கிறான். அதைச் சரி செய்யவும் முயல்கிறான்.. மன்னிக்க முடியாத தவறு என்று எதுவும் இல்லை ஸ்வேதா.. அவனை நீ மன்னித்து விடு...''

ஸ்வேதா பேச்சிழந்தாள்.. இதற்கு என்ன பதில் சொல்வது? என்னால் அவனை ஏற்றுக் கொள்ள இயல்வில்லை என்று இந்தப் பெரிய மனிதரின் மனம் நோக எப்படிச் சொல்வது..?

அவளது தவிப்பைக் கண்டு கொள்ளாமல் காலம் நகர்ந்தது.. மற்றவர்கள் பரபரப்பாக இயங்கினார்கள்.. அன்றிலிருந்து பதினைந்தாவது நாளில் ரிஷி ஸ்வேதாவின் கழுத்தில் ஊர் அறிய தாலிகட்டி விட்டான். ஸ்வேதா விரும்பாத திருமணம் அவளுக்கு நடந்தே விட்டது. அவளது மனம் துடித்துக் கொண்டிருப்பதை அறியாமல் அவளது தாயும்.. தங்கையும்.. தம்பியும் மகிழ்ந்து போனார்கள்.

அறையெங்கும் இதமான நறுமணம் கமழ்ந்து கொண்டிருந்தது... கட்டிலில் மலர்கள் தூவப்பட்டிருந்தன.. ஏஸியின் குளிர் உடலை வருடியது.. ஸ்வேதா வெறுமையுடன் அறையின் சுவரில் சாய்ந்து நின்று கொண்டிருந்தாள்.. அறையின் கதவு மூடும் ஓசை கேட்டது.. திரும்பிப் பார்த்தாள்.. ரிஷி அறைக் கதவைத் தாழிட்டுக் கொண்டிருந்தான். வெறுப்புடன் அவனைப் பார்த்துவிட்டு முகத்தை திருப்பிக் கொண்டாள் ஸ்வேதா.

'அன்று... அங்கீகாரமில்லாமல் செய்த தவறை இன்று அங்கீகாரத்தோடு.. உரிமையோடு செய்யப் போகிறான்.. இதைத் தவிர்க்க முடியாமல் நான் இவனிடம் மாட்டிக் கொண்டு நிற்கிறேனே...'

அவள் மனதில் ஓடும் எண்ணங்களை முகத்தில் படிக்க முயல்பவன் போல.. அவள் முகத்தை ஆராய்ந்தபடி அவளை உச்சந்தலையிலிருந்து... உள்ளங்கால் வரை பார்த்தான் ரிஷி.

தளர்வாய் பின்னிய பின்னலை முன்னால் போட்டுக் கொண்டு தலையில் மல்லிகைச் சரம் தோளின் இரு பக்கமும் வழிய அவள் நின்று கொண்டிருந்தது ஒரு ஓவியம் ஒன்று உயிர் பெற்று எதிரே நிற்பது போல் தோன்ற...

'இவள்தான் எவ்வளவு அழகாக இருக்கிறாள்...' என்று மனதிற்குள் வியந்து கொண்டான் அவன்.

'ஏன் இப்படிப் பார்க்கிறான்?' அவள் முகம் சுளித்தாள்... ரிஷியின் கூரிய கண்கள் அதைக் கண்டு கொண்டன.. அவன் நெற்றியில் முடிச்சு விழுந்தது.. தீவிரமான பார்வையுடன் அவளை நெருங்கினான் ரிஷி.

''கிட்டே வராதீர்கள்..?''



''ஏன்..?''

''எனக்கு உங்களைப் பிடிக்கவில்லை...''

''எனக்கு உன்னைப் பிடிக்கிறதே...''

''நீங்கள் ஒரு அயோக்கியன்...''

''நான் யோக்கியன் என்று உன்னிடம் சொன்னேனா?''

''எனக்கு உங்களைப் பார்த்தாலே வெறுப்பாக வருகிறது...''

''ஊஹூம்...? எனக்கு உன்னைப் பார்க்க பார்க்க.. ஆசைதான் அதிகமாகிறது...''

ரிஷி அவளது தோளைத் தொட்டான்... அவள் தட்டி விட முயன்றாள். அவனது பிடி இரும்புப் பிடியாக இருந்தது. அவளது முகம் நோக்கிக் குனிந்தான். அவள் வெறுப்போடு முகம் சுளித்து.. முகம் திருப்பிக் கொண்டாள். ரிஷி கடுமையாய் அவளது முகம் திருப்பி.. அவள் விழிகளுக்குள் பார்த்தான்.

''என்னடி நினைத்துக் கொண்டிருக்கிறாய்? நான் என்ன அவ்வளவு அகோரமானவனா? என் முகத்தைப் பார்க்கக்கூட உனக்குப் பிடிக்கவில்லையா? இந்தத் திமிர்தாண்டி உன்னை ஆட்டிப் படைக்கிறது. நானும் எவ்வளவுதான் கீழே இறங்கிப் போவது? ரொம்பத்தான் துள்ளுகிறாயே.. அன்றைக்கு உன்னை நான் தொட்டது தப்புத்தான்.. இன்றைக்கு உன்னை நான் தொடாமல் இருந்தால்தான் அது தப்பு... தெரியுமா?''

ரிஷி அவளது இதழ்களில் முரட்டுத் தனமாய் இதழ் பதித்தான். விலக முயன்றவளை விலக விடாமல் இறுக்கி அணைத்தான். அவளது முரண்டை சட்டை செய்யாமல் சிரித்துக் கொண்டே அவளைத் தன்



கைகளில் தூக்கிக் கொண்டான். ஸ்வேதா திமிறுவதை லட்சியம் செய்யாமல் கட்டிலை அடைந்தான். அவள் மேல் படர்ந்தான்.

அன்று நடந்ததை இன்றும் அவன் தொடர்வதை நிறுத்த முடியாமல் அவனது ஆளுகைக்குள் அடங்கினாள் ஸ்வேதா. ரிஷியின் மனதில் மோகத்தீ பற்றிக் கொண்டது. ஸ்வேதாவின் அருகாமை அவனுக்கு எல்லையற்ற அமைதியையும்.. இன்பத்தையும் அளித்தது. அவளைத் தழுவித் தன் மனதில் இருந்த தாபத்தை தணித்துக் கொண்டிருந்தான் அவன்.

விடிந்த பின்னும் அவளை விடுவிக்காமல் அவன் தூங்கிவிட.. ஸ்வேதா விலகி எழ முயன்றாள். அவனது கரம் அவளை முரட்டுத் தனமாய் இழுத்து அணைத்தது. விட மறுத்தவனிடமிருந்து எப்படி விலகுவது?

அப்போது அறையின் அழைப்பு மணி ஒலித்தது... அவள் இப்போதாவது அவன் விடுவானா என்ற எதிர்பார்ப்புடன் அவன் முகம் பார்த்தாள். அவன் அழைப்பு மணியின் ஒலியை சட்டையே செய்யாமல்.. அவள் தோள் வளைவில் முகம் பதித்தான். வேறு வழியின்றி அவள் பேசினாள்.

''விடுங்கள். விடிந்து நேரமாகி விட்டது. காலிங் பெல் வேறு அடிக்கிறது...''

அவள் அவனுடன் இயல்பாகப் பேசிவிட்ட சந்தோசத்தில் அவன் அவளது முகம் பார்த்தான். அவளது முகத்தில் விரல்களால் கோலமிட்டபடி.

''விடிந்தால் என்ன..?'' என்று கேட்டான்.

''ச்சு... எல்லோரும் என்ன நினைத்துக் கொள்வார்கள்?'' அவள் சங்கடத்துடன் வினவினாள்.



''என்னவோ நினைத்துக் கொள்ளட்டும். நான் உன்னை விட மாட்டேன்'' ரிஷி அவளது முகத்தில் விழுந்த முடியை கோதி சரி செய்தவாறு கூறினான்.

''ப்ளீஸ்...'' அவள் கெஞ்சினாள்.

''ஓகே... உனக்காக... விடுகிறேன்..'' அவன் அவளது கன்னத்தில் முத்தமிட்டு விடுவித்தான்.

ஸ்வேதா அவசரமாய் எழுந்து சென்று கதவைத் திறந்தாள். வேலை செய்யும் பெண்.. காபி கோப்பைகள் கொண்ட டிரேயுடன் நின்று கொண்டிருந்தாள். வாங்கிக் கொண்ட ஸ்வேதா கதவை மூடிவிட்டு உள்ளே வந்தாள். காபி டிரேயை டீப்பாயில் வைத்துவிட்டு கட்டிலில் அமர்ந்தாள். ரிஷி புரண்டு அவள் மடியில் படுத்தான்.

'இது என்ன.. இவன் இப்படி வம்பு பண்ணுகிறான்...' ஸ்வேதா செய்வது அறியாமல் திகைக்கையில் ரிஷி அவளது இடுப்பைச் சுற்றித் தன் கரத்தால் வளைத்துக் கொண்டு அவளது மடியில் படுத்தவாறு தூங்க ஆரம்பித்து விட்டான்.

பிடிவாதக்காரக் குழந்தை.. தன் தாயை விட மறுத்து ஒட்டிக் கொள்வதைப் போல் இருந்தது ஸ்வேதாவிற்கு...



## 12

கலைந்த முடியுடன்.. பிடிவாதத் தோற்றத்துடன் தன் மடியில் தூங்குபவனைப் பார்த்தாள் ஸ்வேதா. இவன்

இப்படிப் பண்ணினால் எப்படி அவள் அறையை விட்டு வெளியேறுவது என்று சலிப்பாக இருந்தது அவளுக்கு. மெல்ல அவனது தோளை அசைத்து எழுப்பினாள்.

''ஊம்.. என்ன ஸ்வேதா...''

''எழுந்திருங்க...''

''மாட்டேன்...''

''ப்ளீஸ்...''

அவன் கண் மலர்த்தி அவளைப் பார்த்தான். மெது வாய் அவளது கன்னம் தொட்டுச் சிரித்தான்.

''நன்றாய் கண்டு கொண்டாய்டி. 'ப்ளீஸ்' போட்டால் நான் இளகி விடுவேன் என்ற திட்டம் உனக்கு... ஓகே.. உனக்காக எழுந்துக் கொள்கிறேன்...''

எழுந்து அமர்ந்தான். காபிக்காக கை நீட்டினான். வேறு வழியின்றி எடுத்துக் கொடுத்தாள் ஸ்வேதா...

''நீ...?''

தானும் ஒரு கோப்பையை எடுத்துப் பருக ஆரம்பித் தாள். காபியை குடித்து முடித்தவுடன் ஜாக்கிரதையாக அவனிடமிருந்து விலகி பாத்ரூமிற்குள் புகுந்து கொண் டாள். அவளது செய்கையை ரசித்துச் சிரித்தான் அவன். குளித்து முடித்து விட்டுக் கூந்தலை விரிய விட்டவாறு.. தன் பெட்டியை அவள் குடைந்து கொண்டிருந்தபோது ஈரத்தலையுடன்.. உடலில் நீர் சொட்ட பாத்ரூமிலிருந்து வெளியே வந்த ரிஷி அவளைப் பின்னாலிருந்து கட்டிக் கொண்டு அவளது கூந்தலில் முகம் புதைத்து வாசம் பிடித்தான்.

''என்ன இது...'' அவள் விலக முயன்றாள்.



''துவட்டி விடு...'' அவன் டவலைக் கொடுத்தான்.

''ச்சு... நீங்கள் என்ன சிறு பிள்ளையா?'' அவள் சலித்துக் கொண்டாள்.

''நீ துவட்டி விடாவிட்டால் நான் இப்படியே என் அம்மாவின் முன்னால் போய் நிற்பேன். அவங்க.. உன்னைத்தான் கேட்பாங்க... பரவாயில்லையா?''

வேறு வழியின்றி அவள் அவனுக்கு துவட்டி விட் டாள்... உடை மாற்றியவாறு அவள் கூந்தலை வாரிப் பின்னலிடுவதை பார்த்துக் கொண்டிருந்த ரிஷி.. ''இவ்வளவு நீளமான முடியை உன்னிடம் தான் நான் பார்க்கிறேன்...'' என்றான்.

''அப்படியெல்லாமில்லை... என்னைவிட முடி அதிகமாய் இருக்கும் பெண்கள் நிறைய இருக்கிறார் கள்...'' அவள் சாதாரணமாகக் கூறினாள்.

''அப்படியா.. நான் பார்த்ததே இல்லையே... ஒரு நாள் காட்டுகிறாயா?''

ஸ்வேதா பின்னலை பின்னால் விசிறியவாறு அவனைத் திரும்பிப் பார்த்தாள். அவன் கண்களில் குறும்பு கூத்தாடியது.

'இப்போது நான் என்ன சொல்வேன் என்று இவன் எதிர்பார்க்கிறான். ம்ம்.. போங்க.. என்று சிணுங்குவேன் என்றா... இல்லை... எப்படி என்னிடமே வேறு பெண் களைப் பற்றிப் பேசுவீர்கள் என்று சண்டை போடுவே னென்றா... இவனது தொடுகையை வேறு வழியின்றி சகித்துக் கொண்டால்.. இவனோடு நான் மனம் இசைந்து வாழ்கிறேன் என்று அர்த்தப் படுத்திக் கொண்டானா.'



''ம்ம்.. நான் பார்க்கும்போது நிச்சயம் உங்களுக்குக் காட்டுகிறேன். டிரை பண்ணிப் பாருங்கள். ஆனால்.. பாவம் செய்து விட்டுப் பரிகாரம் செய்கிறேனென்று இரண்டாவது கல்யாணம்.. மூன்றாவது கல்யாணம் என்று நித்திய கல்யாணம் பண்ண ஆரம்பித்து விடா தீர்கள். தசரதன்தான் ஆயிரக் கணக்கில் பெண்டாட்டி களை கட்டிக் கொள்ளலாம். நீங்கள் அப்படிச் செய்தால் பலதார தடை சட்டத்தில் தூக்கி உள்ளே போட்டு விடுவார்கள்.''

ஸ்வேதா படுக்கையறையை விட்டு வெளியேறி விட்டாள். யாரோ சாட்டையைக் கொண்டு அடித்தது போல இருந்தது ரிஷிக்கு. இனிய கனவு கலைந்த கோபம் அவனுக்குள் எழுந்தது. அவன் முகம் மாறியது.

'இவளது திமிர் அடங்கவே அடங்காது...'

மாடியை விட்டுக் கீழே வந்தான். டைனிங் ஹாலில் அவனுக்காக பாண்டுரங்கனும் மோகனாவும் காத்திருந் தனர். ரிஷி வரவும் ஸ்வேதா அவர்கள் மூவரின் முன் னாலும் தட்டுக்களை வைத்தாள்.

''நீயும் உட்காரும்மா. பார்கவி பரிமாறுவாள்..'' என் றாள் மோகனா.

''வேண்டாம் அத்தை.. பார்கவியின் வேலை வீட்டை சுத்தம் செய்வதுதான். இதையெல்லாம் பார்த்துக் கொள் ளத்தான் நான் வந்து விட்டேனே..'' ஸ்வேதா பரிமாறிய படி பதில் சொன்னாள்.

'இதிலொன்றும் குறைச்சல் இல்லை...' என்று நினைத் துக் கொண்டான் ரிஷி.

''சீக்கிரம் சாப்பிடு ரிஷி. ரகு வந்து விடுவான்..'' என்றார் பாண்டுரங்கன்.



''ரகு வருகிறானா... எதற்குப்பா?''

''மறு வீட்டிற்கு அழைக்க.. வருகிறான்...''

''மறுவீடா...?''

''சரியாப் போச்சு போ.. உனக்கு அது தெரியாது இல்லையா.. மறு வீடு என்பது சம்பிரதாயம்.. மாமனார் வீட்டு விருந்துக்குத்தான் மறு வீடு என்று பெயர். பொது வாக ஒரு வாரம்.. பத்து நாள் பெண் வீட்டில் மாப்பிள் ளைக்கு விருந்து கொடுப்பதற்குப் பெயர் மறு வீட்டு விருந்து.. நீ அட்லீஸ்ட். இன்று ஒரு நாள் மட்டும் அங்கே தங்கி விட்டு வந்துவிடு.''

ரிஷி தலையை ஆட்டிவிட்டு ஏதோ யோசனையுடன் சாப்பிட்டான்.

''என்னப்பா யோசிக்கிறாய்?''

''இல்லைப்பா... ஸ்வேதாவின் குடும்பத்தில் ஸ்வேதா தான் ஏர்னிங் மெம்பர். இப்போது அவள் நம் வீட்டிற்கு என் மனைவியாகி வந்து விட்டாள். இனி அவர்களின் வாழ்க்கைக்கு ஏதாவது செய்ய வேண்டுமே அப்பா...''

''மாமா...'' என்று குறுக்கிட்டாள் ஸ்வேதா.

''என்னம்மா...?''

''நான் இன்னும் என் வேலையை ரிஸைன் பண்ண வில்லை. என் குடும்பத்தை காப்பாற்றும் பொறுப்பு எனக்குத்தான் இருக்கிறது. அதனால் நான் ரகு வளர்ந்து வேலைக்குப் போகும் வரை.. என் வேலையைத் தொடர்ந்து பார்க்கிறேன்.. மாதா மாதம் என் சம்பளத்தை என் வீட்டிற்குக் கொடுத்து விடுகிறேன்.. சரிதானே மாமா..?''

ரிஷி சாப்பிடுவதை நிறுத்தி விட்டு அவளை முறைத்தான். பாண்டுரங்கன் கணவன் மனைவிக்கான பேச்சில் தான் தலையிடக் கூடாது என்று மௌனமாகி விட்டார். மோகனாவும் கணவனின் கருத்தைக் கொண்டிருந்ததால் அமைதியாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

''ஏய்.. உன் மாமனாரிடம் பெர்மிசன் கேட்டால் அவர் கொடுத்து விடுவாரா? உனக்கு நான்தான் பெர்மிஷன் கொடுக்க வேண்டும்.. அது என்ன.. என் வீடு.. என் குடும்பம் என்று பேசுகிறாய்? இதுதான் உன் வீடு. நாங்கள்தான் உன் குடும்பம். அதை நினைவில் வைத்துக் கொள். வேலைக்குப் போகிறாளாம். இவள் சம்பளத்தை பிறந்த வீட்டிற்குக் கொடுப்பாளாம். எங்கேயடி வேலைக்குப் போவாய்.. உன் கம்பெனியில் வேலைக்குப் போகிறாயா? நீதானே கம்பெனி முதலாளியின் பெண்டாட்டி. உன் புருசனிடம் சம்பளம் வாங்குவாயா? ஆளைப் பார்... வாயிருக்கிறது என்பதற்காக பிதற்றாதே...''

ஸ்வேதாவிற்கு கண் கலங்கி விட்டது.

'இவன் என்ன சொல்கிறான்..? இவள் வேலைக்குப் போகா விட்டால் வீட்டின் நிலைமை என்ன ஆவது? லீலாவதி வீட்டுப் படியை தாண்டி அறியாதவள். தீபாவும் ரகுவும் படிக்கிற பிள்ளைகள்.. இப்படி இவள் சிறகை வெட்டிக் கூண்டுக்குள் அடைத்து விட்டானே...'

மருமகளின் முகத்தைப் பார்த்த பாண்டுரங்கனின் முகத்தில் பரிதாபம் வந்தது.

''சரி.. சரி.. அவள் ஏதோ பிறந்த வீட்டின் மேலிருக்கும் அக்கறையில் பேசி விட்டாள். நீதானே அந்த வீட்டிற்கு



மூத்த மருமகன். இனி அந்த வீட்டிற்கு என்ன செய்வது என்று நீயே முடிவு பண்ணு.''

''இப்போது சொன்னீர்கள் பாருங்கள். இது பேச்சு.. நானும் அதைத்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். அதற்குள் இவள் என்னை டென்சனாக்குகிறாள்.''

மோகனா மருமகளைப் பார்த்து பரிவாக புன்னகைத்து விட்டு மகனிடம் பேசினாள்.

''ரிஷி.. இதற்கெல்லாம் போய் ஏன் டென்சன் ஆகிறாய்? அவள் பொறுப்பாக இருந்த பெண். அதனால் பேசி விட்டாள். நேற்றுத்தானே கல்யாணம் ஆகி இருக்கிறது. அதற்குள் அவளுக்கு அது பிறந்த வீடு. இதுதான் நம் வீடு என்ற உணர்வு வந்து விடுமா? அதற்கெல்லாம் கொஞ்ச நாள் ஆகும்டா. அதுவரை இப்படி வெடுக்.. வெடுக்கென்று அவளைப் பேசாதே. நீயும் ஸ்வேதாவும் மறு வீட்டு விருந்திற்கு போய் விட்டு.. நாளைக்கே வந்து விடுங்கள். நீங்கள் வந்த உடன் நாம் ஊட்டிக்குக் கிளம்ப வேண்டும். அங்கே நாம் எஸ்டேட்டில் உன் திருமண வரவேற்பை நடத்த வேண்டும். நம் எஸ்டேட்டில் வேலை செய்பவர்களுக்கு.. நீயும் ஸ்வேதாவும் புதுத் துணிகளை கொடுக்க வேண்டும். அதனால் சீக்கிரமே வந்து விடுங்கள். புரிந்ததா.''

'அதுதானே... வசதி குறைவான மாமனார் வீட்டில் மகன் ஒரு நாளைக்கு மேல் ஓய்வு எடுக்க எப்படி விடுவது? கெட்டிக்கார அம்மா... பிடிவாதக்கார மகன்... எவ்வளவு இலகுவாய் திட்டம் போடுகிறாள்கள். சொடக்குப் போடும் நேரத்தில் என் வீட்டிலிருந்து என்னைப் பிரித்து விட்டார்களே...'





ஸ்வேதா மனதிற்குள் பொருமியபடி வாசலைப் பார்த்தாள். ரகு உள்ளே வந்து கொண்டிருந்தான். நொடியில் முகம் மலர்ந்த ஸ்வேதா.

''டேய் ரகு.. வாடா வா. தனியாகவா வந்தாய்'' என்று பரபரத்தாள். ரிஷியின் முகத்தில் எரிச்சல் பரவியது. மோகனாவிற்கோ சிரிப்பு வந்தது.

''மெல்ல.. மெல்ல.. விட்டால் தாவிக் குதித்து உன் தம்பியிடம் ஓடி விடுவாய் போல இருக்கே... நேற்று ஈவினிங் வரை அவன் நம்முடன்தானே இருந்தான். இன்றைக்குக் காலையில் வந்துவிட்டான்... என்னவோ வருடக் கணக்கில் தம்பியைப் பார்க்காதவள் போல இந்தக் குதி குதிக்கிறாயே. அவன் ஒன்றும் தனியாக வரவில்லை. அப்பா காலையிலேயே அவனைக் கூப்பிட்டுக் கொண்டு வரக் கார் அனுப்பினாராம். இப்போது தானே சொன்னார்?''

''நான் கவனிக்கவில்லை'' என்று முணுமுணுத்தாள் ஸ்வேதா.

''அதுதானே.. உன் கவனம் தான் இங்கே இல்லையே. வேறு எங்கோ இருக்கிறதே. முதலில் உன்னைச் சுற்றி இருப்பவர்களை கவனி.. புரிந்ததா.. ரகுவிற்கு டிபன் எடுத்து வை. வா ரகு சாப்பிடலாம்...''

ஸ்வேதாவை கடிந்து கொண்டே ரகுவை அவள் உபசரிக்கவும் ஸ்வேதாவிற்கு அவன் திட்டியதே மறந்து போய் விட்டது.

''நானும் அவனும் சாப்பிட்டுக் கொள்வோம். நீங்க எழுந்திருங்க...'' என்றபடி தனக்கும் தம்பிக்கும் தட்டுகளை எடுத்து வைத்துக் கொண்டு அமர்ந்தாள் அவள்.



''எண்டி...'' என்று அதற்கும் ரிஷி ஆரம்பிக்க.. கை கழுவ எழுந்த மோகனா அவனை அதட்டினாள்.

''ரிஷி.. நீ சாப்பிட்டு விட்டாயில்லையா.. எழுந்திரு.. நமக்கு பரிமாறிவிட்டு பாவம்.. அவள் பசியோடு இருப்பாள்.. தம்பிக்கு போட்டு விட்டு தானும் சாப்பிட அவள் நினைக்கலாமில்லையா? உனக்கென்ன அதில் கஷ்டம்? வரவர.. நீ மேல் சாவனிஸ்ட் போல பிஹேவ் பண்ணுகிறாய்.. ஐ டோன்ட் லைக் இட்.''

''ஹா.. மம்மி.. எனக்குப் போய் மேல் சாவனிஸ்ட் பட்டமா? இது உங்களுக்கே அதிகமாகத் தோன்றவில்லையா?''

''தோன்றவில்லை. கையில் பிரம்பு மட்டும் தான் இல்லை. மற்றபடி நீ அவளை அரட்டி.. மிரட்டிக் கொண்டிருக்கிறாய். வா. வா. முதலில் இடத்தைக் காலி பண்ணு. அவர்கள் அக்காவும் தம்பியும் பேசிக் கொண்டே சாப்பிடட்டுமே...''

''அம்மா... இவள் என் வொய்ப்.''

''சரிதாண்டா. பெண்டாட்டி தாசா... அதற்காக அவள் ரகுவிற்கு அக்கா இல்லையென்று ஆகிவிடுமா...''

மோகனா சிரித்துக் கொண்டே மகனை இழுத்துக் கொண்டு சென்றாள்.

ரகு நடப்பதை சுவாரஸ்யமாக வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்க... தம்பியின் தலையைப் பரிவுடன் தடவி.

''சாப்பிடுடா..'' என்றாள் ஸ்வேதா.

''அத்தானுக்கு உங்கள் மேல் பிரியம் அதிகம் அக்கா...''

'அவனுடைய பிரியத்தைச் சொல்லி விட்டாலும்...' எரிச்சல் பட்டுக் கொண்ட ஸ்வேதா.. முகத்தில் எந்தவித சலனமுமின்றி ரகுவைப் பார்த்தாள்.

''அம்மாவும்... தீபாவும் எப்படி இருக்காங்க..?''

''அம்மாதான் நேற்று ராத்திரி ரொம்பவும் அழுதாங்க. நீங்கள் இருக்கும்போது உங்கள் அருமை தெரியாமல் நடந்து கொண்டார்களாம். இப்போது நீங்கள் இல்லாமல் வீடு வீடாக இல்லைன்னு சொல்லி அழுதாங்க.''

ஸ்வேதாவிற்கு கண்கள் கரித்தது. அழுதால் ரிஷி வந்து திட்டுவான் என்பதால் இமைகளைக் கொட்டி சரிப்படுத்திக் கொண்டாள். ஒரே நாளில் பிறந்த வீடு அவளுக்கு அந்நியம் ஆவதா?

''தீபா என்ன சொன்னாள்...?''

''நான் இருக்கிறேன். நான் வேலைக்குப் போய் வீட்டைப் பார்த்துக் கொள்கிறேன் என்றாள்.''

'பிளஸ் ஒன் படிப்பவள் வேலைக்குப் போகிறாளாம். ஹூம்.. இவன் மட்டும் என் வாழ்க்கையில் குறுக்கிடா மல் இருந்திருந்தால்.. என் வீட்டை இப்படித் தவிக்க விடுவேனா...'

ஹாலில் அமர்ந்திருந்த ரிஷியைப் பார்த்தபடி மனதிற்குள் குமைந்தாள். ஸ்வேதா... சட்டென்று திரும்பி அவள் முகத்தைப் பார்த்துவிட்ட ரிஷி புருவங்களை மேலே உயர்த்தி விழியால் கேள்வி கேட்டான்.

'சட்... மனதிற்குள் கூட இவனைத் திட்ட முடிய வில்லையே..' சலிப்புடன் பார்வையை திருப்பிக் கொண்டு எழுந்தாள் ஸ்வேதா.



''அக்கா.. உங்கள் வீடுதான் எவ்வளவு அழகாக இருக்கிறது...'' ரகு வியக்கவும்.. ஸ்வேதா யோசனை யுடன்.

''என் வீடா.. எது.. இதா?'' என்று கேட்டு விட்டாள்.

அதைக் கேட்டுக் கொண்டே ரிஷி அங்கே வந்து விட்டான். பார்வையால் அவளைச் சுட்டெரித்தபடி,

''அவன் அறிவோடுதான் பேசுகிறான். நீதான் அறிவைக் கடன் கொடுத்து விட்டாய். இது உன் வீடு இல்லாமல் யார் வீடு?'' என்று கேட்டான்.

'திரும்பத் திரும்ப இவனிடம் மாட்டு வாங்குகி றேனே..' என்று தன்னைத் தானே நொந்து கொண்டபடி கைகழுவப் போவது போல் ஓடி விட்டாள் ஸ்வேதா.

ரகுவுடன் பாண்டுரங்கனும் மோகனாவும் பேசிக் கொண்டிருக்க... ஸ்வேதா தாய் வீட்டிற்குப் போகத் தயார் ஆவதற்காக மாடிக்குச் சென்றாள். அவள்... உடை மாற்றிக் கொண்டிருந்தபோது ரிஷி உள்ளே நுழைந்தான்.

''யார்...'' என்று பதட்டமாய் அவள் கேட்டபோது...

''நம் பெட்ரூமிற்குள் யார் வருவார்கள்?'' என்று முறைத்தவாறு அவள் எதிரே சென்றான் அவன்.

''வார்த்தைக்கு வார்த்தை குற்றம் கண்டு பிடித்தால். ஒரு மனுஷி எப்படித்தான் வாயைத் திறந்து பேசுவது?'' அவள் புடவையின் கொசுவத்தை சரி செய்தவாறு பேசினாள்.

''வாயைத் திறந்தாலே வில்லங்கமாய் பேசுகிறவ ளிடம் குற்றம் கண்டுபிடிக்காமல் எப்படி இருப்பது?'' அவன் அமர்த்தலாக வினவினான்.



''நீங்கள் வேண்டுமென்றே என்னைச் சண்டைக்கு இழுக்கிறீர்கள்... உங்களது அழிச்சாட்டியத்திற்கு நான் ஆளில்லை.''

''வேறு ஆள் யார்? சொல்லு. நான் தேடுகிறேன்.''

''ரிஷி. நான் என் அம்மா வீட்டிற்குப் போகும் மூடில் இருக்கிறேன். என் மூடை ஸ்பாயில் பண்ணாதீர்கள்.''

ரிஷியின் எரிச்சல் வடிந்து போனது. அவன் நெற்றிப் பொட்டை சரி செய்து கொண்டிருந்தவளைப் பார்த்தான். மனதில் இதம் பரவியது. திரும்பி அவனைப் பார்த்தவள். அவனது பார்வை மாறுபாட்டைக் கண்டு திகைத்தாள்.

''என்ன..?''

''நீ இப்போது என்ன சொன்னாய்?''

''அம்மா வீட்டிற்குப் போக வேண்டும் என்று சொன் னேன்.''

''இது இதைத்தான் நான் விரும்புகிறேன். இதுதான் உன் வீடடி. அது உன் அம்மாவின் வீடு புரிந்ததா..?''

'நீ இதிலேயே இரு...' தாய்க்கும் உடன் பிறந்த வர்களுக்கும் என்ன வழி செய்வது என்ற பரிதவிப்பில் இருந்தவள் பேசாமல் அவனை ஓர் பார்வை பார்த்து விட்டு.. நகைகளைப் போட ஆரம்பித்தாள்.

'இந்தப் பார்வைக்கு என்ன அர்த்தம்? ஒன்று கோப மாய் பார்க்க வேண்டும். இல்லை.. காதலாய் பார்க்க வேண்டும். இவள்தான் காதலாய் என்னைப் பார்த்துத் தொலைக்க மாட்டாள். இது கோபப் பார்வையாகவும் இல்லையே...''

அவன் குழம்பிக் கொண்டு நிற்கையில் அவள் தயாராகி அவனைத் திரும்பிப் பார்த்தாள்.



அழகான பிஸ்கெட் கலர் பிரிண்டெட் சில்க்கில் புளூ கலர் பார்டருடன் உடலிலும் பார்டரிலும் ஜரிகை புள்ளி கள் கொண்ட புடவை உடுத்தி... புளூ கலரில் கையில் ஜரிகை பார்டர் கொண்ட ஜாக்கெட் அணிந்திருந்தாள். கை காது.. கழுத்துக்களில் புகுந்த வீட்டு வைர நகைகள்.. தலையில் இரு பக்கமும் வழியும் மல்லிகைப் பூ.

அவளது அழகில் தாக்கப்பட்ட ரிஷி... அவளை ஆர்வ மாகப் பார்த்தான்... அவளது ஒவ்வொரு அசைவிலும் மிளிர்ந்த பெண்மை அவனை அழைத்தது. அன்று.. அலுவலகத்தில் அவள் மேல் கமழ்ந்த நறுமணம் இன்றும் கமழ்ந்தது. மோகத்தைக் கிளப்பும்.. அவளது மேனியை அவன் தொட்டுத் தழுவ விரும்பினான்.

''நேரமாகிறது. நீங்கள் இன்னும் கிளம்பவில் லையா...?'' என்று கேட்ட வண்ணம் ரிஷியை நெருங் கிய ஸ்வேதா பின் வாங்கினாள்.

அவனது பார்வை... அந்தப் பார்வை... அன்று அலு வலகத்தில் அவளை புதிதாகப் பார்ப்பது போல் பார்த் தானே. அதே பார்வை... ஸ்வேதாவின் மேனி நடுங்கியது.



## 13

ரிஷி மோகத்தீயின் வெம்மை தாங்காமல் அவளை நெருங்கினான். ஸ்வேதாவின் கண்களில் கலவரம் வந்தது.

'இது என்ன.. இவன் நேரம் காலம் தெரியாமல் விளையாட நினைக்கிறான். கீழே ரகு வந்து காத்திருக்கிறானே... இன்று ஒரு நாள் தான் அம்மாவுடனும் தம்பி தங்கைகளுடனும் இருக்க முடியும். நாளைக்கு ஊட்டிக்குப் போக வேண்டும் என்று சொல்கிறார்களே... இனிமேல் அம்மா வீட்டில் போய் தங்கவும் இவன் வர மாட்டான். வசதி குறைவைக் காரணம் காட்டுவான்... இவள் போய் இருக்கலாமென்றால் அனுப்பவும் மாட்டான். இன்றைக்கு ஒரு நாளாவது ஆசை தீர இருந்து விட்டு வரலாமென்றால் இவன் இப்படி அழிச்சாட்டியம் பண்ணுகிறானே.'

''ரிஷி வேண்டாம்..'' ஸ்வேதா பின் வாங்கினாள்.

அவள் வார்த்தைகள் அவனது காதுகளில் ஏறியதாகத் தெரியவில்லை. அவன் அவளைப் பருகுவது போல் பார்த்துக் கொண்டே தோளைத் தொட்டான். சட்டென்று அந்த யோசனை ஸ்வேதாவின் மூளையில் உதயமாகியது. இவனிடமிருந்து விலகவும் முடியாது. அதற்காக இவன் இஷ்டம் போல் ஆடவும் முடியாது. இவனை இவன் போக்கில் போய்த்தான் திசை திருப்ப வேண்டும். சற்று முன் ஒரு வார்த்தையில் அவனது கோபம் தணிந்தது நினைவிற்கு வந்தது. ஸ்வேதா ரிஷியை இறுக்கித் தழுவி அவனது மார்பில் முகம் புதைத்தாள்... அவனால் அதை நம்ப முடியவில்லை.

''ஸ்வேதா...''

''ம்ம்...''

''என்னைப் பார்..''

அவள் அண்ணாந்து அவனது முகத்தைக் கெஞ்சுவது போல் பார்த்தாள்.



''ப்ளீஸ் ரிஷி. அம்மா வீட்டிற்குப் போகலாம்.. நேரமாகிறது.''

''இதோ... ஒரு நொடியில் கிளம்புகிறேன் பார்.''

அவன் அவளை இறுக்கி அணைத்து அவளது கன்னத்தில் இதழ் பதித்தான். அவள் விலகாமல் இணைந்து நின்றாள். பற்றியெரிந்த மோகத் தீ அணைந்து விட அமைதி கொண்டான் ரிஷி.

'இவள் மட்டும் இது போல என் மேல் அன்பாக இருந்தால் போதும்.'

மன நிறைவுடன் அவளை விட்டு விலகி நிமிடத்தில் கிளம்பி விட்டான் ரிஷி. பிரௌன் கலர் ஜீன்ஸ். ஐஸ்கிரீம் வொயிட்டில் காட்டன் சர்ட். அலையலையாய் முன் நெற்றியில் படிந்து சரியும் கேசம்.

'இவன் கவர்ச்சியானவன்...' ஸ்வேதாவின் மனதில் இந்த எண்ணம் ஓடியது.

''ரிஷி.. நாம் இன்றைக்கு அங்கே தங்க வேண்டும் தானே...''

''ஆமாம்... டியர்...''

''அப்போ... நாளைக்குக் காலையில் உடுத்திக் கொள்ள மாற்று டிரஸ் எடுத்து வைத்துக் கொள்ள வேண்டாமா?''

''ம்ம்... இதை என்னிடம் கேளு... நீ தானே இதையெல்லாம் இனிமேல் செய்ய வேண்டும்.''

''ஸாரி.. ரிஷி.. மறந்து விட்டேன்.''

''ஏய்ய்... முட்டாள்... இதற்குப் போயா ஸாரி கேட்பது.''



அவன் செல்லமாய் கடிந்து கொண்டான்.

'இவனைத்தான் எவ்வளவு எளிதாக ஏமாற்ற முடிகிறது...?' மனதிற்குள் நினைத்தபடி.. அதிவேகத்தில் அவனுக்கும்.. தனக்குமான உடைகளை எடுத்து பேக்கில் அடுக்கினாள் ஸ்வேதா.

''போகலாமா...?''

''ம்ம்.. நீ எப்படியடி இவ்வளவு அழகாக இருக்கிறாய்?''

அவன் கிளம்ப மனமில்லாமல் வினவ.. போகும் அவசரத்தில் தன்னை அறியாமல் கூறினாள் ஸ்வேதா.

''நீங்கள் மட்டும் அழகாக இருக்கக் கூடாதில்லையா. அதற்காகத்தான். உங்கள் கூட வரும்போது ஜோடிப் பொருத்தம் குறைவென்று மற்றவர் சொல்லிவிடக் கூடாதில்லையா.. அதற்காகத்தான்.. உங்கள் அழகில் பாதியாவது நான் இருக்க வேண்டுமில்லையா. அதற்காகத்தான். இந்த விளக்கம் போதுமா. இல்லை இன்னும் கொஞ்சம் வேண்டுமா...?''

''போதும்.. போதும்.''

'அப்பாடி...' என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டாள் ஸ்வேதா அறையை விட்டு வெளியேறினாள். அவனை முன்னே விட்டுப் பின்னே அவளது அழகை ரசித்தவாறு இறங்கிய ரிஷி.. அவள் சொன்னதையே நினைத்து நினைத்து சொக்கிப் போனான்.

'இவள் என்னை ரசிக்கிறாள்...' இந்த நினைவே அவனுக்கு இனித்தது. படியிறங்கி ஹாலுக்கு வந்தபோது பாண்டுரங்கன் ரகுவின் தோள்களில் கை போட்டுக்



கொண்டு பேசிக் கொண்டிருப்பதைக் கண்டாள் ஸ்வேதா. அவளது மனம் நெகிழ்ந்து விட்டது.

''என்னம்மா கிளம்பி விட்டீர்களா?'' மோகனா கேட்டுக் கொண்டே பூஜையறையிலிருந்து வெளியே வந்தாள்.

''ஆமாம் அத்தை... மாமா.. நீங்கள் அத்தையுடன் சேர்ந்து நில்லுங்கள்.''

''எதற்கம்மா...''

பாண்டுரங்கன் புரியாமல் வந்து மோகனாவின் அருகில் நிற்க அவர்கள் இருவரின் கால்களிலும் வணங்கி எழுந்தாள் ஸ்வேதா.

''அம்மா வீட்டிற்குப் போய் வருகிறேன் அத்தை.''

மோகனாவின் மனம் நிறைந்து விட்டது. இப்படி ஒரு மரியாதையையும் போற்றுதலையும் ஆஷாவிடம் எதிர்பார்க்கவே முடியாது. இவள் இந்த வீட்டின் பொக்கிஷம். பாசத்துடன் மருமகளை அரவணைத்துக் கொண்டாள் அவள். பூஜையறையில் இருந்த குங்குமத்தை எடுத்து மருமகளின் நெற்றியில் வைத்து விட்டு,

''போய் வாம்மா...'' என்று வழி அனுப்பினாள்.

மனைவியின் மனநிலையைப் புரிந்து கொண்ட பாண்டுரங்கன் மென்னகையுடன் அவர்களை ரசித்தார். ஒரு வீட்டில் உள்ள பெண்களின் இடையே நல்ல உறவும்... புரிந்து கொள்ளலும் இருந்தால் வீட்டில் அமைதியும் ஆனந்தமும் தாண்டவமாடுமே...

''பாருங்கப்பா.. மாமியாரும் மருமகளும் ஒன்று சேர்ந்து விட்டாங்க.''

''ஆமாண்டா ரிஷி. கூட்டணி பலமாகத்தான் இருக்கும் போல...''

''நம்ம பாடு இனி திண்டாட்டம்தான்.''

''அதைச் சொல்லு...''

தகப்பனும் மகனும் கிண்டலாகப் பேசவும் மோகனா மகனை செல்லமாக முறைத்தாள்.

''எதைடா சொல்லச் சொல்கிறார் உன் அப்பா...?''

''அது ஒன்றுமில்லைம்மா. சும்மா.. ஜூஜூபி...?''

''சும்மா ஒன்றும் இல்லாததற்கா இப்படி ரகசியம் பேசுகிறீர்கள்?''

''அதுவாம்மா.. நீங்களும் உங்கள் மருமகளும்.. மேட் பார் ஈச் அதர்ன்னு சொல்லிக் கொண்டிருந்தோம்.''

''படவா.. கிண்டலா பண்ணுகிறாய்?''

மோகனா துரத்த... ரிஷி ஸ்வேதாவின் பின்னால் ஒளிந்து கொள்வதைப் போல் நின்று கொண்டு அவள் தோள் பற்றி பூவாசம் பிடித்தான்.

அதுதானே பார்த்தேன். எதுடா சாக்கு என்று அலையும் திருட்டுப் பூனையில்லை.. நீ? ஒளிந்து கொள்ளும் லட்சணம் இதுதானா..'

ஸ்வேதா விலக முடியாமல் மனதிற்குள் அவனைத் திட்டிக் கொண்டிருந்தாள். பாண்டுரங்கன் கைக்கடிகாரத்தைப் பார்த்தார்.

''ரிஷி விளையாடியது போதும். நேரமாகி விட்டது.''

''ஓகேப்பா.. பை மம்மி...''



பார்வதியம்மாளின் காம்பவுண்டில்.. லீலாவதியின் வீட்டின் முன் அந்தக் காம்பவுண்டில் குடியிருந்தவர்கள் திரண்டிருந்தார்கள். கார் வரவும்.

''ஸ்வேதா வந்தாச்சு..'' என்று உள்ளே திரும்பிப் பார்த்துக் குரல் கொடுத்தாள் சாந்தி.

தீபா அவசரமாய் ஆரத்தித் தட்டோடு வாசலுக்கு வந்தாள்... ஸ்வேதாவும் ரிஷியும் பின் பக்கமிருந்து இறங்க.. ரகு.. காரின் முன் பக்கமிருந்து இறங்கினான்.. தீபா.. ஆரத்தி எடுத்து முடித்தவுடன் ரிஷி வீட்டிற்குள் போகப் போனான்.

''ம்ம்... அத்தான்... ஆரத்தி எடுத்ததற்கு ஆரத்தி தட்டில் பணம் போடுங்கள். சும்மா வீட்டிற்குள் வந்து விட முடியுமா?'' என்று தீபா புருவம் உயர்த்தினாள்.

''அடேங்கப்பா.. கோபக்கார கொளுந்தியாள்தான். பணம் போடாவிட்டால் உள்ளே விட மாட்டாயா?'' என்று கேலியாய் விளையாடியபடி ரிஷி.. தன் பேண்ட் பாக்கெட்டில் கை விட்டு ஆயிரம் ரூபாய் கட்டு ஒன்றை எடுத்துத் தட்டில் வைத்தான்.

''அத்தான்...'' தீபா விழிவிரிய மயக்கம் போடும் நிலைக்கே வந்து விட்டாள். ஸ்வேதாவிற்கு என்ன செய்வது என்று தெரியவில்லை.

'இவன் பணத்தினால் அடிக்கிறான்...' மனதிற்குள் குமைந்தாள். கூடி இருந்தவர்கள் அதிசயமாய் அவர்களுக்குள் பேசிக் கொண்டார்கள். சலசலப்பின் ஊடே பார்வதியம்மாள் தன் வெங்கலத் தொண்டையைத் திறந்து கூறினாள்.



''பணம்ன்னு கேட்டால்.. கட்டுக் கட்டாய் தூக்கிக் கொடுத்துப் பழகிய பிள்ளை.. இப்படித்தான் இருக்கும். நமக்குத்தான் இதைப் பார்த்துப் பழகிக் கொள்ள நாளாகும் ஆத்தி தீபா.. அதான் தம்பி பணக்கட்டைப் போட்டு விட்டாரே. இப்பவாவது வழி விடுதாயி...''

தீபா அவசரமாய் உள்ளே லீலாவதியிடம் விசயத்தைக் கூற ஓடினாள். ரிஷியும் ஸ்வேதாவும் உள்ளே நுழைந்து நாற்காலிகளில் அமர்ந்தார்கள்... பெண்கள் கூட்டம் அவர்களைத் தொடர்ந்து உள்ளே வந்தது.

''லீலா.. புதுப் பொண்ணுக்கும்.. மாப்பிள்ளைக்கும் பால்.. பழம் கொண்டு வாம்மா..'' பார்வதியம்மாள் குரல் கொடுக்க.. ஒரு தட்டில் இரண்டு பால் தம்ளர்களை ஏந்தியபடி தீபா சமையலறையை விட்டு வெளியே வந்தாள். வாழைப் பழத்தை உரித்து ரிஷியின் கையில் கொடுத்த கண்மணி.

''மாப்பிள்ளை சார்.. நீங்கள் பாதிதான் சாப்பிட வேண்டும்...'' என்றாள்.

''ஏங்க... முழு பழம் கொடுக்க மாட்டிங்களா. அதுதான் பணம் போட்டு விட்டேனே. அப்புறமும் பாதிப் பழம் கொடுத்தால் எப்படி?'' என்று ரிஷி வேடிக்கையாக வினவினான்.

பெண்கள் கூட்டம் 'கொல்'லென்று நகைத்தது. ஸ்வேதாவிற்கு அந்த நகைப்பொலி நாராசமாக இருந்தது. எப்படி வேஷம் போடுகிறான் இவன்? எவ்வளவு இலகுவாகப் பழகுகிறான். இவனால் இதையெல்லாம் செய்யவும் பேசவும் இயல்பாய் முடிகிறது.. அவளால்தான் முடியவில்லை.



''அதற்குள் அவசரப்படுகிறீர்களே... நீங்கள் பாதிப் பழத்தை சாப்பிட்டு விட்டு மீதிப் பழத்தை ஸ்வேதாவிடம் சாப்பிடக் கொடுங்கள்...'' கண்மணி சிரித்தாள்.

''எச்சில் பழத்தையா?'' ஸ்வேதா அவசரமாய் வினவினாள்.

''இங்கே பாருங்கடி.. நேற்று ராத்திரி பாஸ்ட் நைட் முடித்து விட்டு வந்திருக்கிறாள். இன்னும் இவர் எச்சிலை அவள் சாப்பிட மாட்டாளாம். அதை நாம் நம்ப வேண்டுமாம்..'' கண்மணி கண் சிமிட்டினாள்.

கூட்டம் மீண்டும் நகைத்தது. ஸ்வேதாவிற்கு வெட்கத்தில் உயிரே போய்விடும் போல இருந்தது.

'இப்படி லஜ்ஜையில்லாமல் பேசுகிறார்களே.. ரகுவும்.. தீபாவும் இருப்பதை மறந்து விட்டார்களா..'

ரிஷி ஸ்வேதாவைப் பார்த்தான். அவனுக்கு இந்தப் பெண்கள் கூட்டத்தின் கேலி மிகவும் பிடித்திருந்தது. அவனது வட்டாரத்தில் எல்லோரும் நாசுக்காய் பேசிப் பழகுவார்கள். இவர்கள் இப்படித் தேங்காய் உடைப்பது போல் பேசிப் பழகுவது.. அவனுக்கு வியப்பாக இருந்தது.

''என்னங்க செய்வது? பழகிய பழக்கத்தை இவள் ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்கிறாளே..'' ரிஷி பாவம் போல் முகத்தை வைத்துக் கொண்டான்.

அவன் சொல்வது ஸ்வேதாவிற்குப் புரிந்தது. அன்று அலுவலகத்தில் நடந்ததை ஸ்வேதா.. கணவன்.. மனைவியின் பந்தமாக ஏற்றுக் கொள்ள மறுக்கிறாளாம். அதை இவன் ஜாலியாகக் கூறுகிறானாம்.

''அவள் ஏற்றுக் கொள்ளா விட்டால்.. நீங்கள் விட்டு விடுவதா..'' சாந்தி தூண்டிவிட்டாள்.

''அது எப்படி.. நான்தான் சிங்கமாயிற்றே... ஜெயித்து விட்டேனில்லை..'' ரிஷி ஸ்வேதாவின் முகத்தைப் பார்க்காமல் கூறினான்.

வெட்கப்படுவது போல் தலையைக் குனிந்திருந்த அவளின் முகத்தை மட்டும் அவன் பார்த்திருந்தால் இப்படி வேடிக்கை பேசிக் கொண்டிருந்திருக்க மாட்டான். ஸ்வேதாவின் முகம் அவ்வளவு பயங்கரமாய் மாறியிருந்தது.

'ஜெயித்துத்தானே விட்டாய்.. அன்று என் உடம்பை ஜெயித்தாய்.. நேற்று என் வாழ்க்கையையும்.. சுதந்திரத்தையும் ஜெயித்தாய்.. ஆனால் ஒரு போதும் உன்னால் என் காதலைப் பெற முடியாது.. அதை என்று நீ அறிகிறாயோ.. அன்று உன் தோல்வியை உணர்வாய்.'

ரிஷி தான் சாப்பிட்ட பாதிப் பழத்தை நீட்டுவது உணராமல் ஸ்வேதா மனதிற்குள் வன்மம் பாராட்டிக் கொண்டிருக்க.. எல்லோரும் அதற்கும் நகைத்தார்கள்.

''ஊம்.. சாப்பிடு...'' என்றான் ரிஷி.

'இவன் எச்சிலை நான் சாப்பிடுவதா...' ஸ்வேதாவிற்கு குமட்டியது.

சுற்றியிருந்தவர்கள் அவள் வெட்கப்படுவதாக நினைத்துச் சிரித்தார்கள்.

''ஊட்டி விடுங்க மாப்பிள்ளை..'' கண்மணி தூண்டினாள்.

ரிஷி ஸ்வேதாவைக் காதலுடன் பார்த்துக் கொண்டே... பழத்தை அவள் வாயருகில் கொண்டு போக அவள்



அவசரமாய் அதை வாங்கிக் கொண்டாள். எதுவும் செய்ய இயலாமல் அதை வாய்க்குள் போட்டு விழுங்கினாள்.

''என்னடி தீபா... இரண்டு தம்ளர்களில் பாலா...?'' அவர்கள் மீண்டும் ஆரம்பிக்க.. தீபா வெட்கத்துடன் கண்மணியின் கையில் தட்டை திணித்துவிட்டு சமைய லறைக்குள் ஓடி விட்டாள்.

ரிஷியின் முகத்தில் பல்ப் எரிந்தது. சுவாரஸ்யமாய் ஸ்வேதாவை நோட்டம் விட்டவாறே ஒன்றும் அறியாதவன் போல் வினவினான்.

''ஏங்க... இரண்டு பேர் இருக்கிறோம். அப்போ இரண்டு தம்ளர்களில்தானே பால் கொடுப்பார்கள்.''

''இதைக் கேளுங்கடி.. இவர் அறியாப் பிள்ளை போல் பேசுவதை.. மாப்பிள்ளை சார்.. பழத்தில் பாதி கொடுத்தது போல் பாலிலும் பாதி கொடுக்க வேண்டும்.''

''அதாவது.. நான் சாப்பிட்ட மீதிப்பாலை இவளுக்குக் கொடுக்க வேண்டும்.''

''ஆமாம்...'' அவர்கள் கோரஸாக குரல் கொடுத்தார்கள்.

''அதாவது.. மீதமிருக்கும் எச்சில் பாலை இவள் சாப்பிட வேண்டும்.''

''ஆமாம்...'' மீண்டும் கோரஸ் வந்தது.

''என்ன ஸ்வேதா இவர்கள் இப்படிச் சொல்கிறார்கள்?'' அவன் அப்பாவி போல் மனைவியிடம் கேட்க... அவள் ரகசியமாய் முறைத்தாள்.





''என்ன ஸ்வேதா.. எங்கள் முன்னாலேயே மாப்பிள்ளையை முறைக்கிற. நாங்கள் இத்தனை பேர் சப்போர்ட்டுக்கு இருக்கும்போதே முறைக்கிறாயே.. தனியாய் இவர் உன்னிடம் அகப்பட்டுக் கொண்டால் என்னவெல்லாம் செய்வாயோ...''

கண்மணி மீண்டும் கண் சிமிட்ட.. அவர்கள் கொல்லென்று சிரித்தார்கள்.

ரிஷி பாலைப் பாதி குடித்துவிட்டு ஸ்வேதாவிடம் தந்தான். அவள் சுடுநீர் தம்ளரை வாங்குவது போல் அரைக் கண்ணை மூடியவாறு வாங்கி.. ஒரே மூச்சில் காலி செய்தாள்.

''குடிக்கிற வேகத்தைப் பாருங்கடி...''

''இருக்காதா பின்னே... காதல் கணவரின் எச்சில் பாலாயிற்றே...''

''எச்சிலா என்றதெல்லாம் வெறும் பாசாங்குடி...''

அவரவர் மனம் போன போக்கில் கேலி பேசி விட்டு கலைந்து போனார்கள். போகும்போது மறக்காமல் ஸ்வேதாவை பார்த்து கண் சிமிட்டி விட்டுத்தான் போனார்கள்.

''நன்றாக என்ஜாய் பண்ணி பேசுகிறார்களே..'' ரிஷி மெச்சிக் கொண்டான்.

'ஏன் மெச்சிக் கொள்ள மாட்டாய்.. தனியாய் உன்னிடம் மாட்டி நான் என்ன கதிக்கு ஆளானேன் என்று தெரியாமல் பேசி விட்டுப் போகிறார்கள். உன் உண்மை சொரூபம் தெரிந்தால் என்ன சொல்வார்களோ...'



பார்வதியம்மாள் ரிஷியிடம் மரியாதைக்கு இரண்டு வார்த்தை பாண்டுரங்கனின் உடல்நிலை பற்றி விசாரித்து விட்டு எழுந்து சென்றாள்.

'அப்பா.. இப்போதாவது போனார்களே...' அவசரமாய் எழுந்து கொண்ட ஸ்வேதா.

''அம்மா.. அம்மா..'' என்று அழைத்தாள்.

''என்னம்மா...'' லீலாவதி சமையலறையிலிருந்து வெளிப்பட்டாள்.

''ஏம்மா.. நாங்க வந்து இவ்வளவு நேரமாகியும் நீங்க வந்து பேசவில்லை? உள்ளேயே ஏன் இருக்கிறீங்க?''

''அதுதான் தீபா வந்தாளேம்மா.''

''நான் உங்களைக் கேட்டேன்.''

''முதன் முதலாய். புதுப் பெண்ணும் மாப்பிள்ளையும் வருகிற போது தீபா வருவதுதான் முறைம்மா...''

''அம்மா...'' ஸ்வேதா ஆட்சேபித்து எதையோ சொல்லப் போக...

''ஏம்மா... மாப்பிள்ளையை ரூமிற்குள் கூப்பிட்டுக் கொண்டு போய்.. வேண்டியதைக் கேட்டுச் செய்வாயா... அதை விட்டு விட்டு என்னை குறுக்கு விசாரணை பண்ணிக் கொண்டிருக்கிறாயே...''

லீலாவதி பேச்சை மாற்றி விட.. ஸ்வேதா ரிஷியைப் பார்த்தாள்.

'இவனுக்கு வேண்டியது என்னவென்று இப்போது போய் கேட்பதா?'

ரிஷி அவளது பார்வையை புரிந்து கொண்டது போல் புருவத்தை உயர்த்திச் சிரித்தான். பின் இரண்டு

கைகளையும் நீட்டி.. சோம்பல் முறித்தான். எழுந்து அவள் அருகில் வந்தான்.



## 14

''என்ன ஸ்வேதா.. உன் அம்மா சொல்வது காதில் விழவில்லையா? எனக்கு வேண்டியதைச் சொல்லவா?'' குறும்பாக அவன் சிரித்தான்.

''ரிஷி.. ப்ளீஸ்..'' வேறு வழியின்றி வழக்கமான ஆயுதத்தைக் கையில் எடுத்தாள் அவள்.

''ஓகே.. ஓகே.. ப்ளீஸ் போட்டு விட்டாய்.. அதனால் எனக்கு வேண்டியதை அப்புறமாய் கேட்டு வாங்கிக் கொள்கிறேன். இப்போது கம்பெனிக்குப் போய் விட்டு வருகிறேன்.''

அவன் கூறியது லீலாவதியின் காதுகளில் விழுந்ததும் அவள் அவசரமாய் சமையலறையை விட்டு வெளியே வந்தாள்.

''மதியத்திற்கு விருந்து ரெடி பண்ணிக் கொண்டு இருக்கிறோம். நீங்கள் இன்று ஒரு நாள்தான் இங்கு இருப்பீர்கள்ன்னு ரகு சொன்னான். சாப்பிடாமல் போனால் எப்படி மாப்பிள்ளை...''

''ஒரு அர்ஜன்ட் வொர்க் இருக்கிறது அத்தை. சாப்பிட வந்து விடுவேன்.''



மரியாதையுடன் லீலாவதியிடம் கூறிவிட்டு ஸ்வேதாவைப் பார்த்து.

''போய் விட்டு வரவா..'' என்றான் ரிஷி.

அவள் சந்தோசமாக தலை அசைத்தாள். அவளது சந்தோஷம் தாண்டவமாடும் முகத்தைப் பார்த்தவாறு வெளியே போனான் ரிஷி.

அவன் போனதும் ஸ்வேதாவின் மனதில் ஓர் விடுதலை உணர்வு எழுந்தது. லீலாவதியின் கையைப் பிடித்து கட்டிலில் உட்கார வைத்து தானும் பக்கத்தில் அமர்ந்தாள்.

''விடுடி.. மாப்பிள்ளை வருவதற்குள் சமையலை முடிக்கணும்.''

''எல்லாம் முடிக்கலாம்... நீங்க ஏம்மா உடம்பைப் போட்டு வருத்திக்கிறீங்க. பேசாமல் ஹோட்டலில் எதையாவது வாங்கி வைத்திருக்கலாமில்லையா.''

''அடித்து விடுவேன் ஸ்வேதா. மாப்பிள்ளைக்கு மறு வீடு விருந்து ஹோட்டலில் வாங்கிப் போடுவார்களா? அவர் முன்னால் இப்படிப் பேசி வைக்காதே. மரியாதை குறைவாய் நினைத்துக் கொள்ளப் போகிறார்.''

''நினைத்தால் நினைக்கட்டும்.''

''தப்பு ஸ்வேதா.. காதல் பண்ணிக் கல்யாணம் பண்ணிக் கொண்டதால்.. அலட்சியம் காட்டாதே. காதல் வேறு.. கல்யாணம் வேறு.. ஆம்பிளைகள் எப்போதும் ஒன்று போலவே இருக்க மாட்டார்கள்.''

''அதுதான் எனக்குத் தெரியுமே.''



''காதலிக்கும் போது நீ எதைச் செய்தாலும் ரசிக்கும் ஆம்பளை.. கல்யாணமானவுடன்.. நீ செய்வதில் எல்லாம் குற்றத்தை கண்டுபிடித்து சண்டை போட ஆரம்பித்து விடுவார்.''

'அப்படிச் செய்தால் பரவாயில்லையே. இந்த குரங்கு.. இஞ்சியைத் தின்றது போல் எப்போது பார்த்தாலும் 'ஈ'யென்று பல்லைக் காட்டுகிறதே.'

''அதனால் நீ ஜாக்கிரதையாய் பேசிப் பழகு...''

'அதையேன்ம்மா கேட்கிறீர்கள். ஒரு தலை வாரி, பின்னல் போட்டு பூ வைக்க முடியவில்லை. கண்ணை விரிக்க ஆரம்பித்து விடுகிறது. நான் ஜாக்கிரதையாய் தள்ளி நின்றுதான் பேச வேண்டியிருக்கிறது...'

''புருசனை முந்தானையில் முடிந்து வைத்துக் கொள்ள வேண்டும் ஸ்வேதா.''

'நான் எங்கே முடிந்து வைக்கிறது. அதுதான்.. என் சேலை முந்தானையை பிடித்துக் கொண்டு தானாய் முடிச்சு போட்டுக் கொள்கிறதே...'

''உன் அப்பா இருக்கும்போது.. என்னையே சுற்றிச் சுற்றி வருவார்.''

'இதுவும் அப்படித்தான்.'

''நீ அது போல அவரும் உன்னைச் சுற்றி வரும்படி பார்த்துக் கொள்.''

'அதற்கெல்லாம் மெனக்கெடவே தேவையில்லை அம்மா.. அதற்கு அதுதானே வேலை.'

''என்னடி.. நான் பாட்டுக்குப் பேசிக் கொண்டிருக்கிறேன். நீ பாட்டுக்கு யோசனையாய் உட்கார்ந்து இருக்கிறாய்?''



''ம்ம்.. ஒன்றுமில்லையம்மா... நீங்கள் சொன்னதையெல்லாம் நினைத்துப் பார்த்துக் கொண்டிருந்தேன்.''

''என்னவோ புத்தியோடு பிழைத்தால் சரிதான்.''

''நான் புத்தியோடு பிழைப்பது இருக்கட்டும். நீங்கள் உங்களைப் பற்றி நினைத்துப் பார்த்தீர்களா..''

''எதைச் சொல்கிறாய்?''

''புரியாதது போல் கேட்காதீங்க. தீபாவும். ரகுவும் படித்துக் கொண்டிருக்கிறாங்க. நீங்க எப்படிம்மா குடும்பத்தை நடத்துவீங்க?''

''அதைப் பற்றி உனக்கென்ன கவலை. அதை நான் பார்த்துக் கொள்கிறேன். இப்போது நீ உன் புருசனுடன் மறு வீட்டு விருந்திற்கு வந்திருக்கிறாய்.. சந்தோசமாய் இருந்து விட்டுப் போ...''

''என் சந்தோசத்தைப் பற்றி இப்போது நாம் பேசவில்லை. குடும்பத்தின் சந்தோசம் நிலைக்க என்ன வழி?''

''ஸ்வேதா.. எனக்குத் தையல் தெரியும்.. எம்பிராய்டரி தெரியும். வீட்டில் இரண்டு மெஷின்களையும் வாங்கிப் போடப் போகிறேன். நீதான் புத்திசாலித்தனமாக.. போஸ்ட் ஆபிஸில் மாத வட்டி வரும்படி பணத்தை போட்டு வைத்திருக்கிறாயே. வீட்டு வாடகை கம்மியாய் இருக்கும்படி வீடு பார்த்திருக்கிறாய். வீட்டு வாடகைக்கும்.. குடும்பச் செலவுக்கும் வட்டிப் பணம் போதும்.. மேற்செலவுக்கு நான் தையலில் சம்பாதித்துக் கொள்வேன்...''

லீலாவதியின் இந்த தைரியம் ஒரு வகையில் ஸ்வேதாவிற்கு நிம்மதியைக் கொடுத்தது. மூலையில் முடங்கிக் கிடந்த லீலாவதியா இது?

'பரவாயில்லை... அம்மா நெருக்கடியான நிலைமையை சமாளிக்கப் பழகி விட்டார்கள். இனி தைரியமாக வாழ்க்கையை எதிர் நோக்குவார்கள். எவ்வளவு அழகாக திட்டம் போட்டு பதில் சொல்லுகிறார்கள். அம்மாவுக்குள் இவ்வளவு தன்னம்பிக்கை வந்திருப்பது ஆச்சரியம்தான்.'

ஆனாலும் தாயையும் தம்பி, தங்கையையும் உட்கார வைத்துக் காப்பாற்றிப் பழகிய ஸ்வேதாவிற்கு பொறுப்பில்லாமல் விலகிக் கொள்வது என்பது முடியாத விஷயமாக இருந்தது. அவள் மனதில் வேறு ஒரு திட்டம் இருந்தது. தனக்கு லீலாவதி போட்டிருக்கும் இருபது பவுன் நகையை விற்று அதையும் சேமிப்பில் போட்டு மாத வட்டி கிடைக்கும்படி செய்து விட்டால் லீலாவதி உழைக்க வேண்டிய அவசியமே இருக்காது. ஸ்வேதா அந்த முடிவோடுதான் இருந்தாள்.

தீபாவையும் ரகுவையும் அழைத்துப் பேசினாள்.

''தீபா நீ இன்னும் சிறு பெண்ணில்லை...''

''ஆமாம் அக்கா. எனக்கு பதினாறு வயதாகி விட்டது இன்னும் ஐந்தே வருடங்களில் உன்னைப் போல் கல்யாணம் பண்ணிக் கொள்ள ரெடியாகி விடுவேன்.''

''நீ இதிலேயே இரு... புத்தியை இப்படிப் புல் மேய விட்டால் படிப்பில் எப்படிக் கவனம் போகும். எனக்கு அடுத்து நீ பொறுப்பாய் வீட்டைக் கவனித்துக் கொள்ள வேண்டும் என்று சொல்ல வந்தால்... நீ கல்யாணக் கனவு காண்கிறாய்.. கல்யாணத்தைப் பற்றிப் பேசும் வயதா இது?''

''ஸ்வீட் சிக்ஸ்டீன்க்கா. முறைக்காதே. நீ சொல்லித் தான் நான் பொறுப்பாக இருக்க வேண்டுமா நானாக



இருக்க மாட்டேனா? நான் நீ வளர்த்த தங்கைக்கா. உன்னைப் போல்தான் இருப்பேன்.''

'என்னைப் போல் நீ இருக்க வேண்டாம்..' என்று கதற வேண்டும் போல் இருந்தது ஸ்வேதாவிற்கு. தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு தங்கையை பாசத்துடன் கட்டிக் கொண்டாள்.

''ரகு... அம்மாவுக்கு உடம்பு சரியில்லை. இப்போது தான் சகஜமாகப் பேசி நடமாட ஆரம்பித்திருக்கிறாங்க. நீ அவங்களைப் படுத்தக் கூடாது.''

''சரிக்கா.''

''தீபாவும் உன்னைப் போல் சிறு வயதுதான். மூன்று வருடங்கள் தான் உன்னை விட மூத்தவள். அவள் ஏதாவது சொன்னால் கோபித்துக் கொள்ளக் கூடாது.''

''சரிக்கா...''

''நீ இந்த வீட்டிற்கு மகன். அம்மாவைக் கடைசி வரை காப்பாற்றும் கடமை உனக்குத்தான் இருக்கிறது. நான் எப்படி சொந்த பந்தங்களை விட்டு விட்டு வேறு வீட்டிற்கு வாழப் போய் விட்டேனோ.. அது போல் தீபாவும் ஓர் நாள் போய் விடுவாள். அம்மாவுடன் கடைசி வரை இருக்கும் கொடுப்பினை உனக்குத்தான் இருக்கிறது. அம்மாவைப் பார்த்துக்கோடா ரகு...''

இதைச் சொல்லும்போது ஸ்வேதா அழுது விட்டாள். ரகு பதறினான்.

''அழாதீங்க அக்கா.. அம்மாவை நான் பார்த்துக் கொள்வேன். நீங்கள் கண் கலங்குகிறீர்கள். எனக்குக் கஷ்டமாக இருக்கிறது.''



''நன்றாகப் படி ரகு... உன் படிப்பை நான் பார்த்துக் கொள்கிறேன்.''

''எனக்கு அது தெரியும் அக்கா. அத்தானும்.. நீயும் மாடிக்குப் போன பின்பு.. மாமா எனக்கு வாக்குறுதி கொடுத்திருக்கிறார்.''

''மாமாவா.. என் மாமனாரா? என்ன சொன்னார்?''

''நீயும்.. தீபாவும் என்ன படிப்பைப் படித்தாலும்.. செலவைப் பற்றிக் கவலைப்படாதீர்கள்.. உங்கள் இரண்டு பேருடைய படிப்புச் செலவும் என்னுடையதுன்னு சொன்னார்.''

''அப்படியா சொன்னார்?''

ஸ்வேதாவின் மனம் பாண்டுரங்கன் கூறிய வார்த்தைகளைக் கேட்டதும் நெகிழ்ந்தது. அவருக்குத்தான் எத்தனை நல்ல மனது? மகன் செய்த தவறிற்காக மைத்துனன் மகளை விட்டு விட்டு அவளை மருமகளாக ஏற்றுக் கொண்டதும் இல்லாமல்.. மருமகளின் குடும்பத்திற்கு உதவியும் செய்ய முனைகிறாரே. இப்படிப்பட்ட நல்லவருக்கு. எப்படிப்பட்ட மகன் வந்து வாய்த்திருக்கிறான். நினைக்கும் போது நெஞ்சம் கசந்தது அவளுக்கு.

''ஆமாம்க்கா.. அத்தை என்ன சொன்னாங்க தெரியுமா?''

''அத்தையா.. அவங்க என்னடா சொன்னாங்க?''

''தீபாவின் கல்யாணம் எங்க பொறுப்பு.. நாங்க நடத்தி வைக்கிறோம். உன் அம்மாவை கவலையில்லாமல் இருக்கச் சொல்லுன்னு சொன்னாங்க...''



மோகனாவா இப்படிச் சொன்னாள்? கேட்கவே ஆச்சரியமாக இருந்தது ஸ்வேதாவிற்கு.. திருமணத்தின் போதே.. குடும்ப வைர நகைகளைக் கொடுத்து அணிந்து கொள்ளச் சொல்லி விட்டாள். இதுவரை ஸ்வேதாவைப் பார்த்து மனக் குறையுடன் ஓர் வார்த்தை அவள் பேசவில்லை. அண்ணன் மகளை விட்டுக் கொடுத்து விட்டு ஸ்வேதாவை மருமகளாக ஏற்றுக் கொண்டவள். திருமணத்திற்கு வந்திருந்தவர்கள் வாயைக் கிளறிய போதும். அதற்கு இடம் கொடுக்காமல் பேச்சை மாற்றி.. பெருந்தன்மையாய் நடந்து கொண்டவள்.

'மனிதர்களிலும் மாணிக்கங்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்.' ஸ்வேதாவின் கண்கள் நன்றியுடன் கசிந்தன.

''இதை அம்மாவிடம் சொன்னாயா ரகு...''

''வந்தவுடனே எனக்கு அதுதானே வேலை.. உனக்கும் அத்தானுக்கும் எல்லோரும் பால் பழம் கொடுத்துக் கொண்டிருந்தபோது நான் சமையலறைக்குப் போய் அம்மாவிடம் சொல்லி விட்டேன்...''

லீலாவதி தைரியத்துடன் நடமாடுவதன் காரணம் இப்போது ஸ்வேதாவிற்கு புரிந்தது. சாப்பாட்டிற்கும்... வீட்டு வாடகைக்கும் வட்டிப் பணம் போதும்... மகன் மகளின் படிப்புச் செலவையும்.. மகளின் திருமணப் பொறுப்பையும் சம்பந்தி வீட்டார் ஏற்றுக் கொண்டு விட்டார்கள். மகன் படித்து வேலைக்குப் போய்.. மகளின் திருமணம் முடிந்து விட்டால்.. அப்புறம் வட்டிப் பணம் தேவைப்படாது. ரொக்கத்தை எடுத்து.. சொந்தமாக ஒரு சிறு வீட்டைக் கூட வாங்கிக் கொள்ளலாம்.. ஸ்வேதாவிற்கு இப்போது நிம்மதியாக இருந்தது.

திட்டமிட்ட வாழ்க்கை என்பது இதுதான். கையில் பணம் வந்தவுடன் அதை எப்படிச் செலவழிப்பது என்று நினைக்க மாட்டார்கள் மத்திய தர வர்க்கத்தினர்... அதை எப்படிச் சேமிப்பது என்றுதான் நினைப்பார்கள்... ஸ்வேதா சேமித்து வைத்தாள். லீலாவதிக்கு இப்போது அது யானை பலத்தைக் கொடுக்கிறது.

எது... எப்படியோ.. அம்மா.. தம்பி தங்கைகளின் வாழ்க்கை இப்போதைக்கு தடங்கல் இல்லாமல் சீராக ஓடும்.. என்ற நிம்மதி ஸ்வேதாவிற்குள் பிறந்தது. வாசலில் கார் சத்தம் கேட்டது.

''அத்தான் வந்து விட்டார் போல...'' ரகு அவசரமாய் வாசலுக்கு ஓடினான்.

''தீபா மேஜை மேலிருக்கிற புத்தகங்களை எடுத்து டி.வி. ஸ்டாண்ட் ஷெல்பில் அடுக்கி வை. சேரை இழுத்து டேபிள் பக்கத்தில் போடு.. மாப்பிள்ளை சாப்பிட வசதியாக இருக்கட்டும்...'' லீலாவதி பரபரப்பாய் இயங்கினாள்.

வீட்டிற்குள் வந்த ரிஷியோ லீலாவதியை அழைத்தான்.

''அத்தை... ஒரு நிமிடம் என்கூட வாங்க... ஒரு முக்கியமான வேலை ஒன்று இருக்கு.''

''நானா... நான் வர வேண்டுமா? எதற்கு மாப்பிள்ளை.''

''நீங்க வாங்க சொல்கிறேன்.''

''சாப்பிட்டு விட்டுப் போகலாமே. சமையல் ரெடியாக இருக்கே.''

''வந்து சாப்பிட்டுக் கொள்ளலாம்.''



லீலாவதி புரியாதவளாய் ரிஷியுடன் சென்றாள். காரின் பின் பக்கக் கதவை மாமியாருக்காக ரிஷி திறந்து விட... கூச்சத்துடன் உடலை குறுக்கிக் கொண்டு சங்கடத்துடன் லீலாவதி காரில் ஏறி அமர.. கார் கிளம்பியது.

''எதுக்குடி அம்மாவை கூப்பிட்டுக் கொண்டு போகிறார்?''

''உன் புருசன் கிட்ட நீ தானே கேட்கணும்? அவரை விட்டு விட்டு என்னைக் கேட்டால் எனக்கென்ன தெரியும்?''

''ஏன் உனக்கு வாயில்லையா? கேட்க வேண்டியது தானே.''

''ஏன்க்கா.. அம்மாவை யாரோ தெருவில் போகிற ஆள் கூப்பிட்டுக் கொண்டு போயிருந்தால்.. நான் ஏனென்று கேட்பேன். அத்தான் கூப்பிட்டுக் கொண்டு போயிருக்கிறார். ஏதாவது காரணம் இல்லாமலா கூப்பிட்டுக் கொண்டு போயிருப்பார்?''

''எனக்கும் அது தெரியும்டி. அதுதான் என்ன காரணமென்று கேட்கிறேன்.''

''கத்தரிக்காய் முற்றினால் கடை வீதிக்கு வந்துதானே ஆக வேண்டும்?''

''அப்படின்னா...?'' ஸ்வேதா விழித்தாள்.

''இது கூடத் தெரியாதா? அம்மா வீட்டுக்கு வந்தால் விசயம் தெரிந்து விடப் போகிறதுன்னு அர்த்தம்.''

''இப்படியெல்லாம் பேச எங்கே கற்றுக் கொண்டாய்?''



''எல்லாம் எதிர் வீட்டு கண்மணி அக்காவும்.. சாந்தி அக்காவும் பேசிக் கொள்கிற அக்கப் போர்களில் இருந்துதான்...''

''நீ உருப்பட்டு விடுவாய்.''

ஸ்வேதா தங்கையின் தலையில் செல்லமாய் குட்டி விட்டுச் சிரித்தாள்.

சற்று நேரத்தில் ரிஷியும் லீலாவதியும் வீடு வந்து சேர்ந்தார்கள். லீலாவதியின் முகம் எல்லையில்லாத பிரபஞ்ச வெளியை தரிசித்து விட்டது போல் பிரமிப்பில் ஆழ்ந்திருந்தது. வந்தவுடன் சமையலறைக்குள் நுழைந்து விட்டவளின் பின்னாடியே போய்...

''என்ன விசயம் அம்மா..?'' என்று விசாரித்தாள் ஸ்வேதா.

''ஒன்றுமில்லை.. நீ மாப்பிள்ளைக்கு சாப்பிட இலையைப் போடு... சூடு ஆறுவதற்கு முன் சாப்பிட்டு விடட்டும்.'' லீலாவதி மகளை விரட்டினாள்.

தாயிடமிருந்து விசயத்தைக் கறக்க முடியாமல் ஏமாற்றத்துடன்.

'என்னவாக இருக்கும்..' என்று யோசித்துக் கொண்டே முன் அறையில் இருந்த டேபிளில் தலை வாழை இலையைப் போட்டுத் தண்ணீர் தெளித்தாள் ஸ்வேதா.

தீபா.. தண்ணீர் ஜக்குடன் வந்து பெரிய தம்ளர் நிறைய தண்ணீர் ஊற்றி வைக்க.. லீலாவதி ஸ்வேதாவை அழைத்தாள்.

''என்னம்மா...''

''நான் கொடுக்கக் கொடுக்க.. மாப்பிள்ளைக்கு பரிமாற ஆரம்பி.''



ரிஷி உள்ளறைக்குள் இருந்து கொண்டு..

''ஸ்வேதா...'' என்று அழைத்தான்.

''மாப்பிள்ளை கூப்பிடுகிறார் பார்.. போய் என்னவென்று கேள்..'' அதற்கும் மகளை விரட்டினாள் லீலாவதி.

'அடடா.. மாப்பிள்ளையாம்.. மாப்பிள்ளை.. இவன் பெரிய தேசத்துக்கே சக்கரவர்த்தி போலவும்.. நான் என்னவோ இவனின் வேலைக்காரி போலவும்.. நடத்துகிறார்களே...''

மனதிற்குள் அலுத்துக் கொண்டே முன்னறைக்குப் போன ஸ்வேதா,

''என்னங்க...'' என்று எரிச்சலுடன் கேட்டாள்.

''டிரஸ் சேஞ்ஜ் பண்ணிக் கொள்ள வேண்டும். லுங்கி ஏதாவது எடுத்துக் கொண்டு வந்திருக்கிறாயா?''

''எடுத்து வராமல் இருப்பேனா...?''

ஸ்வேதா பேகில் இருந்து... அவனது லுங்கி ஒன்றையும் டி.சர்ட் ஒன்றையும் எடுத்துக் கொடுத்தாள்.

''குட் ஜாப்...'' என்று மெச்சிக் கொண்டே வாங்கிக் கொண்டவன்... ''சோப்.. பேஸ்ட்.. பிரஷ்?'' என்று வினவியவாறு உடை மாற்ற ஆரம்பித்தான்.

''ம்ம்.. இப்போது என்ன வேண்டும்.''

''சோப்.''

''இதோ...'' என்று எடுத்துக் கொடுத்தபடி வெற்று மார்புடன் நின்று கொண்டிருந்தவனைப் பார்த்ததும் ஸ்வேதாவிற்கு என்னவோ போல் இருந்தது.

''பாத்ரூம் எங்கே இருக்கிறது?'' என்று கேட்டபடி கதவின் பின்னால் நகர்ந்தவன்... அவளது கை பிடித்து இழுத்தான்.

அவன் இழுத்த வேகத்தில் அவன் மார்பில் விழுந்தவளை இறுக்கி அணைத்துக் கொண்டவனிடமிருந்து விலக யத்தனித்தவளுக்கு அந்த எண்ணம் தோன்றியது.



15

முன்னறையிலிருக்கும் ரகுவும், தீபாவும்... எந்த வினாடியிலும் உள்ளே வந்து விடலாம் என்ற சூழ்நிலையில்... இங்கிதமில்லாமல்... சூழ்நிலையை உணராமல் இறுக்கித் தழுவிக் கொண்டவனின் மேல் அவளுக்கு எரிச்சல் வந்தது.

'இவனுக்கு நேரம் காலம் என்பதே தெரியாதா?'... பட்டென்று எதையாவது சொல்லிவிட வேண்டும் என்ற துடிப்புடன் வாயைத் திறந்தவளுக்கு அந்த எண்ணம் தோன்றியது.

'இவன் அம்மாவைக் கூப்பிட்டுக் கொண்டு எங்கே போனான் என்பதை இவனிடமே கேட்டுவிட்டால்தான் என்ன...?'

'உன் புருசனிடம் நீ கேட்க வேண்டியதுதானே.....' என்ற தீபாவின் கேள்வி நினைவுக்கு வந்தது....



'புருசனிடம்... பெண்டாட்டியாக நடந்து கொண்டால் தானே கேட்க முடியும்'

ஸ்வேதா... முன்னறையில் இருந்து தீபாவும்... ரகுவும் பார்த்து விடாமலிருக்கும்படி... மறைவில் நகர்ந்து கொள்ள... ரிஷியின் கண்கள் அதை கண்டுகொண்டு மின்னின... அவனது அணைப்பு இன்னும் இறுகியது... ஆவலுடன் அவளது இதழ் தேடிக் குனிந்தான் அவன்... ஸ்வேதா விலகவில்லை... அவனுடன் இசைந்து நின்றாள். அவனது தோளைத் தழுவிக் கொண்டிருந்த அவளது கைகள்... வெளியே சத்தம் கேட்டு அவளை விடுவித்தான் அவன்...அவன் முகத்தில் கிறக்கமும், திருப்தியும் தெரிந்தன.

''அக்கா... அத்தானைச் சாப்பிடக் கூப்பிட்டுக் கொண்டு வா...'' தீபா கத்திக் கொண்டிருந்தாள்...

''சாப்பிட வாங்க...'' என்றபடி நகர முயன்றவளின் கைபிடித்து நிறுத்தினான் அவன்.

''பாத்ரூம் எங்கேயிருக்கு...?''

''வாங்க... காட்டுகிறேன்....''

ஸ்வேதா அவனைப் பின்னால் அழைத்துக் கொண்டு போனாள்... அவன் அவளைச் சொந்தத்துடன் பார்க்க... அவள் மெதுவாக வினவினாள்.

''அம்மாவை எதற்காக கூப்பிட்டுக் கொண்டு போனீர்கள்...?''

அவன் அவளை பாத்ரூமிற்குள் இழுத்துக் கொண்டான்...

''கட்டாயம் சொல்ல வேண்டுமா...'' அவளது கன்னத்தில் முகத்தை உராய்ந்தவாறு கேட்டான்.





அவனது மீசை குத்தும் உணர்வை அனுபவித்தபடி விலகாமல் நின்றாள் ஸ்வேதா.

''சொல்லுங்களேன் ப்ளீஸ்...''

''ஓ.கே. சொல்கிறேன்... உன் அம்மாவின் பெயரில் ஒரு வீடு இன்றைக்கு ரெஜிஸ்டர் ஆகியிருக்கிறது. அதற்கு கையெழுத்துப் போடத்தான் கூப்பிட்டுக் கொண்டு போனேன்...''

''என்னது...''

ஆச்சரியத்தில் 'ஆ'வென்று வாய் திறந்து நின்று விட்டவளின் கன்னத்தில் செல்லமாகத் தட்டினான் அவன்.

லீலாவதியின் முகத்தில் ஏன் இவ்வளவு பிரமிப்பு நிலவுகிறது என்று இப்போது அவளுக்கு விளங்கியது. இப்படி ஒன்று நடைபெறும் என்று அவளே எதிர்பார்க்கவில்லை எனும்போது அம்மா எப்படி எதிர்பாத்திருக்க முடியும்?

''ஏன் இப்படி விழிக்கிறாய்...?'' சோப்பு போட்டு முகத்தை அலம்பியவாறு ரிஷி கேட்டான்.

''என்னால் நம்பவே முடியவில்லை...''

''எதை நம்ப முடியவில்லை... என்னையா...?''

உன்னைத்தான் என்றுமே நான் நம்பியது இல்லையே. ஸ்வேதா ஈர முகத்துடன் நின்றவனுக்கு முகம் துடைக்க டவலை நீட்டினாள்.

''என்ன பதிலையே காணோம்...'' டவலை வாங்கி முகம் கை கால்களை துடைத்தபடி வினவினான் அவன்.



''உங்களுடன் வம்பு பேச எனக்கு விருப்பமில்லை... ஆனால் நீங்கள் செய்திருப்பதை இன்னும் என்னால் நம்பத்தான் முடியவில்லை...'' ஸ்வேதா யோசனையுடன் கூறினாள்.

'இவன் ஏன் இதைச் செய்தான்...? இவளுக்கு விலை கொடுக்கிறானா?...'

''நம்புடி. முதலில் என்னை நம்பு. என்னை நம்பினால் எல்லாம் சரியாகிவிடும்...'' மர்மமாய் சிரித்தபடி கையிலிருந்த டவலை அவள் கழுத்தில் மாலை போல் போட்டு அருகில் இழுத்து முத்தமிட்டான் ரிஷி.

''அக்கா...'' தீபா ஆர்ப்பரித்தபடி ஓடிவர... அவசரமாய் விலகினாள் ஸ்வேதா.

''என்ன தீபா...''

''சேதி தெரியுமா?''

''என்ன சேதி...''

''அத்தான்... அம்மா பெயரில் வீடு வாங்கிக் கொடுத்திருக்கிறாராம்...''

''இதுதானா....? நீ வேறு எதையோ சொல்கிறாய்ன்னு நினைத்தேன்...''

''உனக்கு இது தெரியுமா?''

''ம்ம்... இப்போதுதான் இவர் சொன்னார்...''

''அதுதானே... அத்தான் உன்னிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்லுவார்... அம்மா உள்ளே வந்தவுடன் அப்படியே உட்கார்ந்துவிட்டாங்க... மயக்கம் போடாத குறைதான்...''

''பின்னே இருக்காதா...? எனக்கே நம்ப முடியவில்லை..''

''அத்தான் உண்மையிலேயே நீங்கள் கிரேட். வலது கை கொடுப்பது இடது கைக்கு தெரியக் கூடாது என்பார்கள்... நீங்கள் உதவி செய்வதை அக்காவுக்குக் கூடத் தெரியாமல் செய்திருக்கிறீர்களே... நன்றி அத்தான்''

''அடேங்கப்பா... உனக்கு இவ்வளவு பேச்சு பேசத் தெரியுமா? பெரிய மனுஷி போல் டயலாக்கை அள்ளி விடுகிறாயே... இப்போது எனக்குத் தேவை நன்றியில்லை தீபா... சாப்பாடு... பசிக்கிறது...''

''அடடா... நான் உச்சி வேளையில் அறுத்துத் தள்ளுகிறேன். ஸாரி அத்தான்... சாப்பாடு ரெடி... வாங்க...'', தீபா உள்ளே ஓடினாள்.

ஸ்வேதாவிற்கு என்னவோ போல் இருந்தது. இது நாள்வரை அவள் தாங்கி நின்ற குடும்பம்... ஒரு நொடியில் அவளைக் கண்டு கொள்ளாமல் அவன் பக்கம் சாய்ந்து விட்டதே.... இவனும்தான் ஏன் இதை செய்ய வேண்டும்? ஒருவேளை... இவள் கோபமாய் தாய்வீடு போகப் போகிறேன் என்று கிளம்பினால் அது என் வீடு என்று சொல்லிக் காட்டலாம் என்று நினைக்கிறானா?

''ஸ்வேதா... எனக்கு சாப்பாடு போடும் உத்தேசமே இல்லையா...'' அவன் அவள் முன்னால் விரலை சொடக்கி அழைத்தான்.

''ம்ம்... வாங்க...'' ஸ்வேதா பொம்மை போல் உள்ளே போனாள்.

ரிஷி சாப்பிட அமர்ந்ததும் இலையின் ஓரமாக கொஞ்சம் கேரட் அல்வாவை வைத்துவிட்டுப் பரிமாற ஆரம்பித்தாள் ஸ்வேதா.



''வாவ்... சிக்கன் வறுவல்... முட்டை... பிஷ் பிரை... சிக்கன் பிரியாணி... எனக்கு பிடித்ததாய் செய்திருக்கிறீர்களே... பட்... இது என்ன இந்நேரம் போய் கேரட் அல்வா கொடுக்கிறாய்...''

''இல்லைங்க... நீங்கள் முதன் முதலில் இங்கே சாப்பிடுகிறீர்கள்... அதனால் இனிப்புடன் சாப்பிட ஆரம்பிக்க வேண்டும்ன்னு அம்மா சொன்னாங்க...''

''ஓ... அப்படியா...''

ரிஷி ருசித்துச் சாப்பிட்டான்... ஸ்வேதா பார்த்துப் பார்த்துப் பரிமாறினாள்...

''ஹௌ நைஸ்... அத்தையின் கைச்சமையல் இவ்வளவு டேஸ்டாக இருக்கும்ன்னு எனக்குத் தெரியாமல் போய்விட்டதே...''

''தெரிந்திருந்தால் என்ன செய்திருப்பீர்கள் அத்தான்?''

''முதலிலேயே உன் அக்காவைத் தூக்கிக் கொண்டு போய் மேரேஜ் பண்ணிக் கொண்டிருப்பேன் தீபா...''

ரிஷி திருப்தியாய் சாப்பிட்டு முடித்து எழுந்து கை கழுவப் போனான்... ஸ்வேதாவை லீலாவதி விரட்டினாள்...

''என்னடி இங்கே நின்று கொண்டிருக்கிறாய்...? மாப்பிள்ளை கை கழுவப் போகிறார் பார்... பின்னாடி போ...''

''எதற்கும்மா...? அவர் என்ன சிறு பிள்ளையா? கைகழுவக் கூட அவருக்குத் தெரியாதா?''

''உன்னிடம் போய் நான் சொல்லுகிறேன் பார்... ஏண்டி இப்படி மக்காக இருக்கிறாய். கை கழுவியதும் கை துடைக்க டவலை நீட்டு... போ...''



ஸ்வேதா ரிஷியின் பின்னாலேயே போய் டவலை நீட்டினாள்...

''என்ன... அத்தை உனக்கு அர்ச்சனை பண்ணினார்கள் போல...''

''அதில் உங்களுக்கு ரொம்ப சந்தோசம் போல...''

''இருக்காதா? மருமகனின் மனமறிந்த மாமியார் உன் அம்மா...''

ரிஷி அவளது தோல் மேல் கைபோட்டு... அவன் மூக்கோடு மூக்கை வைத்து தேய்த்தான்... அவள் அவனைப் பிடித்துத் தள்ளினாள்.

''ஏண்டி... என்னைப் பிடிக்கவில்லையா?''

'ஆமாம்...' என்று சொல்லத்தான் ஆசை ஸ்வேதாவிற்கு. ஆனால் அதன் பின் விளைவுகளை எண்ணி வாயை இறுக்கி மூடிக் கொண்டாள்.

''என்ன... திடீரென்று மௌனமாகி விட்டாய்...?''

''எனக்கும் பசிக்காதா...''

''ஓ... ஐ ஆம் ஸாரி... வா வா...''

ரிஷி உள்ளறைக்குப் போக... லீலாவதி வாயைத் திறக்குமுன் ஸ்வேதா அவன் பின்னாலேயே போய்... படுக்கையை சரி செய்து தலையணையை போட்டு... மின்விசிறியை சுழலவிட்டாள்....

''இங்கே ஏஸியெல்லாம் கிடையாது...''

''நோ பிராப்ளம்...''

அவன் கண்களை மூடிக்கொள்ள... சப்தம் எழுப்பாமல் அறையை விட்டு வெளியே வந்து கதவைச் சாத்திவிட்டு சமையலறைக்குப் போனாள் ஸ்வேதா.



''அம்மா... உங்கள் மாப்பிள்ளைக்கு செய்யவேண்டிய பணிவிடைகளை எல்லாம் குறைவில்லாமல் செய்து முடித்துவிட்டேன்... இனியாவது சாப்பாடு போடுவீர்களா...''

தீபா சிரித்துவிட்டாள்... லீலாவதி சின்ன மகளை முறைத்தாள்.

''என்னடி சிரிப்பு... அவளுக்குத்தான் புத்தியில்லை... உனக்குமா இல்லை?''

சமையலறையிலேயே... அவர்கள் நால்வரும் வட்டமாக தட்டைப் போட்டுக் கொண்டு அமர்ந்தார்கள். நடுவில் சாப்பாட்டுப் பாத்திரமும்... பதார்த்தக் கிண்ணங்களும் பரப்பி வைக்கப்பட்டிருக்க... அவரவர்க்கு வேண்டிய அளவு போட்டுக் கொண்டு சாப்பிட ஆரம்பித்தார்கள்.

''அம்மா... வீடு எங்கே இருக்காம்... நீங்கள் போய் பார்த்தீர்களா?''

''இல்லை ஸ்வேதா... மாப்பிள்ளை ரெஜிஸ்ட்ரர் ஆபீஸுக்கு கூப்பிட்டுக் கொண்டு போனார்.. கையெழுத்துப் போடச் சொன்னார்... போட்டேன். திரும்பி வரும்போது ஏன் அத்தை... நான் கையெழுத்துப் போடச் சொன்னதும் போட்டு விட்டீர்களே... என்ன ஏது என்று உங்களுக்குத் தெரிய வேண்டாமான்னு கேட்டார்... நீங்கள் போடச் சொன்னதும் போட்டேன்... எனக்குத் தெரிய வேண்டுமானால் நீங்களே சொல்வீங்களேன்னு சொன்னேன்... இனி மேல் நானே கேட்டாலும் என்ன ஏது என்று விசாரிக்காமல் கையெழுத்துப் போட்டு விடாதீங்க அத்தைன்னார்... நான் சிரித்துக் கொண்டே

அப்படி எந்தச் சொத்தை என்னிடமிருந்து எழுதி வாங்கிக் கொள்ளப் போகிறீர்கள்ன்னு கேட்டேன். இதுவரை உங்கள் பெயரில் சொத்து இல்லாமல் இருந்திருக்கலாம்... இப்போது அப்படியில்லை... உங்கள் பெயரில் வீடு வாங்கியிருக்கிறோம்... அதை ரெஜிஸ்டர் பண்ணத்தான் நீங்கள் கையெழுத்து போட்டிருக்கிறீர்கள். அதனால் இனிமேல் ஜாக்கிரதையாக இருங்கன்னு சொன்னார்... அவர் சொன்னதைக்கேட்டு... இது கனவா... இல்லை நனவான்னு திகைத்துப் போய்விட்டேன்... ஸ்வேதா... உன் மாமனார் வீட்டில் எங்களுக்கு கட்டாயம் உதவி கிடைக்கும்மென்று எனக்குத் தெரியும்... இவ்வளவு பெரிய உதவியை நான் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை...''

லீலாவதியின் தொண்டை கமறியது... உணர்ச்சி வசப்பட்டதில் வார்த்தைகள் தொண்டைக்குள் சிக்கிக் கொள்ள... பேச்சு வராமல் தவித்தாள் அவள். தீபா... தாயின் கரத்தை ஆதரவாய் தட்டினாள். ரகு இன்னும் ஆனந்த அதிர்ச்சியிலேயே இருந்தான்.

''என் கிளாஸ்மேட்டிற்கு எல்லாம் சொந்த வீடுதான் அக்கா... அவர்களைப் பார்க்கும்போது... சீக்கிரம் படித்து ஒரு வேலைக்குப் போய் பணம் சேர்த்து சொந்தமாய் ஒரு வீடு வாங்கிக்க வேண்டும் என்று நினைத்துக் கொள்வேன். நிஜமாகவே நமக்குன்னு ஒரு சொந்த வீடு வரப்போகுதுன்னு நினைக்கும் போது அம்மா சொல்வதைப் போல் இது கனவா... நனவான்னு ஆச்சர்யமாக இருக்கிறது அக்கா... ரொம்ப தேங்க்ஸ்...''

''எனக்கு போய் எதற்குடா தேங்க்ஸ்...''



''நீங்கள்தானே வீடு வாங்கி கொடுத்திருக்கிறீர்கள்...''

''நானா வாங்கிக் கொடுத்தேன்... அவர்தானே வாங்கிக் குடுத்திருக்கிறார்.''

''அத்தான் வேறு... நீங்கள் வேறா அக்கா...?''

''நன்றாய் அவள் மண்டையில் ஏறுவது போல் சொல்லு... அப்போதாவது அவள் புத்தியில் உறைக்கிறதா என்று பார்ப்போம்...''

லீலாவதி சலித்துக் கொண்டாள். ஸ்வேதா தலையைக் கவிழ்த்துக் கொண்டாள்... வீட்டில் இருக்கிறவர்களுக்கு உண்மை தெரியாது. அது தெரியாமலேயே போகட்டும்... அவன் வேறு... அவள் வேறுதான்... என்றுமே அவள் மனதில் அவன் குடியேறப் போவதில்லை..

''ஸ்வேதா... நீயும் கொஞ்சம் தூங்கி எழுந்திரு...''

லீலாவதி ஆணையிட... ஸ்வேதா முன்னறையில் படுக்கப் போனாள். லீலாவதி முறைக்கவும்... உள் அறைக் கதவைத் திறந்து கொண்டு போனாள். ரிஷி அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தான்... கதவை மெதுவாக மூடிவிட்டு... அவனருகே படுத்தாள்... அடுத்த நொடி... அவள் மேல் அவன் கரம் விழுந்து அவளைத் தன்னோடு இறுக்கிக் கொண்டது.

''நீங்கள்... தூங்கி விட்டீர்கள்ன்னு நினைத்தேனே...'' அவள் விடுபட முடியாமல் வினவினாள்.

''தூங்குவதா... நீ சாப்பிட்டுவிட்டு வரும்வரை கண்மூடிக் காத்திருந்தேன்... இவ்வளவு நேரமா சாப்பிட...'' அவன் அவள் முகத்தோடு முகம் வைத்துக் கொண்டான்.



''ப்ளீஸ் ரிஷி... வெளியே தீபா... ரகு... இருக்கிறார்கள். படக்கென்று உள்ளே வந்து விடுவார்கள்...''

''ஓ.கே. ஓ.கே....'' அவன் லேசாக விலகிப் படுத்தான். ஆனால் அவள் மேலிருந்த கையை மட்டும் விலக்க வில்லை.

அதைச் சொன்னால் அவன் கோபித்துக் கொள்வானோ என்று யோசித்தபடி தூங்கிப் போனாள் ஸ்வேதா.

''ஸ்வேதா... ஸ்வேதா...'' என்று லீலாவதி அழைக்கும் குரல் கேட்டு விழித்து எழுந்தாள். ரிஷியைப் பார்த்தாள். அவன் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தான். அவனது கரத்தை விலக்கி விட்டு எழுந்து சென்றாள்.

''என்னம்மா...''

''சாயங்காலமாகிவிட்டது... காபி டிபன் சாப்பிட வேண்டாமா? மாப்பிள்ளையை எழுப்பு... இருடி... முகம் கழுவி தலையை வாரிவிட்டு எழுப்பு...''

ஸ்வேதா பின்பக்கம் சென்று முகம் கழுவிவிட்டு வந்து முன்னறையில் தலைவாரி பின்னலிட்டு... லேசாக பவுடர் பூசிக் கொண்டாள்.

''போதுமாம்மா...''

''போதாது... தீபா பூ வாங்கி வைத்திருக்கிறாள்.... வைத்துக் கொள்...''

ரிஷியை ஸ்வேதா எழுப்பியதும் அவன் கண்விழித்துப் பார்த்தான்... அப்போதுதான் கட்டிய மல்லிகை மொட்டின் சரம் தோள்களில் வழிய பொலிவோடு இருந்தவளை இழுத்துச் சேர்த்துக் கொள்ளக் கை



நீட்டியபோது வெளியே பேச்சுக்குரல்கள் கேட்கவும் பேசாமல் எழுந்து கொண்டான்...

முகம் கழுவி வந்து அமர்ந்தவனின் முன் தட்டை வைத்து... சூடான வடைகளை வைத்தாள் ஸ்வேதா... அதை எடுத்து சுவைத்தவன் வியப்போடு

''இது என்ன வடை ஸ்வேதா... வெளியே காரமாகவும் உள்ளே இனிப்பாகவும் இருக்கிறதே...'' என்று கேட்டான்.

ஸ்வேதா ஒரு வடையை எடுத்து பிய்த்துக் காண்பித்தாள்... உள்ளே உருண்டையாய் இனிப்பான பயத்தம் பருப்பு இருந்தது.

''இதற்கு பெயர் சிய்யம்... இனிப்புடன் வேகவைத்த பயத்தம் பருப்பு... தேங்காய் துருவல் எல்லாம் சேர்த்து பிசைந்து உருண்டையாக்கி அரிசி மாவில் தோய்த்து எண்ணையில் போட்டு எடுப்பார்கள். இதெல்லாம் எதற்கு உங்களுக்கு... சாப்பிடுங்கள்... இது உளுந்த வடை... இது குழிப்பணியாரம்...''

''மறு வீட்டு விருந்து என்றால்... இப்படித்தானா...?''

''இப்படித்தான்...''

''ஓ.கே.. எல்லோரும் கிளம்புங்கள். நாம் ஒரு இடத்திற்கு போகப் போகிறோம். தீபா... ரகு... க்விக்... அத்தை... நீங்களும்தான்...''

''நான் எதற்கு மாப்பிள்ளை..?''

''நீங்கள்தான் கட்டாயம் வரவேண்டும்... உங்கள் பெயரில் வாங்கியிருக்கும் வீட்டை பார்க்க வேண்டாமா?''

''ஹோய்...'' ஆனந்தக் கூச்சலிட்டார்கள் தீபாவும்... ரகுவும்...

காரின் பின்பக்க சீட்டில் லீலாவதியும்... தீபாவும்... ரகுவும் ஏறிக்கொள்ள ஸ்வேதா ரிஷியின் அருகே அமர்ந்தாள்... சேலத்தின் மையப்பகுதியில் ஒரு தெருவிற்குள் கார் நுழைந்தது.

''இதுதான் உங்கள் வீடு...'' என்று ரிஷி காட்டிய வீட்டைப் பார்த்த அவர்கள் அனைவரும் அயர்ந்து போனார்கள்.



16

கீழ் தளத்தில் இரண்டு... முதல் மாடியில் இரண்டு... இரண்டாவது மாடியில் இரண்டு... என்று மொத்தம் ஆறு வீடுகள் கொண்ட குட்டி அபார்ட்மெண்ட் அது... சுற்றிலும் காம்பவுண்டு சுவர் எழுப்பி... பக்கவாட்டில் நிறைய இடம் விட்டு ஆஸ்பெஸ்டாஸ் கூரை அடிக்கப்பட்டிருந்தது... அதன் அடியில் இரு சக்கரவாகனங்களும்... கார் ஒன்றும் நின்று கொண்டிருந்தன.

''இந்த அபார்ட்மென்டிலா எங்களுக்கு வீடு வாங்கிக் கொடுத்திருக்கிறீர்கள்... ஏரியா ரிச் ஏரியாவாக இருக்கிறதே அத்தான். அப்படியானால் விலை அதிகம் இருக்குமே...'' தீபா அந்த அபார்ட்மென்டை பார்வையிட்டவாறே கேட்டாள்.

''இது போல ஒரு அபார்ட்மென்டில்தான் என் பிரண்ட் ஒருத்தன் குடி இருக்கிறான்... வாடகையே



அதிகமாய் சொல்வான். இதையே வாங்குவது என்றால்... எப்படி அத்தான்... நான் ஏதோ சின்னதாய் ஒரு வீட்டை நினைத்தேன்... நீங்கள் இப்படி ஒரு அபார்ட்மென்டில் வீடு வாங்கிக் குடுப்பீர்கள் என்று நினைக்கவே இல்லை...'' ரகு முகமெல்லாம் மலர கூறினான்.

''நம் வீடு... முதல் மாடியிலா... இல்லை இரண்டாவது மாடியிலா...'' என்று தீபா மீண்டும் கேட்டாள்.

''ஏன் கிரௌவுன்ட் ப்ளோரில் இருக்கக்கூடாதா...'' ரகு சண்டைக்கு வந்தான்.

''போடா... மாடியில் என்றால் பால்கனி இருக்கும்.... நாம் படிக்கலாம்.... உலாத்தலாம்... இன்னும் ஹாயாய் சேர் போட்டு உட்கார்ந்து வேடிக்கை பார்க்கலாம்....'' தீபா அனுபவித்து ரசனையாய் கூறினாள்.

''வெயிட்... வெயிட்... நீங்கள் இரண்டு பேரும் என்ன நினைத்துக் கொண்டு இருக்கிறீர்கள்.... இந்த அபார்ட்மென்டில் ஒரு வீட்டை நாம் வாங்கியிருக்கிறோம் என்றா...? அதுதான் இல்லை...'' என்றான் ரிஷி.

''என்ன அத்தான்.... இந்த அபார்ட்மென்டில் நம் வீடில்லையா...?'' ரகுவின் முகம் ஏமாற்றத்தில் கூம்பியது.

தீபாவின் முகமும் விழுந்து விட்டது என்றாலும் வயதில் பெரியவள் என்பதால் ஏமாற்றத்தை வார்த்தைகளில் வெளிக்காட்டாமல் அமைதியாக இருந்தாள்.

ரிஷி... ஸ்வேதாவின் முகத்தையும்... லீலாவதியின் முகத்தையும் பார்த்தான். நடப்பதை வேடிக்கை பார்க்கும் மனோநிலை மட்டும்தான் ஸ்வேதாவிற்கு...



லீவாவதியோ... மருமகன் என்ன சொன்னாலும் சரி என்ற நிதானத்தில் நின்றாள்.

''இந்த அபார்ட்மென்ட் முழுவதும் அத்தையுடையது தான்...'' என்றான் ரிஷி.

''வாட்...'' தீபா... அப்படியே தெருவில் உட்கார்ந்து விட்டாள்.

''அத்தான்... என்ன சொல்கிறீர்கள்? நிஜாமாகவா சொல்கிறீர்கள்...'' ரகு திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டிருந்தான்.

ஸ்வேதாவோ... லீலாவதிக்கு திரும்பவும் புத்திகலங்கி விடக் கூடாதே என்ற கவலையுடன் தாயின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் நினைத்தது போலவே... லீலாவதியின் முகம் வியர்த்து விட்டது.

''ஸ்வேதா... என்னடி இது...'' என்று அவள் தள்ளாட... ஸ்வேதா சட்டென்று கார் கதவைத் திறந்து தாயை உள்ளே அமர வைத்து... தண்ணீர் பாட்டிலை எடுத்துக் கொடுத்தாள்... மெல்ல லீலாவதி ஆசுவாசமானவுடன்,

''என்னம்மா இது'', என்று கடிந்து கொண்டாள்.

''எனக்கு ஒன்னுமே புரியலைடி ஸ்வேதா... கை கால் எல்லாம் வெலவெலங்குது...''

''இதுதான் உங்கள் வீடு... என்று திரும்பத் திரும்ப மனதிற்குள் சொல்லிக் கொள்ளுங்கள்... சரியாகி விடும்...''

ரிஷி.... கார் கதவைத் தட்ட... இருவரும் கீழே இறங்கினார்கள்.

''வாங்கத்தை... அபார்ட்மென்டை சுற்றிப் பார்க்கலாம்... இதில் முதல் மாடியில் உள்ள ஒரு வீட்டைத்



தவிர... மற்ற வீடுகளில் ஆட்கள் குடியிருக்கிறார்கள்... அவர்கள் கொடுத்த அட்வான்ஸ் பணத்தை... நாம் கழித்துக் கொண்டுதான் மீதப் பணம் கொடுத்திருக்கிறோம்... யாராவது வீடு காலி பண்ண நினைத்தால் எனக்கு போன் போடுங்கள்... நான் அட்வான்ஸ் தொகையை கொடுக்கிறேன்.''

பேசியபடி... அந்த வீட்டின் கதவைத் திறந்தான் ரிஷி... பெரிய ஹால்... அதையொட்டிய இரண்டு படுக்கையறைகள்... அட்டாச்சுடு பாத்ரூம் வசதியுடன் இருந்தன... சுவரெல்லாம் டைல்ஸ் பதிக்கப்பட்ட சமையலறை... அதை ஒட்டிய டைனிங் ஹால்... அதையடுத்து வெண்மை நிற டைல்ஸ் பதிக்கப்பட்ட பூஜையறை... ஹாலில் இருந்து ஒரு பால்கனி... பெட்ரூம்களில் சின்னதாய்... இரண்டு பால்கனிகள்... இவையெல்லாம் போக இன்னும் ஓர் அறை... பாத்ரூம் வசதியில்லாமல் இருந்தது. அதை படிக்கும் அறையாக பயன்படுத்திக் கொள்ளலாம் என்றான் ரிஷி.

வீட்டைச் சுற்றிச் சுற்றி வந்த தீபாவும்... ரகுவும்... ஆனந்தத்தில் மிதந்தனர்... அவர்களுக்கு ரிஷியிடம் கேட்க நிறைய கேள்விகள் இருந்தன.

''இந்த அபார்ட்மென்டில் உள்ள ஆறு வீடுகளும்... இதே அமைப்பில் தான் இருக்குமா அத்தான்...''

''ஆமாம்''

''இந்த ஆறு வீடுகளுமே நமக்கு சொந்தமா அத்தான்...''

''ஆமாம்...''

லீலாவதியோ தரையில் அமர்ந்துவிட்டாள்.... அவள் அருகில் அமர்ந்த ஸ்வேதா

''என்னம்மா... இப்படி நெர்வஸ் ஆனால் எப்படி...'' என்று கேட்டாள்.

''தாங்க முடியவில்லைடி... உனக்கு யோகம் அடித்திருக்கிறது என்றுதான் நான் நினைத்து சந்தோசப்பட்டேன்... எங்களுக்கும் சேர்த்து விடியும் என்று நான் நினைத்துத் கூடப் பார்க்கவில்லை...'' லீலாவதி அழுதாள்.

ரிஷி அவள் முன் ஒரு காலை மடித்து... ஒரு காலை குத்துக்கால் போல் வைத்து அமர்ந்து கூறினான்.

''என்னை... உங்கள் மருமகனாக நினைத்தால்தான் இவ்வளவு கலக்கமும் வரும்... மகனாக நினைத்துப் பாருங்கள்... எல்லாம் சரியாகி விடும்...''

''மகன்தான் மாப்பிள்ளை... நீங்கள் எனக்கு மகன் தான்...''

வீடு திரும்பும்போது காருக்குள் நிசப்தம் நிலவியது... யாருமே ஒருவருடன் ஒருவர் பேசிக் கொள்ளாமல் வந்தனர்... ஒவ்வொருவரின் மனதிலும் ஒவ்வொரு சிந்தனை...

இரவில்... உள் அறையில் அவனது அணைப்பில் அடங்கியபோது... ஸ்வேதா மிக மெதுவாக கேட்டாள்...

''எதற்காக இவ்வளவு பெரிய விலை கொடுத்திருக் கிறீர்கள் ரிஷி...?''

ரிஷி அவளை விட்டு விலகிப் படுத்து முறைத்தான்.



''காலையில் இருந்து ஒன்றும் சொல்லாமல் குண சாலியாக இருக்கிறாயேன்னு இப்போதுதான் நினைத் தேன்..... உன் புத்தியை காட்டி விட்டாய்...''

''உண்மையைச் சொன்னால் உடம்பு எரிகிறதா?''

''ஏய்ய்... போடி... பெரிய உண்மையைக் கண்டு விட்டாய்... நான் கொடுத்திருப்பது விலையல்ல... நஷ்டஈடு...''

''நஷ்டஈடா?''

''ஆமாம்... இந்தக் குடும்பத்திற்கு நீதான் அஸ்தி வாரம்... இந்தக் குடும்பத்தை தாங்கி நின்ற தூண் நீ... உன்னை நான் இவர்களிடமிருந்து பிரித்துவிட்டேன்... அதனால் உன் இடத்தில் இருந்து இவர்களது தேவை களை நிறைவேற்றத்தான் அந்த அபார்ட்மென்ட்... வீட்டு வாடகை மிக அதிகமாகவே கிடைக்கும்... அது இவர்களுக்கு வசதியான வாழ்க்கையை கொடுக்கும்... மாதாமாதம் நாம் பணம் தரலாம்... ஆனால் அதை வாங்கிக் கொள்ள அவர்கள் தயங்குவார்கள்... நம் தயவில் வாழ்வது போல் கூசிப் போவார்கள்... அது எதற்கு? அதனால்தான் இதைச் செய்தேன்... எல்லா வற்றிலும் குற்றம் கண்டுபிடிக்காதே...''

அவன் மீண்டும் அவளை அணைத்தான்... ஸ்வேதா வினால் மறுக்க முடியவில்லை... அவன் தன் வீட்டிற்கு செய்யும் உதவிகள் தன்னை அவனிடம் அடிமைப் படுத்துவதை உணர்ந்தும்... அதைத் தவிர்க்க இயலாமல் தவித்தாள்.... அவனது கரம்பட்ட போது விலகி விட மனம் துடித்தது... ஆனால் அவன் செய்திருக்கும் மாபெரும் உதவி... அவளை விலகவிடாமல் தடுத்தது...





இதை அவன் உணர்ந்தே இந்த உதவிகளைச் செய்கிறான் என்று அவள் நினைத்தாள்.

ரிஷி அவளது நினைவுகளைப் பற்றிக் கவலைப் படவேயில்லை. முதல்நாள் காலையில் மணமகளாக அவள்... அவனருகில் அமர்ந்ததில் இருந்து... இந்த நொடி வரை அவளிடம் மயங்கிப் போயிருந்தான் அவன். ஷாலினியை விட்டுப் பிரிந்தபின் அவன் அனுபவித்த வேதனை... ஸ்வேதாவின் அருகாமையில் காணாமல் போவதை அன்று அலுவலகத்தில் உணர்ந்ததை அவன் மறக்கவில்லை... ஸ்வேதாவின் இயல்பான பெண்மை மிளிரும் அழகு... அவளிடமிருந்து வரும் பூவாசத்தோடு கூடிய இதமான நறுமணம்... அவளது படபடக்கும் பட்டாம்பூச்சிகள் போன்ற இமைகளைக் கொண்ட அழகிய பெரிய விழிகள்... அதில் தெரியும் கண்டிப்பு... அவளது நிமிர்ந்த நடை... நேர்கொண்ட பேச்சு... இவை எல்லாமுமே... ஷாலினியின் குணத்துக்கு எதிரானவை... அதனாலோ... வேறு எதனாலோ... ரிஷி... ஸ்வேதாவின் பால் அதிகமாய் ஈர்க்கப்பட்டான்.... ஆவியிடமிருந்து தப்பிக்க கடவுளிடம் அடைக்கலம் ஆவதைப் போல... ஷாலினியின் நினைவுகளிடமிருந்து தப்பிக்க ஸ்வேதாவின் நிழலை நாடினான் அவன்.

மீண்டும்.... மீண்டும் தேவையில்லாமல் அவன் ஸ்வேதாவிடம் பேசிப் பழக முயன்றபோது அவள் விலகி நின்றது... அவனுக்கு வெறியைக் கிளப்பிவிட்டு விட்டது. அன்று நடந்த நிகழ்விற்கு அடிப்படைக் காரணம்... ரிஷிக்கு ஸ்வேதாவின் மேல் எழுந்த அதிக ஈடுபாடு... ஷாலினியை மறக்கடிக்க அவளால் மட்டுமே முடிந்தது.... ஷாலினியை விட்டு ரிஷி பிரிந்த பின்...



அவனது வாழ்வில் நிறையப் பெண்களைச் சந்தித்தான்... ஷாலினியை விட அழகாக... இருந்த பெண்கள் அநேகம்... ஆனால் யாராலும் ஷாலினியை மறக்கடிக்க முடியவில்லை. ஆஷா ரிஷியின் மேல் அதிக அன்பு கொண்டவள்... அவளது அருகாமை கூட ரிஷிக்கு வெறுப்பாகத்தான் இருந்தது.... அவளாலும் ஷாலினி யின் நினைவுகளை மறக்க வைக்க முடியவில்லை...

இத்தனை பெண்களாலும் முடியாததை... அவ னறியாமலே செய்து முடித்தவள் ஸ்வேதா... மஞ்சள் கலந்த பவுடரின் வாசனையுடன்... வியர்வை மின்னும் முகத்துடன்... அவனை நிமிர்ந்து பார்த்து... 'யார் நீ...' என்று அவள் கேட்ட தினத்திலிருந்தே ஷாலினியை பற்றிய நினைவுகள் ரிஷிக்குள் இருந்து மறையத் தொடங்கின... ஏதோ ஒருவகையில் ஸ்வேதாவின் கவனத்தை கவர வேண்டும் என்பதற்காகவே அவளை நோகடித்தான்... வம்புக்கு இழுத்தான்.... இதை அவன்கூட முதலில் அறியவில்லை... ஸ்வேதாவை தொட்ட அந்த நாளில் அவளது அன்பான பேச்சுக்காக தான் ஏங்குவதை அவன் உணர்ந்தபோதுதான்... அதை அவன் உணர்ந்தான்.

ரிஷி ஸ்வேதாவை காதலித்தான்... அதனால்தான் அவனால் ஷாலினியை மறக்க முடிந்தது... ஒரு தேவதையின் எழிலோடு ஸ்வேதா... அவனை அர வணைத்தால் தான் அவனால் வாழ முடியும்... இல்லா விட்டால் ஷாலினியின் நினைவுகளில் மூழ்கி மூச்சுத் திணறி அவன் இறந்துவிடுவான்...

ரிஷி ஸ்வேதா தனக்கு வேண்டுமென்று ஆசைப் பட்டான்... அதை அவள் ஏற்றுக்கொள்ள மறுத்தபோது...

பொறுமையாக தன்னை உணர்த்த அவகாசம் இல்லாதவனாய்... புயலாய் அவளைத் தொட்டு தன்னுடையவளாக்கிக் கொண்டான்.

என்று ரிஷி ஸ்வேதாவைத் தொட்டானோ... அன்று ஷாலினி அவன் மனதை விட்டு முழுதாக அகன்றாள். ஷாலினியை நினைத்தவுடன் அவனது நெஞ்சில் எழும் வேதனை இப்போது வருவதில்லை....

மயிலிறகாய் மனம் வருடிய ஸ்வேதாவின் நினைவில் மனம் கனிந்தவனின் மனதில் ஷாலினியின் நினைவுகள் இல்லை... ரிஷி வேதனையிலிருந்து விடுபட்ட மகிழ்ச்சியுடன் ஸ்வேதாவின் கழுத்தில் தாலியைக் கட்டினான். அவளது கரம் பற்றிய நிமிடம் அவன் அடைந்த அமைதிக்கு அளவே கிடையாது....

ஷாலினியுடன் அவன் வாழ்ந்து பார்த்தவன்தான். ஆனால் ஸ்வேதாவைத் தொட்டபோது ஏற்பட்ட கிறக்கமும்... மயக்கமும் அன்றுவரை அவன் அறியாதவை... அந்தக் கிறக்கத்துடன் அவன் ஸ்வேதாவை இப்போதும் இறுக்கிக் கொண்டான்... அதிகம் பிடிவாதம் பிடிக்காமல் அவளும் அவனது அணைப்பில் அடங்கி விட்டாள்...

மறுநாள் காலையில் கிளம்பும் போது லீலாவதியிடம் வீட்டுச் சாவியைக் கொடுத்தான் ரிஷி...

''நாங்கள் அப்பா... அம்மாவுடன் ஊட்டிக்கு போகிறோம் அத்தை... திரும்பி வர ஒருமாதம் கூட ஆகலாம். அதனால் எங்களை எதிர்பார்க்காமல் வீட்டை மாற்றி விடுங்கள்... என் கம்பெனி மேனேஜரிடம் சொல்லியிருக்கிறேன். அவருக்கு போன் பண்ணுங்கள்... அவர்



வந்து எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார்... தீபா... கு... உங்களுக்கு பிடித்த பர்னிச்சர் அயிட்டங்களை அவரிடம் சொல்லி விடுங்கள்... புது வீட்டில் அவற்றைக் கொண்டு இறக்கி விடுவார்...''

''அதெல்லாம் வேண்டாம் மாப்பிள்ளை...''

''கட்டாயம் வேண்டும் அத்தை... யானை வாங்கிக் கொடுப்பவன் அங்குசம் வாங்கிக் குடுப்பதால் குறைந்து போய்விடமாட்டேன்... நீங்கள் வேண்டாமென்று சொல்வதை விட்டு விட்டு... எது உயர்ந்தது என்பதை மட்டும் தீர்மானியுங்கள்... அப்புறம்... வீட்டு வாடகைப் பணத்தை சரியான முறையில் செலவு பண்ணிவிட்டு... மீதத்தை பேங்கில் போட்டு விடுங்கள்... அந்தத் தெருவிலேயே பேங்க் ஒன்று இருக்கிறது. உங்களுக்கு அக்கவுண்ட் ஓப்பன் பண்ணிக் குடுக்கும்படி மேனேஜரிடம் சொல்லி இருக்கிறேன்... வெளியே போக வேண்டுமென்றால் மேனேஜருக்கு போன் பண்ணுங்கள்... கார் அனுப்புவார். அப்புறம் வேறு என்ன வேண்டும் அத்தை...?''

''எதுவும் வேண்டுமென்று கேட்கும் நிலையிலா எங்களை வைத்திருக்கிறீர்கள்... ஒரே நாளில் எங்களின் வாழ்க்கைத் தரத்தை மாற்றி விட்டீர்களே... இதைவிட வேறென்ன வேண்டும்?''

ஸ்வேதா... கணவனுடன் கிளம்பும்போது... டிக்கி நிறைய பலகாரம் நிரம்பிய புதுப் பாத்திரங்களை கொண்டு வந்து வைத்தாள் லீலாவதி...

''இது எதற்கும்மா?''



''இது மறுவீட்டுப் பலகாரம் ஸ்வேதா... இதைக் கொடுப்பது முறை...''

''எப்போது இதையெல்லாம் செய்தீர்கள்...?''

''நேற்று ராத்திரிதான்...''

எல்லோருக்கும் டாட்டா சொல்லிவிட்டுக் காரில் ஏறிக் கொண்டாள் ஸ்வேதா... கார் கிளம்பியது... சோர்ந்த முகத்துடன் சீட்டில் சாய்ந்து கொண்டாள் அவள்...

'நன்றிக் கடனை இவன் அதிகமாக்குகிறான்...இவன் மேலிருக்கும் வெறுப்பை வெளிக்காட்டிக் கொள்ள முடியாமல் நான் தவிக்கும் தவிப்பை உணராமல் என் குடும்பமே... இவனுக்கு கோவில் கட்டுகிறதே...'

அன்றே அவர்கள் ஊட்டிக்கு கிளம்பினார்கள்... பாண்டுரங்கனின் காரை டிரைவர் ஓட்ட... பின் சீட்டில் வசதியாக சாய்ந்தபடி பாண்டுரங்கனும்... அவர் அருகில் மோகனாவும் செல்ல... ரிஷியின் காரில் ஸ்வேதா அவனருகில் அமர்ந்து சென்றாள்...

ரிஷி உல்லாசமாய் காருக்குள் இருந்த சிடி பிளேயரை ஆன் பண்ணினான்.

**'உசுரே... போகுது... உசுரே... போகுது...**

**உதட்டை நீ கொஞ்சம் சுழிக்கையிலே...**

**மாமன் தவிக்கிறேன் மடிப்பிச்சை கேட்கிறேன்...**

**மனசைத்தாடி என் மணிக்குயிலே...**

**அக்கரைச் சீமையில் நீயிருந்தும்**

**ஐவிரல் தீண்டிட துடிக்குதடி...'**

'ராவணன்' படப்பாடல் ஒலித்தது.



ரிஷி அப்பாடலை ரசித்தபடி... உடன் இணைந்து பாடினான்... ஸ்வேதா அவனை ஒருமாதிரியாகப் பார்த்தாள்...

''என்னடி... அப்படிப் பார்க்கிறாய்?''

''உங்களுக்கேற்ற பாடல்தான்...''

ரிஷி கோபம் கொள்ளாமல் சிரித்தான்... அவளைத் திரும்பிப் பார்த்துக் கண்களை சிமிட்டியவாறு கூறினான்...

''நான் ராவணன்தான்... ஆனால் நீ ராமனின் மனைவி சீதையில்லை... என் மண்டோதரி நீ... அதைப் புரிந்து கொள்...''

''இது என்ன புதுக்கதை...''

''கதையில்லை நிஜம்... இந்தப் பாடலில் இருக்கும் வன்முறைதான் உன் கவனத்தில் படுகிறது... அவனது உண்மையான காதலும், தவிப்பும் தெரியவில்லை..''

''ஹ... வன்முறையாளன் போய் காதல் பேசுவதா?''

''காதலில் வன்முறைக் காதல் இருக்கக் கூடாதா?''

''வேண்டாம் ரிஷி... காதல் உயர்வானது... அதை வன்முறையென்னும் ஆணி கொண்டு அடிக்காதீர்கள்...''

''உனக்கு காதலைப் பற்றி என்ன தெரியும்... பூப் போல் மென்மையாக இருப்பது மட்டும் காதலில்லை... இப்பாடலில் தீ போல் பற்றி எரிகிறானே... அக்கினிப் பிழம்பாய் உருகிக் கரைகிறானே... அதுவும் காதல் தான்...''

ஸ்வேதா... அந்தப் பாடலில் வருவது போல உதட்டைச் சுழித்து விட்டுத் திரும்பிக் கொண்டாள். ரிஷியின் முகத்தில் தீயின் ஜ்வாலை தெரிந்தது.



## 17

சாலையின் ஓரமாய் இருந்த மரத்தின் அடியில் காரை திருப்பி நிறுத்திவிட்டு... அவள் பக்கம் திரும்பினான் ரிஷி.

"உனக்கு ஏன் இந்த அலட்சியம்?"

"ரிஷி... நடுரோட்டில் சண்டைக்கு இழுக்காதீர்கள்..."

"நானா உன்னுடன் வாக்குவாதத்தைக் கிளப்பினேன்?"

"நீங்கள் உங்கள் மனதில் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் ரிஷி... பணத்தினால் என்னை விலைக்கு வாங்கி விட்டதாய் நினைக்கிறீர்களா? அன்றைக்கு ஆபிஸில் என்னை அடிமைபடுத்தினீர்கள்... இன்றைக்கு விலையே கொடுக்கிறீர்கள்..."

"குதர்க்கமாகவே எப்போதும் பேசாதே..."

"எனக்கு உங்கள் முகத்தைப் பார்த்தால் வேறு மாதிரி பேசவே வரமாட்டேன் என்கிறதே... நான் என்ன செய்ய...?"

"நீ என்ன செய்ய வேண்டும் என்பதை நான் சொல்லவா...?

ரிஷியின் கேள்வியில் தன்னையும் அறியாமல் முகம் சிவந்தாள் ஸ்வேதா... செவ்வானமாய் சிவந்த முகத்தில்



கீழ்உதட்டை மடித்துப் பற்களால் கடித்தபடி... முகத்தை திருப்பிக் கொண்டாள்.

ரிஷியின் முகத்திலிருந்த தீயின் ஜ்வாலை மாயமாய் மறைந்தது... இவள் கிளப்பிவிடும் கோபத்தீயை இவளே அணைக்கும் நீராகவும் இருக்கிறாள் என்பதை அறியாதவளாய் இவள் இருக்கிறாளே என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டான் ரிஷி.

"வேண்டாம்..." என்று கூறியவளின் அருகே நெருங்கி அமர்ந்து அவள் தோள் மேல் கை போட்டு அவள் முகத்தை தன் பக்கம் திருப்பிய ரிஷி... அவளது விழிகளுக்குள் பார்த்தபடி...

"ஏன் வேண்டாம்? நீதானே... நான் என்ன செய்யட்டும் என்று கேட்டாய்... நீ கேட்டதற்குத்தானே... நானும் சொல்லவா என்று கேட்கிறேன்... இப்போது வேண்டாமென்றால் எப்படி...?" என்று வினவினான்.

"நீங்கள் எதையாவது எக்குத்தப்பாய் கேட்டு வைப்பீர்கள்...?"

"எக்குத்தப்பா?... ஹா... ஹா..."

"வேண்டாம் ரிஷி... கிட்டே வராதீர்கள்..."

"ஸ்வேதா... நீதான் எவ்வளவு அழகாக இருக்கிறாய்...

"வேண்டாம் ரிஷி..."

"நீ எனக்கு வேண்டும் ஸ்வேதா..."

ரிஷி அவளைத் தன்னுடன் இறுக்கிக் கொண்டு அவள் முகம் நோக்கிக் குனிந்தான்... அவள் மேல் படர்ந்தான்... ஸ்வேதா விடுபட வகையில்லாமல் அவனது கைச்சிறையில் மாட்டிக் கொண்டாள்.



சற்று நேரம் கழித்துக் காரைக் கிளப்பிய ரிஷியின் முகத்தில் வெற்றிப் புன்னகை இருந்தது... சீழ்க்கையடித்தவாறு காரை அதி விரைவாய் ஓட்டினான்.... வேகம் தாங்காமல் ஸ்வேதா தடுமாறி அவன் மேல் விழ அவளைத் தாங்கிப் பிடித்துக் கொண்டான்.

"ச்சு... எதற்கு இந்த வேகம்?"

"அப்பாவின் காரைப் பிடிக்க வேண்டாமா?"

"அதற்கு நடுரோட்டில் வண்டியை நிறுத்தாமல் இருந்திருக்கலாமே..."

"நீதானே நிறுத்தச் சொன்னாய்?"

"நானா...? அடப்பாவி..."

"ஹஸ்பென்டை மரியாதையில்லாமல் 'டா' போட்டுப் பேசுகிறாயே..."

"இந்த ஹஸ்பென்டை தாராளமாய் 'டா' போடலாம்...."

"நீ என்ன வேண்டுமானாலும் போட்டுக் கொள்... நான் என்ன வேண்டாமென்றா சொல்லப் போகிறேன்? நீதான் வேண்டாம்... வேண்டாம்... என்று சொல்லி... என் வேகத்தை கிளப்பி விடுவாய்..."

அவன் சொல்வதன் அர்த்தம் புரிய... ஸ்வேதா மீண்டும் முகம் சிவந்தாள்... பேச்சை நிறுத்தி மௌனமானாள்... அவள் முகத்தைப் பார்த்தவனுக்கு... அவளிடம் மீண்டும் நெருங்க ஆசை வந்தது... அவனது முகக்குறிப்பிலிருந்து அதைக் கண்டுகொண்ட ஸ்வேதா அவசரமாய்

'வேண்டாம் ரிஷி...' என்று சொல்லப் போனாள்...



'சட்... இவன் வேண்டாம் என்றால்தானே கிட்ட வருவான்...' என்ற நினைவில் நாக்கைக் கடித்துக் கொண்டவள்

"ப்ளீஸ் ரிஷி..." என்றாள்.

"ப்ளீஸ் போட்டு விட்டாயா... ஏன் என்னை இப்படிக் கன்ட்ரோல் பண்ணுகிறாய் ஸ்வேதா? இது உனக்கே நியாயமாய் இருக்கிறதா?"

"நியாயத்தைப் பற்றியெல்லாம் நீங்கள் பேசாதீர்கள்..."

"ஏன்...?"

"வேதாளமெல்லாம் வேதம் சொல்லக்கூடாது..."

"அப்படி எதுவும் சட்டம் இருக்கிறதா?"

"சட்டமெல்லாம் அதை மதிப்பவர்களுக்கும்... கட்டுப்படுகிறவர்களுக்கும்தான் உங்களுக்கு இல்லை..."

அவள் வெறுப்புடன் பேச... அவனோ அதை ரசித்துச் சிரித்தான்... அவளது கோபம் அவனுக்கு வேடிக்கையாக இருந்தது...

"கோபத்தில் உன் முகம் எவ்வளவு அழகாக இருக்கிறது?"

"உங்களுக்கு வேறு பேச்சே... பேசத் தெரியாதா?"

"முந்தாநாள் காலையில் தாலிகட்டியவனுக்கு வேறு பேச்சு பேச எப்படித் தோன்றும்?"

"என்னவோ... தாலிகட்டியபின்தான்... பெண்டாட்டியைத் தொட்டது போல பேசுகிறீர்களே... தாலி கட்டுவதற்கு முன்பே தொட்டுவிட்ட உங்களால் எப்படி இப்படிப் பேச முடிகிறது..."

''இதோபார்... உன் மேலிருக்கும் அதிக அளவு ஆசையினால்தான் அன்றைக்குத் தொட்டேன்... தாலி கட்டுவதற்கு முன்பே... அந்த வேகம் காட்டியவன்... தாலிகட்டி... உரிமையுடன் என் மனைவியாக்கிக் கொண்டபின் எவ்வளவு வேகம் காட்டுவேன்...? எட்டாக்கனியாக நீ இருந்தபோது... இழுத்துப் பறித்தவன் நான்... இப்போது நீ என் கையில் இருக்கும் கனி... எப்படி சும்மா இருப்பேன்...?''

''ஸோ... நான் சாப்பிடும் பொருள்தான்... ரத்தமும் சதையுமாய் நிற்கும் மனுஷியில்லை... எனக்கும் மனம் இருக்கிறது... அதற்கும் உணர்வுகள் இருக்கின்றன என்பதெல்லாம் உங்களுக்குத் தோன்றாது...?''

''உன் மனதில் வேண்டாத எண்ணங்களை போட்டு வைத்திருக்கிறாய்.... அதை மதித்து நான் கேட்டால் தேவையில்லாமல் பேசுவாய்...''

''உங்களுக்குத் தேவையானதை மட்டும்தான் நான் நினைக்க வேண்டும்... உங்கள் விருப்பப்படிதான் நான் பேசவேண்டும்... அப்படித்தானே...''

''இல்லையே... அப்படி என்றைக்காவது நான் சொல்லியிருக்கிறேனா... என் விருப்பப்படி நான் பேசுகிறேன். எனக்குத் தேவையானதை நிறைவேற்றிக் கொள்கிறேன்... இதில் நீ ஆட்சேபிக்க என்ன இருக்கிறது...?''

''எதுவும் இல்லையா...? அடப்பாவி... உன் விருப்பத்திற்காக என்னை நாசப்படுத்தினாய்... உன் தேவைக்காக... என் சுயமரியாதையை குழி தோண்டி புதைக்க வைக்கிறாய்... அது உனக்குத் தெரியாதா...?''



''பரவாயில்லையே... 'வா.... போ...' என்று நெருங்கி வந்து விட்டாயே... நமக்குள் எதற்கு தேவையில்லாத பார்மாலிட்டீஸ்... எல்லாம்... நான் உன் ரிஷி... நீ விருப்பம் போல் என்னிடம் பேசலாம்...''

''ரிஷி... நான் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறேன்... நீங்கள் என்ன பேசுகிறீர்கள்...? பேச்சை டைவர்ட் பண்ணாதீர்கள்...''

''திரும்பவும் 'வாங்க... போங்கவா...' நீ ஒரு நிலையாய் பேச மாட்டாயா?''

''எனக்கு இந்தக் கல்யாணத்தில் விருப்பமே இல்லை... என்னைக் கட்டாயப்படுத்தி கல்யாணம் பண்ணியிருக்கிறீர்கள்... மறந்துவிடாதீர்கள்....''

''ஏன் விருப்பமில்லை...? வேறு யாரையும் காதலிக்கிறாயா?''

''அந்தக் கருமத்தையெல்லாம் நான் நினைத்ததே கிடையாது...''

''காதல் என்ன கருமமா? நீ என்ன ஔவையாரா?''

''நான் எதுவாக வேண்டுமானாலும் இருந்து விட்டுப் போகிறேன்.. உங்களுக்கு என்ன வந்தது.''

''அதையேன் கேட்கிறாய்.. என்ன என்னவோ நினைவுகளும்.. ஆசைகளும் வருகின்றன. அதோ அந்த மரத்தடியில் காரை நிறுத்தவா?''

''ரிஷி...''

அழுகையும் ஆத்திரமும் ஒன்று சேர ஸ்வேதா அவனைப் பார்த்து முறைத்தாள். காரை ஓட்டியவாறு நிதானமாய் அவளைத் திரும்பிப் பார்த்துக் கூறினான் ரிஷி.



''இதோ பார்... நீ என் மனைவி.. நான் உன் கணவன் நம் கடைசி மூச்சு வரை இணை பிரியாமல் வாழ வேண்டிய பந்தத்தில் நாம் இருக்கிறோம். நடந்ததை மறந்து விடு.. நடக்க வேண்டியதை யோசி...''

''இனி நடக்க வேண்டியது என்ன பாக்கியிருக்கிறது?''

''நாம் அப்பா... அம்மா ஆக வேண்டாமா? என் அப்பா பாவம் உடல்நிலை சரியில்லாதவர்.. பேரனைப் பார்க்க ஆசைப்படுகிறார். என் அம்மா என் மேல் உயிராய் இருப்பவர்கள். பேத்தியைப் பார்க்க வேண்டுமென்று விருப்பப்படுகிறார்கள். அதற்கு நம்மால் ஆனதைச் செய்ய வேண்டாமா? ஏன் இப்படிப் பொறுப்பில்லாமல் பேசுகிறாய் ஸ்வேதா.''

'இவன் ராட்சஸன்..' என்று தோன்றியது ஸ்வேதாவிற்கு. இவனது விருப்பப்படிதான் இவன் பேசுவான். இவனது விருப்பத்திற்கு ஏற்ப அவளை வளைக்கவும் செய்வான்.

''எப்படி எதுவுமே நடக்காததுபோல் இயல்பாய் பேசுகிறீர்கள் ரிஷி.''

''ஸ்வேதா.. தேவையில்லாமல் குழப்பிக் கொள்ளாதே... அதோ அப்பாவின் கார் தெரிகிறது. இனி நிதானமாய் காரை ஓட்டலாம். நான் சொல்வதைக் கேள்.. எனக்கு உன்னைப் பிடித்திருக்கிறது. ரொம்பவும் பிடித்திருக்கிறது.''

''எனக்கு உங்களைப் பிடிக்கவில்லை. துளிகூடப் பிடிக்கவில்லை.''

''ஈஸிட்.. நேற்று காலையில் நம் பெட்ரூமில் என்னைக் கட்டிக் கொண்டு 'ப்ளீஸ்' போட்டது நீதான். நேற்று



மதியம் உன் வீட்டு பாத்ரூமில்.. திரும்பவும் என்னுடன் இழைந்து கொண்டு 'ப்ளீஸ்..' போட்டவளும் நீதான். அப்போது மட்டும் எப்படி என்னை பிடித்திருந்தது?''

''அது.. அது... வந்து...'' ஸ்வேதா தடுமாறினாள்.

'எப்படி இவனிடம் செல்வது...' என்று அவள் திணறிக் கொண்டிருக்கையில் அவன் இலகுவாகக் கேட்டான்.

''நான் சொல்லட்டுமா..?''

''என்ன சொல்லப் போகிறீர்கள்?''

''ஏனென்றால்.. நீயாய் என்னைக் கட்டித் தழுவிக் கொண்ட இரு சமயங்களிலும் உனக்கு என்னிடம் காரியம் ஆக வேண்டியிருந்தது. அதனால் 'ப்ளீஸ்...' போட்டு என்னைக் கட்டிக் கொண்டாய்.. ஆம் ஐ ரைட்?''

'ஆமாம்...' என்று சொல்ல முடியாமல் உடல் கூசிப் போனாள் ஸ்வேதா. 'இவன் எமடன்.. கண்டுபிடித்து இருக்கிறான் அப்புறமும் ஏன் பேசாமல் இருந்தான்...'

அதற்கும் அவனே விடையைச் சொன்னான்.

''ஏன் பேசாமல் இருந்தேன் தெரியுமா? நீ செய்ததைத்தான் எல்லா மனைவிகளும் அவர்களுடைய கணவன்களிடம் செய்வார்கள். நான் உன் எம்.டி.யாக இருந்தபோது எத்தனையோ முறை உன்னிடம் கோபப் பட்டிருக்கிறேன். ஃபைலை தூக்கி உன் முகத்தில் விட்டு எறிந்து இருக்கிறேன். அப்போதெல்லாம் சமாதானப் படுத்த நீ 'ப்ளீஸ்..' போட்டு என்னைக் கட்டித் தழுவினாயா?''

''சேச்சே...''

''இப்போது மட்டும் ஏன் இப்படிச் செய்தாய்..? உன்னையும் அறியாமல் உன் மனதில் இருக்கும் உணர்வு

இது.. நீ என் மனைவியென்ற உரிமை... நானும் கணவன் என்ற பந்தம். நீ.. என்னைத் தொட்டுத் தழுவிக் கெஞ்சினாய்.. நான் குற்றம் கண்டுபிடிக்க என்ன இருக்கிறது? ஸ்வேதா.. நீ என்னை விரும்புகிறாயோ இல்லையோ.. அது எனக்குத் தெரியாது. நீ வேறு யாரையும் விரும்பவில்லை.. எனக்கு அது போதும்.''

அதற்கு மேல் பேசாமல் அவன் காரைச் செலுத்த.. பேசியது வரை போதும் என்று தலையைப் பிடித்துக் கொண்டு ஸ்வேதாவும் பேசாமலிருந்தாள். இரவு நெருங்கும்போது அவர்கள் கோயம்புத்தூரைத் தாண்டி இருந்தார்கள்.

''ஸ்வெட்டரை போட்டுக் கொள் ஸ்வேதா.. குளிரும்.''

''குளிரடித்தால் பார்த்துக் கொள்ளலாம்.''

''குளிரைக் கூடப் பார்க்க முடியுமா?''

''ச்ச்... நான் வாயைத் திறக்கவே கூடாதா?''

ரிஷி பதில் சொல்லாமல் அவளைத் திரும்பிப் பார்த்துச் சிரித்தான்... அவள் பதிலுக்குச் சிரிக்காமல் உம்மென்று வந்தாள்.

''ஸ்வேதா.. அப்பாவுக்கு உடம்பு சரியில்லை.''

''ஆமாம்...''

''அம்மா பாவம்.. அப்பாவுக்காக எஸ்டேட்டில் வந்து இருக்கிறாங்க.''

''ஆமாம்.''

தெரிந்த விசயத்தை இவன் ஏன் திரும்பவும் சொல்கிறான்.. என்ற குழப்பத்துடன் ஸ்வேதா 'ஆமாம்..' போட்டுக் கொண்டிருந்தாள்.



''ஆக்சுவலாய்.. நாம் ஹனிமூனிற்கு வெளி நாட்டிற்குப் போயிருக்க வேண்டும். ஆனால் அப்பாவின் உடம்பு இப்படியிருக்கும் போது.. நாம் அவர் பக்கத்தில் இருக்காமல் வெளிநாடு போவது சரி வராது...''

''இப்போது நான் இதைக் கேட்டேனா?''

''நீ கேட்கா விட்டாலும் நான் சொல்ல வேண்டு இல்லையா?''

''இதுவே எனக்குப் பிடிக்காத கல்யாணம்.. இதற்கு ஹனிமூன் ஒன்றுதான் குறைச்சல்... பேசாமல் வண்டியை ஓட்டுங்கள்...''

''உனக்குக் குறைச்சல் இல்லைடி... ஆனால் எனக்குக் குறைச்சலாயிற்றே.''

''அதற்கு நான் பிணையில்லை...''

''நீ எதற்குத்தான் பிணை?''

''நீங்கள் கழுத்தில் கட்டியிருக்கும் இந்தத் தாலிக்கு...''

அவள் வெறுப்புடன் கூறினாள். அதை அவன் கவனித்தாலும்.. பெரிது படுத்திக் கொள்ளாமல் அவன் போக்கில் பேசிக் கொண்டிருந்தான்.

''சேலத்தில் கம்பெனியை கவனித்துக் கொள்ள ஜி.எம். இருக்கிறார். நம்பிக்கையான ஆட்கள் இருக்கிறார்கள். அதனால்.. நாம் ஊட்டியில் நம் ஹனிமூனை வைத்துக் கொண்டால்... அப்பா அம்மாவுடன் கூட இருந்தது போலவும் இருக்கும். ஹனிமூனை என்ஜாய் பண்ணியது போலவும் இருக்கும். நானும் எஸ்டேட் கணக்கு வழக்கைப் பார்த்துக் கொண்டது போலவும் இருக்கும். ஒரே கல்லில் இரண்டு மாங்காய் என்றுதானே





கேள்விப்பட்டிருப்பாய்? இது ஒரே கல்லில் மூன்று மாங்காய்.. எப்படி?''

அவன் பெருமையாக அவளைப் பார்க்க.. அவள் வெறுமையாகப் பதிலுக்குப் பார்த்தாள். அவனுக்கு எரிச்சல் வந்தது.

''உன்னிடம் சொல்வதற்கு இந்தச் செடி கொடிகளிடம் சொல்லலாம்... அதாவது காது கொடுத்துக் கேட்கும்.''

''சொல்ல வேண்டியது தானே.. உங்களை யார் தடுத்தது...?''

''அதைச் சொல்லு.. நீயா வந்து தடுக்கப் போகிறாய்? ஏண்டி.. இப்படி இருக்கிறாய்?''

''ஏதோ இருக்கிறேன்...''

அவள் அலுத்துக் கொண்டாள். ஏதோ சொல்ல வாயெடுத்த ரிஷி... அவளை ஓர் பார்வை பார்த்துவிட்டுப் பேசாமல் வண்டியை ஓட்டினான். அகன்ற பெரிய இரும்பு கேட் திறக்க.. இரண்டு கார்களும் உள்ளே நீண்டு சென்ற பாதையில் வழுக்கி ஓடின.

''என்ன இன்னும் வீடு வரவில்லை...'' என்று வினவினாள் ஸ்வேதா. ஊட்டிக்குக் கிளம்பியதிலிருந்து இப்போது வரை தானாய் எதுவும் பேசாதவள் முதல் முதலாய் கேட்பதை உணர்ந்தவன். அவளிடம் கூறினான்.

''இதிலிருந்து கொஞ்ச தூரம் போய்த்தான் வீடு வரும்.''

போர்டிகோவில் கார் நிற்க.. இறங்கிய ஸ்வேதாவின் உடலை ஊசியாய் துளைத்தது குளிர்.. மலைப் பிரதேசத்திற்கு இதுவரை வந்திராதவளாதலால் இந்த அளவுக்குக் குளிரை எதிர்பார்க்காத ஸ்வேதா.



''ஸ்ஸ்... ஆ...'' என்றபடி கைகளை இறுக்கிக் கட்டிக் கொண்டாள்.

காரிலிருந்த... சால்வையை எடுத்து அவளுக்கு போர்த்தி விட்ட ரிஷி.

''இதற்குத்தான்... சொன்ன பேச்சைக் கேட்கணும் இது...'' என்றான்.

பதிலுக்குப் பதில் பேச வாயெடுத்த ஸ்வேதா. பாண்டுரங்கனும் மோகனாவும் இறங்குவதைக் கண்டதும் வாயை இறுக மூடிக் கொண்டாள்.

ரிஷி.. தகப்பனாரின் அருகே விரைந்தான்.

''எதுவும் பிராப்ளம் இல்லைல்ல... அப்பா...''

''நோ.. பிராப்ளம் ரிஷி...''

பாண்டுரங்கன் சோர்வாகச் சிரித்தார். இறுக்கமான ஸ்வெட்டர் அணிந்திருந்தார். மோகனாவுடன் சேர்ந்து எல்லோரும் வீட்டுக்குள் சென்றார்கள்.



## 18

பெரிய விஸ்தாரமான ஹாலின் நடுவே பிரம்மாண்டமான சோபாக்கள் கிடந்தன. கூரையிலிருந்து.. அந்தக் காலத்து லஸ்தர் விளக்கு தொங்கிக் கொண்டிருந்தது. ஹாலின் ஓரமாக.. அகன்ற மாடிப்படிகள்.. இருந்தன. ஹாலின் இருபுறமும் அறைகள் இருக்க..

ஹாலின் நடு மையத்தில்... அலங்கார வளைவோடு ஒரு வாசல் இருந்தது. அதனுள்ளே அந்தக் காலத்து அலங்கார வேலைப்பாடுகளோடு நீண்ட சாப்பாட்டு மேஜை இருந்தது. அதன் இரு நடு மையத்திலும் இரு நாற்காலிகள் போடப்பட்டிருக்க... பக்க வாட்டில் இருபுறமும் நாற்காலிகள் இருந்தன. பெரிய அளவில் விருந்துகள் நடைபெறும் இடம் என்று பார்த்தவுடனே தெரிந்தது. சாப்பாட்டு அறையை ஒட்டிய வராண்டாவில் போனால் பெரிய சமையலறை... ஹாலின்.. ஒரு கோடியில் பூஜையறை.

எங்கு பார்த்தாலும் செல்வச் செழிப்புடன் இருந்த அந்த வீட்டில் எத்தனை அறைகள் இருக்கின்றன என்பதே ஸ்வேதாவிற்கு தெரியவில்லை. காலையில் முதல் வேலையாக அதைக் கணக்கெடுக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள் ஸ்வேதா.

விழி விரிய வீட்டைப் பார்த்துக் கொண்டிருந்தவளின் அருகே வந்த பாண்டுரங்கன் பரிவுடன் வினவினார்.

''என்னம்மா... அப்படிப் பார்க்கிறாய்..?''

''நான் இதற்கு முன் இது போன்ற வீடுகளைப் பார்த்ததே இல்லை மாமா.. சினிமாக்களில் வரும் வீடு போல் பெரிதாக இருக்கிறது. சேலத்தில் இருக்கும் வீடு நவீனமானது... இந்த வீடு.. அந்தக் காலத்து அரண்மனை போல் இருக்கிறது.''

''சரியாகக் கண்டுபிடித்து விட்டாய் ஸ்வேதா. இந்த வீடு கட்டி நூற்றைம்பது வருடங்களாகின்றன.''

''அடேங்கப்பா...'' வியப்புடன் கூறினாள் ஸ்வேதா.



''இது பரம்பரையாய் எங்கள் வசம் இருக்கும் எஸ்டேட்ம்மா.. இந்த பங்களாவை விஸ்தரித்து... என் கொள்ளுத் தாத்தா கட்டினாராம்..'' வாஞ்சையுடன்... வீட்டுச் சுவரைத் தொட்டுப் பார்த்தபடி கூறினார் பாண்டுரங்கன்.

''டைனிங் ஹால் கூட வித்தியாசமாய்.. பழமையின் நினைவுச் சின்னமாய் இருக்கிறது...''

''ஆமாம்மா.. எத்தனை விருந்துகள் இங்கே நடந்திருக்கும் தெரியுமா? என் சின்ன வயசில் நான் இங்கே தான் இருந்தேன். எங்கள் கல்யாணத்திற்குப் பிறகு... மோகனாவிற்கு.. இந்த மலையின் மேல் வாழ்வது பிடிக்கவில்லை. அவளுக்காக... சேலத்தில் தொழில் தொடங்கினேன். இந்த முப்பத்தி மூன்று வருடங்களில் அது பெரிய அளவில் வளர்ந்து நிற்கின்றது. எங்களின் வசதிக்கேற்ப அங்கே தற்காலிக வசதிகளோடு வீட்டைக் கட்டினோம். ஆனாலும்.. என் வேர் இங்கேதானே இருக்கிறது? நான் வேரை மறந்து விட்டதால்தானோ.. என்னவோ... எனக்கு இந்த நோய் வந்து.. திரும்பவும் என்னை.. என் பிறப்பிடத்தில் கொண்டு வந்து சேர்த்திருக்கிறது...''

''ஏன் மாமா இப்படிச் சொல்கிறீர்கள்..?''

''உண்மையைத்தான் சொல்கிறேன் ஸ்வேதா. உன் அத்தை... ஏற்காட்டில் பிறந்து வளர்ந்தவள். அவளுக்குப் பிறந்ததில் இருந்தே.. இயற்கையுடன் பரிச்சயம் உண்டு. அதனால் இந்த ஊட்டியின் இயற்கை அழகு அவளை கவரவில்லை. ஜனங்களின் மத்தியில் இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டவள் அவளது பிறந்த ஊருக்குப் பக்கத்தில் இருக்கிறது என்பதற்காகவே சேலத்தில்



தொழில் தொடங்கினேன். அவளுக்கு நகர வாழ்க்கை மிகவும் பிடித்து விட்டது. வருடத்திற்கு ஒரு முறை ஊட்டிக்கு வர வேண்டுமென்றாலே.. முகத்தை தூக்கி வைத்துக் கொள்வாள்...''

பாண்டுரங்கன் சொல்லிக் கொண்டிருக்கும்போது வேலையாட்களை அதட்டியபடி சமையலறைக்குச் சென்ற மோகனா கண்ணில் பட, ''அத்தையைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லையே.. மாமா...'' என்றாள் ஸ்வேதா.

பாண்டுரங்கன் புன்னகைத்தார்.

''இப்போது நான் சொல்ல வந்த விசயமே அதுதான். அப்படி இந்த எஸ்டேட் வாழ்க்கையை வெறுத்தவள் இப்போது சேலத்தைப் பற்றிய நினைவே இல்லாமல்.. நகர்ப்புற வாழ்க்கையை மறந்து.. அவளுக்குப் பிடிக்காத எஸ்டேட் பங்களாவின் வாழ்க்கையை.. வாழ்கிறாள். ஏன்... எனக்காக... என் மேல் உள்ள பிரியத்திற்காக...''

பாண்டுரங்கனின் கூரிய விழிகள் ஸ்வேதாவிடம் சேதி சொல்லின. அவரின் வார்த்தைகளில் பொதிந்திருந்த அர்த்தம் ஸ்வேதாவிற்கு புரிந்தது. அவள் மௌனமாக கை விரல்களைப் பார்த்தாள். பாண்டுரங்கன் தொடர்ந்து பேசினார்.

''அவள் எங்கோ பிறந்து வளர்ந்தவள். நான் எங்கோ பிறந்து வளர்ந்தவன். இருவரையும் இணைத்தது எது? இந்தத் திருமண பந்தம்... அவளுக்காக நான் மிகவும் நேசித்த இந்த எஸ்டேட்டை விட்டு சேலத்திற்கு இடம் பெயர்ந்து போனேன். எனக்காக அவளுக்குப் பிடித்த டவுன் வாழ்க்கையை தியாகம் பண்ணி விட்டு இந்த



ஊட்டிக்கு வந்திருக்கிறாள் அவள். இதுதான் திருமண வாழ்க்கை ஸ்வேதா.. இது மிகவும் உயர்வான பந்தம். நீ நினைப்பது போல்.. இரு உடல்களும் ஒன்று சேர்வது மட்டும் திருமண வாழ்க்கையில்லை... இரு மனமும் ஒரு மனமாய் ஒன்று சேர்வதே திருமணம். இரண்டு மனங்களும் ஒன்று பட்டு வாழ வேண்டும். புரிந்ததா? நடந்தது எதுவாக இருந்தாலும் மன்னித்து மறந்துவிடு. இனி நீ வாழும் காலம் முழுவதும்... நீடிக்கப் போகும் இந்த பந்தத்தில் வருத்தங்கள் வேண்டாம்... இதயத்தில் தைத்திருக்கும் முள்ளை பிடுங்கி எறிந்து விடு.. மனதை அமைதியாக வைத்துக் கொள்...''

ஸ்வேதா மனம் வலிக்க தலையை மட்டும் ஆட்டினாள். அதற்குள் ரிஷி அவளை மாடியிலிருந்து அழைக்க.. மாடிப் படியில் ஏறினாள். மாடிப் படிகளின் முடிவில் நின்று கொண்டிருந்தவன்..

''மாமனாரிடம் பேசினால் மணிக் கணக்கில் பேசுகிறாய். மாமனாரின் மகனிடம் பேசினால். ஒவ்வொரு எழுத்தையும் கணக்குப் பார்த்துப் பேசுகிறாய். ஏனிந்த ஓரவஞ்சனை?'' என்று கேட்டான்.

''மாமனார். எனக்கு பெற்ற தகப்பனைப் போல.''

''உன் புருசன் உனக்கு வில்லன் போலவா..?''

''பின்னே இல்லையா?''

அன்று அலுவலகத்தில் நடந்ததை நினைத்துக் கொண்டே ஸ்வேதா கேட்டாள். அவனோ முகம் மாறாமல் சிரித்தான்.

''வில்லன் வேலையை இன்று நைட் காண்பிக்கிறேன். இப்போது வா... உனக்கு நம் பெட்ரூமை காண்பிக்கிறேன்.''

''நீங்கள் காணபிக்கா விட்டால் நானாய் பார்த்துக் கொள்ள மாட்டேனா?''

''நீயாய் எதையும் செய்து கொள்ளத்தான் துடிக்கிறாய்.''

''துடித்து என்ன செய்ய... நீங்கள் தான் விட மாட்டேன் என்கிறீர்களே...''

அறைக்குள் போனபடி பேசிய ஸ்வேதா. அடுத்த கணம் அவனது அணைப்பில் இருந்தாள்... அறைக் கதவை இறுக மூடிவிட்டு அவளை இறுக்கியிருந்தவன். அவளது காதோரம் குனிந்து கூறினான்.

''விட்டு விடவா.. உனக்கு தாலி கட்டி இருக்கிறேன்.''

அந்த ஊட்டியின் குளிர் உடம்பில் செய்த மாயத்தாலோ... பாண்டுரங்கனின் அறிவுரையாலோ.. இல்லை ஸ்வேதாவுக்கே தெரியாமல் அவளது அடிமனம் ரிஷியை நாடியதாலோ.. ஸ்வேதா அப்போதும் சரி.. சாப்பிட்டு முடித்து வந்த பின்னும் சரி.. ரிஷியின் அணைப்பிலிருந்து விலக முயலவே இல்லை... அதை அறிந்த ரிஷியின் தாபம் அலை மோதி எழுந்தது. முதல் இரண்டு நாட்களைப் போல இல்லாமல் அந்த இரவு மோக இரவாக அவனுக்கு அமைந்து போனது.

மறுநாள் காலையில்.. ரிஷியை எழுப்பி.. சூடான காபியை ஸ்வேதா நீட்டியபோது அவளை ஆழ்ந்து பார்த்தவன்.

''தேங்க்ஸ்...'' என்றான்.

அவன் எதற்குச் சொல்கிறான் என்பதை அறிந்தும் அறியாதவள் போல், ''காபி கொடுப்பதற்கெல்லாம்



தேங்ஸ் சொல்லுவார்களா.'' என்றபடி அறையின் ஜன்னல் திரைகளை விலக்கினாள்.

சூரிய வெளிச்சம் அறையினுள் விழுவதை ரசித்து அனுபவித்தபடி எழுந்து சென்று... அவளை முதுகுப்புறமாக அணைத்து அவளது கழுத்து வளைவில் முகம் பதித்தபடி ரிஷி கேட்டான்.

''எதற்கென்று உனக்குத் தெரிகிறதா?''

''எனக்குத் தெரியாது...''

''உண்மையிலேயே தெரியாதா... இப்போது வேண்டுமானால் நான் தெரிய வைக்கவா?''

''ஆரம்பித்து விட்டீர்களா...''

''இன்னும் ஆரம்பிக்கவே இல்லையே...''

அவனது கைகள் எல்லை மீற... அவள் கிளர்ந்து... திரும்பினாள். அவன் மார்போடு ஒண்டிக் கொண்டு கூறினாள்.

''ப்ளீஸ் ரிஷி...''

அவன் கண்களும்... அவள் கண்களும் சந்தித்துக் கொண்டன. ரிஷியின் விழிகள் மின்னின. ஸ்வேதாவின் விழிகள் சிரித்தன.

''ஓகே.. 'ப்ளீஸ்' போட்டதால் விடுகிறேன்...''

ரிஷி டவலை எடுத்துக் கொண்டு பாத்ரூமிற்குள் நுழைந்து கொண்டே ஸ்வேதாவிடம் வினவினான்.

''அப்பா எழுந்து விட்டாரா?''

''அப்போதே எழுந்து விட்டார். நீங்கள்தான் லேட்.''

''இரவு முழுக்க உழைத்தால்.. எப்படிச் சீக்கிரம் எழுந்து கொள்ள முடியும்?''



''உங்களை...''

ஸ்வேதா கட்டிலில் கிடந்த தலையணை ஒன்றை தூக்கி அவன் மேல் விசிற... அவன் பாத்ரூம் கதவை மூடிக் கொண்டு தப்பித்தான். அவன் குளித்து முடித்து வரும் போது அறையில் ஸ்வேதா இல்லை... உடை மாற்றி அவன் கீழே இறங்கிப் போனபோது... பாண்டு ரங்கன்... ஹாலில் சில பேரோடு அமர்ந்து பேசிக் கொண்டிருந்தவர்.. ரிஷியைப் பார்த்ததும்...

''இதோ... ரிஷியே வந்து விட்டான்...'' என்றார்.

''என்னங்கப்பா...'' என்றபடி வந்திருப்பவர்களை பார்வையிட்டான் ரிஷி. எல்லோரும் அவர்களுடைய எஸ்டேட்டில் வேலை செய்கிறவர்கள்.

''நம் எஸ்டேட்டில் உங்க திருமண வரவேற்பை நடத்தணும் இல்லையா. அதற்காக இவங்க வந்திருக்காங்க... நாளைக்கே நடத்தி விடலாமா?''

''நீங்கள் சொன்னால் சரிப்பா.''

ரிஷி.. சாப்பிட்டவுடன் எஸ்டேட்டைச் சுற்றிப் பார்க்கப் போய் விட்டான். ஸ்வேதா.. வீட்டின் முன்னால் இருந்த பாதையில்.. காலை வெயில் உடலில் படுவதை ரசித்தபடி நடந்தாள். வெயிலின் சூடு.. உடலில் இதமாகப் படிந்தது. பாதையின் இருபக்கமும்.. பழ மரங்களும் பூச்செடிகளும் கொண்ட தோட்டம் இருந்தது. தோட்டத்தின் உள்ளே.. சற்று நேரம் நடந்த பின்... வீட்டுக்குத் திரும்பினாள்.

மோகனா வாசலில் நின்றிருந்தாள். அவள் நிற்பதைக் கண்டதும் ஸ்வேதாவின் நடை விரைவாகியது... அவசரமாய் எட்டு வைத்து மாமியாரை அணுகியவள்.



''ஒன்றுமில்லை அத்தை.. சும்மா வெயிலில் நடந்து விட்டு வரலாமென்று போனேன்..'' என்று மன்னிப்புக் கோரும் பாவனையில் சொன்னாள்.

அவள் சொன்ன விதத்தைக் கண்டு மோகனா சிரித்து விட்டாள்.

''இப்போது நான் உன்னை எதுவும் கேட்கவில்லையே...''

''வாசலில் நின்று கொண்டிருந்தீர்களே...''

''நம் எஸ்டேட்டில் இருந்து தினமும் பறிக்கப்படும் காய்களை லாரியில் ஏற்றி விற்பனைக்கு அனுப்பி வைப்பார்கள். அதிலிருந்து நம் வீட்டிற்கு சமையலுக்கு என்று கொஞ்சம் காய் வகைகள் வந்து விடும். அதற்காக நிற்கிறேன். ஆமாம் ரிஷி.. எப்போது வருவான் என்று சொன்னானா?''

''சொல்லவில்லையே..''

''அவன் சொல்லாவிட்டால் நீ கேட்க வேண்டாமா?''

''எனக்குத் தெரியாது அத்தை...''

''இதைத் தெரிந்து கொள்ளாமல் எப்படிக் குடும்பம் நடத்தப் போகிறாய்? வெளியே வேலையைப் பார்க்கப் போகும் கணவன் எப்போது வீடு திரும்புவான் என்பது.. அவனுடைய மனைவிக்குத் தெரிந்திருக்க வேண்டும். உன் மாமா பிஸினெஸ் சம்பந்தமாக ஒரு நாளைக்கு பல இடத்திற்குப் போவார். பல வேலைகள் பார்ப்பார். அவர் எந்த நேரத்தில் எந்த இடத்தில் இருப்பார். யாரோடு பேசிக் கொண்டிருப்பார் என்பது எனக்குத் தெரிந்திருக்கும். அவராக ஒன்றும் என்னிடம் ஒப்பிக்க மாட்டார். தூண்டித் துருவி நான் கேட்பதுதான்.''

குருவிடம் பாடம் கேட்கும் சிஷ்யை போலத் தலையை ஆட்டிக் கேட்டுக் கொண்டாள் ஸ்வேதா.

''இனிமேல் கேட்டு வைத்துக் கொள்கிறேன் அத்தை.''

''சரி.. இப்போது காய் வந்து விட்டது. சமையலைப் பார்க்கலாம் வா...''

மோகனா சைக்கிளில் கொண்டு வந்த ஆளிடம் இருந்து பையை வாங்கிக் கொண்டு வீட்டுக்குள் செல்ல.. ஆட்டுக் குட்டி போல் அவளைப் பின் தொடர்ந்தாள் ஸ்வேதா.

மாமியாரின் நடையில் அவளது கண்டிப்பான குணம் தெரிந்தது. ஸ்வேதாவிற்கு கொஞ்சம் பயமாக இருந்தது.

சமையலறையில் சென்று காய்களை அங்கு வேலை செய்து கொண்டிருந்த பெண்மணியிடம் கொடுத்த மோகனா.. ஸ்வேதாவின் பக்கம் திரும்பி..

''இதுதான் சமையல் வேலை செய்யும் பொன்னம்மாள் சமையலுக்கு ஆள் இருக்கிறார்களே என்று நாம் அலட்சியமாய் இருந்து விடக்கூடாது. நமக்கு உடம்பு சரியில்லை என்றால்தான் முழுமையாக அவர்களை சமையல் செய்ய விட வேண்டும். மற்றபடி வீட்டு ஆண் பிள்ளைகளுக்கு எது பிடிக்கும் என்பதை தெரிந்து வைத்துக் கொண்டு.. இவர்களின் உதவியுடன்... நாமே செய்ய வேண்டும்.. என்ன புரிந்ததா?''

'பெண் பிள்ளைகளுக்கு நாக்கு இல்லையா? அவர்களுக்கு எதுவும் பிடிக்காதா' என்று மனதிற்குள் நினைத்தபடி வெளியே பூம்பூம் மாடு போல் மாமியார் சொன்னதற்கு தலையை ஆட்டினாள் ஸ்வேதா.



''கணவனின் மனதிற்குள் நுழைய எளிதான வழி எது தெரியுமா? அவனுக்கு வாய்க்கு ருசியாக சமைத்துப் போடுவதுதான்...''

பூம்பூம் மாடு தலையை ஆட்டியது.

''நீ அவனுக்குப் பிடித்த சமையலை செய்து போட்டாயென்று வை. அவன் ஹோட்டல் பக்கம் தலை வைத்துக் கூடப் படுக்க மாட்டான்.''

பூம்பூம் மாடு மீண்டும் தலையை ஆட்டியது.

''இன்றைக்கு பீன்ஸ்.. உருளைக் கிழங்கு.. தக்காளி.. சேனைக் கிழங்கு வந்திருக்கிறது. இதை வைத்து என்ன சமையல் செய்யத் தெரியும் உனக்கு?''

மோகனா.. ஆசிரியை கேள்வி கேட்பது போல் மிடுக்காக வினவ.. ஸ்வேதா சேலைத் தலைப்பை இழுத்துச் செருகிக் கொண்டு சமையல் மேடைக்கு நகர்ந்தாள்.

''அத்தை. மதியச் சமையலை நான் செய்கிறேன். மெனுவெல்லாம் சஸ்பென்ஸ்.. நீங்கள் மாமாவுடன் பேசிக் கொண்டிருங்கள்.''

மதிய உணவுக்காக ரிஷி வந்தபோது ஸ்வேதா சமையலறையில் இருந்தாள். மனைவியைக் காணாமல் தேடிய ரிஷி தாயிடம்,

''ஸ்வேதா எங்கேம்மா..?'' என்று வினவினான்.

''ஏன் என்னிடம் பேச மாட்டாயா?''

''உங்களிடம் பேசாமல் யாரிடம் பேசப் போகிறேன்? சும்மா அவளைக் காணோமே என்று கேட்டேன். அவள் நேற்று வந்தவள்.. நீங்கள் யார் என் அம்மா.. நீங்கள்தான் எனக்கு என்றைக்குமே பார்ஸ்ட்...''



''சும்மா உடான்ஸ் விடாதே... ஸ்வேதா சமையலறையில் இருக்கிறாள்.''

''சமையலறையிலா?''

வியப்புடன் ரிஷி அவளைத் தேடி சமையலறைக்குப் போனான். புடவை கொசுவத்தை லேசாக இழுத்து இடுப்பில் செருகிக் கொண்டு.. சேலைத் தலைப்பையும் அதே போல் இழுத்து இடுப்பில் செருகிக் கொண்டு ஸ்வேதா வேலை செய்து கொண்டிருந்தாள். அவள் அசையும் போதெல்லாம் அவளது நீண்ட பின்னல் இங்கும் அங்கும் அசைந்து ஆடியது. ரிஷி சத்தமில்லாமல் சமையலறைக்குள் சென்று அவளது கண்களைப் பொத்தினான். ஸ்வேதாவின் கையிலிருந்த கரண்டி நழுவியது. அவள் பதட்டத்துடன் அவனது கரங்களைத் தொட்டாள்.



## 19

ரிஷியின் கரங்களைத் தொட்டதுமே.. அவனின் ஸ்பரிசத்தை உணர்ந்து கொண்டாள் ஸ்வேதா. அவனது கையை விடுவிக்க முயன்றபடி,

''ஸ்ஸ்... விடுங்கள்.. என்ன இது.. பொன்னம்மாள் வந்து விடப் போகிறாங்க. சமையலறையில் வந்து இப்படிக் குறும்பு பண்ணுகிறீர்களே...'' என்றாள் ஸ்வேதா.

''பொன்னம்மாள் வந்துவிடப் போகிறாங்களா.. அப்போ இது யார்?'' என்றபடி அவளது கண்களைப் பொத்தியிருந்த கைகளை எடுத்தான் ரிஷி.



பக்கத்தில் நின்று கொண்டு பொன்னம்மாள் இதைப் பார்த்து ரசித்துச் சிரித்துக் கொண்டிருந்தாள். ஸ்வேதாவின் முகம் சிவந்து விட்டது.

''உங்களை யார் இங்கே வரச் சொன்னது?'' என்று கோபமாகக் கேட்டாள்.

''உன்னை யார் இங்கே இருக்கச் சொன்னது?''

''நான் இங்கே வேலையாக இருந்தேன்.''

''நான் உன்னைத்தேடி வந்தேன்.''

''போதும்.. போதும்.. வாங்க போவோம். பொன்னம்மா எல்லாவற்றையும் டைனிங் டேபிளில் வைத்து விடுகிறீர்களா?''

''அவங்க வைத்துக் கொள்வாங்க... நீ வா.''

இருவரும் ஒருவருடன் ஒருவர் வார்த்தையாடியபடி செல்வதைப் பார்த்துக் கொண்டே சமையலறைக்குள் வந்த மோகனா.. பொன்னம்மாளைப் பார்த்து,

''என்ன.. பொன்னம்மா.. இப்படிச் சிரிக்கிறாய்?'' என்று கேட்டாள்.

''நம்ம சின்னய்யாவும் அவருடைய பெண்டாட்டியும் சின்னப் புள்ளைகள் போல விளையாடுதுங்கம்மா.''

''காதல் கல்யாணமில்லையா.. அப்படித்தான் இருப்பார்கள்.''

மோகனா.. பாண்டுரங்கனின் அருகில் வந்து அமரவும்.. டி.வி.யிலிருந்து பார்வையைத் திருப்பிய பாண்டுரங்கன்.

''என்னவோ சொல்லிக் கொண்டு வந்தாயே..'' என்று வினவினார்.

''நம்ம ரிஷியும்.. ஸ்வேதாவும் சமையலறையில் விளையாடியதைப் பார்த்துவிட்டு பொன்னம்மாள் ஆச்சரியப்பட்டாள். காதல் கல்யாணம் பண்ணிக்கிட்டவங்க அப்படித்தான் இருப்பார்கள்ன்னு சொன்னேன்.''

அதைக் கேட்ட பாண்டுரங்கன் தாடையைத் தடவிக் கொண்டு யோசனையில் ஆழ்ந்தார். அதற்குள் மாடிப் படியில் கலகலவென்ற சிரிப்புச் சத்தம் கேட்டது. ஸ்வேதா ரிஷியுடன் பேசிச் சிரித்தபடி இறங்கிக் கொண்டிருந்தாள். அதைக் கண்ட பாண்டுரங்கனின் மனம் நிறைந்தது.

'நல்லவேளை... இவர்கள் இருவரும் ஒற்றுமையாக வாழத் தொடங்கி விட்டார்கள்.'

''அம்மா இன்றைக்கு என்ன மெனு?''

''அதை உன் பெண்டாட்டியிடம் கேளுடா...''

''ஏன் நீங்கள் சொல்ல மாட்டீர்களா?''

''தெரிந்தால்தானே சொல்ல முடியும்.''

''என்னம்மா புதிர் போடுகிறீங்க...''

''ஸ்வேதாதான் இன்றைக்குச் சமைத்தாள்... அதனால் என்ன சமையல்ன்னு அவளுக்கு மட்டும்தான் தெரியும்.''

''இவள் சமைத்தாளா... அப்போ... மதியம் நாங்க பட்டினிதானா?'' ரிஷி போலியாய் பயப்பட ஸ்வேதா முறைத்தாள்.

''நான் சமைத்தால் ஏன் பட்டினி கிடக்க வேண்டும்?''

''நானும் அப்பாவும் சாப்பாட்டு ராமன்கள்... இந்த உப்பு அதிகமாய்... புளிப்புக் குறைவாய் எல்லாம் சாப்பிடமாட்டோம்...''



''எதுவும் அதிகமாகவும் இருக்காது... குறைவாகவும் இருக்காது... சாப்பிட்டுப் பார்த்து விட்டுச் சொல்லுங்கள்...''

பீன்ஸ் குருமா... உருளைக்கிழங்கு சிப்ஸ்... சேனைக்கிழங்கு வறுவல்... தக்காளி ரசம்... என்று சுவையாக சமைத்திருந்தாள் ஸ்வேதா...

''எப்படிம்மா இவ்வளவு டேஸ்டாய் சமையல் பண்ணுகிறாய்...'' ரசித்துச் சாப்பிட்டபடி பாண்டுரங்கன் கேட்டார்.

''எங்கள் வீட்டில் நான்தானே சமைப்பேன்...'' என்று பதில் சொல்லியபடி ரிஷியை பார்த்த ஸ்வேதா... அவன் முறைப்பதைக் கண்டு குழம்பினாள்.

'ஏன் முறைக்கிறான்?' சட்டென்று தன் தவறு நினைவுக்கு வர அவசரமாய்,

''என் அம்மா வீட்டில் மாமா...'' என்றபடி... ரிஷியைப் பார்த்து கன்னத்தில் போட்டுக் கொண்டாள்.

ரிஷியின் முகத்தில் மென்னகை மலர்ந்தது... அவளைப் பார்த்தபடி சாப்பிட்டு முடித்து விட்டு மாடிக்குப் போய் விட்டான் அவன்... சற்று நேரத்தில் ஸ்வேதாவும் வந்துவிட்டாள்.

கட்டிலில் மல்லாந்து படுத்து தலைக்கு கீழே கையை அணைவாக கொடுத்தபடி அவளைப் பார்த்தவன்...

''மகாராணிக்கு மதிய வேலைகள் முடிந்துவிட்டதா...'' என்று கேட்டான்.

''மகாராஜா நகர் வலத்தை முடித்து விட்டாரா...'' என்று பதிலுக்கு கேட்டபடி அவனருகே வந்து அமர்ந்தாள் அவள்.





புரண்டு அவளது மடியில் படுத்தவன். அவளது முகம் பார்த்தான்... ''ஸ்வேதா... என்னைப் பிடித்திருக்கிறதா...''

''ஏன் கேட்கிறீர்கள்?''

''சொல்லேன்...''

''எனக்குத் தூக்கம் வருகிறது.''

அவனது தலையை நகர்த்தி தலையணையில் வைத்தவள் அவனருகே படுத்து கண்களை மூடிக் கொண்டாள். சற்று முன் அவனோடு இணக்கமாக பேசிக் கொண்டிருந்ததில் மலர்ந்திருந்த அவனது மனம் வாடிப் போனது... தூங்கிக் கொண்டிருந்தவளையே பார்த்துக் கொண்டு யோசனையாக இருந்தான் ரிஷி.

அலங்கார விளக்குகள் தோட்டத்தில் ஒளிர்ந்தன. தோட்டத்தில் சிறு மேடை போட்டு அதில் ஷாமியானா பந்தல் போட்டு... அதில் ரிஷியும் ஸ்வேதாவும் நின்று கொண்டிருந்தார்கள். கருநீல சூட்டும்... கோட்டும் அணிந்து கம்பீரமாக ரிஷி நிற்க... அருகில் கடல் நீலத்தில் வெள்ளியில் பொடிக்கற்கள் பதிக்கப்பட்ட உயர்ந்த ரக பிரிண்டட் சில்க் புடவையும் அதே சேலையில் வெட்டித் தைக்கப்பட்ட ரவிக்கையும் அணிந்து... வைரங்கள் ஒளிர ஸ்வேதா நின்று கொண்டிருந்தாள்.

அவள் உடுத்த வேண்டிய சேலையையும்... ரவிக்கையையும் மோகனா கொடுத்தபோது ஸ்வேதா ஆச்சரியப்பட்டுப் போனாள்...

''எப்போது இந்தப் புடவையை எடுத்தீர்கள் அத்தை...?''

''கல்யாண ஜவுளி வாங்கும் போதே... ஊட்டி ரிசப்சனில் நீ கட்டிக் கொள்வதற்காக சேலையையும் சேர்த்தே வாங்கினேன்...''



பெற்ற தாயைப் போல் பேணும் மாமியாரைக் கண்டு நெகிழ்ந்து போனாள் ஸ்வேதா... இப்படிப்பட்டவர்களின் பிள்ளை என்பதற்காகவே ரிஷியுடன் அவள் அனுசரித்துப் போகலாம்.

ஏற்கனவே... பாண்டுரங்கனின் மனம் வருத்தப்படக்கூடாது என்று நினைத்து ரிஷியுடன் வாக்குவாதம் செய்யாமல் இணக்கமாய் இருந்தாள் ஸ்வேதா... இப்போது மோகனாவின் குணத்தைக் கண்ட பின்பு... இவர்களின் மருமகளாக வர தான் தவம் செய்திருக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள்.

அதனால்... ரிஷியின் அருகாமையில் இப்போதெல்லாம் அவள் முகம் சுளிப்பதே இல்லை. அவனுக்கு அதுவே போதுமானதாக இருந்தது.

எஸ்டேட்டில் வேலை செய்தவர்கள் எல்லோரும் வரிசையில் வர... ரிஷி ஆண்களுக்கான உடைகளை கொடுக்க... ஸ்வேதா பெண்களுக்கு சேலைகளை கொடுத்தாள். எல்லோருக்கும் விருந்து கொடுக்கப்பட்டது.

அன்று இரவு... ரிஷியின் அணைப்பில் ஸ்வேதா இருந்தபோது அவன் மீண்டும் அந்தக் கேள்வியைக் கேட்டான்.

''என்னைப் பிடித்திருக்கிறதா ஸ்வேதா...''

ஸ்வேதா... கண் விழித்து... தன் முகத்திற்கு அருகாமையிலிருந்த அவனது முகத்தைப் பார்த்தாள். அகலமான நெற்றி... அடர்ந்த முடி... செதுக்கியது போன்ற மூக்கு... அடர்ந்த மீசை... காந்தக் கண்கள்... அபாயகரமான கவர்ச்சியுடன் இருந்தவனின் முகத்தில் தெரிந்த

தவிப்பைக் கண்டு அவளுக்கு அவன் மேல் பரிதாபம் வந்தது.

'அதற்காக... இல்லாத ஒன்றை இருப்பதாக எப்படிச் சொல்வது...' அவள் மனம் குழம்பியது.

''எனக்குத் தெரியவில்லை ரிஷி...'' என்றாள் அவள்.

''தெரியவில்லையா...''

''ஆமாம்... தெரியவில்லை...''

அவன் திகைப்புடன் அவளது முகத்தையே பார்த்தான். அதில் பொய்யில்லை... பேசாமல்... அவளை இறுக்கிக் கொண்டு தூங்கிவிட்டான்.

அடுத்து வந்த நாட்களில் ரிஷி அவளை அடிக்கடி வெளியே அழைத்துக் கொண்டு போனான்... ஏரியில் மணிக்கணக்கில் படகில் மிதந்தார்கள். ஸ்வேதா அதை மிகவும் ரசித்ததால் ரிஷி நேரம் கிடைக்கும் போதெல்லாம் ஏரிக்கு அழைத்துக் கொண்டு போய் விடுவான்.

''அந்தப் படகில் போகிறவனை நாலு போடு போடப் போகிறேன்.''

''எதற்கு இத்தனை கோபம் ரிஷி...?''

''விழுங்கி விடுவது போல் உன்னையே பார்க்கிறானே...''

''அப்படியா... எனக்கு ஒன்றும் தெரியவில்லையே.''

''நீதான் அவனைத் திரும்பிக்கூட பார்க்கவில்லையே...''

''நீங்கள் மட்டும் ஏன் திரும்பிப் பார்க்கிறீர்கள்?''

''நல்ல கதையாய் இருக்கிறதே... அழகான பெண்டாட்டியோடு போகிறவன் அலர்ட்டாக இருக்க வேண்டாமா?''



''ஆமாம்... நான் பெரிய அழகி... இவர் சப்பாணி... நீங்கள் இருக்கும் அழகிற்கு நான் ஒன்றும் மேட்ச் இல்லை. என்னவோ... நீங்களாக கிறுக்குப் பிடித்துப் போய்... என்னைச் சுற்றிக் கொண்டு இருக்கிறீர்கள்...''

அவள் இயல்பாகத்தான் கூறினாள்... ரிஷியின் கண்கள் சந்தோசத்தில் மின்னின...

'இவள் என்னை ரசிக்கிறாள்.''

பலவகை மலர்கள் பூத்துக் குலுங்கும் பொட்டானிகல் கார்டனை சுற்றிவரும் போது ஒவ்வொரு பூவின் அருகேயும் அவளை நிறுத்தி வைத்துப் படம் பிடித்தான் அவன். அவள் ஏனென்று வினவினாள்...

''எந்தப் பூவாவது உன் முகத்தை விட அழகாகத் தோன்றுகிறதா என்று பார்க்கிறேன்... எதுவுமே இல்லை ஸ்வேதா...''

''உங்களுக்கு பைத்தியம் என்று நான் சொல்வது சரிதான்...''

செல்லமாய் கடிந்து கொண்டாலும் ஸ்வேதாவின் மனதில் தென்றல் வீசியது. அவள் மனம் மெல்ல... மெல்ல... அவன் பக்கம் சாய ஆரம்பித்தது... அவன் எஸ்டேட்டிலிருந்து திரும்பி வர சற்று நேரமானாலும் தவித்துப் போனாள் அவள்... வாசலுக்கும்... ஹாலுக்குமாக நடந்து ஓய்ந்து போவாள்... மோகனா கூட கடிந்து கொள்வாள்.

''ஏன் இப்படி அலை பாய்கிறாய்? அவன் வரும்போது வரட்டுமே... ஏதாவது வேலையிருக்கும். அதனால் லேட்டாய் வருவான். நீ இப்படி டென்சன் ஆவதைப்



பார்த்தால் எனக்குப் பயமாக இருக்கிறது. பேசாமல் இப்படி அடங்கி என் பக்கத்தில் உட்கார்...''

ஒருமுறை ரிஷி வீடு திரும்ப இரவு வெகு நேரமாகிவிட்டது... ஸ்வேதா ஹாலில் இருந்த சோபாவில் சுருண்டு படுத்துக் கொண்டு காத்திருந்தாள். ரிஷி வந்து விட்டான். அவசரமாய் கதவைத் திறந்த ஸ்வேதாவிடம்,

''நீ இன்னும் தூங்கவில்லையா?'' என்று வினவியபடி உள்ளே வந்தான்.

''நல்லாக் கேட்டே... போ... அவள் தூங்காமல் இருப்பது பத்தாது என்று வீட்டில் இருப்பவர்களையும் பயமுறுத்துகிறாள்... ரிஷி... இனிமேல் சீக்கிரம் வந்து விடப்பா... நீ வரும் வரை இவள் படும் பாட்டைப் பார்க்க எனக்கு சகிக்கவில்லை... அன்றைக்கு அப்படித்தான்... நீ வரும் வரை காத்திருக்கிறேன் பேர்வழியென்று வாசல் வராண்டாவில் உட்கார்ந்து இருக்கிறாள். இது ஊட்டிக் குளிர்... உடம்புக்கு ஆகாது என்று சொல்லி வீட்டுக்குள் இழுத்துக் கொண்டு வந்தேன்...''

மோகனா கூறிவிட்டுப் படுக்கப் போய் விட்டாள்... ரிஷி... மௌனமாக சாப்பிட அமர்ந்தான். ஸ்வேதா பரிமாற ஆரம்பிக்க...

''நீயும் தட்டைப் போட்டுக் கொண்டு உட்கார்...'' என்று அதட்டினான்.

''நான் சாப்பிட்டுவிட்டேன்...''

''நான் சாப்பிடாமல்... நீ சாப்பிட்டிருக்க மாட்டாய்ன்னு தெரியும்... பொய் சொல்ல ட்ரை பண்ணாதே... உனக்கு அது வராது...''



இருவரும் ஒருவருக்கொருவர் பரிமாறியவாறு சாப்பிட்டு முடித்தனர். ஸ்வேதாவுக்கு உதவியாய் பாத்திரங்களை எடுத்துக் கொண்டு சென்று சமையலறை மேடையில் வைத்தான் ரிஷி.

''இதையெல்லாம் நான் பார்த்துக் கொள்ள மாட்டேனா?''

''நீ மட்டும்தான் பார்த்துக் கொள்ள வேண்டுமா...?''

''என்னவோ தெரியவில்லை. இன்றைக்கு என்மீது ரொம்பவும் கோபமாய் இருக்கிறீர்கள்... அது ஏனென்றுதான் தெரியவில்லை.''

ரிஷி... ஒன்றும் பேசாமல் ஒருநிமிடம் அவளையே பார்த்தான். ஸ்வேதா தவறு செய்துவிட்ட சிறு குழந்தை போல் கைகளை பிசைந்தாள்.

''என்னங்க...''

''மாடிக்கு வா... பேசிக் கொள்கிறேன்.''

அவன் இறுகிய முகத்துடன் மாடியேற... ஸ்வேதா அச்சத்துடன் அவனைப் பின் தொடர்ந்தாள்... அறைக்குள் சென்றதும்... கதவை தாழிட்டவன்... உடை மாற்ற சென்று விட்டான். ஸ்வேதா அயர்வுடன் கட்டிலில் படுத்து விழிகளை மூடினாள். அவனது கரம் அவள் மேல் விழுந்தது... அவளது காதோரம் அவன் கிசுகிசுப்பாய் வினவினான்.

''சொல்லுடி... என்னை உனக்குப் பிடித்திருக்கிறதா...''

ஸ்வேதா கண் விழித்து அவன் முகத்தைப் பார்த்தாள்... அதில் இப்போது தவிப்பு இல்லை... அவளைக் கண்டுகொண்ட பெருமிதம் இருந்தது. அவளது மனதை

ஜெயித்துவிட்ட கர்வம் இருந்தது. அவனுக்காக அவள் ஏங்குகிறாள் என்ற ஆணவம் இருந்தது... ஒரு கணவனுக்குரிய கம்பீரம் இருந்தது.

''சொல்லுடி... இன்றைக்கு என்ன நாள் தெரியுமா?''

''என்ன நாள்...?''

''நம் கலயாணம் முடிந்து இன்றோடு முப்பது நாளாகிறது...''

ஸ்வேதாவிற்கு சிரிப்பு வந்தது... எல்லோரும் திருமணமான வருடங்களை கணக்கில் வைப்பார்கள்... இவன் நாள்களை கணக்கிடுகிறான்.

''பெரிய கண்டுபிடிப்புத்தான்...''

''அதைவிட பெரிய கண்டுபிடிப்பு... உன் மனதில் எனக்கொரு இடம் இருக்கிறது என்பது... சொல்லு என்னைப் பிடித்திருக்கிறதா இல்லையா?''

ஸ்வேதா...திரும்பி அவனது மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள். அவனது கைகள் அவளை இறுகத் தழுவிக் கொண்டன. அவன் குனிந்து அவளது உச்சந்தலையில் முத்தமிட்டு கேட்டான்.

''என்னைப் பிடித்திருக்கிறதா... இல்லையா...?''

''பிடித்திருக்கிறது ரிஷி...''

ஸ்வேதா இந்த வார்த்தையை சொன்ன அடுத்த கணம்... ரிஷி... அவளை ஆரத் தழுவினான். அவளது கூந்தலை இறுக்கிப் பிடித்து அவளது முகத்தோடு முகம் வைத்துக் கேட்டான்.

''உண்மையாகத்தான் சொல்கிறாயா?''



''ம்ம்ம்...''

''நான் உன் விருப்பமில்லாமல் உன்னைத் தொட்டவன்.''

''ம்ம்ம்...''

''அதை மறந்து விட்டாயா...?''

''இல்லை...''

''மன்னித்து விட்டாயா...?''

''இல்லை...''

''பின் எப்படி ஸ்வேதா... உன் மனதில் எனக்கு இடம் கொடுத்தாய்?''

''தெரியவில்லை ரிஷி... எந்த நொடியில் நான் தோற்றுப் போனேன் என்று எனக்குத் தெரியவில்லை.''

''தோற்று விட்டாயா... முட்டாள்... என் மனதை ஜெயித்தவள் நீ...''

''அது என்னவோ எனக்குத் தெரியாது ரிஷி... நீங்கள் இல்லாமல் என்னால் வாழ முடியாது... உங்களைப் பிரிந்து ஒரு கணம் கூட என்னால் இருக்க முடியாது.''

''இது போதும் ஸ்வேதா... எனக்கு இது போதும்.''

ரிஷி ஆவேசமாய் அவளை ஆட்கொண்டான்... ஷாலினியால் ஏற்பட்ட மனப்புண் சுத்தமாக ஆறிவிட்டது. அவனைப் பிரிய முடியாது என்ற வார்த்தையை ஸ்வேதாவின் வாயால் அவன் சொல்ல வைத்து விட்டான். என் வாழ்வே நீதான் என்று அவளை மண்டிபோட வைத்து விட்டான். காதலினால் மட்டுமே இது சாத்தியமானது. அவளைச் சுறையாடிய கைகளுக்குள் விருப்பத்துடன் அவள் புகுந்து கொண்டாள்... அவன் முகம்



திருப்பும் போதே... அவளைவிட்டு விலகமறுக்கும் ரிஷி... இன்று கள் வெறி கொண்டவனாய் அவள்மேல் சரிந்தான்... அந்த இரவு அவர்களுக்கு துயிலாத இரவாக அமைந்தது.



## 20

அடுப்பில் பால் பாத்திரத்தை வைத்துவிட்டுக் காபிக் கோப்பைகளை எடுக்கப் போனபோது, சதாசிவம் அவற்றை எடுத்துக் கொடுத்தார். ஸ்வேதா நன்றி சொல்வது போல் சிரித்துக் கொண்டே அவற்றை வாங்கிக் கொண்டாள். காபிக்கு சர்க்கரையை எடுக்க அவள் கைநீட்ட சதாசிவம் அதையும் எடுத்து அவளது கையில் திணித்தார்.

''இதையெல்லாம் நான் பார்த்துக் கொள்ள மாட்டேனா பெரியப்பா.''

''இத்தனை நாள் நான் பார்த்துக் கொண்டிருந்த வேலைகள் அம்மா இவை... நீ பழகும்வரை நான் கூட இருக்கிறேன்.''

''இரண்டு நாள் யூஸ்பண்ணினால்... எது எந்த இடத்தில் இருக்கிறது என்பதை கண்டுபிடித்துவிடுவேன். பெரியப்பா... உதவி செய்ய பார்கவி இருக்கிறாள் அப்புறம் என்ன கவலை?''



''வேலையில்லாமல் சும்மா உட்கார்ந்திருக்க என்னால் முடியவில்லைம்மா.''

''நம் வீட்டில் வேலைக்கா பஞ்சம்... மார்க்கெட் போய் வரலாம். கரண்ட் பில், டெலிபோன் பில் கட்டலாம். தினமும் மோட்டார் போட்டுவிட்டுத் தண்ணீரை டேங்கில் ஏற்றலாம். தோட்ட வேலை செய்யலாம். செடிகளுக்கு தண்ணீர் பாய்ச்சலாம். வாட்ச்மேனும்... டிரைவரும் சரியான நேரத்திற்கு வருகிறார்களா என்று பார்க்கலாம். ம்.. அப்பா சொல்லும் போதே எனக்கு மூச்சு வாங்குகிறது. எப்படித்தான் இத்தனை வேலைகளையும் நீங்கள் செய்யப் போகிறீர்களோ...''

ஸ்வேதா சொல்லிய விதத்தில் சதாசிவத்தின் முகத்தில் சிரிப்பு மலர்ந்தது. 'எப்படி மனம் நோகாமல் பேசுகிறாள் இந்தப் பெண்...? கெட்டிக்காரிதான்' அவர் மனதிற்குள் மெச்சிக் கொண்டார்.

ரிஷியும் ஸ்வேதாவும் ஊட்டியிலிருந்து திரும்பி வந்து இரண்டு நாள்கள் ஆகின்றன. சேலத்திற்கு வந்த மறுநாளே ஸ்வேதா... சமையலறைக்கு வந்து விட்டாள். நீண்ட நாள்களாய் சமையல் செய்து வந்த சதாசிவம் மோகனாவிற்கு தூரத்து உறவினர். ஒரு ஹோட்டலில் சமையல் வேலை பார்த்துக் கொண்டிருந்தவரை தன் வீட்டில் சமைக்கவென்று மோகனா அழைத்துகொண்டு வந்துவிட்டாள். என்ன காரணத்தினாலோ திருமணத்தை தள்ளிப்போட்டு விட்டு தனிக்கட்டையாய் வாழ்பவர். சொந்மென்று சொல்லிக் கொள்ள மோகனாவின் குடும்பத்தை விட்டால் வேறு யாரும் அவருக்கு இல்லை. ஸ்வேதா ஊட்டியில் இருக்கும் போதே மோகனா அவரைப்பற்றி ஸ்வேதாவிடம் நிறையக் கூறினாள்.

''சேலத்தில் நம்ம வீட்டில் சமையல் வேலை செய்யும் சதாசிவ அண்ணன் எனக்கு தூரத்து சொந்தம் ஸ்வேதா... ஏழைப்பட்ட குடும்பம். யாரோ ஒரு பெண்ணை இவர் கல்யாணம் பண்ணிக் கொள்ளணும்னு இருந்தாராம். அந்தப் பெண்ணுக்கும் இவர் மேல் தான் இஷ்டமாம். அந்தப் பெண்ணின் வீட்டில் வேறு இடத்தில் கல்யாணம் பேசி முடித்துவிட்டார்களாம்... அதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் அந்தப் பெண் விஷம் குடித்து செத்துவிட்டதாம்... அதற்கு பின் சதாசிவம் அண்ணா... வேறு யாரையும் மனதால் கூட நினைத்து பார்த்ததில்லை. தனியாகவே வாழ்கிறார்... கடைசிக் காலத்தில் அவர் ஏன் அநாதையாக நிற்க வேண்டுமென்றுதான்... சமையல் வேலை என்ற பெயரில் அவரை என்னுடன் அழைத்து வந்துவிட்டேன். மாமாவுக்கு உடம்பு குணமாகி... நாங்கள் அங்கே வரும் வரை...நீதான் அவரைப் பார்த்துக் கொள்ள வேண்டும்...''

சதாசிவத்தின் கதையைக் கேட்டு மனம் நெகிழ்ந்து போயிருந்தாள் ஸ்வேதா கண்கள் கலங்க...

''சரிங்க அத்தை...'' என்று வாக்குக் கொடுத்திருந்தாள்.

அதனால் சேலத்திற்கு வந்தவுடன் அவரை சமையல் வேலையில் இருந்து விடுவித்து வீட்டுப் பெரியவராய்... வீட்டை மேற்பார்வையிட வைத்தாள். அதைப் புரிந்து கொண்ட சதாசிவத்திற்கு ஸ்வேதாவின் மேல் பாசம் சுரந்தது. மனைவி குழந்தைகள் என்று இல்லாத மனிதர். தன்னை வாய் நிறைய 'மாமா...' என்று அழைத்த ரிஷியையும் 'பெரியப்பா' என்று அழைத்து வலம் வரும் ஸ்வேதாவையும் பெற்ற பிள்ளைகள் போல் நேசிக்க ஆரம்பித்தார். அவரது பாசப் பார்வையைக் கண்டு



சிரித்த ஸ்வேதா... அவருக்கு காபிக் கோப்பையை கொடுத்துவிட்டு... தனக்கும் ரிஷிக்கும் காபிக் கோப்பைகளை டிரேயில் வைத்து எடுத்துக் கொண்டு மாடியேறினாள்.

கலைந்த தலைமுடி... நெற்றியில் பரவியிருக்க பிடிவாத முகத்துடன் தூங்கிக் கொண்டிருக்கும் ரிஷியைப் பார்த்தபோது... அவளது நெஞ்சம் நிறைந்தது.

'தூங்கும் போதும் சட்டமாய் தூங்குகிறான் பார்... ராஸ்கல்... நினைத்த உடனே செய்து விடவேண்டும்... இவன் பண்ணி வைத்த காரியத்துக்கு என் வாழ்நாள் பூராவும் இவனை மன்னிக்க முடியாது என்று நினைத்தேனே... ஆனால் என் மனதையும் ஜெயித்து விட்டானே...'

அருகில் அமர்ந்து அவனது தலையைக் கலைத்தாள். அவளது ஸ்பரிசத்தில் அவன் கண்களைத் திறக்காமலே புன்னகை செய்தான். கை நீட்டி அவளை இழுத்து இறுக்கிக் கொண்டான்... அவனது காதோரத்தில்

''விடிந்து விட்டது ரிஷி... எழுந்திருக்க வேண்டாமா?'' என்று கேட்டாள் அவள்.

''வேண்டாம்...''

''காபி குடிக்க வேண்டாமா?''

''வேண்டாம்.''

''டிபன்...?''

''வேண்டாம்...''

''கம்பெனிக்கு போக வேண்டாமா?''

''வேண்டாம்...''



''வேறு எதுதான் வேண்டும்?''

''நீ...''

அவன் அவளை மூச்சுத் திணற அணைத்தான்... ஸ்வேதா கிறங்கிப் போனாள்.அவனிடம் மயங்கிப் போனாள்... அவனது ஆசை வெள்ளத்தில் மூழ்கிப் போனாள்... மெல்ல இருவரும் கரை சேர்ந்த பின்... ரிஷி அவளை விடுவித்தான்.... ஸ்வேதா... எழுந்திருக்க மனமில்லாமல் தலையணையில் முகம் புதைத்துக் கிடந்தாள். அவளது நிலை உணர்ந்த ரிஷி... அவளது கூந்தலுக்குள் விரல் கொடுத்துக் கோதினான்... அந்த உணர்வை அனுபவித்த வண்ணம் கண் மூடிக் கிடந்த ஸ்வேதா, மீண்டும் அவன் நெருங்க முற்படவும் சிரித்துக் கொண்டே அவன் மார்பில் கை வைத்து தள்ளி விட்டு எழுந்த ஸ்வேதா...

''காலையில் போய் இப்படி வம்பு பண்ணலாமா... காபி ஆறிப் போகாதா...'' என்று பொய்யாய் சலித்தாள்.

அவள் நீட்டிய காபிக் கோப்பையை வாங்கிப் பருகிக் கொண்டே...

''காபி ஆறினால் பரவாயில்லை... வாழ்க்கையில் சில விசயங்களை ஆறவே போடக் கூடாது...'' என்று கண் சிமிட்டினான்.

அவனது அந்தச் செயலில் முகம் சிவந்த ஸ்வேதா.

''பெரிய தத்துவஞானிதான் நீங்கள்... என்ன ஒரு தத்துவம்... என்ன ஒரு தத்துவம்...'' என்று கிண்டல் செய்தாள்.

செல்லமாய் அவளது பின்னலைப் பிடித்து சுண்டி இழுத்தவன்,



''ஈவினிங் சீக்கிரம் வந்து விடுகிறேன்... ரெடியாக இரு...'' என்றான்.

''எங்கே போகப் போகிறோம்...''

''உன் அம்மாவின் வீட்டிற்கு...''

'இதை எப்படி மறந்தோம்...' ஸ்வேதாவிற்குள் குற்ற உணர்வு எழுந்தது. ஊட்டியில் ஒரு மாதம் தங்குவது என்ற முடிவோடுதான் ரிஷியும் ஸ்வேதாவும் போயிருந்தார்கள். ஆனால்... முப்பதாவது நாளில்... ஸ்வேதா ரிஷியைப் பிடித்திருக்கிறது என்று கூறியவுடன்... ரிஷி அங்கேயே இன்னும் ஒரு மாதம் தங்க வேண்டும் என்று சொல்லிவிட்டான்.

''இது என்னைப் பொருத்தவரை மறக்க முடியாத இடம் ஸ்வேதா... இத்தனை நாள் இது என் எஸ்டேட்... இந்த நொடியிலிருந்து இது எனக்கு வசந்த மாளிகை. நீ காதல் சொன்ன இடம்... இன்னும் ஒரு மாதம் இங்கேயே இருப்போம்... நமக்கு உண்மையான தேன் நிலவு இனி மேல்தான் ஆரம்பிக்கிறது...''

ஸ்வேதா... ரிஷியைத் தவிர அனைத்து விசயங்களையும் மறந்து விட்டாள். பிறந்த வீட்டு நினைவுதானா என்று அவன் திட்டுவான் என்பதால் முதல் மாதம் பிறந்த வீட்டை மறக்க முயற்சித்தாள். பிறந்த வீட்டு நினைவே இல்லாமல் மறுமாதம் அவனுடன் தேன் நிலவில் மூழ்கினாள்.

''என்னடா... பேசாமல் இருக்கிறாய்...''

''அம்மா வீட்டை மறந்தே போய் விட்டேனே ரிஷி...''

''அப்படித்தானே நீ இருக்க வேண்டும்? என்னைத் தவிர எந்த நினைவும் உனக்கு இருக்கக் கூடாது... அதை

நான் விரும்பமாட்டேன்... அனுமதிக்கவும் மாட்டேன். ஸோ... நீ சரியாகத்தான் இருக்கிறாய்... புரிந்ததா...''

''ஆனால்... அம்மா... தம்பி... தங்கை...''

''நான் பார்த்துக் கொள்கிறேன். நான் உனக்கு வாக்குக் கொடுக்கிறேன் ஸ்வேதா... ரகுவின் படிப்பும்... தீபாவின் கல்யாணமும் எனது பொறுப்பு... நீ மட்டும் என்னுடையவளாக... எனக்கு மட்டும் சொந்தமானவளாக இருக்க வேண்டும்...''

ஸ்வேதா ரிஷியை நெருங்கி... அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள் அவளது முதுகைச் சுற்றி வளைத்தன அவனது கரங்கள்.

அன்று மாலை... ஸ்வேதாவும் ரிஷியும் ஊட்டியில் வாங்கிய பொருட்கள் அவர்களது எஸ்டேட்டில் விளைந்த காய் வகைகள்... பழ வகைகள் நிரம்பிய கூடைகளோடு லீலாவதியைப் பார்க்கப் போனார்கள்...

'ரத்தினம் அபார்ட்மென்ட்...' என்ற பெயர் பலகை பொறிக்கப்பட்ட காம்பவுண்டிற்குள் கார் நுழைந்தது.

''அபார்ட்மென்டிற்கு அப்பாவின் பெயரை வைத்திருக்கிறீர்களா...''

''ம்ம்... சின்னச்சின்ன மாறுதல்களை செய்து கொடுக்கச் சொல்லி நம் மேனேஜரிடம் சொல்லி விட்டுத்தான் போயிருந்தேன்... அவற்றில் இதுவும் ஒன்று.''

தகப்பனாரின் பெயர் பலகை தங்கிய வீட்டில் குடியிருப்பது அம்மாவிற்கு எவ்வளவு பெரிய ஆறுதலைக் கொடுக்கும் என்பதை ஸ்வேதாவினால் புரிந்து கொள்ள முடிந்தது.



''எப்படி இந்த யோசனை வந்தது ரிஷி...''

''நீதானே சொன்னாய்?''

''நான் சொன்னேனா?''

''ஆமாம்... ஸ்வேதா... நீதான் சொன்னாய்... உன் அப்பாவின் இறப்பு உன் அம்மாவை எந்த அளவுக்கு தாக்கியது என்பதையும் மூன்று வருடங்களாக அவர்கள் பெற்ற பிள்ளைகளை மறந்து... கணவனின் நினைவுகளிலேயே அமிழ்ந்து விட்டதையும் நீதான் சொன்னாய்... அன்று எனக்கு அது தவறாகத் தெரிந்தது... ஆனால் உன்னுடன் வாழ்ந்த இந்த இரண்டு மாதங்களில் நாம் ஒருயிராய் கலந்துவிட்ட பிறகுதான் எனக்கு அவர்களின் உணர்வு புரிந்தது. உன்னைப் பிரிந்து என்னாலோ... இல்லை என்னைப் பிரிந்து உன்னாலோ இனி இருக்க முடியுமா...?''

''ப்ளீஸ்... வாய் வார்த்தைகளாகக் கூட இதைச் சொல்ல வேண்டாம் ரிஷி.''

''வெறும் வாய் வார்த்தைகளைக் கூட உன்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லையே... அவர்கள் உண்மையிலேயே இழப்பைச் சந்தித்தவர்கள்... அவர்களால் எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்? அதனால்தான் இந்த அபார்ட்மென்டிற்கு உன் அப்பாவின் பெயரை வைக்கச் சொன்னேன்.''

''வெல்டன் ரிஷி... ஏற்கனவே வீட்டை அம்மா பெயரில் புத்திசாலித்தனமாக வாங்கிக் கொடுத்தீர்கள். இப்போது... இது... தேங்க்ஸ் பார் ஆல்...''

''உன் தேங்க்ஸை கொண்டு போய் குப்பையில் போடு. நீ யார் இதற்காக தேங்க்ஸ் சொல்ல...? என் கடமையை நான் செய்கிறேன்.''





''ஓ.கே... ஸாரி... ஸாரி...''

''ஸ்வேதா... உன் அம்மா குடும்பத்தின் ஆணிவேர்... தீபாவும் நீயும் திருமணமாகி அவர்களது குடும்பம்... குழந்தைகள் என்று ஆன பின் அவர்களுக்கு எந்த பிடிமானமில்லாமல் போய்விடக்கூடாது... கடைசி வரை அவர்கள் நிம்மதியாக வசிக்கத்தான் இந்த வீட்டை அவர்கள் பெயரில் வாங்கினேன்...''

ஸ்வேதா கணவனைக் காதலுடன் பார்த்தாள். ரிஷிக்கு காது மடல்கள் சூடாகின.

''எங்கே வந்து இந்தப் பார்வையைப் பார்க்கிறாய் சற்றுமுன் வீட்டில் இருக்கும் போது இப்படி பார்த்து வைத்திருக்கக் கூடாதா?''

''போதுமே...'' முகம் சிவந்தாள் ஸ்வேதா..

அவர்கள் மாடிப்படிகளில் ஏறினார்கள்... லீலாவதியின் வீட்டின் முன் நின்று அழைப்பு மணியை அழுத்தினார்கள்... கதவைத் திறந்த தீபா...

''ஐ... அக்கா... அம்மா... இங்கே வாங்களேன்... அக்காவும் அத்தானும் வந்திருக்கிறார்கள்'' என்று கூவினாள்.

அவசரமாய் சமையலறையை விட்டு வெளியே வந்த லீலாவதி... இரண்டு கைகளிலும் பைகளைப் பிடித்துக் கொண்டு நின்றவர்களைப் பார்த்ததும்... பதறிப்போய்...

''ஏண்டி... அறிவு கெட்டவளே... அத்தானும்... அக்காவும் பைகளைச் சுமந்து கொண்டு நிற்கிறார்களே... அதை வாங்கி வைக்க வேண்டாமா?'' என்று கடிந்து கொண்டாள்.



''ஸாரிக்கா... ஸாரித்தான்'' என்றபடி தீபா பைகளை வாங்கிக் கொண்டாள்.

ஸ்வேதா வீட்டைச் சுற்றிப் பார்வையை ஓட்டினாள்... ஹாலில் சோபாக்கள் கிடந்தன... சுவரில் பெரிது படுத்தப்பட்ட ரத்தினத்தின் படம் மாட்டப்பட்டிருந்தது...

''அப்பா...'' என்று அப்படத்தின் முன் நின்று கண் கலங்கினாள் ஸ்வேதா...

''மாப்பிள்ளை வீட்டில் இருந்த உன் அப்பாவின் சிறிய படத்தை வாங்கி பெரிது பண்ணி மாட்டச் சொன்னாராம்...'' நன்றியுடன் மருமகனைப் பார்த்தாள் லீலாவதி.

கண்களைத் துடைத்துக் கொண்ட ஸ்வேதா... வீட்டைச் சுற்றி வந்தாள்... டைனிங் ஹாலில் உயர்தர டைனிங் டேபிளும் சேர்களும் போடப்பட்டிருந்தன. இரண்டு பெட்ரூம்களிலும் புதிய கட்டில்கள் கிடந்தன. அறைகள் ஏஸி செய்யப்பட்டிருந்தன.

''பழைய கட்டில்களை... மாற்றிவிட்டு புதிதாய் வாங்கிக் கொடுக்கச் சொல்லியிருந்தாராம்... நம் மாப்பிள்ளை'' லீலாவதி கூறினாள்.

பால்கனியில் தொங்கும் மர ஊஞ்சல்கள் மாட்டப்பட்டிருந்தன... மற்றபடி... ப்ரிட்ஜ்... வாஷிங்மெஷின்... டேபிள்... சேர்கள்... டிவி.... எல்லாம் லீலாவதியிடம் ஏற்கனவே இருந்தவைதான் அதை அழகாக அந்த அந்த இடத்தில் வைத்திருந்தார்கள்.

தீபாவின் முகத்தில் தனிக் களை மிளிர்ந்தது... கவலையில்லாத தன்மையுடன் பேசினாள்.

''எனக்கும்... ரகுவுக்கும் அத்தான் டூவீலர் வாங்கிக் கொடுக்கச் சொல்லியிருந்தாராம்... உங்கள் மேனேஜர் வாங்கிக் கொடுத்தார்... அதில்தான் நாங்கள் இரண்டு பேரும் ஸ்கூலுக்கு போய் வருகிறோம்.''

''முதலில் அக்காவை உட்காரச் சொல்லுடி...'' ஜூஸ் தம்ளர்களுடன் வந்த லீலாவதி மகளைக் கடிந்து கொண்டாள்.

''ரகு எங்கே தீபா...?'' ரிஷியின் அருகே அமர்ந்தபடி வினவினாள் ஸ்வேதா.

''பிரண்டைப் பார்க்கப் போகிறேன்னு சொல்லி விட்டுப் போனாங்க்கா...''

''இரண்டு பேரும் எப்படிப் படிக்கிறீர்கள்?''

''அந்த வீட்டிலேயே... நாங்கள் இரண்டு பேரும் பார்ஸ்ட் ரேங்க்தான் வாங்குவோம்... இங்கே வந்தபின் குறைவோமா?''

அதற்குள் வாசல் பக்கமிருந்து வந்த ரகு

''அக்கா... அத்தான்...'' என்று கூவினான்.

''வாடா... ஊர் சுற்றி... அக்காவும் அத்தானும் அப்போதே வந்து விட்டார்கள்... துரை இப்போதுதான் வருகிறான்...'' என்று வம்புக்கு இழுத்தாள் தீபா... ரகு அவசரமாய் ஸ்வேதாவின் முகத்தைப் பார்த்தான்.

''அவள் சும்மா சொல்கிறாள் ரகு... நாங்கள் இப்போதுதான் வந்தோம்...'' என்றபடி ஸ்வேதா அவனை அழைத்து பக்கத்தில் அமர வைத்துக் கொண்டாள்.

அன்று இரவுச் சாப்பாட்டை அங்கேதான் ரிஷியும் ஸ்வேதாவும் சாப்பிட்டார்கள்.



இடியாப்பம் செய்து... தேங்காய்பால்... குருமாவுடன் வைத்திருந்தாள் லீலாவதி... திருப்தியாக உண்டு விட்டு... விடை பெற்றுக் கிளம்பினார்கள்.

திரும்பி வரும்போது... கணவரின் அருகே நெருங்கி அமர்ந்து அவன் தோள் மேல் சாய்ந்து கொண்டாள் ஸ்வேதா.

''என்னடா...?'' பரிவுடன் வினவினான் ரிஷி.

''நிம்மதியாக இருக்கிறது ரிஷி.... என் அம்மாவும் தம்பி... தங்கையும் சந்தோசமாய்... பாதுகாப்பாய் வாழ்கிறார்கள்... தேங்க்ஸ்...''

''தேங்க்ஸ் சொல்லக் கூடாது என்று சொல்லியிருக்கிறேன்...''

''என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லையே...''

''அவர்களைப் பார்த்துக் கொள்வது என் பொறுப்பு ஸ்வேதா...''

அன்று இரவு... என்றைக்கும் விட அதிகமாக ரிஷியின் அருகாமையை நாடினாள் ஸ்வேதா... அதை உணர்ந்து கொண்டு ரிஷியும் அவளை விட்டு விலகாமல் உறவாடினான். நாட்கள் நகர்ந்தன... மெல்ல... ஸ்வேதா... திருமதி ரிஷியாக மாறிப் போனாள்... வீடு... ரிஷி... இவை மட்டுமே அவளது உலகமாக இருந்தது... முதல் வருட திருமண நிறைவு நாளன்று ஸ்வேதா... லேசாக மயங்கி விழுந்தாள்.

''கன்கிராஜீலேசன்ஸ் மிஸ்டர் ரிஷி... நீங்கள் அப்பாவாகப் போகிறீர்கள்'' ஸ்வேதாவை பரிசோதித்த லேடி டாக்டர்... நல்ல செய்தியைச் சொன்னாள்.



செய்தியை போன் மூலம் அறிந்த பாண்டுரங்கனும் மோகனாவும் மகிழ்ந்து விட்டனர்... லீலாவதி... தினமும் மகளுக்குப் பிடித்த உணவு வகைகளை செய்து எடுத்துக் கொண்டு வந்து அவளைப் பார்த்து விட்டுச் சென்றாள். ரிஷி அவளைத் தரையில் நடக்கவிடாமல் தாங்கினான். சதாசிவம் குழந்தை பிறக்கும் வரை சமையலறை பக்கம் வரக்கூடாது என்று ஸ்வேதாவிற்கு ஆணை பிறப்பித்து விட்டார். ஆறுமாத கர்ப்பிணியாக ஸ்வேதா இருந்த போதுதான் அது நடந்தது.



21

ரிஷி மிகவும் சந்தோசமாக இருந்தான்... அவன் மனதின் வெறுமை மறைந்து... மனைவி குடும்பம் என்று மகிழ்ச்சியான வட்டத்தில் வாழ்ந்து கொண்டிருந்தான்... எந்த ஸ்வேதாவை பார்த்துக் கொண்டிருந்தால் போதும்... இரண்டு வார்த்தை பேசிக் கொண்டிருந்தால் போதும் என்று ஆசைப்பட்டானோ அந்த ஸ்வேதா மனைவி என்ற பந்தத்துடன்... வாழ்நாள் முழுவதும் அவனுடன் சேர்ந்து வாழக் கடமைப்பட்டவளாக வந்து சேர்ந்துவிட்டாள்... கடமைக்காக இல்லாமல் காதலாய் அவள் அவனுடன் வாழ வேண்டுமென்று ஆசைப்பட்டான்... அவள் காதலாய் அவனுடன் வாழ ஆரம்பித்துவிட்டாள்... இத்தனைக்கும் மேலாக அவர்களது காதல் வாழ்வின்



அடையாளமாய் அவனது குழந்தையை தன் வயிற்றில் சுமந்து கொண்டிருக்கிறாள்.

இப்படி ஒரு சந்தோசம் தன் வாழ்வில் கிட்டும் என்று கனவு கூடக் கண்டிராத ரிஷி... திகட்டத் திகட்ட வாழ்க்கையின் சந்தோசங்களை அனுபவித்துக் கொண்டிருந்தான்... அவன் தொட்டாலே வெறுத்து விலகிய ஸ்வேதா... இன்று நாள் முழுவதும் அவனது கைப்பிடியில் இருக்க நேர்ந்தாலும் விருப்பமாய் இழைகிறாள்... சில நேரங்களில் இவள்தான் தன்னை எடுத்தெறிந்து பேசிய ஸ்வேதாவா என்று ஆச்சர்யப்பட்டுப் போவான் ரிஷி... அந்த அளவுக்கு அவனுடன் ஒன்றியிருந்தாள் அவள்.

மென்மையான குணம்... இதமான பேச்சு... இயற்கை வனப்பு... பெண்மையின் மிளிர்வு... இவற்றுடன் ரிஷியை அவள் ஆட்கொண்ட பின் அவனின் அடிமனதின் ரணம் ஆறிவிட்டது. கடந்த காலத்தின் நிகழ்வுகள் மறைந்து விட்டன. பழைய ஏட்டின் நினைவுகள் மறக்கப்பட்டன. அவனைச் சூழ்ந்திருந்தது எல்லாம் ஸ்வேதாவின் மேல் அவன் அறியும் சுகந்தமான நறுமணம்தான்.

'அது என்ன வாசனை... ரிஷி பலமுறை யோசித்திருக்கிறான். மஞ்சள் பூசும் வழக்கமுள்ளவள் ஸ்வேதா... சோப்போடு கலந்த மஞ்சள் பொடியின் நறுமணமும்... மல்லிகையின் வாசமும் சேர்ந்த கலவையான வாசம் அது. அடிக்கடி அவள் மேல் அவன் வாசம் பிடிப்பதைக் கேலி செய்து சிரிப்பாள் ஸ்வேதா.

அவளைப் பற்றிய இதமான நினைவுகளுடன் இருந்த ரிஷியின் கவனத்தை அவனது டேபிளின் மேலிருந்து அலறிய டெலிபோன் மணி கலைத்தது. எடுத்துப்

பேசினான். அவனது செகரட்டரியின் குரல் மறுமுனை யில் ஒலித்தது.

''சார்... உங்களைப் பார்க்க ஒரு லேடி வந்திருக்காங்க... அனுப்பவா?''

''யாராம்?''

''கனடாவில் உங்களுடன் படித்தவங்களாம்...''

''அனுப்புங்கள்...''

கனடாவில் தன்னுடன் படித்த பெண்களை நினைவுப் படுத்திக் கொண்டு 'யாராக இருக்கும்?' என்ற யோசனை யுடன் சுழல் நாற்காலியில் சாய்ந்து கொண்டான் ரிஷி.

''மே ஐ கமின்...'' என்ற இனிய குரலைக் கேட்டதும் ரிஷி திகைத்துப் போனான். அது அவனுக்குப் பரிச்சய மான குரல்...

''யெஸ் கமின்...''

''ஹாய் ரிஷி...'' என்றபடி உள்ளே வந்தவளைக் கண்டதும் ரிஷி பதறிப் போய் எழுந்து விட்டான்.

வெண்மை நிற ஸ்லீவ்லெஸ் டாப்ஸுடன் கருநீல நிற ஜீன்ஸுடன் கண்களுக்கு குளிர் கண்ணாடி அணிந்து முடியை விரிய விட்டுக் கொண்டு வெள்ளைக்காரர் களின் நாணத்துடன் நின்று கொண்டிருந்தாள் ஷாலினி.

''ஷாலினி... நீயா...?''

''ஏன் இந்தப் பதட்டம் ரிஷி... நான்தான்...'' என்றபடி அவனை நோக்கி வந்த ஷாலினி... அவனைக் கட்டித் தழுவி கன்னத்தில் முத்தமிட்டாள்.

அதே நேரம்... மிக முக்கியமான ஃபைலில் கையெழுத்து வாங்க ரிஷியின் அறைக்குள் நுழைந்த ஜெனரல்



மேனேஜரும்... வந்திருக்கும் விருந்தாளிக்கு கொடுக்க என்ன கொண்டு வரவேண்டும் என்று கேட்பதற்காக அவரது பின்னாலேயே வந்த ரிஷியின் செகரட்டரி எமிலியும் திகைத்துப் போனார்கள்.

ரிஷி ஸ்தம்பித்துப் போய் நின்றுவிட்டான்... ஒன்றுமே நடக்காதது போல்... அவனது தோள் தழுவிய நிலையி லேயே திரும்பிப் பார்த்த ஷாலினி...

''வாட் இஸ் திஸ் ரிஷி... உங்கள் ரூமில் பிரைவஸி என்பதே கிடையாதா? நாம் தனித்திருக்கும் போது இப்படி இன்டீஸன்டாக இவர்கள் ரூமிற்குள் வந்து நிற்கிறார்களே... நான்ஸென்ஸ்...'' என்றாள்.

ஜெனரல் மேனேஜரின் முகமும் எமிலியின் முகமும் கருத்து விட்டது.

''ஸாரி... ஸார்...'' என்றபடி எமிலி திரும்பிவிட... ஜி.எம். அதையும் சொல்லாமல் வெளியேறிவிட்டார்.

ரிஷி உதடுகளைக் கடித்துக் கொண்டான். ஜி.எம். பாண்டுரங்கனின் நம்பிக்கைக்குரியவர். சற்று நேரத்தில் பாண்டுரங்கனுக்கு போன் போய் விடும் என்பதை உணர்ந்தவனாய் ஷாலினியை விலக்கி நிறுத்தினான்.

'இவள் ஏன் இங்கு வந்து தொலைத்தாள். எதற்காக வந்து தொலைத்தாள். இவளுக்கும் ரிஷிக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது?'

''எப்போது இந்தியா வந்தாய் ஷாலினி...?''

''லாஸ்ட் வீக்...''

''எங்கே தங்கியிருக்கிறாய்?''



''இப்போது ஹோட்டலில் தான் இருக்கிறேன்... உன் வீட்டு அட்ரஸ் எனக்குத் தெரியாது... தெரிந்திருந்தால் நேரே அங்கேயே வந்திருப்பேன்...''

'நல்லவேளை பிழைத்தேன்...' என்று நினைத்துக் கொண்ட ரிஷி.

''என்ன திடீரென்று இந்தியா பக்கமெல்லாம் வந்திருக்கிறாய்?'' என்று கேட்டு வைத்தான்.

அதற்கு அவள் சொல்லிய பதில் கேட்டு அலறியே விட்டான்.

''உன்னுடன் வாழத்தான் ரிஷி...''

''வாட்...?''

''ஏன் அலறுகிறாய்? நீதானே நாம் மேரேஜ் பண்ணிக்கலாமா என்று அன்று என்னிடம் கேட்டாய்?''

'அடிப்பாவி... அன்று கேட்டதற்கு... இன்று எவன் எவன் கூடவோ எல்லாம் வாழ்ந்து விட்டு என்முன் வந்து நின்று சம்மதம் சொல்கிறாயா...' நெஞ்சம் கசந்து போனான் ரிஷி.

''அன்று கேட்டதற்கு என்ன ஷாலினி...''

''எனக்கும் கனடாவில் போரடித்து விட்டது ரிஷி... இந்தியாவில் வாழ்ந்து பார்க்கும் ஆசை வந்துவிட்டது... அதுதான் கிளம்பி வந்துவிட்டேன்...''

ரிஷிக்கு சிரிப்பதா... அழுவதா என்று தெரிய வில்லை. இவள் வாழ்ந்து பார்க்க அவன்தான் கிடைத் தானா?

''நினைத்ததை பேசுவதற்கும்... மனம் போனபடி வாழ் வதற்கும் இது வெளிநாடில்லை ஷாலினி... இந்தியா...''



''எனக்குத் தெரியாததை சொல்வது போல் சொல் கிறாயே...''

''உனக்குத் தெரியாதது தான் ஷாலினி... எனக்குத் திருமணமாகிவிட்டது... நான்... என் மனைவி... தாய்... தகப்பன் என்று அமைதியாக வாழ்ந்து கொண்டிருக் கிறேன். டோன்ட் டிஸ்டர்ப்மி...''

''என்ன...?'' ஷாலினி அதிர்ந்துபோய் ரிஷியைப் பார்த்தாள் அவளறிந்த ரிஷியா இது...

அன்றைய ரிஷி... ஷாலினியின் பின்னால் பூனைக் குட்டி போல் சுற்றியவன்... அவளது கடைக்கண் பார் வைக்காக ஏங்கியவன்... அவளை விட்டு விலக முடியாமல் தவித்தவன்...

'இன்று அவனா... அவளைத் தள்ளி நிறுத்திப் பேசுகிறான்.'

ஷாலினியால் நம்பவே முடியவில்லை... அவள் இந்தியாவுக்கு சுற்றுலா பயணியாகத்தான் வந்தாள்... வந்த இடத்தில் ரிஷியுடன் படித்துக் கொண்டிருந்த லாராவை சந்தித்தாள். சாதாரணமாய் பேசிக் கொண் டிருந்த போது... ஷாலினி லாராவிடம் அலுத்துக் கொண்டாள்.

''எவ்வளவு பணம் இருந்து என்ன செய்ய லாரா... நம் வேலைகளை நாமேதானே செய்து கொள்ள வேண்டி யிருக்கிறது... பணம் இருந்தால் வாழ்க்கையை அனுபவிக்க முடியும் என்பதெல்லாம் இந்தியாவில் தான்...''

லாரா ஷாலினியை பார்த்துச் சொன்னாள்.

''இப்படி நினைக்கிறவள் ரிஷியை கை நழுவ விட்டிருக்கக் கூடாது... அவன் இப்போது கிரேட் பிஸினெஸ் மேக்னெட்... தெரியுமா... உனக்காக அவன் மிகவும் ஏங்கினான். நீ பிரிந்து போன பின்பு... நான்கூட அவனிடம் என் காதலைச் சொன்னேன்... அவன் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டான். நீ ஒரு முட்டாள் ஷாலினி... அவனைத் திருமணம் செய்து கொண்டிருந்தால் தமிழ்நாட்டில் ஒரு கோடிஸ்வரியாக வாழ்ந்து கொண் டிருந்திருப்பாய்... மிஸ் பண்ணி விட்டாய்...''

ஷாலினியின் மூளை விரைவாய் வேலை செய்தது... ரிஷி இவ்வளவு பெரிய பணக்காரன் என்பது அவளுக்குத் தெரியாது. அவளும் சுற்றிவந்து அலுத்து விட்டாள்... ஓர் இடத்தில் நிலையாக உட்கார விரும்பி னாள். தமிழ்நாட்டின் வெப்பம் மட்டும்தான் அவளை யோசிக்க வைத்தது. அதையும் அடுத்து லாரா சொன்ன வார்த்தைகள் தகர்த்தன.

''அவனது ஊட்டி எஸ்டேட்டைப் பார்த்தால்... நீ அதை விட்டு நகரவே மாட்டாய். ஷாலினி... அவ்வளவு பெரிய எஸ்டேட்... அதன் நடுவில் இருக்கும் பேலஸ்... நீ காலாகாலத்திற்கும் ஜில்லென்று மலையில் வாசம் பண்ணியிருக்கலாம்...''

''இனி பண்ணி விடுகிறேன்...'' என்று முடிவெடுத்த ஷாலினி லாராவிடம் நைஸாகப் பேசி... ரிஷியின் முகவரியை அறிந்து கொண்டு கிளம்பி வந்துவிட்டாள்.

நல்ல வேளையாக லாராவிற்கு ரிஷியின் அலுவலக முகவரிதான் தெரிந்திருந்தது. அதனால் அவள் அதை மட்டும் கொடுத்தாள். ரிஷியும் பிழைத்தான்.



''ரிஷி... நான் உங்களை நம்பித்தான் கிளம்பி வந் திருக்கிறேன்...'' உரிமையுடன் வா... போ என்று பேசிக் கொண்டிருந்தவள் திடீரென்று மரியாதையுடன் பன் மைக்கு தாவியதும் ரிஷி சுதாரித்துக் கொண்டான்.

''நான் ஒன்றும் உன்னை கிளம்பி வரச் சொல்ல வில்லையே...''

''நீங்கள் சொன்னால்தான் நான் வரவேண்டுமா? எனக்கு அந்த உரிமை இல்லையா?''

''ஸ்டாப் இட் ஷாலினி... நான் திருமணமானவன்...''

''ஸோ வாட் ரிஷி... அந்தப் பெண்ணை டைவர்ஸ் பண்ணிவிட வேண்டியதுதானே...''

''ஷாலினி...''

ரிஷி அவளை அடிக்க கையை ஓங்கிவிட்டான்... ஷாலினி மலைத்துவிட்டாள்.

'ரிஷியா அவளிடம் இவ்வளவு கடுமை காட்டு கிறான்?' அவளால் நம்பமுடியவில்லை... அவள் மேலி ருந்த மோகம் தணிந்துவிட்டதா...

ரிஷி தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்... இவளுக்குத் தெரிந்தது இதுதான். இவள் கூடப்பழகியது அவன் செய்த தவறு...

''ஷாலினி... இனியொரு முறை இப்படிப் பேசாதே... அவள் என் உயிர்...''

''என்னையும் அப்படித்தான் சொன்னீர்கள்...''

''அதை மறுத்தது நீதான்... உன் கடந்த கால வாழ்க் கையை சொன்னதும் நீதான்... என்னைவிட்டுப் பிரிந்து போனதும் நீதான்...''



''இன்று நானே உன்னைத் தேடி வந்திருக்கிறேனே...''

''நீ வந்து விட்டால் நான் உன்னை ஏற்றுக் கொள்ள வேண்டுமா?''

''பின்னே வேண்டாமா?''

''முட்டாள் மாதிரி பேசாதே... இது கனடா இல்லை... இந்தியா... மாதத்திற்கு ஒரு ஆணுடன் வாழ்வது உனக்கு சாத்தியமாக இருக்கலாம்... எனக்கு இல்லை.''

''ரிஷி. நீ என்னை இழிவாகப் பேசுவது போல் இருக்கிறது.''

''இருக்கிறது என்ன... அப்படித்தான் பேசுகிறேன்.''

''நீ மட்டும் யோக்கியமா? என்னுடன் வாழ்ந்து விட்டு... இப்போது வேறொரு பெண்ணுடன் வாழ்கிற வன்தானே நீ... என்னைச் சொல்ல உனக்கு என்ன தகுதி இருக்கிறது...?''

''தகுதி இல்லைதான்... உன்னுடன் வாழ்ந்துவிட்டு... ஸ்வேதாவுடன் வாழ எனக்குத் தகுதி இல்லைதான்... உன்னைப் போன்ற பெண்ணுடன் பழகியவன் நான் என்று தெரிந்தால் என் ஸ்வேதா என்னைத் திரும்பிக் கூடப் பார்க்கமாட்டாள்... அவள் கறந்த பாலைப் போன்று தூய்மையானவள்... நான் அவளுக்கு இணை யானவன் இல்லை... ஆனால் தகுதி பற்றி நீ பேசுவது தான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. தகுதி பற்றி யெல்லாம் பேச... உனக்குத் தகுதியில்லை...''

''ரிஷி... என்னை கோபப்படுத்துகிறாய்... என் வாழ்க் கையை நான் யாரிடமும் மறைத்தது இல்லை... என் மனதுக்குப் பிடித்த வாழ்க்கையை நான் வாழ்ந்தேன்...



என்னுடன் வாழ்ந்துவிட்டு... இன்னொரு பெண்ணுடன் வாழ உனக்கு உரிமை இருக்கிறபோது... அதே உரிமை எனக்கும் இருப்பதில் என்ன தவறு கண்டாய்... உன் மனைவி என்ன பெரிய இவளா...?''

''ஸ்வேதாவைப் பற்றி நீ பேசாதே.''

''ஸ்வேதா... ஸ்வேதா... இது... என்ன பிதற்றல் ரிஷி... அவளை விட்டுவிடு...''

''ஷாலினி... உன்னை அடிக்க எனக்கு உரிமை யில்லை என்றுதான் நான் பேசாமல் இருக்கிறேன். இனியொரு முறை இப்படிப் பேசாதே... என் ஸ்வேதா... என் குழந்தையை வயிற்றில் சுமந்து கொண்டிருக் கிறாள்... அவளை விட்டு விடு என்று பிதற்றினால்... உன்னைக் கொன்றாலும் கொன்று விடுவேன்... போய் விடு... என் கண்முன் நிற்காதே...''

ஷாலினி அவனது கேபினை விட்டு ஆக்ரோஷமாய் வெளியேறினாள். அலுவலகத்தில் உள்ளவர்கள் அவளைப் பார்த்துத் தங்களுக்குள் கசமுசாவென்று பேசிக் கொள்வதைப் பார்த்தவுடன் அவளது வெறி தலைக்கேறியது.

தன் பின்னால் சுற்றிய ரிஷியா இப்படி மாறிப் போனான்...? ராபர்ட்டுடன் அவள் வெளியேறியபோது அவன் ஏக்கமாய் பார்த்தது அவள் நினைவுக்கு வந்தது.

'அவன் மனைவிக்கு நான் இணையில்லையாமே...' அடிபட்ட பெண் புலியாய்... தான் தங்கியிருந்த ஹோட்டல் அறைக்குத் திரும்பினாள் ஷாலினி.

ரிஷிக்கு சற்று நேரம் வேலையே ஓடவில்லை. பின் இன்டர்காமை எடுத்து ஜெனரல் மேனேஜரை

அழைத்தான். அவர் உள்ளே வந்ததும் சீட்டைவிட்டு எழுந்து அவர் அருகே சென்று கையைப் பிடித்துக் கொண்டான்.

''ஸாரி... சார்... அவங்க என்கூட கனடாவில் படிச்ச வங்க...''

''இட்ஸ் ஆல்ரைட் சார்... நானும் கதவைத் தட்டி விட்டு வந்திருக்க வேண்டும்...''

ரிஷி அடிபட்டவனாய் அவரை நிமிர்ந்து பார்த்தான். தன் வார்த்தையில் அவர் சமாதானம் ஆகமாட்டார் என்பதை புரிந்து கொண்டவனாய் சோர்ந்து போய் சீட்டில் அமர்ந்தான்.

''சரி... என்ன விசயம் என்று சொல்லுங்கள்.''

ஜி.எம். வெளியேறிய பின்... எமிலியை அழைத் தான்... அவள் ஜாக்கிரதையாய் அறைக் கதவை தட்டி...

''மே ஐ கமின் சார்...'' என்றாள்.

''ப்ளீஸ் உள்ளே வாங்க...'' என்று அலுப்புடன் கூறி னான் ரிஷி.

''சார்...'' என்று எதிரே வந்து நின்றவளை நிமிர்ந்து பார்த்து ''நடந்ததை மறந்துவிடுங்கள் எமிலி... அந்தப் பெண்ணுக்கு நாகரிகம் தெரியாது...'' என்றான்.

''இல்லையே சார்... அந்தப் பெண்ணுக்கு நாகரிகம் தெரிந்திருக்கிறது. என்னிடம் பேசி உங்களிடம் அனுமதி வாங்கிக் கொண்ட பின்னும்... அறைக் கதவைத் தட்டி விட்டுத்தானே நுழைந்தாள்... எனக்குத்தான் அது தெரியவில்லை...''



எமிலி கூறியதைக் கேட்டதும் தலையைப் பிடித்துக் கொண்ட ரிஷி... எமிலியை போய்விடும்படி சைகை செய்தான்.



# 22

தன் மேடிட்டிருந்த வயிற்றை கண்ணாடியில் ஓர் முறை பார்த்துக் கொண்டாள் ஸ்வேதா... குழந்தை வயிற்றுக்குள் அசைய ஆரம்பித்திருந்தது. தினமும் அதைப் பற்றி ரிஷியிடம் சொல்லி ஆனந்தப்படுவாள்... அவன் அவளது வயிற்றில் கை வைத்து குழந்தை அசைவதை உணர்ந்து மெய் சிலிர்ப்பான்.

'இது அவன் குழந்தை...' காதலுடன் தன் வயிற்றைத் தடவிக் கொண்டாள் ஸ்வேதா... தன் கணவனை நினைத் தவளின் நெஞ்சம் நிரம்பியது.

'இன்னும் நான்கு மாதங்கள்தான்... இவன் என் கையில் தவழ்வான். என் ரிஷியிடம் இது உன் குழந்தை என்று காட்டுவேன்...' கணவனைத் தந்தையாக்கிவிட்ட பெருமிதம் அவள் மனதில் எழுந்தது.

தலையில் மல்லிகையை சூடிக் கொண்டு... மாடியை விட்டுக் கீழே இறங்கி வந்தாள்... மல்லிகை வாசம்தான் அவனுக்கு பிடித்த வாசமாயிற்றே... அடிக்கடி வாசனை பிடிக்கும் அவனது குணத்தை நினைத்து மனதிற்குள் சிரித்துக் கொண்டாள்.





சமையலறையின் உள்ளே எட்டிப் பார்த்தாள். இடுப் பில் வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு வேலையில் ஆழ்ந்திருந்த சதாசிவம்...

''உன்னை இங்கே வரக்கூடாதுன்னு சொல்லியிருக் கேனில்லை'' என்று அதட்டினார்.

''சும்மா... எட்டிப் பார்த்தேன் பெரியப்பா...''

''பசிக்கிறதா... டிபன் ரெடியாகிவிட்டது. சாப்பிடு கிறாயா?''

''அவர் சாப்பிடாமல்... நான் என்றைக்குச் சாப்பிட்டிருக் கிறேன் பெரியப்பா.''

''இத்தனை நாள் போல் இனியும் நீ இருக்கலாமா? இப்போது நீ ஓர் உயிர் இல்லை. உன் வயிற்றில் ஓர் உயிர் வளர்ந்து கொண்டிருக்கிறது. அதற்குப் பசிக்காதா?''

''அந்த நினைவு அவருக்கு இருந்தால் சீக்கிரம் வருவாரில்லை...? பாருங்கள். இன்னும் வரக்காணோம்.''

அவள் சலித்துக் கொண்டபடி வாசலுக்குப் போனாள்... ரிஷியின் கார் வருவது தெரிந்தது. ஆவலாய் படி இறங்கி... அவன் அருகே போனாள். ஷாலினியின் வருகையால் பாதிக்கப்பட்டிருந்தவன் அவளைக் கவனிக் காமல் கடந்து உள்ளே போனான். ஸ்வேதாவை அவனது பாராமுகம் மிகவும் பாதித்தது.

அவசரமாய் அவன் பின்னே போனபோது... அவன் மாடிக்குப் போய் விட்டிருந்தான்... ஸ்வேதா... மெதுவாய் மாடியேறி சென்றாள். அவள் அவர்களது அறைக்குள் நுழையப்போனபோது அவன் அவளைக் கடந்து படி யிறங்கிப் போனான்.



அவன் வேண்டுமென்றே தன்னைத் தவிர்க்கிறான் என்று ஸ்வேதாவிற்கு தோன்றிவிட்டது. தான் ஏதும் தவறு செய்தோமா என்று யோசித்துப் பார்த்தாள். அவளுக்கு எதுவும் புலப்படவில்லை. கீழே இறங்கிப் போனவள் விக்கித்துப் போனாள்.

சதாசிவம் பரிமாற ரிஷி சாப்பிட்டுக் கொண்டிருந் தான்... இதுவரை இப்படி நடந்ததே இல்லை... ஸ்வேதா பரிமாறாமல் அவன் சாப்பிடமாட்டான்... இரவு வேளை களில் அவளையும் அருகே அமர வைத்துச் சாப்பிடு வான்.

'இன்று என்ன ஆனது...'

சதாசிவம் அவளைப் பார்த்துவிட்டு...

''ரிஷி... ஸ்வேதா இன்னும் சாப்பிடவில்லை... வாயும் வயிறுமாக இருக்கிற பெண். காலாகாலத்தில் சாப்பிட வேண்டாமா? நீ சொல்லுப்பா...'' என்று கூறினார்.

ஏதோ யோசனையில் இருந்த ரிஷி... அதைக் கவனிக் காமல் எழுந்து கை கழுவப் போய்விட்டான்.

''இன்றைக்கு ரிஷிக்கு என்ன ஆச்சு'' என்று வாய்விட் டுக் கூறிய சதாசிவம்...

''நீ உட்கார்ந்து சாப்பிடும்மா...'' என்று அவளை அமர வைத்து சாப்பிட வைத்தார்.

துக்கம் தொண்டையை அடைக்க படுக்கையறைக் குள் நுழைந்தாள் ஸ்வேதா... ரிஷி அவளுக்கு முதுகு காட்டி படுத்து தூங்கி விட்டிருந்தான்... அவன் அருகில் படுத்த ஸ்வேதாவின் கண்களில் இருந்து வழிந்த கண்ணீர் கோடாக அவளது கன்னங்களில் இறங்கியது.

நடுநிசியைத் தொடும்போது ரிஷியின் செல்போன் ஒலித்தது. அவசரமாய் அதை எடுத்துப் பார்த்த ரிஷி... ஸ்வேதாவை திரும்பிப் பார்த்தான். அவள் கண்களை இறுக மூடிக் கொண்டாள்... எழுந்து பாத்ரூமிற்குள் புகுந்து கொண்டான் ரிஷி... சற்று நேரம் கழித்து திரும்பியவன் யோசனையுடன் தூங்காமல் அறையில் குறுக்கும் நெடுக்குமாய் நடந்தான்.

ஸ்வேதாவிற்கு எதுவும் புரியவில்லை... மறுநாள் அவள் விழித்தபோது அருகில் ரிஷி இல்லை... அவசரமாய் கீழே போய் சதாசிவத்திடம் விசாரித்த போது....

''தம்பி... ஏதோ வேலையிருக்குன்னு சொல்லிட்டு சீக்கிரமாகவே... போயிருச்சும்மா... உன்னிடம் சொல்ல வில்லையா?'' என்று திருப்பிக் கேட்டார்.

''சொல்லவில்லையே பெரியப்பா...'' ஸ்வேதா மலங்க மலங்க விழித்தாள்.

''நீ தூங்கிக் கொண்டிருந்திருப்பாய். எழுப்ப வேணாம்ன்னு நினைத்திருக்கலாம்... நீ மனதை போட்டு அழட்டிக் காதே...''

சதாசிவம் ஆறுதலாய் கூறினார். ஸ்வேதாவின் மனம் அதை ஏற்றுக்கொள்ள மறுத்தது.ரிஷி அப்படிப் போகிற வன் இல்லை... யோசனையுடன் அவள் படியேறிப் போவதை பார்த்துக்கொண்டிருந்த சதாசிவத்தின் புரு வங்கள் சுருங்கின.

ரிஷி... அன்று காலையில் வீட்டில் சாப்பிடவில்லை... மதியமும் சாப்பிட வரவில்லை... ஸ்வேதா சோர்ந்து போய் உட்கார்ந்து விட்டாள். அவள் மனதில் இனம்



புரியாத கவலை எழுந்தது... அவளது செல்போன் மணி ஒலித்தது... எடுத்துப் பார்த்தாள்... ரிஷியின் நம்பர்... அவசரமாய்.

''ஹலோ'' என்றாள்...

மறுமுனை மௌனமாக இருந்தது... ஸ்வேதா பயந்து போனாள். திரும்பவும்... 'ஹலோ... ஹலோ...'' என்று அலறினாள்.

''ஏன் கத்துகிறாய்?'' என்றது ஒரு பெண் குரல்.

ஸ்வேதா ஸ்தம்பித்துவிட்டாள்... ரிஷியின் போனில் பெண் குரலா?

''யார் நீ?'' என்று கேட்டாள்.

''கட்டாயம் சொல்லத்தான் வேண்டுமா?''

''சொல்லித் தொலை...''

''இவ்வளவு கோபம் ஏன் ஸ்வேதா?''

''என் பெயர் உனக்கு எப்படித் தெரியும்.''

''உன்னை எனக்குத் தெரியும்... ஆனால் பாவம் நீ... என்னைத்தான் உனக்குத் தெரியாது. ரிஷி சொல்லாமல் மறைத்திருக்கிறார்.''

''உன்னைப் பற்றி அவர் ஏன் சொல்ல வேண்டும்? எதற்கு சொல்ல வேண்டும்? முதலில் எனக்கு இதற்கு பதில் சொல்... என் கணவரின் போன் உன்னிடம் எப்படி வந்தது...?''

''உன் கணவனே என்னிடம் வந்தாகிவிட்டது... போன் வந்ததற்கு போய் இப்படிப் பதறுகிறாயே...''

''என்ன உளருகிறாய்...''



''உண்மையைச் சொல்கிறேன்...''

''எந்த உண்மையைச் சொல்கிறாய்?''

''உன் கணவர் என்னுடன் வாழ்ந்தான் என்ற உண் மையை...''

''ஏய்ய்...''

''சும்மா கத்தாதே ஸ்வேதா...கனடாவில் அவன் படித்துக் கொண்டு இருந்தபோது நாங்கள் இருவரும் ஒரே வீட்டில் கணவன் மனைவியாக வாழ்ந்தோம்... என்னுடன் வாழ்ந்தவன் தான் இப்போது உன்னைத் திருமணம் செய்து கொண்டு உன்னுடன் வாழ்கிறான். உனக்கு முன்னால் அவனுடன் வாழ்ந்தவள் நான்தான்... ஆக்சுவலாய் நான்தான் உன்னை 'யார் நீ' என்று கேட்க வேண்டும்... பட் என்னுடைய நேரம்...நீ என்னைப் பார்த்து 'யார் நீ' என்று கேட்கிறாய்.''

''பொய்... நான் இதை நம்ப மாட்டேன்...''

''நம்பினால் நம்பு... நம்பாவிட்டால் போ... எனக்கென்ன வந்தது... பட் ஒன்திங்... நீ புத்திசாலியாக இருந்தால் உன் கணவரின் கம்பெனிக்கு போன் போட்டு அவர் அங்கிருக்கிறாரா என்று தெரிந்துகொள்... அத்தோடு நேற்று சாயங்காலம்... ஒரு பெண் வந்து... அவருடைய ரூமிற்குள் அவரைக் கட்டித் தழுவி முத்தம் கொடுத்தாளா என்பதையும் கேட்டுக் கொள்... அப்புறம் இன்னும் ஒரு விசயம் சொல்கிறேன் கேள். கம்பெனியில் இல்லாத உன் கணவர் எங்கு போனார் என்று மண் டையைப் போட்டு உடைத்துக் கொள்ளாதே... அவர்... என்னுடன்தான் இருக்கிறார்...''

''நீ சொல்வது உண்மையாக இருந்தால்... உன் பெயரையும் நீ இருக்கும் அட்ரஸையும் சொல்...''



''நீ புத்திசாலிதான்... நான் அநாமதேயம் என்று நினைத்தாயா... எழுதி வைத்துக் கொள்... என் பெயர் ஷாலினி... இருப்பது கனடாவில்... தற்சமயம் தங்கி யிருப்பது நியு ஸ்டார் ஹோட்டலில்... ரூம் நம்பர் ஐந்து... முதல் மாடி... உண்மையை எதிர்கொள்ளும் தைரியம் உனக்கிருந்தால் நேரே இங்கு வா... உன் கணவர் இன்றைக்கு விடிவதற்கு முன்னாலேயே எழுந்து என் னிடம் வந்து விட்டார்...''

''அவருக்கு அவசர வேலை என்று சொன்னாரே...''

''அவசரம்தான்... என்னைப் பார்க்கும் அவசரம்... நேற்று உன்னுடன் அவர் இருந்தாலும் என் நினை வாகத்தான் இருந்தாராம்... இதை நான் நேற்று மிட் நைட்டில் அவரிடம் போன் பேசியபோதே சொல்லிப் புலம்பினார். விடிவதற்குள் கிளம்பி என்னிடம் வந்து விட்டார்... என்ன ஸ்வேதா நீ... இதுதானா நீ குடும்பம் நடத்தும் லட்சணம்? உன் கணவனைக் கைக்குள் வைத்துக் கொள்ள உன்னால் முடியவில்லையே... அதுவே என்னைப் பார்... என்னை விட்டு அவர் பிரிந்து இந்தியாவுக்கு வந்து... உன்னைத் திருமணம் செய்து கொண்டு... உன்னுடன் சேர்ந்து வாழ்ந்து... ஒரு குழந்தைக்குத் தகப்பனாகவும் ஆகப் போகிறார்... ஆனால் என்னைப் பார்த்த அடுத்த நொடியில்... ஆபீஸிலேயே என்னைக்கட்டித் தழுவ வைத்தேன்... மனைவியுடன் தூங்குகின்ற நள்ளிரவிலும் என்னுடன் பேச வைத்தேன்... விடிவதற்குள் என்னிடம் ஓடி வரச் செய்து விட்டேன். இதுதான் நான்...வீணாக என்னுடன் போட்டி போடாதே... விலகிப் போய்விடு... அதுதான் உனக்கு நல்லது... இல்லா விட்டால் அவர் உன்னை விலக்கி வைத்து விடுவார்...''

''கனவு காணாதே...''

''ஊஹூம்... நான் கனவு காண்கிற ஆளே இல்லை... நினைத்ததை சாதிப்பவள். ஒன்றைத் தெரிந்து கொள்... நானும் ரிஷியும் கனடாவில் சேர்ந்து வாழ்ந்த போது... என்னைத் திருமணம் செய்து கொள் என்று மண்டியிட்டுக் கேட்டார் ரிஷி. நான்தான் மறுத்துவிட்டேன். நான் விட்டுக் கொடுத்ததினால் மட்டுமே உனக்கு இந்த ஒன்றரை ஆண்டு கால மணவாழ்க்கை கிடைத்திருக்கிறது. 'நான் மட்டும் அன்று சரியென்று சொல்லியிருந்தேன் என்று வை... நீ அவர் வாழ்வில் நுழைந்தே இருக்க மாட்டாய்...நீ வாழும் வாழ்வு... நான் போட்ட பிச்சை...''

ஸ்வேதாவினால் அதற்கு மேல் அவள் பேசுவதை கேட்க முடியவில்லை... போனைத் துண்டித்து விட்டாள்... முதல் நாள் மாலையிலிருந்து ரிஷி நடந்து கொண்ட விதத்தை நினைத்துப் பார்த்தாள்.

அவன் காட்டிய அலட்சியம்...நள்ளிரவில் போன் வந்ததும்... பாத்ரூமிற்குள் போய் பேசியது. விடிவதற்குள் எழுந்து ஓடிவிட்டது... எல்லாமே... அவன் பக்கம் சந்தேகக் குறியை திருப்ப... ஸ்வேதா ஒரு முடிவிற்கு வந்தவளாய் ரிஷியின் அலுவலகத்திற்கு போன் போட்டாள். எமிலி பேசினாள்... ஸ்வேதா அங்கே வேலை பார்த்தவள்... எமிலிக்கு நன்கு அறிமுகமானவள்... எனவே ஸ்வேதா...

''எமிலி... உண்மையைச் சொல்... நேற்று சாயங்காலம் உன் பாஸை பார்க்க ஒரு பெண் வந்தாளா... அவளும்... அவரும் தனிமையில் பேசினார்களா?'' என்று கேட்டபோது எமிலி உண்மையை கூறிவிட்டாள்.



''நான் சொன்னேன் என்று பாஸிற்கு தெரிய வேண்டாம் ஸ்வேதா... நேற்று மாலை... இங்கே ஒரு பெண் வந்தாள்... பார்ப்பதற்கு வெள்ளைக்காரிபோல் இருந்தாள். அவள் பெயர் ஷாலினியென்றும் கனடாவில் பாஸுடன் சேர்ந்து படித்தவளென்றும் கூறினாள். அவளைப் பற்றி நான் பாஸுக்கு இன்டர்காமில் சொல்லிய போது... அவர் உடனே அனுப்பச் சொல்லிவிட்டார். அவள் உள்ளே போனதும் ஜி.எம். முக்கியமான பைலில் பாஸின் சைன் வாங்குவதற்காக பாஸின் கேபினுக்குள் போனார்... நானும் டிரிங்க்ஸ் எதுவும் வேண்டுமா என்று கேட்பதற்காக அவர் பின்னாலேயே போனேன்... நாங்கள் இரண்டு பேரும் போனபோது...''

எமிலி பேச்சை நிறுத்த... ஸ்வேதா கலவரமானாள்...

''சொல்லு எமிலி... நீங்கள் இரண்டு பேரும் உள்ளே போனபோது... என்ன நடந்தது...''

''மனதை திடப்படுத்திக் கொள் ஸ்வேதா... அந்தப் பெண்ணும்... பாஸும் ஒருவரையொருவர் கட்டிப்பிடித்துக் கொண்டு நின்றார்கள்... அந்தப் பெண் பாஸின் கன்னத்தில் முத்தம் கொடுத்துக் கொண்டிருந்தாள்...''

''எமிலி... ஒருவேளை... வெளிநாட்டில் இருந்தவர்கள் என்பதால் அந்த நாட்டு வழக்கங்களை பாலோ பண்ணுகிறார்களோ என்னவோ...''

''வேண்டாம் ஸ்வேதா... வீணான நம்பிக்கைகளை வளர்த்துக் கொள்ளாதே... ஏனென்றால் அந்தப் பெண் என்னையும்... ஜி.எம்.மையும் கண்டபடி திட்டிவிட்டாள்... 'என்ன ரிஷி... நமக்கு பிரைவஸியே கிடையாதா... நாம் தனித்திருக்கும் போது இப்படி நாகரீகமில்லாமல் வந்து நம்மை டிஸ்டர்ப் பண்ணுகிறார்களே... அறிவு



இல்லாதவர்கள் என்று வாய்க்கு வந்தபடி பேசிவிட்டாள்...''

''ரிஷி ஒன்றுமே சொல்லவில்லையா?''

''சொல்லவில்லை ஸ்வேதா... அவள் போன பின்பு... என்னிடமும்... ஜி.எம்.மிடமும் ஸாரி சொல்கிறார்... எங்களுக்கு எப்படி இருந்திருக்கும் என்று யோசித்துப் பார்... உங்கள் ஸாரி எங்களுக்கு வேண்டாம் என்று சொல்லிவிட்டோம்...''

ஸ்வேதா அப்படியே சுவரில் சாய்ந்து சரிந்து தரையில் அமர்ந்தாள்.

''எமிலி... இப்போது அவர் என்ன செய்கிறார்...''

''யார் பாஸா...? அவர் காலையில் இருந்தே ஆபீஸிற்கு வரவில்லையே ஸ்வேதா... உன்னிடம் ஆபீஸ் போவதாக சொன்னாரா...?சம்திங் ராங் என்னவென்று கவனி...''

''தேங்க்ஸ் பார் யுவர் அட்வைஸ் எமிலி... இனி நான் பார்த்துக் கொள்கிறேன்...''

ஸ்வேதா... தன் சக்தியை எல்லாம் ஒன்று திரட்டி எழுந்தாள். கைப்பையை எடுத்துக் கொண்டாள். படியிறங்கினாள்... டிரைவரைக் கூப்பிட்டு காரை எடுக்கச் சொன்னாள்.

''அவசரமாய் வெளியே போகிறாயா அம்மா...'' சதாசிவம் கேட்டார். போகும் போது எங்கே போகிறாய் என்று கேட்கக் கூடாதென்ற தயக்கம் அவருக்கு...

''ஆமாம் பெரியப்பா...''

''நானும் கூட வரவா...?''

''வேண்டாம் பெரியப்பா...''



கவலையுடன் கையைப் பிசைந்தபடி சதாசிவம் நிற்க... காரில் ஏறிப் போய் விட்டாள் ஸ்வேதா.

நியூ ஸ்டார் ஹோட்டலுக்குள் கார் நுழைந்தது... ஸ்வேதா காரை விட்டு இறங்கி ரிசப்சனுக்குப் போனாள்.

''மிஸ் ஷாலினி... ரூம் நம்பர்... பைவ்... பர்ஸ்ட் ப்ளோர்...''

''இங்கேதான் இருக்கிறாங்க... கனடாவில் இருந்து வந்திருக்கிறவங்கதானே...''

''ஆமாம்... எப்படிப் போவது...''

''அதோ லிப்ட் இருக்கிறது...''

''தேங்க்யு...''

ஸ்வேதா லிப்டை நோக்கி நடந்தாள்.



## 23

உரலுக்குள் தலையை மாட்டிக் கொண்டு வெளியே எடுக்க முடியாதவனின் நிலைமை எப்படியிருக்கும்? அப்படியொரு நிலையில் இருந்தான் ரிஷி... என்ன செய்வது... எப்படி இந்த நிலைமையை சமாளிப்பது என்று திணறிக் கொண்டிருந்தான்.

முதல் நாள் மாலையில் அலுவலகத்திற்கு ஷாலினி வந்து போன பின்... ரிஷி சமாதானப்படுத்த முயன்றும்... ஜி.எம்.மும்... எமிலியும் சமாதானம் ஆகவில்லை. அந்த

சிந்தனையோடு வீடு வந்து கொண்டிருந்த போது ரிஷியின் செல்போன் மணி ஒலித்தது.

''ஹலோ....''

''நான் ஷாலினி...''

''என் போன் நம்பர் உனக்கு எப்படிக் கிடைத்தது...?''

''ஆக்சுவலாய் நீ சொல்லியிருக்க வேண்டும்... நீ சொல்லவில்லை... நம் நண்பர்களிடமிருந்து கிடைத்தது.''

''இப்போது உனக்கு என்ன வேண்டும்?''

''நீதான் வேண்டும்...''

''ச்சு... நீயென்ன லூசா... ஒரு தடவை சொன்னால் உன் மண்டையில் ஏறவே ஏறாதா? அறிவு கெட்ட கழுதை...''

''நான் அறிவுள்ள கழுதை ரிஷி... குறிபார்த்து நான் உதைத்தால் நீ தாங்க மாட்டாய்... பார்த்து வார்த்தை களை விடு...''

''என்னடி... மிரட்டுகிறாயா...?''

''பரவாயில்லையே... கண்டுபிடித்துவிட்டாயே... நான் மிரட்டுகிறேன்தான்... அதைச் சொல்லத்தான் உன்னைக் கூப்பிட்டேன்...''

''என்னடி செய்வாய்?''

''எதுவும் செய்வேன்... பார் எக்ஸாம்பிள்... உன் ஸ்வேதாவிடம் போய் உன் கணவன்... உனக்கு கணவன் ஆவதற்கு முன்பே... என்னுடன் கணவனாக வாழ்ந்து முடித்துவிட்டுத்தான் உன் கணவன் ஆகியிருக்கிறான் என்று சொன்னேன் என்று வை... அதன் பின் என்ன நடக்கும்...? யோசித்துப்பார்...''



''ஷாலினி...''

''என்ன பயமாய் இருக்கிறதா? இதற்குத்தான் பார்த்துப் பேசு என்றேன். போ... போய் உன் மனைவி யிடம் வாழ்க்கை நடத்து... நீ அவளுடன் எப்படி வாழ்கிறாய் என்பதை நானும் பார்க்கிறேன்.''

மறுமுனை மௌனமாக... ரிஷி கலவரமானான். ஷாலினி மட்டும் நடந்ததை சொல்லிவிட்டால், அதன் பின் அவனுடைய ஸ்வேதா... அவனைத் திரும்பிப் பார்ப்பாளா... பயத்துடன் வீட்டுக்குச் சென்றவன்... யாரிடமும் பேசும் மனநிலையில் இல்லாமல் சாப்பிட்டு விட்டுப் படுத்துவிட்டான். நள்ளிரவில் போன் அலறியது... எடுத்துப் பார்த்தான் ஷாலினியின் நம்பர்... அவசரமாய் பாத்ரூமிற்குள் புகுந்தான்....

''ஏன் இந்த நேரத்தில் தொந்தரவு செய்கிறாய்?''

''நான் உன்னிடம் பேச நேரம் காலம் பார்க்க வேண் டுமா?''

''ஷாலினி... நாம் பேசி ஒரு முடிவிற்கு வரலாம்... அவசரப்படாதே...''

''நான் என்றுமே அவசரப்பட்டதில்லை... நீதான்... என்னுடன் அவசரப்பட்டுக் குடும்பம் நடத்தினாய்... உன்னைத் திருமணம் செய்து கொள்ளச் சொல்லிக் கெஞ்சினாய்... எனக்காக... உன் பெற்றவர்களை உதறி விட்டு கனடாவிலேயே செட்டிலாகக் கூடத் தயாராக இருந்தாய்... இன்றைக்கு என்னடாவென்றால் நேர்மை யாளன் வேசம் போடுகிறாய்...''

''வேண்டாம் ஷாலினி... இந்தப் பேச்சு வேண்டாம்...''



''நான் உனக்கு இன்றைக்கு வேண்டாம்தான்... அன்றைக்கு வேண்டி இருந்தேனே... அதை மறந்துவிட் டாயா...''

''இப்போது உனக்கு என்னடி வேண்டும்... பணமா? எவ்வளவு வேண்டும் கேள்... ஸ்வேதாவிடம் மட்டும் எதையும் சொல்லிவிடாதே...''

''பணம் கொடுக்கிறாயா...? எவ்வளவு கொடுப்பாய்?''

''உனக்கு வேண்டிய அளவு...''

''அளவை நான் நேரில் சொல்கிறேன். நீ விடிவதற்குள் வா...''

''எங்கே வரவேண்டும்...?''

''நியு ஸ்டார் ஹோட்டல்... பர்ஸ்ட் ப்ளோர்... ரூம் நம்பர் பைவ்...''

ரிஷி... விடிவதற்குள் தன் செக் புக்கை எடுத்துக் கொண்டு ஓடினான். அவளது அறையில் அவள் இல்லை... ஒரு துண்டு காகிதம் எழுதி வைத்திருந்தாள்... கதவு திறந்தே இருந்தது... அதை எடுத்துப் படித்துப் பார்த்தான்.

'நான் வரும் வரை காத்திரு...' என்று இருந்தது.

தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்துவிட்டான்... அவள் ஆடி அசைந்து நண்பகலில் வந்தாள்.

''பேச வரச் சொல்லி விட்டு எங்கே போனாய்...?''

''அது உனக்கு அவசியமில்லாத கேள்வி...''

''அதுசரி... என்னுடன் வாழ்ந்த போதே... எனக்கு உண்மையாக இல்லாதவள் நீ... இப்போது உன்னைக் கேட்க ஆளில்லை. இஷ்டம் போல் இருப்பாய்...உன் பேச்சு எனக்கெதற்கு...? நான் வந்த வேலையைப்



பார்த்து விட்டு ஓட வேண்டும்... வரும்போது ஸ்வேதா விடம் சொல்லாமல் கூட வந்துவிட்டேன்...''

''ரொம்பத்தான் உருகாதே... உண்மையாய் இருப் பதைப்பற்றி என்னிடம் லெக்சர் கொடுத்தாயே... நீ மட்டும் ஒழுங்கா? நீ உன் மனைவிக்கு உண்மையாய் இருக்கிறாயா? என்னுடன் வாழ்ந்த வாழ்க்கையை உன் மனைவியிடம் சொல்லிவிட்டாயா? என்னை விமர் சனம் செய்யும் தகுதி உனக்கு இல்லை...''

பேசிக் கொண்டே... டீபாயின் மேலிருந்த ரிஷியின் செல்போனின் மேல் தன் கர்சீப்பைப் போட்டாள் ஷாலினி... கர்சீப்பை எடுப்பது போல் அவன் செல்போனை எடுத்துக் கொண்டு...

''இதோ வந்து விடுகிறேன்...'' என்று சொல்லிவிட்டு பாத்ரூமிற்குள் புகுந்து கொண்டாள்.

தண்ணீர் குழாயை திறந்துவிட்டுவிட்டு... ரிஷியின் செல்போனில் ஸ்வேதாவின் நம்பரை தேடினாள்... கிடைத்துவிட்டது... போன் போட்டுப் பேசினாள்... ஸ்வேதாவை கிளப்பிவிட்ட பின்... எதுவும் அறியாதவள் போல் திரும்பவும் ரிஷியின் முன்னால் வந்து அமர்ந் தாள்... கர்சீப்பை வைப்பது போல்... அவனது செல் போனை எடுத்த இடத்தில் வைத்தாள். கர்சீப்பை உருவிக் கொண்டாள். வேண்டுமென்றே எதை எதையோ பேசி நேரத்தைக் கடத்தினாள்... சற்று நேரத்தில் அவள் எதிர்பார்த்த போன் வந்தது... ஹோட்டல் ரிசப்சனிஸ்ட் பேசினாள்.

''மேடம்... நீங்கள் சொன்னது போல் ஒரு பெண் உங்களைத் தேடி வந்து கொண்டிருக்கிறாங்க...நீங்கள்

தகவல் சொல்லச் சொன்னதால் சொல்கிறேன்... அவங்களுக்கு நான் தான் வழி சொல்லி அனுப்பினேன்...''

''தேங்க்ஸ் பார் யுவர் ஹெல்ப்...''

போனைத் துண்டித்த ஷாலினி... ரிஷி எதிர்பாராத விதமாய் அவன் முன் மண்டியிட்டு அமர்ந்தாள்... ரிஷி திகைத்தான்.

''யோசியுங்கள் ரிஷி... நான் ஒரு காலத்தில் உங்கள் மனைவியாக... காதலியாக இருந்தவள்... உங்கள் மேல் ஆசை வைத்திருந்தவள்... நாம் வாழ்ந்த வாழ்க்கையெல்லாம் பொய்யா?''

''ஷாலினி... அதை நீதான் உதறிவிட்டுப் போனாய்...''

''தவறு செய்து விட்டேன் தான்... அந்தத் தவறை மன்னிக்கக் கூடாதா...? நான் உங்கள் ஷாலினியில்லையா...''

சட்டென்று அவன் மடியில் விழுந்து கதறினாள்... அவள்... ரிஷி... அவளை விலக்கி உட்கார வைக்க முயன்றவனாய் அவள் தோள் பிடித்தபோது தாழிடப்படாத அறைக்கதவு சடாரென்று திறந்தது... நிமிர்ந்து பார்த்த ரிஷி அதிர்ந்து போய் விட்டான்.

அறை வாசலில் ஸ்வேதா நின்று கொண்டிருந்தாள்... அதை அறியாதவள் போல் ஷாலினி பேசிக் கொண்டிருந்தாள்.

''நீங்கள் கெஞ்சினீர்கள்... நான் பாவி ரிஷி... காது கொடுத்து கேட்க மறுத்து விட்டேன்... கணவன் மனைவியாக வாழ்கிறோமே... சட்டப்படி இந்த பந்தத்தை உறுதிப்படுத்திக் கொள்ளலாம் என்று எவ்வளவோ சொன்னீர்கள்... நான் முட்டாளாக இருந்துவிட்டேன்...



ஷாலினி... நீதான் என் உயிர்... நீதான் என் வாழ்க்கையென்று சொல்வீர்களே... அந்த ஷாலினி திரும்பி வந்துவிட்டேன்... உங்களிடம் வந்து விட்டேன்... நீங்கள் கேட்டுக் கொண்டது போல் நாம் சேர்ந்து வாழலாம்...''



# 24

ரிஷி அவசரமாய் ஷாலினியை விலக்கித் தள்ளி விட்டு எழுந்து நின்றான்.

''ஸ்வேதா...''

''இவள் யார்...?''

''வா... வீட்டுக்குப் போகலாம்...''

''இவள் சொல்வது உண்மையா?''

''இங்கே எதுவும் பேச வேண்டாம்...''

''இவளும்... நீங்களும் கணவனும் மனைவியுமாக வாழ்ந்தீர்களா?''

''ஸ்வேதா... ப்ளீஸ்... நான் உனக்குச் சொல்கிறேனே...''

''என்ன சொல்லப் போகிறீர்கள்? இவள் சொல்வது பொய்யென்று சொல்லப் போகிறீர்களா...? அதைச் சொல்ல உங்களால் முடியுமா?''

''என்ன நடந்தது என்று கேள்...''

''வேண்டாம்... அதை நான் என் காதால் கேட்க வேண்டாம்... நான் உங்களுக்கு என்ன கெடுதல்





பண்ணினேன் ரிஷி? ஏன் என் வாழ்க்கையை பாழடித்தீர்கள். உங்களை ஏன் என்னை உயிருக்குயிராய் காதலிக்க வைத்தீர்கள்? உங்கள் குழந்தையை வயிற்றில் சுமந்து கொண்டிருக்கிறேன் ரிஷி. இப்போது போய் இப்படி ஒரு இடியைத் தூக்கி என் தலையில் போட்டுவிட்டீர்களே... இதற்கு பதில்... என்னை நீங்கள் கொன்று போட்டிருக்கலாம் ரிஷி...''

''ஐயோ... ஸ்வேதா... இவள் வருவாள் என்று நான் நினைக்கவில்லை...''

''நினைத்திருந்தால்... என்னோடு வாழ்ந்து இருக்க மாட்டீர்கள் இல்லையா?''

''ஸ்வேதா... நான் உன்மேல் வைத்திருக்கும் காதல் நிஜம்...''

''அப்படியென்றால் இவள் மேல் வைத்த காதல் என்ன ஆனது? மறைந்து போனதா? இதுபோல் நாளை வேறு ஒருத்தியைப் பார்த்ததும் என் மேல் இருக்கும் காதலும் மறைந்து போகும்தானே...''

''ஸ்வேதா... என்னைக் கொல்லாதே... என்னைப் பேசவிடு...''

''வேண்டாம் ரிஷி... நீங்கள் இவளோடு வாழ்ந்திருக்கிறீர்கள்... இது உண்மையா? பொய்யா...? அதை மட்டும் சொல்லுங்கள்.''

''ஸ்வேதா...''

''இவள்கூட வாழ்ந்தது உண்மைதானே...?''

ரிஷி தலைகுனிந்தான்... மனம் கசந்த ஸ்வேதா சட்டென்று அறையை விட்டு வெளியேறினாள். ரிஷி அவள் பின்னால் போக முயன்றபோது ஷாலினி அவன் கரத்தை பிடித்து நிறுத்தினாள்.



''அவள் போனால் போகட்டும் ரிஷி... நாம் இனி சேர்ந்து வாழ்வோம்...''

ஒரு காலத்தில் அவனை தன் பிடிக்குள் வைத்திருந்த தைரியம் ஷாலினிக்கு. மீண்டும் வாய்ப்பு கிடைத்தால் பழையபடி அவனை அடிமையாக்கிக் கொள்ள அவளுக்கா தெரியாது.

ரிஷி அவளது பிடியிலிருந்து கையை உருவி...ஓங்கி ஓர் அறை விட்டான். அவள் தலைசுற்றி கட்டிலில் விழுந்தாள். அவளது கழுத்தைப் பற்றி நெரித்தான் ரிஷி... அவள் மூச்சு விடமுடியாமல் திணறினாள்... கண்கள் செருகி... தான் செத்து விடுவோம் என்ற முடிவிற்கு அவள் வந்த கடைசி நொடியில் அவளது கழுத்தை விடுவித்தவன்...

'ஹா... ஹா...' வென்று மூச்சுவிட்டுக் கொண்டிருந்தவளைப் பார்த்துக் கத்தினான்... அவள் அரை மயக்க நிலையில் கேட்டுக் கொண்டிருந்தாள்.

''கொன்று விடுவேண்டி... உன்னைக் கொன்றே விடுவேன்... யாருக்கு விசயம் தெரியக்கூடாது என்று... உன்னை பொறுத்துக் கொண்டேனோ... அவளுக்கே விசயம் தெரிந்துவிட்டது... இனி நீ எக்கேடு கெட்டால் எனக்கென்ன... பிசாசே... இனி ஒரு நிமிடம் கூட இந்த ஊரில் நீ இருக்கக் கூடாது... இந்த சேலத்தில் நான் எதை நினைத்தாலும் நடக்கும். இந்த ஹோட்டல் முதலாளி என் நண்பன்தான்... உன் லக்கேஜை தூக்கி ரோட்டில் எறியச் சொன்னால் எறிந்து விடுவான்... ஓடிவிடு இங்கிருந்து...''

கோபத்துடன் அறைக்கதவைத் திறந்து கொண்டு வெளியேறியவன்... வேகமாய் லிப்ட்டிற்குள் போனான்...

அதேநேரம் அந்த ஹோட்டலின் உரிமையாளன் வந்து சேர...

''ரமேஷ்... ரூம் நம்பர் ஃபைவில் இருக்கும் பெண் நல்லவள் அல்ல... அவளை உன் ஹோட்டலில் தங்க வைக்காதே... அது என்னை நீ எதிர்ப்பதற்கு சமம்'' என்று கூறினான் ரிஷி...

''இதற்கு ஏன் இவ்வளவு கோபப்படுகிறாய்... உனக்கு வேண்டாதவர்கள்... எனக்கும் வேண்டாதவர்கள்தான்... நான் அவளை விரட்டி விடுகிறேன்...'' என்றான் ரமேஷ்.

புயலாய் ரிஷி வீட்டிற்குள் காரைச் செழுத்தியபோது... கையில் பெட்டியோடு மாடியை விட்டு இறங்கிக் கொண்டிருந்தாள் ஸ்வேதா... ரிஷி நான்கே எட்டில் படிகளில் தாவி ஏறி... அவளை வழிமறித்தான்.

''எங்கே போகிறாய்...?''

''நிச்சயமாய் நீங்கள் வாங்கிக் கொடுத்த வீட்டில் இருக்கும் உங்கள் மாமியாரிடம் போகமாட்டேன்.. வழியை விடுங்கள்...''

''ரூமுக்கு வா... பேசிக் கொள்ளலாம்...''

''இனி பேச எதுவுமில்லை...''

''எதுவுமே இல்லையா... எதுவுமே இல்லையா...''

ரிஷி வெறி கொண்டவனாய் அவளது கையிலிருந்த பெட்டியை பிடுங்கி எறிந்தான் அவளை அலாக்காக கைகளில் தூக்கிக் கொண்டு படிகளில் ஏறினான்... படுக்கையறைக் கதவை காலால் உதைத்துத் திறந்தான்... அவளைக் கட்டிலில் கிடத்தினான்... அவள் திமிறி எழ முயற்சிக்க கன்னத்தில் ஓங்கி அறைந்தான். அவள் கன்னத்தை பிடித்துக் கொண்டு சரிந்தாள்...



அறைக் கதவை மூடித் தாழிட்டு... சாவியை கையில் எடுத்துக் கொண்டு அவளருகில் வந்து அமர்ந்த ரிஷியின் உடல் கோபத்தில் நடுங்கிக் கொண்டிருந்தது.

''என்னவென்று தெரியவில்லை... உன் விசயத்தில் எல்லாமே தலைகீழாய் நடக்கிறது... பெண்களை மதிப்பவன் நான்... உன் மேல் ஓர் ஈர்ப்பு வந்தது... பேசிப் பழக நினைத்தேன். நீயாய் என்னைக் கண்டபடித் திட்டி வெறி கொள்ள வைத்தாய்... நான் உன்னைத் தொட்டு விட்டேன்... அதன்பின்... உன்னைத் திருமணம் செய்து கொள்ளாமல் எப்படி என்னால் விடமுடியும் சொல்லு... ஷாலினி... ஷாலினி என்கிறாயே... அவள் தன் இஷ்டம் போல் பலருடன் வாழ்ந்தவள் அவர்களில் நானும் ஒரு வன்... அதைப்போய் புனிதமான பந்தம் என்கிறாயே... அவளைப் பற்றி நான் உன்னிடம் சொல்லாமல் விட்டது தப்புத்தான்... ஏன் சொல்லவில்லை? பயம்... நீ என்னை வெறுத்து விடுவாயென்ற பயம்... நீ எனக்கு வேண் டும்டி... நீ இல்லாவிட்டால் செத்து விடுவேன்... உனக்கும்... எனக்கும் எதுவுமில்லை என்கிறாயே... உன் வயிற்றில் வளரும் குழந்தை இருக்கிறதே... அது என்னுடைய குழந்தை... அதை மறந்து பேசுகிறாயே...''

அவன் பேசப்பேச... ஸ்வேதா மௌனமாக கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தாள். ரிஷி மனம் தாளாமல் அவளது கண்ணீரைத் துடைக்கப் போனான்... ஸ்வேதா அவனது கைகளை தட்டிவிட்டாள்.

''என்னைத் தொடாதீர்கள்... அவளைத் தொட்ட கை இது...''

ரிஷி வருத்தத்துடன் அவளது கன்னத்தைப் பார்த் தான்... அவனது கைவிரல்களின் தடம் பதிந்து போயி ருந்தது... 'நான் ராட்சஸன்...'



''ஸ்வேதா... ஏன் இப்படிப் பேசுகிறாய்? இதுவரை உன்னை கை தொட்டு அடித்திருப்பேனா? கர்ப்பிணிப் பெண் நீ... உன்னை கைதொட்டு அடிக்க வைக் கிறாயே... தவறு செய்தேன் என்றால் தண்டனை கொடு... பிரிந்து போக நினைக்காதே...''

''நான் யார் உங்களுக்குத் தண்டனை கொடுக்க... தண்டிப்பது ஆண்களின் பழக்கம்... தெருவில் ஒரு நாயை அடித்தால்கூட ஏன் என்று கேட்பார்கள்... அதுவே ஒருவன் தன் பெண்டாட்டியை போட்டு அடித்தால் ஏன் என்று கேட்கமாட்டார்கள்... அந்தத் தெரு நாயை விட கேவலமாகப் போய்விட்டாளா... பெண்டாட்டி எனப் படும் பெண்? ஆயிரம் சட்டங்கள் போட்டாலும் பெண் வதையை தடுக்க யாராலும் முடியாது. உங்களுக்கு கோபம் வந்தால் கைநீட்டி அடிக்கிறீர்களே... அதுவே எனக்கு கோபம் வந்தால் நான் உங்களை அடிக்க முடியுமா?''

''தாராளமாய் அடி... அதனால் உன் கோபம் குறையு மென்றால் என்னை அடித்துக் கொள்...'' ரிஷி அவளது கையை பற்றி... தன் கன்னத்தில் அடிக்க வைத்தான்.

ஸ்வேதாவின் அழுகை இன்னும் அதிகமானது... கையை உருவிக் கொண்டாள் அவள்... ரிஷியின் முகத்தில் மென்மை வந்தது...

''நான் கனடாவில் இருந்தபோது அவளுடன் பழகியது உண்மை... அவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள ஆசைப்பட்டுக் கேட்டது உண்மை... அவள்தான் மறுத்து விட்டாள்... பலபேருடன் வாழும் சுதந்திரம் வேண்டு மென்று கேட்டாள்... எனக்கு முன்னால் பலருடன் வாழ்ந்திருப்பதாகச் சொன்னாள்... ஒருநாள் எனக்கு



குட்பை சொல்லிவிட்டு வேறு ஒருவனுடன் போய் விட்டாள்... இதில் என் தவறு என்னவென்று நீயே சொல்லு... உன்னை சந்தித்தேன்... வாழ்க்கையை வாழ்க் கையாய் வாழ ஆசைப்பட்டேன்... வாழ்ந்தும் விட்டேன்... நம் அன்பிற்கு சாட்சியாக நம் குழந்தை வரப்போகிறது... எனக்கு அது போதும்... உன்னைத் தொடத்தானே கூடாது... நான் தொடவில்லை... உன்னை தொந்தரவு பண்ணமாட்டேன்... நீ மட்டும் என்னை விட்டுப்போய் விடாதே...''

அதன்பின்... அவர்கள் இருவரும் ஒரே வீட்டில் குடி யிருந்தாலும் ஒருவருக்கொருவர் அறிமுகமில்லாதவர் கள் போல் வாழ ஆரம்பித்தனர். படுக்கையறையில் கட்டில்கள் பிரிந்தன. ரிஷி வேலைக்குக் கிளம்பிச் செல்லும் வரை தோட்டத்தில் போய் உட்கார்ந்து கொள் வாள் ஸ்வேதா... அவன் கிளம்பிப் போனபின் தான் வீட்டுக்குள் வருவாள்... இப்படி இருவரும் மௌனராகம் இசைத்துக் கொண்டிருக்கும் போது ஒரு மாதம் ஓடி விட்டது.

ஸ்வேதாவிற்கு ஏழாம் மாதம் வந்துவிட்டது... லீலா வதி வளைகாப்பு நடத்தி மகளைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு போக விரும்பினாள்... பாண்டுரங்கனிடமும் மோகனாவிடமும் அதுபற்றிப் பேச... அவர்கள் சம்மதம் கொடுத்துவிட்டார்கள்.

பாண்டுரங்கனும் மோகனாவும் ஊட்டியிலிருந்து சேலத்திற்கு ஸ்வேதாவின் வளைகாப்பிற்காக வந்தார் கள்... ஒரு நல்ல நாளில் லீலாவதி பல வகை சாதங் களும்... பலகாரங்களும் செய்து எடுத்துக் கொண்டு வந்து இறங்கினாள். பார்வதியம்மாள்... சாந்தி... கண்மணி

முதலானவர்கள் வந்திருந்தனர். நல்ல நேரத்தில் அழகான பட்டு உடுத்தி தலைபின்னலில் பூத் தைத்து... சபையில் வந்து அமர்ந்த ஸ்வேதாவிற்கு கைகளில் வளையல்களை போட்டு விட்டனர். விருந்து முடிந்து மற்றவர்கள் போனபின் ஸ்வேதா கிளம்பத் தயாரானாள். அவள் தன் அறையில் பெட்டியில் துணிகளை அடுக்கிக் கொண்டிருந்தபோது அங்கே வந்த ரிஷி காரணம் கேட்டான்.

''ஏன் துணிகளை அடுக்குகிறாய்...?''

''என் அம்மாவிடம் போகப் போகிறேன்.''

''வாட்? நான் அனுப்ப மாட்டேன்...''

பஞ்சாயத்து பாண்டுரங்கனிடம் போனது... அவர் ரிஷியை அழைத்துத் தனிமையில் பேசினார்.

''ரிஷி... ஸ்வேதாவை அவளுடைய அம்மாவுடன் அனுப்பு...''

''அப்பா... என்னால் அவள் இல்லாமல் இருக்க முடியாதுப்பா...''

''ஆனால் அவள் உன்னுடன் இருப்பது இப்போது அவளிருக்கும் நிலையில் அவளுக்கும் உன் குழந்தைக்கும் நல்லதல்ல...''

''அப்பா... நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?''

''எனக்கு எல்லாம் தெரியும் ரிஷி... ஷாலினி உன் ஆபீஸ் வந்தவுடன் நடந்த சம்பவத்தை ஜி.எம்.என்னிடம் சொல்லிவிட்டார். அதன் பின் ஸ்வேதா உன்னைத் தேடி ஹோட்டலுக்கு தனியாக கிளம்பியிருக்கிறாள். மனது கேட்காத சதாசிவம் இன்னொரு காரில் தொடர்ந்து வந்திருக்கிறார். அங்கு நடந்த கன்றாவியையும் அடுத்து



ஸ்வேதா வீட்டை விட்டுக் கிளம்பப் போனதையும் நீ பலவந்தமாய் அவளைத் தூக்கிக் கொண்டு போனதையும் எனக்குச் சொல்லிவிட்டார்.''

''என்னை மன்னித்து விடுங்கள் அப்பா.''

''செய்த தவறிற்கு எத்தனை முறை மன்னிப்புக் கேட்பாய்? ரிஷி... இந்த வீட்டில் நீயும் ஸ்வேதாவும் நிம்மதி இல்லாமல் பிரிந்து வாழ்வது எனக்குத் தெரியும்.''

''அப்பா... அவள் என்னுடன் பேசாமல் என்னை வெறுத்து ஒதுங்கி நின்றாலும் பரவாயில்லை. அவள் முகத்தை பார்த்தால் போதும்...''

''ரிஷி...'' மகனை இழுத்து அணைத்துக் கொண்டார் பாண்டுரங்கன். ''இவ்வளவு அன்பை அவள் மேல் வைத்திருக்கிறாயே... நீ அப்படி ஒரு தவறை செய்யாமல் இருந்திருக்கக் கூடாதா? போகட்டும் விடு... ஸ்வேதா கர்ப்பமாக இருக்கிறாள்... உன் மீது இருக்கும் கோபத்தில் அவள் சரியாக சாப்பிடுவதில்லையாம்... இந்த நிலைமையில் அவள் அப்படி இருக்கக்கூடாதுப்பா... அப்புறம் அவள் மனதில் இருக்கும் வெறுப்பு உணர்வு குழந்தையை பாதிக்கும். அவள் நல்ல மன நிலையில் இருக்க வேண்டும்... அதற்கு அவள்... அவளுடைய அம்மா வீட்டில் போய் இருப்பது தான் நல்லது. பெற்றவளுடனும் கூடப் பிறந்தவர்களுடனும் இருந்தால் அவள் கொஞ்சம் சிரிப்பாள். அதனால் அவளைப் போகவிடு...''

லீலாவதியுடன் ஸ்வேதா கிளம்பி போய் விட்டாள். ரிஷிக்கு வீடே வெறிச்சென்று ஆகிவிட்டது போல் தோன்றியது. அதற்கும் ஒரு வழி செய்தார் பாண்டுரங்கன்.



''ரிஷி... நீயும் எங்களுடன் ஊட்டிக்கு வருகிறாய்...''

''இங்கே பிஸினெஸ் பாதிக்குமே அப்பா...''

''இங்கே பிஸினெஸ்ஸில் நமக்கு வரும் வருமானத்தைவிட ஊட்டி எஸ்டேட்டில் நமக்கு வரும் வருமானம் பல மடங்கு அதிகம். நீ அதைப் பார்த்துக் கொள்... இங்கே சில மாதங்கள் ஜி.எம். கவனித்துக் கொள்ளட்டும்.''

''ஆனால் ஸ்வேதா இங்கேதானே அப்பா இருக்கிறாள்... தினமும் ஒரு தடவையாவது அவளைப் பார்த்துக் கொள்வேனே...''

''அதுதான் வேண்டாம் என்கிறேன்... கொஞ்சநாள் அவளைப் பிரிந்திடு... நீ ஷாலினியுடன் வாழ்ந்தவன்... பல பெண்களுடன் பழகியவன்... உனக்கே அவள்மேல் இப்படி ஒரு அதீதமான காதல் இருக்கும் போது ஸ்வேதாவின் மனதையும் உடலையும் தொட்ட ஒரே ஆண்மகன் நீ... உன் மேல் அவளுக்கு எவ்வளவு காதல் இருக்கும்? அதை அவள் உணர வேண்டுமானால் பிரிவு அவளுக்கு தேவை. நீ எங்களுடன் வா...''

ரிஷி தாய், தந்தையுடன் ஊட்டிக்குப் போய் விட்டான். ஸ்வேதாவைப் பிரிந்த வெறுமையில் எஸ்டேட் வேலைகளில் தன்னை மூழ்கடித்துக் கொண்டான். ஆனால் தினமும் இரவானதும் அவளிடம் போனில் பேசாமல் அவனால் இருக்க முடியாது... அவளது உடல் நலத்தை விசாரிப்பான். குழந்தை அசைகிறதா என்று கேட்பான்... வேறு எதையும் பேசமாட்டான்.

முதலில் அவனைப் பிரிந்திருந்தது ஸ்வேதாவிற்கு நிம்மதியாக இருந்தது... நாட்கள் செல்லச் செல்ல... ரிஷியின் நினைவு அவளைத் தாக்கியது. அவனது



நினைவு சூறாவளியாய் அவள் மனதை ஆக்ரமித்தது. இரவானால் அவனது போன் எப்போது வரும் என்று தவிக்க ஆரம்பித்துவிட்டாள் அவள்.

'வெட்கம் கெட்ட மனமே... அவன் இன்னொருத்தியை நேசித்தவன்... அவளுடன் வாழ்ந்தவன்... அவனை நினைத்து உருகுகிறாயே... இவ்வளவு தரம் தாழ்ந்து போய் விட்டாயா? உனக்கு ரோசமே இல்லையா? சூடு...சுரணை... எதுவும் இல்லையா?'

தன் மனதைக் கடிந்து கொண்டாள்... அதுவோ கேட்க மறுத்துத் தவித்தது... 'அவன் தான் செய்த தவறிற்கு மன்னிப்புக் கேட்டுவிட்டானே..... தண்டனை கொடு என்கிறானே... அவனை வெறுத்து... இப்போது பிரிந்து நிற்பதும் ஒருவகையில் அவனுக்கு கொடுக்கும் தண்டனைதானே... போதும்... தவறு செய்யாதவர்கள் யார் இருக்கிறார்கள்? அவனைப் போல் செய்த தவறை ஒப்புக் கொள்கிறவர்கள்தான் யாருமே இல்லை...'

அவளது மனம் எதிர்வாதம் செய்தது... அவள் மனதை அதட்டினாள்.

'இப்போது என்னதான் சொல்கிறாய் நீ... அவனை மறக்க முடியுமா... முடியாதா...?'

அவளது மனம் தெளிவாக பதில் சொல்லியது.

'முடியாது... அவன்தான் என் ஜீவன்... என் சுவாசம்... அவனில்லாமல் இருக்க என்னால் முடியாது. நான் அவனைக் காதலிக்கிறேன்...'

தினசரி அவன் போனில் பேசும்போது விட்டேற்றியாக பதில் பேசினாலும் ஸ்வேதாவின் மனம் அவனிடம் சகஜமாக பேச விரும்பித் தவிக்கும்... ஆனால் அவளாக

போட்டுக்கொண்ட பூட்டை உடைக்க முடியாமல் திணறுவாள்.

ஸ்வேதாவிற்கு பிரசவ வலி வந்தது... பாண்டுரங்கன் சொல்லிச் சென்றிருந்தபடி லீலாவதி ஜெனரல் மேனே ஜரை தொடர்பு கொண்டாள். ஸ்வேதா சேலத்தின் மிகப் பெரிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டாள். சதா சிவமும் - ரிஷியின் கம்பெனி ஆட்களும் உதவிக்கு நின்றனர்.

ஸ்வேதா அழகான ஆண் குழந்தையை பெற்றெடுத் தாள். ரிஷியின் மகன் பிறந்து விட்டான். அவனுக்கும் பாண்டுரங்கனுக்கும் செய்தி பறந்தது. இருவரும் தனித்தனி கார்களில் கிளம்பி வந்தனர்.

சேலத்தை நெருங்கிக் கொண்டிருந்தபோது... அதுவரை பாண்டுரங்கனும் மோகனாவும் இருந்த காரின் பின்னா லேயே... தன் காரை செலுத்திக் கொண்டிருந்த ரிஷி... வேகமெடுத்து அவர்களது காரை முந்திக் கொண்டு பறந்தான். ஒரு வளைவில் எதிரில் வந்த கார்... அவனது காரின் மேல் மோதிவிட... இரு கார்களும் ரோட்டி லிருந்து விலகி பள்ளத்தில் உருண்டன.

''உன் மகனை பாரும்மா...'' ஸ்வேதாவிடம் குழந் தையை காட்டினார்கள்.

''அம்மா... அவருக்குச் சொல்லவில்லையா...'' ஸ்வேதா ஆவலுடன் வினவினாள்.

''சொல்லியாகிவிட்டது ஸ்வேதா... வந்து கொண் டிருக்கிறார்கள்...''

ஸ்வேதா அவனை எதிர்பார்த்துத் தவித்தாள். அவன் வந்ததும் குழந்தையைக் காட்டவேண்டும். 'இதோ...



உன் மகனை பெற்றுக் கொடுத்துவிட்டேன்...' என்று சொல்ல வேண்டும். தன் காதலை உணர்த்த வேண்டும் என்று துடித்தாள்.

அறை வாசலில் நிழலாடியது... இறுகிய முகத்துடன் பாண்டுரங்கனும் மோகனாவும் வந்தனர். ஸ்வேதா... அவசரமாய் எழுந்து கொள்ளப் போனாள். மோகனா தடுத்தாள்.

''பச்சை உடம்பு ஸ்வேதா.. பார்த்து மெதுவாய் எழுந்து உட்கார்.''

அவர்கள் இருவரும் குழந்தையை தூக்கி... மாறி மாறிக் கொஞ்சிக் கொண்டிருக்கையில் ஸ்வேதா அவர்களின் பின்னால் பார்வையை ஓட்டினாள்.

''அத்தை... அவர் வரவில்லையா...'' வாசலைப் பார்த்தவாறு வினவினாள். பாண்டுரங்கனின் விழிகள் மின்னின.

''ஸ்வேதா... வரும்போது ஆக்ஸிடெண்ட் ஆகிவிட்டது...''

''என்ன மாமா சொல்கிறீர்கள்...'' ஸ்வேதா பதறினாள்.

''ரிஷியின் கார் மேல்... எதிரில் வந்த கார் மோதி விட்டது...'' பாண்டுரங்கன் முகத்தை சோகமாக வைத்துக் கொண்டு கூறினார்.

''அவருக்கு என்ன ஆனது? அவர் எங்கே? நான் உடனே அவரைப் பார்க்க வேண்டும்...'' ஸ்வேதா கட்டிலைவிட்டு இறங்க முற்பட்டபோது,

''பார்த்து ஸ்வேதா...'' என்ற குரல் கேட்டது. அந்தக் குரல்... அந்தக் குரல் ரிஷியின் குரல் அல்லவா... ஆனந் தத்துடன் திரும்பினாள்.

ரிஷி தான் வந்து கொண்டிருந்தான். ஸ்வேதா அவனை நோக்கி கை நீட்டிய அடுத்த நொடியில் அவன் ஒரே எட்டில் கட்டிலை நெருங்கி அவளை அள்ளி அணைத்துக் கொண்டான்.

பாண்டுரங்கனும் மோகனாவும் புன்னகையுடன் பேரனைத் தூக்கிக் கொண்டு அறையை விட்டு வெளியே போய்விட்டனர்... மறக்காமல் கதவையும் சாத்திவிட்டனர்.

ரிஷியை ஆவேசத்துடன் இறுகத் தழுவி... அவன் முகமெங்கும் முத்தங்களைப் பதித்தாள் ஸ்வேதா... அவளது உடல் பதற்றத்தில் நடுங்கிக் கொண்டிருந்தது.

''எனக்கு ஒன்றும் ஆகவில்லை ஸ்வேதா... என்னுடன் மோதியவனுக்கும் எதுவும் ஆகவில்லை... அதைவிட பெரிய ஆச்சரியம்... இருவரின் கார்களுக்கும் சிறு கீறல்கூட ஏற்படவில்லை... பேரன் வந்த நேரம்தான் என் உயிரைக் காப்பாற்றிவிட்டதாம். அம்மா சொல்கிறாங்க... இப்போது நீ ஒன்றைச் சொல்ல வேண்டுமே... என்னைப் பிடித்திருக்கிறதா...?'' ரிஷி ஆவலுடன் அவள் முகம் பார்த்தான்.

''பிடித்திருக்கிறது...'' ஸ்வேதா காதலுடன் அவன் தோளில் தலை சாய்த்தாள்.

அறை வாசல் கதவை மெதுவாய் தட்டிவிட்டு உள்ளே வந்த மோகனா... ரிஷியின் மகனை ரிஷியிடம் கொடுத்தாள். தன் மகனை கையில் வாங்கிய அந்த நேரத்தில் தன் வாழ்வில் இனிதாக ஓர் விடியல் ஏற்பட்டு விட்டதை உணர்ந்தான் ரிஷி.

★